## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

# வருடாந்த அறிக்கை

# 2018

## பல்கலைக்கழகத்தின் சின்னம்

பல்கலைக்கழகத்தின் சின்னமானது வட்ட வடிவினைப் பெற்றதாக இருப்பதுடன் அதன் புற எல்லையில் பொது மையம் கொண்ட மூன்று வட்டங்கள் அமைந்துள்ளன. இவை அனைத்தும் மஞ்சள் நிறப் பின்னணியில் ஒழுங்கமையப் பெற்றுள்ளன. இந்த வட்டத்தின் மையத்தினில் பூரணமாக மலர்ந்த ஒரு தாமரை மலர் சூழ்ந்து அமைந்துள்ள சிறியதொரு பொது மையம் காணப்படுவதோடு அது ஒன்றின் கீழ் இன்னொன்றாக அமைந்த மலர் இதழ்களின் இரண்டு மட்டங்களைக் கொண்டுள்ளது. வட்டத்தின் மத்தியில் மலர் ஏனத்தைச் சூழ்ந்து அமைந்துள்ள பொது மையம் கொண்ட இரண்டு வட்டங்களில் மரபொழுங்கு முறையில் அமைந்த மலரிழைகள் சூழ்ந்து காணப்படுகின்றன. பொது மையம் கொண்டுள்ள வட்டங்களின் வெளித் தொகுதிக்கும் தாமரை மத்திக்குமிடையில் பரந்த வட்ட வடிவிலான இணைப்பு வட்டம் ஒன்று காணப்படுவதுடன் அதன் மேல் பகுதியில் உள்ள அரை வட்டம் பல்கலைக்கழகத்தின் குறிக்கோள் வாசகத்தையும் கீழ் பகுதியில் உள்ள அரை வட்டம் பல்கலைக்கழகத்தின் பெயரையும் தாங்கியனவாகக் காட்சி அளிப்பதோடு அவை இரண்டும் சிங்கள அட்சரங்களில் எழுதப்பட்டுள்ளன. குறிக்கோள் வாசகமானது பழம் பௌத்த உரை மூலத்திலிருந்து பெறப்பட்டதாகும். அது பின்வருமாறு வாசிக்கப்படுகின்றது;

**விஜயா உப்ப தத்தம் செத்தா**

(அனைத்துக்கும் மத்தியில் தோன்றும் அறிவே மகோன்னதமானதாகும்)

## தொலைநோக்கு வாசகம்

**கல்வியின் ஊடாக உயிரிகளை வளம் பெறச் செய்தல்**

## பல்கலைக்கழகத்தின் பணிக் கூற்று

நீடித்து நிலைக்கும் எதிர்காலத்துக்காக எமது கல்வி மரபின் ஊடாக உலகப் பிரசித்தி பெற்ற தகுதிவாய்ந்த பிரசைகளை விருத்தி செய்தல் என்பதோடு கலாசார மரபுரிமை மற்றும் அறிவுடைமை என்பவற்றிலிருந்து கிடைக்கப் பெறும் உள்ளுயிர்ப்பினைப் பிரித்தெடுத்தல்

# துணை வேந்தரின் மீளாய்வு



## அறிமுகம்

2018 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்துக்கு உண்மையிலேயே குறிப்பிடதக்க ஓர் ஆண்டாகும். அது ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுக்கு ஒத்த வகையில் அதன் பலத்தையும் வெளிக் கொணர்ந்த ஆண்டுமாகும். அதே சமயம் கல்வி ஆண்டின் ஆரம்பமானது 2018 பெப்ரவரி 03 ஆம் திகதி பல்கலைக்கழகத்தின் வேந்தர், அதி வணக்கத்துக்குரிய பேராசிரியர் பெல்லன்வில விமலரத்தன அனு நாயக்க தேரரின் துயர் நிறைந்த மறைவின் விளைவினால் ஏற்பட்ட சோகத்தையும் குறித்து நின்றது.

வண. பேராசிரியர் பெல்லன்வில விமலரத்தன நாயக்க தேரரை (2004 – 2018) அடுத்து சியம் மகா நிகாயவின் கோட்டே சிறி கல்யாணி சாமகிரி தர்ம மகா சங்க சபாவின் மகா நாயக்க அதி. வண. கலாநிதி. இத்தாபான தம்மாலங்கார மகாநாயக்க தேரர் 2018 பெப்ரவரி 28 ஆம் திகதி பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராகப் பதவி ஏற்றார்.

2018 கல்வி ஆண்டின் முதல் கால் பகுதியை சவால் மிக்கது ஒன்றாகக் கருத முடியும். பல்கலைக்கழக முறைமையில் உள்ள கல்வி சாரா ஊழியர்களின் தொழிற் சங்க நடவடிக்கை காரணமாகப் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் இடர்களுக்கும் தடங்கல்களுக்கும் உட்பட்டன. எவ்வாறாயினும் ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் தனது நிர்வாகச் செயற்பாடுகளையும் வெளிநாட்டு மற்றும் கைத்தொழில் உறவுகளையும் நிர்வகிப்பதில் செயற்றிறன் பொருந்தியதாகச் செயற்படுவதைத் சமாளித்துக் கொண்டது. இந்தக் காலப் பகுதியில் பல்கலைக்கழகம் கூட்டுப் பங்காண்மைகளிலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் (MOU) ஈடுபட்டது.

2018 ஏப்ரல் 18 ஆம் திகதி கல்விசாரா ஊழியர்களின் பணி நிறுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து பல்கலைக்கழகம் விறுவிறுப்பாக மீண்டும் சகஜ நிலைக்குத் திரும்பியது. 2018 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ விஞ்ஞான பீடத்தின் 25 ஆம் ஆண்டு பூர்த்தி விழாக்கள் உள்ளிட்ட பல மைல்களின் வருகையைக் குறித்து நின்றது. இந்த ஞாபகார்த்த மைல் கல்லின் வருகையின் சிறப்புக் கருதி மருத்துவ விஞ்ஞான பீடம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) “வெதஸ” 2018 (VEDESA 2018 ) என்ற பெயரில் மருத்துவக் கண்காட்சி ஒன்றை நடத்தியது.

ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் ஏழு (07) கல்விப் பீடங்களைக் கொண்டுள்ளது. அவையாவன மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் (FHSS), பிரயோக விஞ்ஞான பீடம் (FAS), முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் (FMSC), மருத்துவ விஞ்ஞான பீடம் (FMS), பட்டப்பின் படிப்புக் கற்கைகள்

பீடம் (FGS) தொழில்நுட்ப பீடம் (FOT) மற்றும் பொறியியல் பீடம் (FOE) என்பனவாகும். 2019 ஆம் ஆண்டின் முதல் கால் பகுதியில் இணைந்த சுகநல விஞ்ஞான பீடம் (FAHS) ஒன்றைத் தாபிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும் பல்கலைக்கழமானது கொழும்பு 08 இல் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு கற்கை நிறுவனம் (PIM) என்ற பெயரில் பிறிதொரு பட்டப்பின் படிப்பு கற்கை நிலையத்தையும் கொண்டுள்ளது. இன்று இந்த நிறுவனம் துபாய் (UAE), தோஹா (கத்தார்), மஸ்கட் (ஓமான்), குவைத் மாநகரம் (குவைத்) மற்றும் பங்களாதேஷ் போன்ற உலகச் சந்தைக்குள் பரவலாக்கப்பட்டுள்ளது.

மீளாய்வுக்கு உட்படும் வருடத்தில் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களுக்குமான மாணவர் உள்வாங்கலை 2017 ஆம் வருடத்திற்கு உரிய உள் வாங்கலோடு ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைக் காட்டி நிற்கிறது. அதாவது 2017 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 12, 141 மாணவர் தொகையுடன் 2018 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 12, 608 மாணவர் தொகையுடன் ஒப்பிடும் போது அது ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும்.

பல்கலைக்கழகமானது 2018 ஆம் ஆண்டில் அதிகரித்த மாணவர் தொகை ஒன்றினை வெளிவாரி மாணவர்களாகப் பதிவு செய்துள்ளது. அதாவது 2017 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வெளிவாரி மாணவர் தொகையான 174,118 எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 2018 டிசம்பர் மாதம் ஆகும் போது பதிவு செய்யப்பட்ட மாணவர் தொகை 177,197 ஆக அதிகரித்திருந்ததைக் காணலாம். பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு மாணவர் எண்ணிக்கையும் ஒப்பீட்டு ரீதியாக அதிகரித்துள்ளது. அதாவது 2017 ஆம் ஆண்டு டிசம்பர் ஆகும் போது 931 ஆக இருந்த பட்டப்பின் படிப்பு மாணவர் எண்ணிக்கையானது 2018 ஆம் ஆண்டில் 1998 ஆக அதிகரித்துள்ளது.

மீளாய்வு ஆண்டினில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பணியாளர்களிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2017 டிசம்பர் மாதமாகும் போது 887 ஆகப் பதிவு செய்யப்பட்டு இருந்த கல்விசார் பணியாளர்களின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டில் 931 வரை அதிகரித்துள்ளது. 2017 டிசம்பர் மாதம் ஆகும் போது 1598 ஆகப் பதிவு செய்யப்பட்டு இருந்த மொத்த நிரந்தர பணியாளர் தொகையானது 2018 டிசம்பர் மாதம் ஆகும் போது 1726 வரை அதிகரித்துள்ளது.

பல்கலைக்கழமானது பிரயோக விஞ்ஞான பீடத்தோடு மீச்சேர்ம விஞ்ஞானத் துறை (Department of Polymar Science) என்ற புதிய துறை ஒன்றையும் அறிமுகம் செய்தது. அத்துடன் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் அலகை ஆங்கில மொழி கற்பித்தல் துறை என்று தரம் உயர்த்தியது. அதன் விளைவாக பல்கலைக்கழகத்தில் இருந்த துறைகளின் மொத்த எண்ணிக்கை 62 ஆக அதிகரித்துள்ளது.

பல்கலைக்கழகம் தன்னோடு இணைந்துள்ள பிரதான பகுதியினருக்குச் சிறந்த வசதிகளை வழங்குவதில் அர்ப்பணத்தோடு செயற்படுகிறது. அதனால் பல துறைகள் புதுப்பிக்கப்பட்டதோடு விடுதிகளில் தங்கியிருப்போரின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டில் 4555 இலிருந்து 2018 ஆம் ஆண்டில் 5424 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் பல்கலைக்கழகமானது சுயமாகத் தங்கியிருக்கும் ஒரு பல்கலைக்கழகமாக மாறுவதற்கான தனது பயணத்தினில் தனது தாய்த் தேசத்துக்கு அறிவுப் பொக்கிஷம் மற்றும் மனித வளத்தை வழங்குவதற்கு தனது உள்ளக வருவாயை 2018 ஆம் ஆண்டில் ரூபா 606,609,357/= வரை அதிகரித்துக் கொண்டுள்ளது. இது 2017 ஆம் ஆண்டின் உள்ளக வருவாய் ஆன ரூபா 499,734,029/= உடன் ஒப்பிடும் போது ஒரு குறிப்பிடதக்க அதிகரிப்பாகும்.

இந்த வெற்றிப் பயணமானது பல்கலைக்கழகத்தின் முன்னோர்களான வண. ஹிக்கடுவே சிறி சுமங்கல தேரர் மற்றும் வண. வெலிவிட்டியே சிறி சோரத்த தேரர் ஆகியோரின் ஈடுபாட்டின் காரணமாகவே பல்கலைக்கழகத்தினால் சாத்தியமாகியது. அதனால், பல்கலைக்கழமானது மீளாய்வு ஆண்டினில் எமது முன்னோர்களை வைபவ ரீதியாக நினைவு கூர்ந்து விழாக் கொண்டாடியது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகரான வண. ஹிக்கடுவே சிறி சுமங்கல தேரரின் 107 ஆவது நினைவு விழா பல்கலைக்கழக வளவினில் 2018 ஏப்ரல் 26 ஆம் திகதி நடைபெற்றதோடு வண. வெலிவிட்டியே சிறி சோரத்த தேரரின் 55 ஆவது நினைவு விழா வைபவம் 2018 ஜுலை 17 ஆம் திகதி நடந்தேறி முடிந்தது.

இந்த குறிப்பிடதக்க பயணத்தைக் குறிக்கும் வகையில், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்துக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டு 60 ஆவது வருட பூர்த்தி வைபவத்துக்கும் மற்றும் அது ஒரு பிரிவெனா நிறுவனமாகத் தாபிக்கப்பட்டு 145 ஆவது வருட பூர்த்தி வைபவத்துக்குமான அடித்தளம் இடப்பட்டது. அந்த வைபவங்கள் 2019 இல் நடைபெறவுள்ளன.

## உள்ளடக்கம்


பல்கலைக்கழகத்தின் சின்னம் 2

தொலைநோக்குக் கூற்று வாசகம் 2

பல்கலைக்கழகத்தின் பணிக்கூற்று 2

துணை வேந்தரின் மீளாய்வு 3

உள்ளடக்கம் 6

நடப்பு வினாயாற்றுகைச் சுருக்கம் 11

- மாணவர் விவகாரங்கள் மற்றும் சேமநல வசதிகள் 11
- 2018 ஆம் ஆண்டின் இளமாணிப் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்புப் பட்டதாரி மாணவர் வெளியீடு 11
- வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள் 12
- வெளியேறிய பட்டதாரிகள் 12
- விடுதி வசதிகள் 13
- பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான விடுதிகள் 13

பணிக்குழாம் சாராம்சம் 14

- கல்விசார் பணிக்குழாம் 14
- நிர்வாகப் பணிக்குழாம் மற்றும் கல்விசார் துணைப் பணிக்குழாம் 14
- கல்விசாரா பணிக்குழாம் 15
- கற்கை விடுமுறையிலுள்ள மற்றும் பட்டப்பின் படிப்புத் தகுதிகளைப் பெற்றதன் பின்னர் மீண்டும் கடமைகளை ஏற்ற கல்விசார் பணிக்குழாம் உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள் 15

**2018 ஆம் ஆண்டின் சில நினைவு நிழற்படங்கள்** 16

பொது அறிமுகம் மற்றும் முகாமைத்துவம் 18

- பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள் 19
- பல்கலைக்கழகத்தின் ஆளுனாச் சபைகள் 20
- கூட்டங்கள் 22
- நிர்வாக அதிகாரிகள் 23
- நிதி நிர்வாக அதிகாரிகள் 24

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக ஒழுங்கமைப்பு கட்டமைவு அட்டவணை 25

**பல்கலைக்கழகத்தின் பீடங்கள்** 26

**மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்** 26

- பீடத்தினால் வழங்கப்படும் பட்டங்கள் மற்றும் டிப்ளோமாக்கள் 28

- பீடத்திலிருந்து வெளியிடப்பட்ட பெறுபேறுகள் பற்றிய விபரங்கள் 29
- பீடத்திலிருந்து வெளியிடப்பட்ட 2017 மற்றும் 2018 பெறுபேறுகள் பற்றிய ஒப்பீடு 29
- மூல வளங்கள் மற்றும் மாணவர் பற்றிய விபரங்கள் 30
- உள்நாட்டு மாணவர் பற்றிய விபரங்கள் 30
- கல்விசார் பணிக்குழாம் பற்றிய விபரங்கள் 31
- கல்விசாரா பணிக்குழாம் பற்றிய விபரங்கள் – 2017 31

| | |
|---|---|
| ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள் | 32 |
| செயற்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள் | 32 |
| பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகள் | 32 |
| **பிரயோக விஞ்ஞான பீடம்** | 33 |
| பீடத்தினால் வழங்கப்பட்ட பட்டங்கள் மற்றும் டிப்ளோமாக்கள் | 34 |
| 2018 இல் பீடத்திலிருந்து வெளியிடப்பட்ட பெறுபேறுகள் பற்றிய விபரங்கள் | 35 |
| பீடத்திலிருந்து வெளியிடப்பட்ட 2017 மற்றும் 2018 பெறுபேறுகள் பற்றிய ஒப்பீடு | 36 |
| மூலவளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் – 2018 | 36 |
| உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள் – 2018 | 37 |
| கல்விசார் பணிக்குழாம் பற்றிய விபரங்கள் | 37 |
| கல்விசாரா பணிக்குழாம் பற்றிய விபரங்கள் | 38 |
| ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள் | 38 |
| செயற்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள் | 38 |
| பெற்றுக்கொண்ட விருதுகள் பற்றிய விபரங்கள் | 39 |
| ஆரம்பிக்கப்பட்ட புதிய கற்கை நெறிகள் பற்றிய விபரங்கள் | 39 |
| **முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம்** | 40 |
| பீடத்தினால் வழங்கப்பட்ட பட்டங்கள், டிப்ளோமாக்கள் மற்றும் சான்றிதழ்கள் | 42 |
| 2018 இல் பீடத்திலிருந்து வெளியிடப்பட்ட பெறுபேறுகள் பற்றிய விபரங்கள் | 43 |
| 2017 மற்றும் 2018 இல் வெளியிடப்பட்ட பெறுபேறுகள் பற்றிய ஒப்பீடு | 43 |
| உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள் | 44 |
| பணிக்குழாம் பற்றிய விபரங்கள் | 44 |
| கல்விசார் பணிக்குழாம் பற்றிய விபரங்கள் | 45 |
| ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள் | 46 |
| பீடத்தினால் நடாத்தப்பட்ட செயற்திட்டங்கள் பற்றிய விபரங்கள் | 47 |
| **மருத்துவ விஞ்ஞான பீடம்** | 47 |
| பீடத்தினால் வழங்கப்பட்ட பட்டங்கள் மற்றும் டிப்ளோமாக்கள் | 48 |
| பீடத்திலிருந்து வெளியிடப்பட்ட பெறுபேறுகள் பற்றிய விபரங்கள் – 2018 | 48 |
| 2017 மற்றும் 2018 இல் பீடத்திலிருந்து வெளியிடப்பட்ட பெறுபேறுகள் பற்றிய ஒப்பீடு | 49 |
| மூல வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் | 49 |
| உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள் | 49 |
| கல்விசார் பணிக்குழாம் பற்றிய விபரங்கள் | 50 |
| கல்விசாரா பணிக்குழாம் பற்றிய விபரங்கள் | 50 |
| ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள் | 51 |
| செயற்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள் | 51 |
| பெற்றுக் கொண்ட விருதுகளின் எண்ணிக்கை | 51 |
| **பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடம்** | 52 |
| மாணவர்கள் பற்றிய தரவுகள் | 54 |
| பீடத்தினால் நடாத்தப்பட்ட அதிதி விரிவுரைகள் | 60 |
| பசுமைப் பல்கலைக்கழக வேலைத்திட்டம் | 61 |
| பீடத்தினால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) | 61 |

**தொழில்நுட்பப் பீடம்** 62
பீடத்திலிருந்து வெளியிடப்பட்ட பெறுபேறுகள் பற்றிய விபரங்கள் 63
மூலவளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் 64
உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள் 64
கல்விசார் பணிக்குழாம் பற்றிய விபரங்கள் 64
கல்விசாரா பணிக்குழாம் பற்றிய விபரங்கள் 65
ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள் 65
செயற்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள் 65
கிடைக்கப் பெற்ற விருதுகள் பற்றிய விபரங்கள் 66
ஆரம்பிக்கப்பட்ட புதிய கற்கை நெறிகள் பற்றிய விபரங்கள் 66

**பொறியியல் பீடம்** 67
பீடத்தினால் வழங்கப்பட்ட பட்டங்கள் மற்றும் டிப்ளோமாக்கள் 67
மூலவளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் 67
உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள் 68
கல்விசார் பணிக்குழாம் பற்றிய விபரங்கள் 68
கல்விசாரா பணிக்குழாம் பற்றிய விபரங்கள் 68
ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள் 69
செயற்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள் 69
பெற்றுக் கொள்ளப்பட்ட விருதுகள் பற்றிய விபரங்கள் 69
வெளியீடுகள் பற்றிய விபரங்கள் 70
Indexed பருவ ஆய்வு இதழ்களில் பிரசுரிக்கப்பட்ட முழு அளவிலான கட்டுரைகளின் அட்டவணை 70
2018 இல் தனிக் காப்புரிமைகள் பற்றிய விபரங்கள் 71
2018 இல் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி வெளியீட்டு விபரங்கள் 71
2018 இல் இளமாணிப் பட்ட கற்பித்தல் / பட்டப்பின் படிப்புக் கற்பித்தல் / கருத்தரங்குகள்/ செயலமர்வுகள் ஆகியவற்றுக்காக வருகை தந்த சர்வதேச கல்விசார் பணிக்குழாம் பற்றிய தகவல்கள் 71

**மாணவர் விவகாரங்கள் மற்றும் சேமநல விடயங்கள்** 72
மாணவர்களின் பதிவு 72
மாணவர்களின் பதிவு பற்றிய விபரங்கள் 72
மகாபொல புலமைப்பரிசில்கள் 73
மாணவர்களுக்கான உபகார நிதி உதவிகள் 73

**பரீட்சைக் கிளை** 74
பரீட்சைகள் 74
பட்டமளிப்பு விழா 74
தங்கப் பதக்கங்கள் 75
சான்றிதழ்களின் விநியோகமும் அவற்றை உறுதிப்படுத்தலும் 75

**பல்கலைக்கழக மருத்துவ நிலையம்** 76

**உடற்கல்விப் பிரிவு** 76
- விளையாட்டு ஆலோசனை சபை 77
- விளையாட்டுப் பேரவை 78
- விளையாட்டுச் செயற்பாடுகள் மற்றும் விளையாட்டுப் பந்தயங்கள் 78
- பல்கலைக்கழகங்களுக்கிடையான ஆட்டங்களின் பெறுபேறுகள் – 2018 80
- வெற்றிவீரர்களின் நிழற்படங்கள் 81
- விருது வழங்கல் 83
- விளையாட்டு வசதிகள் 84

**தொழில் வழிகாட்டி அலகு (CGU)** 85
- தொழில் தேர்ச்சி அபிவிருத்திச் சங்கம் (CSDS) 85
- J' புர தொழில் தேர்ச்சி விருதுகள் (JESA) – 2018 86

**பொது நிர்வாகம் மற்றும் சேவைகள் பிரிவு** 93
- பணிக்குழாம் அபிவிருத்தி நிலையம் 94
- தகவல் தொழில்நுட்பச் சேவைகள் நிலையம் (CITS) 101
- வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கை அலகு 102
- நூலகம் 104
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 105
- மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் 106
- 2018 ஆம் ஆண்டில் கல்விசார், நிர்வாக, கல்விசார் துணைப் பணிக்குழாம் மற்றும் கல்விசாரா பணிக்குழாம் பற்றிய விபரங்கள் (எழுதுனர் / தொழில்நுட்ப / ஆரம்பத் தரங்கள்) – 2018 109

**ஆய்வுப் பேரவை** 114
- வழங்கப்பட்ட பல்கலைக்கழக ஆய்வு நிதி உதவிகளின் எண்ணிக்கை (2015 – 2018) 116
- பல்கலைக்கழக ஆய்வு நிதி உதவிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி (2015 – 2018 மில்லியன் ரூபாய்களில்) 117
- பல்கலைக்கழக ஆய்வு நிதி உதவிகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் வெளியீடுகள் 117
- வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயண நிதி உதவிகள் (OTG) – 2018 118

**உள்ளக தர உறுதி பேணுகை அலகு (IQAU)** 122
- எதிர்காலத் திட்டம் 130

**வருடாந்த நிதி அறிக்கை** 131
மீண்டெழும் செலவுகள் பற்றிய விபரங்கள் – 2018 132
நிதி வினையாற்றுகைப் பகுப்பாய்வு – பீட ரீதியாக தலா மாணவர் செலவு 2018 (உள்வாரி பட்டதாரி மாணவர்கள்) 133
மூலதனச் செலவுகள் பற்றிய விபரங்கள் – 2015 – 2018 (மில்லியன் ரூபாய்களில்) 133
நிதி வினையாற்றுகைப் பகுப்பாய்வு – 2018 (மில்லியன் ரூபாய்களில்) 133

முன்னைய 5 வருடங்களில் நிதி தொடர்பான முக்கிய கட்டங்கள் (மில்லியன் ரூபாய்களில்) 134
முன்னைய 05 வருடங்களில் நிதி தொடர்பான முக்கிய கட்டங்கள் (மில்லியன் ரூபாய்களில்) 134
முன்னைய 5 வருடங்களில் நிதி நன்கொடைகள் தொடர்பான முக்கிய கட்டங்கள் (மில்லியன் ரூபாய்களில்) 135
2018 டிசம்பர் 31 ஆகும் போது நிதி நிலைமை பற்றிய அறிக்கை 136
2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுறும் ஆண்டுக்கான நிதி வினையாற்றுகை பற்றிய அறிக்கை 138
2018 டிசம்பர் 31 உடன் முடிவுறும் ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் பற்றிய அறிக்கை 139
நிதி அறிக்கைக்கான முக்கியமான கணக்கியல் கொள்கைகளின் சாராம்சம் – 2018 142

**முன்னேற்பாடுகள்** 151
31.12.2018 வரை கணக்காய் வாளர் நாயகத்தின் அறிக்கையும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கு வழங்கிய பதில்களும் 151
1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 108 (i) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவுறும் வருடத்துக்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்கள் 155

# நடப்பு வினையாற்றுகை சாராம்சம்

## மாணவர் விவகாரங்களும் சேமநல வசதிகளும்

### 2018 இளமாணிப் / பட்டப்பின் படிப்பு மாணவர் வெளியீடு

| பீடங்கள் | துறைகள் | கற்கை நெறிகள் | மொத்த மாணவர் எண்ணிக்கை | வெளியேறிய பட்டதாரிகள் |
|---|---|---|---|---|
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 14 | 24 | 3308 | 816 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 11 | 11 | 2378 | 590 |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | 12 | 12 | 4869 | 1267 |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | 17 | 05 | 1052 | 110 |
| தொழில்நுட்பப் பீடம் | 03 | 03 | 642 | - |
| பொறியியல் பீடம் | 05 | 01 | 361 | - |
| பட்டப்பின் படிப்புக் கற்கைகள் பீடம் | - | - | 1998 | - |
| வெளிவாரிப் பரீட்சைகள் | 14<br>+05 | 06 | 3036✶ | 2405 |

✶ 2018 இல் பதிவு செய்யப்பட்ட மாணவர் தொகை

## வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள்

| பீடங்கள் | கற்கை நெறி | மொழி மூலம் | உள்வாங்கல் 2018 | 1 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு | 4 ஆம் ஆண்டு | 5 ஆம் ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|---|
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | பாளி, பௌத்த மெய்யியல், பௌத்த நாகரீகம் | ஆங்கிலம் | 03 | 03 | 04 | - | - | - |
| பிரயோக விஞ்ஞான பீடம் | உயிரியல் விஞ்ஞானம் | ஆங்கிலம் | | | 01 | | | |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | MBBS<br>MBB | ஆங்கிலம் | | | | | 11 | |
| முகாமைத்துவக் கற்கை நெறிகள் மற்றும் வணிகவியல் பீடம் | | ஆங்கிலம் | | | | | | |
| தொழில்நுட்பப் பீடம் | | ஆங்கிலம் | | | | | | |
| பொறியியல் பீடம் | | ஆங்கிலம் | | | | | | |

## வெளியேறிய பட்டதாரிகள்

| பீடங்கள் | முதல் வகுப்புச் சித்தி | இரண்டாம் வகுப்பு உயர் பிரிவுச் சித்தி | இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவுச் சித்தி | சாதாரண சித்தி | மொத்தச் சித்திகள் |
|---|---|---|---|---|---|
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 65 | 466 | 202 | 105 | 838 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 50 | 169 | 104 | 267 | 590 |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | 141 | 308 | 273 | 554 | 1276 |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | 01 | 26 | 25 | 58 | 110 |



## விடுதி வசதிகள்

பல்கலைக்கழக மாணவர்களுக்கான விடுதி ஏற்பாடுகள் மற்றும் வழங்கப்பட்ட இடவசதிகள் பற்றிய விபரங்கள்

| பீடங்கள் | பெண் | ஆண் | மொத்தம் |
|---|---|---|---|
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 1798 | 273 | 2071 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 236 | 100 | 336 |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | 1171 | 384 | 1555 |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | 184 | 156 | 340 |
| தொழில்நுட்ப பீடம் | 172 | 201 | 373 |
| பொறியியல் பீடம் | 26 | 100 | 126 |
| **மொத்தம்** | **3557** | **1214** | **4801** |

## பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான விடுதிகள்

| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | மருத்துவ விஞ்ஞான பீடம் | தொழில்நுட்பப் பீடம் | பொறியியல் பீடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1524 | 1058 | 180 | 101 | 16 | - | 2879 |

பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் மற்றும் வாடகைக்கு எடுக்கப்படும் விடுதிகளில் குடியிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை

| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | மருத்துவ விஞ்ஞான பீடம் | தொழில்நுட்பப் பீடம் | பொறியியல் பீடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 547 | 468 | 160 | 264 | 357 | 126 | 1922 |

விடுதிகளில் குடியிருக்கும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை = 2879 + 1922 = 4801

மொத்த மாணவர்களின் எண்ணிக்கை = 14,608

விடுதிகளில் குடியிருப்போரின் வீதம் = $\frac{4801 \times 100\%}{14608}$

= 33%

## பணிக்குழாம் சாராம்சம்

ஆண்டிற்குரிய கல்விசார், நிர்வாக, கல்விசார் துணைப் பணிக்குழாம் மற்றும் கல்விசாரா பணிக்குழாம் பற்றிய சாராம்சம்

## கல்விசார் பணிக்குழாம்

| பீடம் | அங்கீகரிக்கப்பட்ட தொழில் பிரிவினர் | நடைமுறையிலுள்ள தொழில் பிரிவினர்✶ | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 167 | 131 | 36 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 160 | 133 | 27 |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | 229 | 175 | 54 |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | 169 | 139 | 30 |
| பொறியியல் பீடம் | 31 | 13 | 18 |
| தொழில்நுட்ப பீடம் | 61 | 29 | 32 |
| நூலகம் | 14 | 13 | 01 |

✶ நிரந்தர பணிக்குழாமினரின் எண்ணிக்கை மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளது.

## நிர்வாகப் பணிக்குழாம் மற்றும் கல்விசார் துணைப் பணிக்குழாம்

| பணிக்குழாம் | அங்கீகரிக்கப்பட்ட தொழில் பிரிவினர் | நடைமுறையிலுள்ள தொழில் பிரிவினர்✶ | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| நிர்வாகப் பணிக்குழாம் | 38 | 36 | 02 |
| ஏனைய நிறைவேற்றுப் பணிக்குழாம் | 16 | 08 | 08 |
| மருத்துவ அதிகாரிகள் | 07 | 03 | 04 |
| கல்விசார் துணைப் பணிக்குழாம் | 80 | 40 | 40 |

✶ நிரந்தர பணிக்குழாமினரின் எண்ணிக்கை மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளது.

## கல்விசாரா பணிக்குழாம்

| பீடம் | அங்கீகரிக்கப்பட்ட தொழில் பிரிவினர் | நடைமுறையிலுள்ள தொழில் பிரிவினர் | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 50 | 50 | 00 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 127 | 118 | 09 |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | 84 | 75 | 09 |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | 188 | 170 | 18 |
| பொறியியல் பீடம் | 62 | 35 | 27 |
| தொழில்நுட்ப பீடம் | 70 | 29 | 41 |
| பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடம் | 17 | 16 | 01 |
| நிர்வாகம் மற்றும் ஏனைய சேவைகள் | 574 | 527 | 47 |
| **மொத்தம்** | **1172** | **1020** | **152** |

## கற்கை விடுமுறையிலுள்ள மற்றும் பட்டப்பின் படிப்புத் தகைமைகளைப் பெற்றதன் பின்னர் கடமைகளை ஏற்ற கல்விசார் பணிக்குழாம் பற்றிய விபரம்

| பீடம் | 2018.12.31 இல் கற்கை விடுமுறையிலிருந்த மொத்த கல்விசார் பணிக்குழாம் உறுப்பினர்கள் | பட்டப்பின் படிப்புத் தகைமைகளைப் பெற்றதன் பின்னர் கடமைகளை ஏற்ற கல்விசார் பணிக்குழாம் உறுப்பினர்கள் (2018 ஆம் ஆண்டு காலப்பகுதி) |
|---|---|---|
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 09 | 01 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 15 | 03 |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | 21 | 03 |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | 16 | 07 |
| தொழில்நுட்ப பீடம் | - | - |
| பொறியியல் பீடம் | - | - |

# 2018 ஆம் ஆண்டின் சில ஞாபகார்த்த நிழற்படங்கள்

























MOU Between USJP and RIT International, USA


DELIVERING
WINNOVATI
BUSINESS STRATEG








Faculty of Engineering to be established in Kottawa

# பொது அறிமுகம் மற்றும் முகாமைத்துவம்




## பல்கலைக்கழகம்

வித்தியோதயப் பல்கலைக்கழகமானது 1959 ஜனவரி 1 ஆம் திகதியின் 45 ஆம் இலக்க வித்தியாலங்கார மற்றும் வித்தியோதயப் பல்கலைக்கழகச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்டது. 1972 இன் 1 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரகாரம் அது இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வித்தியோதய வளாகம் எனப் பெயரிடப்பட்டது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அது ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் என்று மீள் பெயரிடப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் நிர்வாகப் பணிகளும் கொள்கைத் திட்டமிடலும் பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோக பூர்வமான சபைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டன. நிர்வாகப் பேரவை, செனேற், பீட சபைகள் மற்றும் பட்டப் பின்படிப்பு கல்விசார் சபைகள் என்பனவே பல்கலைகழகத்தின் உத்தியோகப்பூர்வமான சபைகளாகும்.

இந்தச் சபைகளின் தீர்மானங்கள் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் பல்வேறு அதிகாரிகளினால் நடைமுறைப்படுகின்றன.

## 2018 ஆம் ஆண்டில் பதவியில் இருந்த பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள்

| | |
|---|---|
| **வேந்தர்** | வண. பேராசியர் பெல்லன்வில விமலரத்ன நாயக்க தேரர் |
| | வண. கலாநிதி. இத்தாபன தம்மாலங்கார மகா நாயக்க தேரர் |
| **துணை வேந்தர்** | சிரேஷ்ட பேராசிரியர். சம்பத் அமரதுங்க |
| **பீடங்கள்** | **பீடாதிபதிகள்** |
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | கலாநிதி. D. P. S. சந்ரகுமார |
| பிரயோக விஞ்ஞான பீடம் | பேராசிரியர். S. S. L. W. லியனகே |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | கலாநிதி U. அனுரகுமார |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | சிரேஷ்ட பேராசிரியர். திருமதி S. G. யசவர்தன |
| பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடம் | சிரேஷ்ட பேராசிரியர். ஹேமந்தி ரணசிங்ஹ<br>பேராசிரியர். P. B. மந்தாவல (08. 07. 2018 வரை)<br>சிரேஷ்ட பேராசிரியர். S. S. L. W. லியனகே<br>(தற்போது பணிபுரிபவர் 09. 07. 2018 லிருந்து) |
| பொறியியல் பீடம் | கலாநிதி. S. A. A. M. சுபசிங்ஹ |
| தொழில்நுட்ப பீடம் | பேராசிரியர். P. B மந்தாவல |
| பதிவாளர் | திரு. L. L. W. பெரேரா (பணிபுரியும் பதிவாளர்)<br>(14.03.2018 வரை)<br>திரு. K. G. பிரிட்டோ (15.03.2018 லிருந்து) |
| பொருளாளர் | திருமதி. K. T. C. பிரியங்கனி |
| நூலகர் | கலாநிதி. (திருமதி) W. D. A. N. D விஜயசுந்தர |
| ஒழுங்குக் காவலர் | திரு. A. R. P. C உதயகுமார |

**பீடங்களின் பிரதி ஒழுங்குக் காவலர்கள்**

மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

- மீபிட்டியே சீலரத்தன தேரர்
- கலாநிதி. காமினி ரணசிங்ஹ
- திரு. B. A. S. C. குமார
- திரு. S. D. R. குணசேகர

பிரயோக விஞ்ஞான பீடம்

- கலாநிதி. P. R.S. De. சில்வா
- கலாநிதி. P. K. P. பெரேரோ
- கலாநிதி. P. K. D. D. P. பிட்டிகல
- கலாநிதி. R. R. M. K. P. ரணதுங்க
- கலாநிதி. N. M. S. சிரிமுத்து

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம்

T. S. M. அமரசேன
U. K. தல்கஸ்பிட்டிய

மருத்துவ விஞ்ஞான பீடம்

கலாநிதி. P. P. R. பெரேரா

பொறியியல் பீடம்

கலாநிதி. K. M. C. கொன்தசிங்ஹ
கலாநிதி. D. M. R. தினலங்கார

தொழில்நுட்ப பீடம்

கலாநிதி. R. D. குணரத்ன

## பல்கலைக்கழகத்தின் ஆளுநர் சபைகள்

**பல்கலைக்கழகப் பேரவை**

1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கப் பல்கலைக்கழக திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் vii ஆம் பிரிவின் 44 ஆம் பந்தியின் கீழ் 2018 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகப் பேரவை பின்வருவோரைக் கொண்டிருந்தது.

**பதவி முறையிலான உறுப்பினர்கள்**

துணை வேந்தர் (தலைவர்) — சிரேஷ்ட பேராசிரியர். சம்பத் அமரதுங்க

பதிவாளர் (செயலாளர்) — திரு. L. W. பெரேரா (பணிபுரியும் பதிவாளர்) (14. 03. 2018 வரை)
திரு. K. G. பிரிட்டோ (15. 03. 2018 லிருந்து )

**பீடாதிபதிகள்**

| | |
|---|---|
| பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் | பேராசிரியர். S. S. L. W. லியனகே |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | கலாநிதி. H. அனுர குமார |
| மருத்துவ பீடம் | சிரேஷ்ட பேராசிரியர். (திருமதி) S. G. யசவர்தன |
| பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடம் | சிரேஷ்ட பேராசிரியர். ஹேமந்தி ரணசிங்ஹ<br>பேராசிரியர்.P. B. மந்தாவல(08. 07. 2018 வரை)<br>சிரேஷ்ட பேராசிரியர். S. S. L. W. லியனகே (தற்போது பணிபுரிகின்ற)(09. 07. 2018 லிருந்து) |
| பொறியியல் பீடம் | கலாநிதி. S. A. A. M. சுபசிங்ஹ |
| தொழில்நுட்பப் பீடம் | பேராசிரியர் P. B. மந்தாவல |

**செனேற் பிரதிநிதிகள்** — பேராசிரியர். M. M. பத்மலால்
பேராசிரியர். H. திசா பண்டார

**பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்**

1. வண. கலாநிதி. கிரிந்தே அஸ்ஸஜி தேரர் (05 ஏப்ரல் 2018 வரை)
2. வண. பிதா இவோன் பெரேரா (05 ஏப்ரல் 2018 வரை)
3. திரு. T. தர்மராஜா (05 ஏப்ரல் 2018 வரை)
4. திரு. H. T. கமல் பத்மசிரி (05 ஏப்ரல் 2018 வரை)
5. திரு. சிறி ரணசிங்ஹ (05 ஏப்ரல் 2018 வரை)
6. திரு. சுஜீவ ராஜபக்ச (05 ஏப்ரல் 2018 வரை)
7. திரு. ரோலண்ட் முனசிங்ஹ (05 ஏப்ரல் 2018 வரை)
8. திரு. J. C. வெலிஅமுன (05 ஏப்ரல் 2018 வரை)
9. திருமதி. சந்யா சல்காது (05 ஏப்ரல் 2018 வரை)
10. திரு. E. K. கனிஹிகம
11. திரு. அசோக ஹெட்டிகொட
12. பேராசிரியர். D. T. B. தென்னகோன் (20 ஏப்ரல் 2018 இலிருந்து)
13. பேராசிரியர். M. O. A. De சொய்சா (20 ஏப்ரல் 2018 இலிருந்து)
14. சட்டத்தரணி நிசாத கமகே (20 ஏப்ரல் 2018 இலிருந்து)
15. வண. கலாநிதி. பல்லேகம ரதனசார தேரர் (20 ஏப்ரல் 2018 இலிருந்து)
16. பேராசிரியர். R. L. ஜயசேகர (20 ஏப்ரல் 2018 இலிருந்து)
17. மருத்துவ கலாநிதி A. M. முபாரக் (20 ஏப்ரல் 2018 இலிருந்து)
18. கலாநிதி திசத் தேவபிரிய பண்டார விஜயகுணவர்தன (20 ஏப்ரல் 2018 இலிருந்து)
19. தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர். தக்சலா சேரசிங்ஹ (20 ஏப்ரல் 2018 இலிருந்து)
20. G. சமிந்ரா டி சில்வா (20 ஏப்ரல் 2018 இலிருந்து)

**பல்கலைக்கழகப் பேரவையின் துணைக் குழுக்கள்**

(i) பல்கலைக்கழக நிதி மற்றும் மூலதன வேலைகள் குழு
(ii) விடுமுறை மற்றும் பரிசில்கள் குழு
(iii) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு
(iv) திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் குழு

**பல்கலைக்கழக செனேற்**

செனேற் ஆனது 1978 இன் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 46 ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தது.

**பல்கலைக்கழக செனேற்றின் துணைக் குழுக்கள்**

i. வெளிவாரிப் பட்டங்கள் குழு
ii. ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் குழு
iii. கணிப்பீட்டுக் குழு

## கூட்டங்கள்

பல்கலைக்கழகப் பேரவை, செனேற் மற்றும் அமர்த்தப்பட்ட குழுக்கள் உள்ளிட்ட ஏனைய அதிகாரக் குழுக்கள் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பின்வருமாறு கூடியுள்ளன.

| | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பல்கலைக்கழகப் பேரவை | 12 |
| பல்கலைக்கழ செனேற் | 11 |
| நிதி மற்றும் மூலதன வேலைகள் குழு | 10 |
| விடுமுறை மற்றும் பரிசில்கள் குழு | 12 |
| ஆராய்ச்சிக் குழு | 11 |
| வெளிவாரிப் பட்டங்கள் குழு | 07 |
| திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் குழு | 04 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | 03 |

## நிர்வாக அதிகாரிகள்

பதிவாளர் திரு. K. G. பிரிட்டோ அவர்களின் வழிகாட்டலின் கீழ் பின்வரும் அதிகாரிகள் நிர்வாகப் பணிகளை மேற்கொண்டனர்.

**பிரதிப் பதிவாளர்கள்**

| | |
|---|---|
| கல்விசார், மாணவர் விவகாரங்கள் மற்றும் வெளியீடுகள் | திரு. L. L. W. பெரேரா |
| தொழில்நுட்ப பீடம் | செல்வி. A. M. சிரியங்கனி மென்டிஸ் |
| கல்விசார் தாபனப் பிரிவு | திரு. A. B. வெலிவிட்ட |
| பட்டப்பின் படிப்புக் கற்கைகள் பீடம் | திரு. E. K. N. தர்மரத்ன |
| பரீட்சைகள் பிரிவு | செல்வி. U. D. D. S. குணசிங்ஹ |
| மாணவர் சேமநலப் பிரிவு | திருமதி. K. P. Y. T. மல்காந்தி |

சிரேஸ்ட பதிவாளர்கள்

| | |
|---|---|
| மருத்துவ விஞ்ஞான பீடம் | திருமதி. H. P. வெஹரகொட<br>திருமதி. S. N. பலங்கசிங்ஹ<br>(15.02.2018 லிருந்து) |
| வெளிவாரிப் பரீட்சைகள் | திருமதி. H. K. S. D. கீகனகே |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | திரு. M. N. தல்கஹகொட<br>(30.09.2018 வரை)<br>திருமதி. S. D. S. ஹிரன்தி<br>(01. 10. 2018 லிருந்து) |
| திட்டமிடல் மற்றும் மூலதன வேலைகள் | திரு. M.N. தல்கஹகொட<br>(01.10.2018 - 17.12.2018) |
| பொது நிர்வாகம் மற்றும் சேவைகள் | திரு. M. N. தல்கஹாகொட (18.12.2018 லிருந்து) |
| சட்டம்சார் மற்றும் ஆவணவாக்கம் | திருமதி C. D. R. பீரிஸ் (ஒப்பந்த அடிப்படையில்) |

**துணைப் பதிவாளர்கள்**

| | |
|---|---|
| கல்விசாரா தாபனப் பிரிவு | திருமதி. C. G. பாலசூரிய |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | திருமதி. K. I. மலல்கொட |
| பொது நிர்வாகம் மற்றும் சேவைகள் | செல்வி. A.D. S. சமாதரி (17.12.2018 வரை) |
| திட்டமிடல் மற்றும் மூலதன வேலைகள் | செல்வி. A.D. S. சமாதரி (18.12.2018 இலிருந்து) |
| பொறியியல் பீடம் | திருமதி. A. K. A. S. அமரசிங்ஹ |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | செல்வி. W. M. S. மதுவன்தி (15.02.2018 வரை) |
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | செல்வி. W. M. S. மதுவன்தி<br>(16. 02. 2018 இலிருந்து) |
| வெளிவாரி பட்டங்கள் மற்றும் விரிவுபடுத்தல் | |
| கற்கை நெறிகள் அலகு | செல்வி. V. B. De. லப்ரோய் |
| தகவல் மற்றும் சேவைகள் | திருமதி. W. K. B. P. லக்சாந்தி |
| பிரயோக விஞ்ஞான பீடம் | திருமதி. D. S. M. ரணசிங்ஹ |
| திட்டப் பொறியியலாளர் | திரு. S. C. அதுகோரல (ஒப்பந்த அடிப்படையில்)<br>(22.10.2018 வரை) |
| திட்ட முகாமையாளர் | திரு. K. இரத்னம் (15. 10. 2018 இலிருந்து) |
| வேலைகள் பொறியியலாளர் (சிவில்) | திரு. O. A. W. கருணாரத்ன |

## நிதி நிர்வாக அதிகாரிகள்

பொருளாளர் திருமதி K. T. C. பிரியங்கனி அவர்களின் வழிகாட்டலின் கீழ் பின்வரும் அதிகாரிகள் நிதி நிர்வாகப் பணிகளைக் கொண்டு நடத்துகின்றனர்.

**பிரதிப் பொருளாளர்கள்**

| | |
|---|---|
| நிதிப் பிரிவு | திருமதி. P. H. C. M. ஹிரிபிட்டிய<br>திருமதி. J. T. L. தர்மசேன |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | திருமதி. M. A. P. P. சந்ரதாஸ |

பிரதி உள்ளகக் கணக்காய்வாளர்

| | |
|---|---|
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | திரு. N. விஜயவர்தன(ஒப்படைப்பு அடிப்படையில்) (02. 12. 2018 வரை)<br>திரு. W. M. K. N. பண்டார (03. 12. 2018 லிருந்து) |

**சிரேஷ்ட துணைப் பொருளாளர்கள்**

| | |
|---|---|
| நிதிப் பிரிவு (கொடுப்பனவுகள்) | செல்வி. M. N. சுரவீர |
| வழங்கல்கள் பிரிவு | திருமதி. K. K. M. S. D. K. கல்கடுவ |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | திரு. K. H. U. D. வசந்த குமார |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | செல்வி. A. A. K. N. ரணசிங்ஹ |
| வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு | திருமதி. S. வல்பொல |
| பிரயோக விஞ்ஞான பீடம் | திரு. K. J. M. நந்தன (23. 07. 2018 வரை) |
| தொழில்நுட்பப் பீடம் | திரு. K. J. M. நந்தன (24. 07. 2018 லிருந்து) |

**துணைப் பொருளாளர்கள்**

| | |
|---|---|
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | திருமதி G. W. L. பிரியன்திகா |
| தொழில்நுட்பப் பீடம் | திருமதி. M. D. D. U. திசாநாயக்க (10.12.2018 வரை) |
| பிரயோக விஞ்ஞான பீடம் | திருமதி. M. D. D. U. திசாநாயக்க (11.12.2018 இலிருந்து) |
| பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடம் | செல்வி M. G. கும்புககே |
| பொறியியல் பீடம் | செல்வி. H. M. S. H. சந்தரேனு (29.10.2018 இலிருந்து) |

# ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைவு அட்டவணை




## சொற்களின் பொருள்கள்

| | | |
|---|---|---|
| Council | - | பேரவை |
| Vice Chancellor | - | துணை வேந்தர் |
| Senate | - | செனேற் |
| PIM | - | முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் |
| FHSS | - | மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் |
| FAS | - | பிரயோக விஞ்ஞான பீடம் |
| FMSC | - | முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் |
| FMS | - | மருத்துவ விஞ்ஞான பீடம் |
| FGS | - | பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடம் |
| FT | - | தொழில்நுட்பப் பீடம் |
| FE | - | பொறியியல் பீடம் |
| IQAU | - | உள்ளக தர உறுதி பேணுகை அலகு |
| DR | - | பிரதிப் பதிவாளர் |
| SAR | - | சிரேஷ்ட உதவிப் பதிவாளர் |
| AR | - | உதவிப் பதிவாளர் |
| DB | - | பிரதிப் பொருளாளர் |
| SAB | - | சிரேஷ்ட உதவிப் பொருளாளர் |
| SAL | - | சிரேஷ்ட உதவி நூலகர் |
| AL | - | உதவி நூலகர் |
| M/F | - | பெண் / ஆண் |
| Non - Academic Staff | - | கல்விசாரா பணிக்குழாம் |
| Sub - wardens | - | துணை விடுதி மேற்பார்வையாளர்கள் |

## பல்கலைகழகத்தின் பீடங்கள்

பல்கலைக்கழகம் பின்வரும் ஏழு (07) பீடங்களைக் கொண்டுள்ளது.

1. மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் ( FHSS )
2. பிரயோக விஞ்ஞான பீடம் ( FAS )
3. முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் ( FMSC )
4. மருத்துவ விஞ்ஞான பீடம் ( FMS )
5. பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடம் ( FGS )
6. தொழில்நுட்பப் பீடம் ( FT )
7. பொறியியல் பீடம் ( FE )

## மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்



1959 ஜனவரி 01 ஆம் திகதி மாலிகாகந்தவில் அமைந்திருந்த வித்தியோதய பிரிவெனா வித்தியோதய பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட போது கலைப்பீடம் தாபிக்கப்பட்டது. பின்னர் கலைப் பீடமானது கங்கொடவிலவில் அமைந்துள்ள தற்போதை வளவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

தற்போது கலைப் பீடமானது மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடமாக மீள் நிறுவப்பட்டுள்ளது. மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடமானது நாட்டின் கலாசார மரபுரிமையோடு வளமடைந்துள்ள அறிவைத் தூவி மேம்படுத்துவதன் ஊடாக பாரியளவில் ஜனசமூகத்தினதும் தேசத்தினதும் அபிவிருத்திக்குப் பங்காற்றி வருகின்றது.

வருடா வருடம் சுமார் 900 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு B. A பட்டம் மற்றும் B. A. கௌரவப் பட்டங்களை வழங்கக்கூடிய 25 பாடங்களில் கல்விச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்தி வருகின்றது.

| கற்கைத் துறைகள் | துறைத் தலைவர்கள் |
|---|---|
| 1. சிங்களம் மற்றும் வெகுஜன ஊடகத் துறை | வண. பேராசிரியர். மாதம்பிட்டிய விஜிததம்ம தேரர் (12. 10.2018 லிருந்து)<br>பேராசிரியர். A. V. D. ரத்னசிரி (11.10.2018 வரை) |
| 2. வரலாறு மற்றும் தொல்பொருளியல் துறை | கலாநிதி. K. M. அலெக்சாண்டர் |
| 3. புவியியல் துறை | பேராசிரியர். R. M. K. ரத்நாயக்க |
| 4. சமூகவியல் துறை | பேராசிரியர். M. T. சமரகோன் |
| 5. மனித இனவியல் துறை | பேராசிரியர். (திருமதி) H. D. Y. D. ஜயதிலக்க |
| 6. மொழிகள், கலாசார கற்கைகள் மற்றும் ஆற்றுகைக் கலைகள் துறை | கலாநிதி. W. B. A. விதாரண |
| 7. பொருளியல் துறை | திரு. K. G. G. வீரசிங்ஹ |
| 8. சமூகப் புள்ளிவிவரவியல் துறை | திருமதி. D. P. K. மானெல் (01.07.2018 இலிருந்து)<br>திரு. H.P. தியுனுகல (30.06.2018 வரை) |
| 9. ஆங்கிலத் துறை | கலாநிதி. திருமதி. R. M. C. ஜயதிலக்க (01.07.2018 இலிருந்து)<br>கலாநிதி M. G. லலித் ஆனந்த (30.06.2018 வரை) |
| 10. பாளி மற்றும் பௌத்த கற்கைகள் துறை | வண. பேராசிரியர். மாதம்பிட்டிய விஜிததம்ம |
| 11. மெய்யியல் மற்றும் உளவியல் துறை | பேராசிரியர். W. A. G. பெரேரா |
| 12. அரசியல் விஞ்ஞானத் துறை | திரு. P. L. T. புரசிங்ஹ |
| 13. குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை | திருமதி. M. P. A. A. புத்ததாச |
| 14. ஆங்கில மொழி கற்பித்தல் துறை | திரு. P. B. S. L. புஷ்பகுமார (01.07.2018 இலிருந்து)<br>திரு. D. L. S. ஆனந்த (30.06.2018 வரை) |

## பீடத்தினால் வழங்கப்படும் பட்டங்கள் டிப்ளோமாக்கள் மற்றும் சான்றிதழ்கள்

**பட்டங்கள்**

1. கலை மாணிப் ( B. A ) பட்டம்
2. தொல் பொருளியியலில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
3. வரலாற்றில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
4. பௌத்த நாகரீகத்தில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
5. பௌத்த தத்துவத்தில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
6. மெய்யியல் மற்றும் உளவியலில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
7. பாளியில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
8. ஹிந்தியில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
9. சமஸ்கிருதத்தில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
10. சங்கீதம் மற்றும் கலாசார கற்கைகளில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
11. நடனம் மற்றும் கலாசார கற்கைகளில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
12. பொருளாதாரத்தில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
13. சமூகவியலில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
14. குற்றவியலில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
15. மனித இன இயலில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
16. சிங்களத்தில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
17. வெகுஜன தொடர்பாடலில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
18. அரசியல் விஞ்ஞானத்தில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
19. ஆங்கில மொழியில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
20. சமூக புள்ளிவிவரவியலில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
21. புவியியலில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
22. இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தலில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
23. முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்
24. தகவல் முகாமைத்துவம் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் கலை மாணி ( B. A ) (கௌரவ)ப் பட்டம்

**பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை நெறிகள்**

1. எழுத்தாண்மை மற்றும் தொடர்பாடலில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
2. சமூகவியலில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
3. குற்றவியலில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
4. நாடகம் மற்றும் ஆடலரங்கில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா

**டிப்ளோமா கற்கை நெறிகள்**

1. எழுத்தாண்மை மற்றும் தொடர்பாடலில் டிப்ளோமா
2. குற்றவியலில் டிப்ளோமா
3. "தஹம் குரு" டிப்ளோமா
4. கிராமிய அபிவிருத்தியில் டிப்ளோமா
5. புவியியல் தகவல் முறைமை (GIS) மற்றும் சேய்மை புலனீட்டலில் டிப்ளோமா
6. பௌத்த கற்கைகளில் டிப்ளோமா
7. சர்வதேச உறவுகளில் டிப்ளோமா
8. ஆங்கிலத்தில் டிப்ளோமா
9. சமூகவியலில் டிப்ளோமா

**சான்றிதழ் கற்கைநெறிகள்**

1. ஆங்கில சான்றிதழ் கற்கை நெறி

## பீடத்திலிருந்து வெளியிடப்பட்ட பெறுபேறுகள் பற்றிய விபரங்கள்

| பட்டம் | 1 ஆம் வகுப்பு | 2 ஆம் வகுப்பு உயர் பிரிவு | 2 ஆம் வகுப்பு கீழ்ப்பிரிவு | சாதாரண சித்தி | மொத்தச் சித்தி |
|---|---|---|---|---|---|
| B. A. (பொது) சாதாரணமானது | 02 | 37 | 56 | 27 | 122 |
| B. A. (சிறப்பு) சாதாரணமானது | 61 | 410 | 144 | 63 | 678 |
| B. A. (பொது) மீள் பரீட்சை | - | - | - | 09 | 09 |
| B. A. (சிறப்பு) மீள் பரீட்சை | - | 01 | 01 | 05 | 07 |
| B. Sc. தகவல் தொழில்நுட்பம் (சிறப்பு) | 02 | 18 | 01 | 01 | 22 |
| B. A. (பொது /சிறப்பு) மொத்தம் | 65 | 456 | 202 | 105 | 838 |

## பீடத்தில் இருந்து வெளியிடப்பட்ட 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் பெறுபேறுகள் - ஓர் ஒப்பீடு

மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தினால் வெளியிடப்பட்ட இளமாணிப் பட்டப் பெறுபேறுகள் பற்றிய மீளாய்வு

| | 1 ஆம் வகுப்பு | | 2 ஆம் வகுப்பு உயர் பிரிவு | | 2 ஆம் வகுப்பு கீழ் பிரிவு | | சாதாரண சித்தி | | மொத்த சித்தி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2017 மற்றும் 2018 | 2017 ஆம் ஆண்டு | 2018 ஆம் ஆண்டு | 2017 ஆம் ஆண்டு | 2018 ஆம் ஆண்டு | 2017 ஆம் ஆண்டு | 2018 ஆம் ஆண்டு | 2017 ஆம் ஆண்டு | 2018 ஆம் ஆண்டு | 2017 ஆம் ஆண்டு | 2018 ஆம் ஆண்டு |
| B. A. (சிறப்பு) | 95 | 61 | 424 | 410 | 190 | 144 | 61 | 63 | 770 | 678 |
| B. A. (பொது) | 02 | 02 | 14 | 37 | 41 | 56 | 35 | 27 | 92 | 122 |
| B. A. (பொது) மீள் பரீட்சை | - | - | - | - | - | - | 10 | 09 | 10 | 09 |
| B. A. (சிறப்பு) மீள் பரீட்சை | - | - | 02 | 01 | 02 | 01 | 05 | 05 | 09 | 07 |
| **மொத்தம்** | **97** | **63** | **440** | **448** | **233** | **201** | **111** | **104** | **881** | **816** |

## மூலவளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்

| கற்கை நெறி | மொத்த மாணவர்கள் | | | | | மொத்த கல்விசார் பணிக்குழாம் | | மொத்த கல்வி சாரா பணிக்குழாம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 ஆம் ஆண்டு | பொது | சிறப்பு | | | நிரந்தரம் | தற்காலிகம் | |
| | | | ஆண்டு 2 | ஆண்டு 3 | ஆண்டு 4 | | | |
| சிங்களம் மற்றும் வெகுஜன தொடர்பாடல் | 909 | 396 | 30 | 51 | 61 | 13 | 02 | 02 |
| வரலாறு மற்றும் தொல்பொருளியல் | | | 62 | 59 | 80 | 11 | 02 | 02 |
| புவியியல் | | | 65 | 55 | 67 | 14 | - | 05 |
| சமூகவியல் | | | 27 | 52 | 48 | 03 | 02 | 02 |
| மனித இனவியல் | | | 12 | 53 | 24 | 06 | 02 | 03 |
| குற்றவியல் | | | 39 | 40 | 33 | 09 | 01 | 02 |
| மொழிகள், கலாசார கற்கைகள் மற்றும் ஆற்றுகைக் கலைகள் | | | 38 | 40 | 38 | 14 | 05 | 02 |
| பொருளியல் | | | 53 | 54 | 53 | 08 | 02 | 03 |
| சமூகப் புள்ளிவிபரவியல் | | | 42 | 40 | 42 | 10 | 03 | 02 |
| பாளி மற்றும் பௌத்த கற்கைகள் | | | 108 | 86 | 54 | 12 | 06 | 02 |
| மெய்யியல் மற்றும் உளவியல் | | | 61 | 78 | 112 | 05 | 02 | 02 |
| அரசியல் விஞ்ஞானம் | | | 65 | 38 | 42 | 08 | 02 | 02 |
| ஆங்கிலம் மற்றும் மொழியியல் | | | 28 | 20 | 16 | 05 | 05 | 02 |
| B. Sc. IT – தகவல் தொழில்நுட்பம் | | | 19 | 23 | 13 | - | 01 | 02 |
| **மொத்தம்** | | | **649** | **689** | **683** | **121** | **35** | **27** |

## உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள்

| கற்கை நெறி | | மொழி மூலம் | உள்வாங்கல் 2018 | 2 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு | 4 ஆம் ஆண்டு | பட்டதாரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | பொது | சிங்களம் / ஆங்கிலம் | 909 | 219 | 177 | - | 131 |
| சிறப்பு | மனித இன இயல் | | | 12 | 53 | 25 | 26 |
| | தொல் பொருளியல் | | | 25 | 21 | 26 | 34 |
| | பௌத்த நாகரீகம் | | | 59 | 63 | 35 | 51 |
| | பௌத்த தத்துவம் | | | 34 | 18 | 13 | 10 |
| | வியாபார புள்ளிவிவரவியல் | | | 34 | 24 | 29 | 14 |
| | குற்றவியல் | | | 39 | 40 | 33 | 26 |
| | நடனம் | | | 09 | 14 | 14 | 15 |
| | பொருளியல் | | | 53 | 54 | 53 | 50 |
| | புவியியல் | | | 65 | 55 | 67 | 67 |
| | ஹிந்தி மொழி | | | 08 | 08 | 08 | 08 |
| | வரலாறு | | | 37 | 38 | 54 | 55 |
| | வெகுஜன தொடர்பாடல் | | | 12 | 17 | 36 | 25 |
| | சங்கீதம் | | | 16 | 17 | 11 | 10 |
| | பாளி | | | 15 | 05 | 06 | 06 |
| | மெய்யியல் மற்றும் உளவியல் | | | 61 | 78 | 115 | 129 |
| | அரசியல் விஞ்ஞானம் | | | 65 | 38 | 42 | 31 |
| | சமஸ்கிருதம் | | | 05 | 01 | 07 | 05 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | சிங்களம் | சிங்களம் / ஆங்கிலம் | | 18 | 34 | 27 | 30 |
| | சமூகவியல் | | | 27 | 52 | 48 | 54 |
| | ஆங்கிலம் | | | 08 | 04 | 09 | 11 |
| | சமூகப் புள்ளிவிபரவியல் | | | 08 | 16 | 15 | 15 |
| | B. Sc தகவல் தொழில்நுட்பம் | | | 19 | 23 | 19 | 22 |
| | இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் | | | 20 | 16 | 08 | 13 |
| | **மொத்தம்** | | **909** | **868** | **866** | **700** | **838** |

## கல்விசார் பணிக்குழாம் பற்றிய விபரங்கள்

| பாடம் | மொழி மூலம் | முதுநிலைப் பேராசிரியர் | பேராசிரியர் | இணைப் பேராசிரியர் | முதுநிலை விரிவுரையாளர் I | முதுநிலை விரிவுரையாளர் II | விரிவுரையாளர் | விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை) | தற்காலிக உதவி விரிவுரையாளர் | தற்காலிக டியுடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிங்களம் மற்றும் வெகு ஜனத் தொடர்பாடல் | சிங்களம் / ஆங்கிலம் | 01 | 01 | 01 | 07 | 03 | - | - | 02 | - | 15 |
| வரலாறு மற்றும் தொல் பொருளியல் | | - | 03 | 01 | 04 | - | 02 | 01 | 02 | - | 13 |
| புவியியல் | | - | 01 | 02 | 04 | 03 | - | 04 | - | - | 14 |
| சமூகவியல் | | - | 02 | - | 01 | - | - | - | 02 | 01 | 06 |
| மனித இன இயல் | | - | 02 | - | 04 | - | - | - | 02 | - | 08 |
| குற்றவியல் | | - | 01 | 01 | 04 | 01 | - | 02 | 01 | - | 10 |
| மொழிகள், கலாசார கற்கைகள் மற்றும் ஆற்றுகைக் கலை | | 01 | 01 | - | 06 | 03 | - | 03 | 05 | 01 | 20 |
| பொருளியல் | | - | 04 | - | 03 | 02 | 01 | - | 02 | - | 10 |
| சமூகப் புள்ளிவிபரவியல் | | - | - | - | 03 | 02 | 01 | 04 | 03 | - | 13 |
| ஆங்கிலம் மற்றும் மொழியியல் | | - | - | - | 05 | 04 | - | - | 05 | - | 14 |
| ஆங்கில மொழி கற்பித்தல் | | - | - | - | - | 04 | 01 | 03 | 04 | - | 12 |
| பாளி மற்றும் பௌத்த கற்கைகள் | | 01 | 05 | - | 03 | 03 | - | - | 06 | - | 18 |
| மெய்யியல் மற்றும் உளவியல் | | 01 | 01 | - | 01 | 01 | 01 | - | 02 | - | 07 |
| அரசியல் விஞ்ஞானம் | | - | - | - | 02 | 06 | - | - | 02 | - | 10 |
| **மொத்தம்** | | **04** | **21** | **05** | **47** | **32** | **06** | **17** | **38** | **02** | **171** |

## கல்விசாரா பணிக்குழாம் பற்றிய விபரங்கள் - 2018

| துறை | அதி சிரேஷ்ட பணிக்குழாம் | சிரேஷ்ட பணிக்குழாம் | கனிஸ்ட பணிக்குழாம் | சிற்றூழியர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பீடாதிபதிப் பணிமனை | 01 | 02 | 09 | 05 | 17 |
| சிங்களம் மற்றும் வெகுஜனத் தொடர்பாடல் | - | - | 01 | 01 | 02 |
| வரலாறு மற்றும் தொல்பொருளியல் | - | 01 | - | 01 | 02 |
| புவியியல் | - | - | 02 | 03 | 05 |
| சமூகவியல் | - | - | 01 | 01 | 02 |
| மனித இன இயல் | - | - | 01 | 02 | 03 |
| மொழிகள்,கலாசார கற்கைகள் மற்றும் ஆற்றுகை கலைகள் | - | - | 01 | 01 | 02 |
| பொருளியல் | 01 | - | - | 02 | 03 |
| சமூகப் புள்ளிவிபரவியல் | - | - | 01 | 01 | 02 |
| ஆங்கிலம் மற்றும் மொழியியல் | - | - | 01 | 01 | 02 |
| பாளி மற்றும் பௌத்த கற்கைகள் | - | - | 01 | 01 | 02 |
| மெய்யியல் மற்றும் உளவியல் | - | - | 01 | 01 | 02 |
| குற்றவியல் | - | - | 01 | 01 | 02 |
| ஆங்கில மொழி கற்பித்தல் | - | - | 01 | 01 | 02 |
| அரசியல் விஞ்ஞானம் | - | - | 01 | 01 | 02 |
| கணினி ஆய்வு கூடங்கள் | - | - | 01 | 03 | 04 |
| **மொத்தம்** | **02** | **03** | **23** | **26** | **54** |

## ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| விடயத் தலைப்பு | பிரசுரிக்கப்பட்டவை | வணிகமயப்படுத்தப்பட்டவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| அ. ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | 44 | - | 14 |
| ஆ. புத்தாக்கங்களின் எண்ணிக்கை | - | - | - |
| இ. பருவ ஆய்விதழ்களின் எண்ணிக்கை | 06 | - | - |
| ஈ. நூல்களின் எண்ணிக்கை | 18 | - | - |
| உ. கட்டுரைகளின் எண்ணிக்கை | 62 | - | 05 |
| ஊ. ஏனையவை ( கட்டுரைச் சுருக்கம், ஆய்வு மாநாட்டு முன்னெடுப்புக்கள், விளம்பரம் காட்சிப்படுத்தல்) | 18 | - | 11 |
| **மொத்தம்** | **148** | - | **30** |

## செயற்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்

| விடயத் தலைப்பு | பங்கேற்றவை | பூர்த்தியானவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| அ. பட்டப்பின் படிப்பு செயற்திட்டங்கள் | 13 | 03 | 02 |
| ஆ. பட்டப் பின் படிப்பு டிப்ளோமா செயற்திட்டங்கள் | 03 | 03 | 02 |
| இ. இளமாணிப் பட்ட செயற்திட்டங்கள் | 14 | 11 | 02 |
| ஈ. டிப்ளோமா செயற்திட்டங்கள் | 06 | 10 | 01 |
| உ. சான்றிதழ் செயற்திட்டங்கள் | 05 | 06 | |
| **மொத்தம்** | **41** | **33** | **07** |

## பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகள்

| விடயத் தலைப்பு | பரிசில்களின் எண்ணிக்கை | பெற்றுக்கொண்ட கல்விமான்களின் எண்ணிக்கை | பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உள்ளூர் விருதுகள் | 02 | | |
| தேசிய விருதுகள் | 02 | 01 | |
| சர்வதேச விருதுகள் | 01 | | |
| ஏனையவை (விசேட விருதுகள் / பரிசில்கள் மற்றும் தங்கப் பதக்கங்கள்) | 01 | 01 | 01 |
| **மொத்தம்** | **06** | **02** | **01** |

# பிரயோக விஞ்ஞான பீடம்



1962 இல் தாபிக்கப்பட்ட பல்கலைகழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடம் இலங்கையின் பல்கலைக்கழகங்களில் தாபிக்கப்பட்ட விஞ்ஞான பீடங்களுள் பழமையானதொன்றாகும். அது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து புலமைசார் திறன், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி வசதிகள், பாடத்திட்ட வீச்சு மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை என்பவற்றில் அதிகளவில் வளர்ச்சியடைந்துள்ளது. தற்போது அது 150 கல்விசார் பணிக்குழாத்தையும் 2300 இளமாணிப் பட்டதாரி மாணவர்களையும், சுமார் 200 பட்டப்பின் படிப்பு பட்டதாரி மாணவர்களையும் உள்ளடக்கிய 11 கற்கைத் துறைகளைக் கொண்டுள்ளது.

இப்பீடமானது சிங்கள மொழியில் விஞ்ஞானத்தைக் கற்பித்தல், மீன் பண்ணை உயிரியல், உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், மீச்சேர்ம விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், வனவியல் மற்றும் சூழல் விஞ்ஞானம், கணினி விஞ்ஞானம், புள்ளிவிபரவியல் மற்றும் முகாமைத்துவம் போன்ற Bsc பாட விதானத்தில் விஞ்ஞானத்தின் பிரயோகப் பண்பை வலியுறுத்தல் உள்ளிட்ட வகையில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானக் கல்வியில் பல்வேறு சவால்களையும் முன்னணி அபிவிருத்திகளையும் எதிர்கொண்டு வளர்ச்சியடைந்துள்ளது.

பிரயோக விஞ்ஞான பீடம் பின்வரும் பதினொரு (11) கல்வித் துறைகளைக் கொண்டுள்ளது.

**பீடாதிபதி** – முதுநிலைப் பேராசிரியர். சுதந்த லியனகே

| **துறைகள்** | **துறைத் தலைவர்கள்** |
|---|---|
| 1. தாவரவியல் துறை | பேராசிரியர். (திருமதி). P. K. N. தசநாயக்க |
| 2. இரசாயனவியல் துறை | முதுநிலை பேராசிரியர். P. P. M. ஜயவீர |
- முதுநிலை பேராசிரியர், ஹேமன்தி ரனசிங்ஹ, பீடாதிபதி, பட்டப்பின் படிப்புக் கற்கைகள் பீடம் மற்றும் முதுநிலைப் பேராசிரியர், வனவியல் மற்றும் சூழல் விஞ்ஞானங்கள் துறை, ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்

- கலாநிதி சான்த விஜேசிங்ஹ, முதுநிலை விரிவுரையாளர், புவியியல் துறை, ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

- கலாநிதி தமரா டயஸ், மேலதிகப் பணிப்பாளர், தேசிய விஞ்ஞான மன்றம், இலங்கை

- திரு. ஹரீந்ர தசநாயக்க, தலைவர், ஜனாதிபதி செயலகத்தின் சர்வதேச ஊடகத்துறை.

- திரு. ரன்தீவ மலலசூரிய, பிரதம நிறைவேற்று அதிகாரி ( CEO ) இலங்கை வரையறுக்கப்பட்ட பிஸ்கட் கம்பெனி.

## <u>வட்ட மேசைக் கலந்துரையாடல் 02</u>

கருப்பொருள் : "பசுமைப் புத்தாக்கங்கள் தொடர்பான கைத்தொழில் தொடர் அமர்வு"

தலைவர் : பேராசிரியர். அஜித் அல்விஸ், முதுநிலைப் பேராசிரியர், மொரட்டுவ பல்கலைக்கழகம்

**பங்கேற்புக் குழுவினர்**

- பேராசிரியர் சட்டர்ஜி சுதிப்தா (Chatterjee Sudihta ) இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், இயற்கை வளங்கள் துறை, Teri பல்கலைக்கழகம், இந்தியா.

- பேராசிரியர் மல்வில திசாநாயக்க, பீடாதிபதி, சூழல் விஞ்ஞான பீடம், Lakeland College, கனடா.

- Ms. ஷாரிகா சேனாநாயக்கா, Head of Sustaimability, MAS Holdings நிறுவனம்.

- பொறியியலாளர் சேன பீரிஸ், முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர், தேசிய தூய்மையாக்கல் கருவி உற்பத்தி நிலையம்.

- திரு. அசோகா ஹெட்டிகொட, பணிப்பாளர், ஹெட்டிகொட தொழில் நிறுவனம்.

### சர்வதேச பல்துறையிடை கற்கைகள் பருவ ஆய்வு இதழ் IJMS

ஆய்வாளர்கள் தமது பல்துறையிடை ஆராய்ச்சிப் படைப்புகளைச் சமர்ப்பிப்பதற்கான மேடையே சர்வதேச பல்துறையிடைக் கற்கைகள் ஆய்வு இதழாகும். (IJMS). இது ஒரு அரையாண்டு ஆய்வு இழதாக இருப்பதோடு அதன் தொகுதி 5 இன் இரண்டு இதழ்கள் 2018 ஜுலை மற்றும் டிசம்பர் மாதங்களில் பிரசுரமாகின.

**பாடவிதான அபிவிருத்தி மற்றும் தர உறுதி பேணுகைக் குழு**

பட்டப்பின் படிப்புக் கற்கைகள் பீடத்தின் துணைக் குழுவொன்றான பாடவிதான அபிவிருத்தி மற்றும் தர உறுதி பேணுகைக் குழு பீட சபைக்குப் பின்வரும் பொறுப்புக்களை அறிவிக்க வேண்டும்.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதிப்பீட்டாளர்களுக்கு SAARC வகை சார்ந்தவை மற்றும் SHARC வகை சாராதவை உள்ளிட்ட முன்மொழிவு மற்றும் ஆய்வுக் கட்டுரை மேற்பார்வை, வெளிநாட்டு மாணவர் மதிப்பீடு என்பவற்றுக்காக வந்து சேரும் கட்டணங்கள்.

- கூட்டு ஆராய்ச்சிப் பட்டங்களுக்கான கட்டணங்கள்

- பல்கலைக்கழகத்திலுள்ள சகல கற்கை நெறிகளையும் உள்ளடக்கிக் கொள்ளும் வகையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுப் படைப்புக்களை இணைத்துக் கொள்ளக் கூடியவாறு பல்கலைக்கழகத்துக்கான ஆய்வுப் புறவமைப்பு ஒன்றை உருவாக்கும் வேலைத்திட்டம். இது ஆராய்ச்சிப் பேரவையுடன் இணைந்து பட்டப்பின் படிப்புக் கற்கைகள் பீடத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு முயற்சியே ஆகும்.

## பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடத்தினால் நடாத்தப்படும் அதிதி விரிவுரைகள்

ஆய்வுக் கண்டுப்பிடிப்புக்களை பரவலாக்குவதற்கும் அக்கறை மிக்க தலைப்புக்களைக் கலந்துரையாடுவதற்கான மேடையை அமைப்பதற்குமான நோக்கில் மாதாந்த அதிதி விரிவுரைத் தொடர்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதிதி விரிவுரைகள் பின்வரும் தலைப்புக்களைக் கொண்டனவாக அமைந்திருந்தன. தரம் மற்றும் விளைதிறன் முன்னேற்றத்திற்கான இலங்கைச் சங்கத்தோடு இணைந்து இலங்கை டேர்டன்ஸ் மருத்துவ மனையின் பிரதம செயற்படுத்தல் அதிகாரியான Dr. விமல் கரன்னாகொடவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட "விளைதிறன் வெற்றிக்கான ஒரு புதிய பாதை" (A new way to Productivity) மற்றும் பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தின் தாவரவியல் துறையோடு இணைந்து ஐக்கிய மற்றும் உயிர் இரசாயனவியல் துறையின் பணிப்பாளரும் ஹுஸ்டன் பல்கலைக்கழக Genome Sequencing and Gene Editing இணைப் பேராசியருமான பேராசிரியர் பிரீதி H. குணரத்னவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட Translating Scientific Breakthroughs from Gemomics Revolution ஆகிய அதிதி விஜரிவுரைகள் நடத்தப்பட்டன.

**ஆய்வுநிலை உருமாதிரி மற்றும் தரவுகள் மீதான புள்ளிவிபரப் பகுப்பாய்வு பற்றிய ஐந்து நாள் துரித குறுகிய கற்கை நெறி**

பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடமானது 2018 ஜுலை 02 முதல் 06 ஆம் திகதி வரை 31 பங்குபற்றுனர்களுக்கும் 2018 ஒக்டோபர் 01 முதல் 05 ஆம் திகதி வரை 26 பங்குபற்றுனர்களுக்கும் ஐந்து நாள் துரித குறும் கற்கை நெறிகள் இரண்டினை வெற்றிகரமாக ஒழுங்குபடுத்தியது. இக்கற்கை நெறிகளின் போது ஆய்வுநிலை உருமாதிரியும் கூர்நோக்குக் கற்கைகளும் பணமாற்று புள்ளிவிபரவியல், பல்வேறு புள்ளிவிபரக் கருவிகளைப் பயன்படுத்தும் அளவுசார் தரவுப் பகுப்பாய்வு மற்றும் Atlas - ti/ MPSS / Minitab Softwares என்பவற்றைப் பயன்படுத்தும் அளவுசார் தரவுப் பகுப்பாய்வு போன்றவை இந்தக் கற்கை நெறியில் உள்ளடக்கப்பட்டன.

**தர வட்டங்கள் / வேலைக் குழுக்கள் / குறுக்குவெட்டான செயற்பாட்டு / CI குழுக்கள் / விளைதிறன் மேம்பாட்டுக் குழுக்கள்**

## பசுமைப் பல்கலைக்கழகத் திட்டம்

பட்டப்பின் படிப்புக் கற்கைகள் பீடமானது அனைத்து பீடங்களினதும் பீடாதிபதிகள், பதிவாளர், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிநிதி, வேலைப் பொறியியலாளர், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், தோட்ட மேற்பார்வையாளர்கள், விடுதி மேற்பார்வையாளர்கள், மாணவர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா நிர்வாக பணிக்குழுக்களின் உறுப்பினர்கள் என்போரின் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட பல்கலைக்கழக பசுமைக் குழுவினை உருவமைப்பதில் தலைமைத்துவத்தை வழங்கியது. கழிவுப் பொருள் முகாமைத்துவம், நீர், சக்தி வளம் போன்ற இன்னோரன்னவை உள்ளிட்ட மூலவளப் பாதுகாப்பு போன்ற பரப்புக்களில் வழிகாட்டல்களை வழங்குவதனையும் சூழல் சார்ந்த நேசச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டு இது மேற்கொள்ளப்பட்டது. பொதுக் காட்சிகள் மற்றும் மரம் நடுகைகள் கழிவுப் பொருள் முகாமைத்துவம் போன்றவை உள்ளிட்ட பல்வேறு உலக சுற்றாடல் தின வேலைத்திட்டங்கள் 2018 ஜுன் 6 ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டன. இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபை பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடத்திலும் பல்கலைக்கழகத்தின் ஏனைய துறைகளிலும் வைக்கப்பட்டுள்ள பல நிறங்களிலான கொள்கலன்களை வழங்கி கழிவுப் பொருள் முகாமைத்துவத்தில் இணைந்து கொண்டது.

## பட்டப்பின் படிப்புக் கற்கைகள் பீடத்தினால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத் தொகுதிகள் (Mous)

விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு 2016, 2017, 2018 ஆகிய வருடங்களுக்கான பல்துறையிடை அணுகு முறை தொடர்பான சர்வதேசக் கருத்தரங்குகளுக்கான இணை ஒழுங்கமைப்பாளராகவும், அனுசரணையாளராகவும் இணைந்து உழைத்தது. சர்வதேசப் பல்கலைக்கழகங்கள் கைத்தொழில் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்ற உள்நாட்டு, வெளிநாட்டுப் பகுதியினர்களுடன் மேற்கொண்ட கூட்டுழைப்புக்களும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் (MOUs) பல்கலைக்கழகத்தின் அடையாளப் பிரதிமையை மேம்படுத்துவதனையும், நோக்காகக் கொண்டவையாகும். வெளிநாட்டு பங்கேற்பார்களைக் கவர்வதற்கும் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MOUs) கைச்சாத்திடப்பட்டன.

**2018 இல் கைச்சாத்திடப்பட்ட புரிர்ந்துணர்வு ஒப்பந்தங்களும்** (MOUs) **உடன்பாடுகளும்**

1. இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடத்துக்கும் சம்பத் வங்கிக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

2. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கும் பத்தரமுல்ல, எத்துல் கோட்டை பாதை, இலக்கம் 316 இல் அமைந்துள்ள Waters Edge ஹோட்டலுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU).

3. இலங்கை ஜயவர்தனபுர பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடத்துக்கும் இந்தியா, நியூடில்லியிலுள்ள The Teri School of Advanced Study க்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU).

4. இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடத்திற்கும் கனடா, அல்பேர்டா மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகத்தின் ஆளுநர்களுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU).

5. தேசிய விஞ்ஞான மன்றிலிருந்து (NSF) வெளிநாட்டு புலமையாளர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயண நன்கொடை.

# தொழில்நுட்ப பீடம்



இலங்கை அரசாங்கம் 2013 ஆண்டில் அறிமுகம் செய்த க.பொ.த உயர்தர தொழில்நுட்பக் கற்கைத் துறைக்கு இடமளிப்பதை ஏதுவாக்கும் வகையில் இலங்கை அரசப் பல்கலைக்கழக முறைமையில் தொழில்நுட்பப் பீடம் ஒன்றைத் தாபிப்பதற்கு முன்வந்த முதலாவது பல்கலைக்கழகம் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழமாகும். பின்னர் 2015 செம்டெம்பர் 23 ஆம் திகதியன்று பல்கலைக்கழக செனேற்றின் அங்கீகாரத்தின் மேல் முன்மொழியப்பட்ட தொழில்நுட்ப பாடவிதானம் பல்கலைக்கழக பேரவைக்குப் பரிந்துரைக்கப்பட்டது. 2015 ஒக்டோபர் 08 ஆம் திகதி பல்கலைக்கழகப் பேரவையின் பரிந்துரையைத் தொடர்ந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2015 நவம்பர் 19 ஆம் திகதி, முன்மொழியப்பட்ட 09 பாட குவிமையப் பகுதிகளை உள்ளடக்கிய மூன்று இள மாணிப் பட்ட செயற்திட்டங்களை அங்கீகரித்தது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர். சம்பத் அமரதுங்கா மற்றும் அவரது குழுவினரினது தூர நோக்கு, அயராத உழைப்பு மற்றும் அர்ப்பணம் என்பவற்றை பூர்த்தி செய்யும் வகையில் உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு 2016 ஜனவரி 08 ஆம் திகதி வெளியிட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தொழில்நுட்ப பீடம் நிறுவப்பட்டதனை அறிவித்தது.

தொழில்நுட்பப் பீடம் பின்வரும் மூன்று கல்வித் துறைகளைக் கொண்டுள்ளது.

| | கல்வித்துறை | துறைத் தலைவர் |
|---|---|---|
| 1. | பொறியியல் தொழில்நுட்பத் துறை | கலாநிதி. (திருமதி) நில்மினி லியனகே |
| 2. | உயிர்முறைமைத் தொழில்நுட்பத் துறை | கலாநிதி. (திருமதி) ரன்திக ஜயசிங்ஹ |
| 3. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறை | கலாநிதி. B. N. S. லங்காசேன |

இந்த மூன்று துறைகளும், இலங்கையில் அதிகமாகக் கோரி நிற்கப்படும் கௌரவப் பட்டங்களை வழங்குகின்றன. இந்த இள மாணிப் பட்ட செயற்திட்டங்கள் இலங்கைத் தகுதி புறவமைப்பு (SLQF) தரம் 6 னில் வழங்கப்படும் முழு நேர நான்கு வருட வாண்மை சார்ந்த பட்ட செயற்திட்டங்களாகும்.

பொறியியற் தொழில்நுட்பத் துறை பொறியியல் தொழில்நுட்ப மாணி கௌரவப் பட்ட செயற்றிட்டத்தை நடத்துகிறது. இந்த செயற்திட்டத்தின் அபிவிருத்தியானது முழுநேர நான்கு வருட வாண்மை சார்ந்த பட்டத்திற்கும் சிட்னி பொருத்தத்துக்கும் அமைவானதுமான அங்கீகரிக்கப்பட்ட கையேட்டின் மூலம் இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தினால் வழிகாட்டப்படுகின்றது. இந்த பொறியியல் தொழில்நுட்பச் செயற்றிட்டத்தின் கீழ் சக்திவள

மற்றும் சுற்றாடல் தொழில்நுட்பம், Mechatronics, கட்டிட நிர்மாணம் மற்றும் கட்டிடச் சேவைகள், தொல்பொருள் தொழில்நுட்பம், மீச்சேர்ம செய்முறை தொழில்நுட்பம், மோட்டார் வாகனத் தொழில்நுட்பம் ஆகியன குவிமையப்படுத்தப்பட்ட ஆறு பரப்புக்களில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் துறையானது ஏனைய இள மாணிப் பட்ட செயற்திட்டகளுக்கான பொதுப் பாடங்களுக்கும் உதவியளிக்கும்.

உயிர் முறைமைகள் தொழில்நுட்பத் துறை உயிர் முறைமைகள் தொழில்நுட்ப மாணி கௌரவப் பட்ட செயற்றிட்டத்தைக் கொண்டு நடத்தும். இந்தச் செயற்றிட்டத்தின் அபிவிருத்தியானது இலங்கை தேசிய உயிர் தொழில்நுட்ப கைத்தொழில் சங்கத்தினால் (NBIA) வழிநடத்தப்படுகின்றது. உயிர்தொழில்நுட்ப செயற்திட்டம் உணவுச் செய்முறைத் தொழில்நுட்பம் (Food Procesing Technology) விவசாயம் மற்றும் சூழல் தொழில்நுட்பம் (Agriculture and Enviroment Technology) கைத்தொழில் உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் என்ற மூன்று குவிமையப் பரப்புக்களில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளை உருவாக்குவதற்குத் திட்டமிட்டு உள்ளது.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் துறையானது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கௌரவப் பட்டதாரிகளை உருவாக்குகின்ற ஒரு துறையாகும். இந்தச் செயற்றிட்டத்தின் அபிவிருத்தியானது இலங்கை கணினிச் சங்கத்தினால் வழிநடத்தப்படுவதோடு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்றிட்டமானது மென்பொருள் தொழில்நுட்பம் (Software Technology), பலவகை ஊடகத் தொழில்நுட்பம் (Multimedia Technology), வலயமைப்புத் தொழில்நுட்பம் (Network Technology) ஆகிய மூன்று குவிமையப் பரப்புக்களில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக, தொழில்நுட்ப பீடத்துக்கு உள்வாங்கப்பட்ட இரண்டாம் தொகுதி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயற்றிட்டம் 321 மாணவர்கள் மற்றும் பெற்றோரின் பங்குபற்றுதலோடு 2017 டிசம்பர் 16 ஆம் திகதியன்று நடைபெற்றது. 2017 டிசம்பர் 22 ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் விளையாட்டு மைதானத்தழில் தொழில்நுட்ப பீடத்தின் விளையாட்டு தினம் நடைபெற்று திசைமுகப்படுத்தல் செயற்றிட்டம் முடித்து வைக்கப்பட்டது. தொழில்நுட்ப பீடத்தின் மூன்றாம் தொகுதி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயற்றிட்டம் 2019 பெப்ரவரி 24 ஆம் திகதி நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## பீடத்திலிருந்து வெளியிடப்பட்ட 2018 பெறுபெறுகள் பற்றிய விபரங்கள்

| பட்டம் | 1 ஆம் வகுப்பு | 2 ஆம் வகுப்பு உயர் பிரிவு | 2 ஆம்வகுப்பு கீழ்ப் பிரிவு | சாதாரண சித்தி | மொத்தச் சித்தி |
|---|---|---|---|---|---|
| உயிர் முறைமைகள் தொழில்நுட்ப இள மாணிப் பட்டம் | இதுவரை மாணவர்கள் பட்டம் பெறவில்லை | | | | |
| பொறியியல் தொழில்நுட்ப இள மாணிப் பட்டம் | | | | | |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இள மாணிப் பட்டம் | | | | | |
| **மொத்தம் - B. Sc (சிறப்பு)** | | | | | |
| **மொத்தம் - B. Sc (பொது)** | | | | | |
| **மொத்தக் கூட்டுத்தொகை** | | | | | |

## வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்

| கற்கை நெறி | மொத்த மாணவர்கள் | மொத்த கல்விசார் பணிக்குழாம் | மொத்த கல்விசாரா பணிக்குழாம் |
|---|---|---|---|
| உயிர்முறைமைகள் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் | 172 | 11 | 06 |
| பொறியியல் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் | 321 | 13 | 10 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி பட்டம் | 149 | 05 | 07 |
| பீட அலுவலகம் | பொருத்தம் இல்லை | 09 | |

## உள்ளூர் மாணவர்கள் பற்றிய விபரங்கள்

| கற்கை நெறி | மொழி மூலம் | மாணவர் ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|
| | | 1 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு | 4 ஆம் ஆண்டு |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் | ஆங்கிலம் | 86 | 86 | | |
| பொறியியல் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் | | 160 | 160 | | |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் | | 75 | 75 | | |
| **மொத்தம்** | | 321 | 321 | | |

## கல்விசார் பணிக்குழு பற்றிய விபரங்கள்

| விடயத் தலைப்பு | முதுநிலைப் பேராசிரியர் | பேராசிரியர் | இணைப் பேராசிரியர் | முதுநிலை விரிவுரையாளர் தரம் 1 | முதுநிலை விரிவுரையாளர் தரம் 2 | விரிவுரையாளர் | தற்காலிக விரிவுரையாளர் | தகுதிகாண் நிலை விரிவுரையாளர் | அறிவுறுத்துனர் | தற்காலிக அறிவுறுத்துனர், செய்முறையாளர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பீடாதிபதி அலுவலகம் | | 01 | | | | | | | | 01 |
| உயிர்முறைகள் தொழில்நுட்பத் துறை | | | | | 07 | 03 | 01 | 01 | | 11 |
| பொறியியல் தொழிநுட்பத் துறை | | | | 01 | 09 | | | | | 13 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறை | | | | | 03 | 02 | | 03 | | 05 |
| **மொத்தம்** | | **01** | | **01** | **19** | **05** | | **04** | | **30** |

## கல்விசாரா பணிக்குழாம் பற்றிய விபரங்கள்

| பீடம் | அதி முதுநிலைப் பணிக்குழாம் | முதுநிலைப் பணிக்குழாம் | கனிஸ்ட பணிக்குழாம் | சிற்றூழியர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தொழிநுட்பப் பீடம் | | 02 | 15 | 14 | 31 |

## செயற்றிட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்

| விடயத் தலைப்பு | பங்கேற்றவை | பூர்த்தியாக்கியவை | சமர்ப்பித்தவை |
|---|---|---|---|
| a. பட்டப்பின் படிப்பு பட்டச் செயற்திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| b. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா செயற்திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| c. இள மாணிப் பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| d. டிப்ளோமா செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| e. சான்றிதழ் கற்கை செயற்திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| f. செயற்திட்டங்கள் | 05 | - | - |
| g. செயலமர்வுகள் | 14 | 01 | 01 |
| **மொத்தம்** | **19** | **01** | **01** |

## ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| விடயத் தலைப்பு | பிரசுரிக்கப்பட்டவை | வணிகமயப்படுத்தபட்டவை | சமர்ப்பிக்கப் பட்டவை |
|---|---|---|---|
| a. ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | 06 | | 05 |
| b. புத்தாக்கங்களின் எண்ணிக்கை | 02 | | 03 |
| c. பருவ ஆய்வு இதழ்களின் எண்ணிக்கை | 07 | | |
| d. நூல்களின் எண்ணிக்கை | | | |
| e. ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை | 10 | | |
| f. ஏனையவை (ஆய்வுப் பத்திரங்கள்) | 21 | | 03 |
| **மொத்தம்** | **46** | | **11** |

## கிடைக்கப் பெற்ற விருதுகள் பற்றிய விபரங்கள்

| விடயம் | விருதுகளின் எண்ணிக்கை | பெற்றுக்கொண்ட கல்விமான்களின் எண்ணிக்கை | பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| – உள்ளூர் விருதுகள் | 11 | – | – |
| – தேசிய விருதுகள் | 01 | – | – |
| – சர்வதேச விருதுகள் | – | – | – |
| – ஏனையவை ( விசேட விருதுகள், பரிசில்கள் மற்றும் தங்கப் பதக்கங்கள்) | 01 | – | – |
| **மொத்தம்** | **13** | – | – |

## ஆரம்பிக்கப்பட்ட புதிய கற்கைநெறிகள் பற்றிய விபரங்கள்

| கற்கை நெறி | மொழி மூலம் | சான்றிதழ் | டிப்ளோமா / BSc | M.Phil | Phd |
|---|---|---|---|---|---|
| உயிர்முறைமைகள் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் | ஆங்கிலம் | இல்லை | | | |

# பொறியியல் பீடம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பொறியியல் பீடமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நோக்கெல்லைக்கு உட்படும் அரசப் பல்கலைக்கழகங்களில் உள்ள பொறியியல் பீடங்களோடு அண்மையில் சேர்ந்த ஒரு பீடாகும். 2016 ஜனவரியில் தாபிக்கப்பட்ட இப்பீடம் ஐந்து கற்கைத் துறைகளைக் கொண்டுள்ளது. அந்தத் துறைகள் பொறியியல் விஞ்ஞான இள மாணிப் பட்டங்களை வழங்கும் வகையிலமைந்த பொறியியல் கற்கைச் செயற்திட்டங்களை வழங்குவதற்கு ஆணையுரிமை பெற்றுள்ளன.

பொறியியல் பீடம் பின்வரும் ஐந்து ( 05 ) கல்வித் துறைகளையம் அவற்றின் தலைவர்களையும் கொண்டுள்ளன.

| | கல்வித்துறை | துறைத் தலைவர் |
|---|---|---|
| 1. | சிவில் பொறியியல் துறை | கலாநிதி. K. M. C. கொன்தசிங்ஹ |
| 2. | கணினி பொறியியல் துறை | கலாநதி. D. M. R. தினலங்கார |
| 3. | மின்சாரம் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறை | கலாநிதி. C. D. அல்விஸ் |
| 4. | துறையிடைக் கற்கைத் துறை | கலாநிதி. M. M. அன்வர் |
| 5. | இயந்திரப் பொறியியல் துறை | கலாநிதி. P. M. T. பண்டார |

## பீடத்தினால் வழங்கப்படும் டிப்ளோமாக்களும் பட்டங்களும்

**பட்டங்கள்**

1. பொறியியல் விஞ்ஞான இள மாணிப் பட்டம்

&

## மூல வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்

| கற்கை நெறி | மொத்த மாணவர்கள் | மொத்த கல்விசார் பணிக்குழாம் | மொத்த கல்விசாரா பணிக்குழாம் |
|---|---|---|---|
| பொறியியல் விஞ்ஞான மாணிப் பட்டம் (B.Sc Eng) | 361 (2018 டிசம்பர் 01 ஆம் திகதியிலிருந்து) | 52 | 38 |
| **மொத்தம்** | 361 | 52 | 38 |

## உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள்

| கற்கை நெறி | மொழி மூலம் | மாணவர் ஆண்டு | | | | பட்டதாரிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | 1 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு | 4 ஆம் ஆண்டு | |
| பொறியியல் விஞ்ஞான இளமாணிப் பட்டம் | ஆங்கிலம் | 121 (2018.11.19 ஆம் திகதியில் இருந்து) | 120 | 120 | - | - |

## கல்விசார் பணிக்குழாம் பற்றிய விபரங்கள்

| கற்கை நெறி | பேராசிரியர் முதுநிலை விரிவுரையாளர் தரம் 1, முதுநிலை விரிவுரையாளர் தரம் 2 | விரிவுரையாளர் (ஒப்பந்தப்படி) முதுநிலை விரிவுரையாளர் தரம் 1 | தற்காலின அறிவுறுத்துனர் | அறிவுறுத்துனர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பீடாதிபதி அலுவலகம் | 00 | 00 | 00 | | 0 |
| சிவில் பொறியியல் துறை | 03 | 00 | 02 | 05 | 10 |
| கணினி பொறியியல் துறை | 03 | 03 | 00 | 05 | 11 |
| மின்சாரம் மற்றும் மின்னணுவியல் துறை | 04 | 04 | | | 08 |
| துறையிடைக் கற்கைகள் துறை | 02 | 03 | | 05 | 10 |
| இயந்திரப் பொறியியல் துறை | 02 | | 04 | 07 | 13 |
| **மொத்தம்** | **14** | **10** | **06** | **22** | **52** |

## கல்விசாரா பணிக்குழாம் பற்றிய விபரங்கள்

| கற்கைத் துறை | அதி முதுநிலைப் பணிக்குழாம் | முதுநிலைப் பணிக்குழாம் | கனிஸ்ட பணிக்குழாம் | சிற்றூழியர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பீடாதிபதி அலுவலகம் | 00 | 01 | 05 | 07 | 13 |
| பொறியியல் விஞ்ஞானத் துறை | 00 | 00 | 02 | 03 | 05 |
| கணினி விஞ்ஞானத் துறை | 00 | 00 | 03 | 03 | 06 |
| துறையிடைக் கற்கைகள் துறை | 00 | 00 | 01 | 01 | 02 |
| மின்சாரம் மற்றும் மின்னணுவியல் துறை | 00 | 00 | 03 | 03 | 06 |
| இயந்திரப் பொறியியல் துறை | 00 | 00 | 02 | 04 | 06 |
| **மொத்தம்** | **00** | **01** | **16** | **21** | **38** |

## ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| விடயத் தலைப்பு | பிரசுரிக்கப்பட்டவை | வணிகமயப் படுத்தப்பட்டவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| a. ஆய்வுகளின் எண்ணிக்கை | 04 | - | 02 |
| b. புத்தாக்கங்களின் எண்ணிக்கை | - | - | - |
| c. பருவ ஆய்வு இதழ்களின் எண்ணிக்கை | 01 | - | - |
| d. நூல்களின் எண்ணிக்கை | - | - | - |
| e. ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை | 05 | - | 01 |
| f. ஏனையவை (ஆய்வுப் பத்திரங்கள்) | - | - | - |
| **மொத்தம்** | **10** | **00** | **03** |

## பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகள் பற்றிய விபரங்கள்

| விடயம் | விருதுகளின் எண்ணிக்கை | கல்விமான்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| – உள்ளூர் விருதுகள் | - | - | - |
| – தேசிய விருதுகள் | - | - | - |
| – சர்வதேச விருதுகள் | - | - | - |
| – ஏனையவை ( விசேட விருதுகள், பரிசில்கள், தங்கப் பதக்கங்கள்) | - | - | - |
| **மொத்தம்** | - | - | - |

## வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| வெளியீடுகளின் வகைகள் | | எண்ணிக்கை | | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | | உள்நாட்டில் பிரசுரிக்கப்பட்டவை | வெளிநாட்டில் பிரசுரிக்கப்பட்டவை | |
| - Indexed பருவ ஆய்வு இதழ்களில் வெளியிடப்பட்ட பூரண ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை | | - | 01 | - |
| - Indexed refereed பருவ ஆய்வு இதழ்களில் வெளியிடப்பட்ட பூரண கட்டுரைகளின் எண்ணிக்கை. | | - | - | - |
| - Indexed refereed பருவ அல்லாத ஆய்வு இதழ்களில் வெளியிடப்பட்ட பூரண கட்டுரைகளின் எண்ணிக்கை | | - | - | - |
| - மாநாட்டுத் தொடர்களில் முழுக் கட்டுரைகளாக வெளியிடப்பட்ட மாநாட்டுக் கட்டுரைகளின் எண்ணிக்கை | | 02 | 04 | - |
| - ஆய்வுச் சுருக்க வெளியீடுகளின் எண்ணிக்கை | | 02 | 03 | - |
| வெளியிடப்பட்ட நூல் அத்தியாயங்களின் எண்ணிக்கை | | | | |
| - வெளியிடப்பட்ட நூல்களின் எண்ணிக்கை | | | | - |
| | ஆசிரியரால் | | | |
| **மொத்தம்** | | **04** | **08** | **-** |

## Indexed பருவ ஆய்வு இதழ்களில் வெளியிடப்பட்ட பூரண கட்டுரைகளின் அட்டவணை

| கட்டுரைத் தலைப்பு | வெளியிடப்பட்ட ஆண்டு | பிரதம ஆசிரியரின் பெயர் | | | இணை ஆசிரியரின் பெயர் | ஆய்வு இதழின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | ஆள்சுட்டு விளிக் குறிப்பு | முதல் எழுத்து | இறுதிப் பெயர் | | |
| Roboust regenerator allocation in nonlinear flexible grid optical networks with time varying data rates | 2018 | Mr. | Li. | Yan | Li Yan<br>M. B. Perera<br>N. Dharma weera<br>E. Agrell | JOCN |

## 2018 இல் தனிக்காப்புரிமைகள் (Patents) பற்றிய விபரங்கள்

| தனிக்காப்புரிமை வகை | எண்ணிக்கை | | குறிப்புக்கள் |
|---|---|---|---|
| | தேசிய | சர்வதேச | |
| – தனிக்காப்புரிமை பரப்புக்களின் எண்ணிக்கை | - | 01 | - |
| – பெற்றுக்கொள்ளப்பட்ட தனிக்காப்புரிமைகளின் எண்ணிக்கை | 02 | - | - |
| – அனுமதி பெற்ற தனிக்காப்புரிமைகளின் எண்ணிக்கை | - | - | - |
| – விற்பனைக்கு அனுமதிக்கப்பட்ட / உரிமை மாற்றப்பட்ட தனிக் காப்புரிமைகளின் எண்ணிக்கை | - | - | - |

## 2018 இல் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி விளைவுகள் பற்றிய விபரங்கள்

| வகை | செயற்றிட்டத்தின் எண்ணிக்கை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| புதிய உற்பத்தி / செயல்முறை அபிவிருத்தி | 01 | 00 |

## 2018 இல் இள மாணிப் பட்ட கற்பித்தல் / பட்டப்பின் படிப்புக் கற்பித்தல் / கருத்தரங்கு / செயலமர்வு என்பவற்றுக்காக வருகை தந்த சர்வதேச கல்விமான்கள் பற்றிய தகவல்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நாடு | கல்விசார் பணிக்குழாமிரின் எண்ணிக்கை |
|---|---|---|
| இலங்கை வடிவமைப்பு செயற்திட்வாளர்கள் நிறுவனத்தில் நடைபெற்ற புத்தாக்க நீடிப்புத் தன்மை தொடர்பான செயலமர்வு | இலங்கை | 01 |

# மாணவர் விவகாரங்கள் மற்றும் மாணவர் சேமநல விடயங்கள்

## மாணவர் பதிவு

2017 / 2018 கல்வி ஆண்டு தொகுதிக்குரிய தொடக்கம் மற்றும் முடிவு தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பீடம் | 2017/2018 மாணவர் எண்ணிக்கை | கல்வி ஆண்டின் தொடக்கத் திகதி | கல்வி ஆண்டின் முடிவுத் திகதி |
|---|---|---|---|
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 942 | 14.03.2019 | மார்ச் 2020 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 743 | 02.01.2019 | 17.11.2019 |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | 1223 | 27.09.2018 | 13.10.2019 |
| பொறியியல் பீடம் | 121 | 19.11.2018 | 04.11.2019 |
| தொழில்நுட்பப் பீடம் | 318 | 25.02.2019 | 19.01.2020 |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | 235 | MBBS - 07.01.2019 தாதி, மருந்தாக்கக் கலை மற்றும் மருத்துவ ஆய்வக விஞ்ஞானம் (MLS) 05.02.2019 | – |

## மாணவர் பதிவு பற்றிய விபரங்கள்

| கல்வி ஆண்டு | மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | மருத்துவ விஞ்ஞான பீடம் | பொறியியல் பீடம் | தொழில் நுட்பப் பீடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2015/2016 | 837 | 628 | 1215 | 150 | 121 | 321 | **3272** |
| 2016/2017 | 877 | 698 | 1213 | 231 | 120 | 321 | **3460** |
| 2017/2018 | 942 | 743 | 1223 | 235 | 121 | 318 | **3347** |

## மஹெபொல புலமைப்பரிசில்கள்

2018 இல் பல்வேறு பீடங்களின் கீழ் மஹாபொல புலமைப்பரிசில்களைப் பெற்ற மாணவர்களின் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

திறமைப் புலமைப் பரிசில்களாக ரூபா 5050/= வும் சாதாரண புலமைப் பரிசில்களாக ரூபா 5000/= வும் வழங்கப்பட்டன.

| கல்வி ஆண்டு | மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | மருத்துவ விஞ்ஞான பீடம் | பொறியியல் பீடம் | தொழில் நுட்பப் பீடம் | மாதங்களுக்காக செலவழிக்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 2011/2012 | - | - | - | 60 | - | - | 2, 290, 350.00 |
| 2012/2013 | - | - | - | 67 | - | - | 4.144, 150.00 |
| 2013/2014 | 557 | 94 | 910 | 88 | - | - | 65, 334, 100.00 |
| 2014/2015 | 587 | 222 | 860 | 115 | - | - | 82, 379, 850.00 |
| 2015/2016 | 487 | 171 | 829 | 87 | 37 | 213 | 93, 923, 350.00 |
| 2016/2017 | 508 | 215 | 835 | 105 | 52 | 220 | 106, 410, 100.00 |
| **மொத்தம்** | 2139 | 702 | 3434 | 522 | 89 | 433 | 354, 481, 900.00 |

## உபகாரப் பணம் (Bursary)

ஒவ்வொரு கல்வி ஆண்டு காலப்பகுதியிலும் வழங்கப்பட்ட உபகாரப் பணக் கொடுப்பனவுகள் பீட ரீதியாக கீழே தரப்பட்டுள்ளன – 2018

| கல்வி ஆண்டு | மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | மருத்துவ விஞ்ஞான பீடம் | பொறியியல் பீடம் | தொழில்நுட்பப் பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | மாதங்களுக்காக செலவழிக்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 2011/2012 | - | - | 05 | | - | - | 78, 500.00 |
| 2012/2013 | - | - | 02 | | - | - | 86, 900.00 |
| 2013/2014 | 90 | 50 | 11 | | - | 44 | 6, 236, 400.00 |
| 2014/2015 | 109 | 66 | 12 | | - | 110 | 9, 225, 900.00 |
| 2015/2016 | 159 | 60 | 23 | 07 | 12 | 110 | 11, 228, 400.00 |
| 2016/2017 | 108 | 32 | 16 | 02 | 07 | 69 | 5, 734, 100.00 |
| **மொத்தம்** | **466** | **208** | **69** | **09** | **19** | **333** | **32, 590, 200.00** |

## பரீட்சைகள்

2018 ஜனவரி மாதத்தில் இருந்து பெப்ரவரி மாதம் வரையிலும் மே மாத்தில் இருந்து டிசம்பர் மாதம் வரையிலுமான காலப் பகுதியில் நடைபெற்ற பருவப் பரீட்சைகளோடு தொடர்பான வினாப் பத்திரங்களை அச்சிடுதல், பொதி செய்தலும் அவற்றுக்கு முத்திரையிடுதலும், அவற்றை மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் தொழில்நுட்பப் பீடம் ஆகிய பீடங்களின் மேற்பார்வையாளர்களிடம் ஒப்படைத்தல் ஆகியன சம்பந்தப்பட்ட வேலைகள் பரீட்சைகள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் ஆகிய பீடங்களுக்கான பரீட்சை விடைத்தாள்களைப் பரீட்சகர்களிடம் ஒப்படைத்தலானது பரீட்சைகள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்துக்கான வினாப் பத்திரங்களைத் தட்டச்சுருப்படுத்தும் வேலையும் பரீட்சைகள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தின் சித்தியடைந்தோர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு பல்கலைக்கழக செனேற்றின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்படுதல் பரீட்சைகள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. பரீட்சைக் குற்றச் செயல்களை விசாரணை செய்யும் குழுவையும் மேன்முறையீடுகள் குழுவையும் (இரண்டு துணைக் குழுக்களும் பல்கலைக்கழக செனெற்றினால் நியமிக்கப்பட்டவையாகும்) கொண்டு நடத்துதல் மற்றும் அவற்றின் பரிந்துரைகளை செனேற்றுக்கு அனுப்பி வைத்தல் மற்றும் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தினதும் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்தினாலும் மாணவர்களினாலும் சமூகவியல் டிப்ளோமா பரீட்சைகளின் மாணவர்களாலும் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பான தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல் என்பன பரீட்சைகள் பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட்டன.

பிரயோக விஞ்ஞான பீடம், மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் என்பவற்றின் கல்விசார் பணிக் குழாமினதும் பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தின் கல்விசாரா பணிக் குழாமினதும் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுக்கள் தொடர்பான வேலைகளும் பரீட்சைகள் பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட்டன.

## பட்டமளிப்பு

மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம், பிரயோக விங்ஞான பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் ஆகிய பீடங்களின் பட்டங்களைப் பெறவுள்ளோரின் பட்டியல்களைத் தயாரித்தலும் அவற்றைப் பல்கலைக்கழக செனெற்றின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைத்தலும் பரீட்சைகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. தமக்குரிய பட்டமளிப்பு விண்ணப்பப் படிவம் மற்றும் கொடுப்பனவுப் பற்றுச் சீட்டுக்களை பல்கலைக்கழக Web தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 2018 செப்டெம்பர் 06 ஆம் 07 ஆம் திகதிகளில் நடைபெற்ற 44 ஆவது பட்டமளிப்பு விழாவுக்கான பத்திரிகை விளம்பரங்கள், மேற்குறிப்பிட்ட பீடங்களின் 2777 பட்டம் பெறவுள்ளவர்களிடமிருந்து பட்டமளிப்பு விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளுதல், பட்டச் சான்றிதழ்களின் மூலப் படிவத்தில் சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் பட்டம் பெறுனர்களின் தனிப்பட்ட பெயர்களை எழுதுதல், அவற்றைப் பட்டமளிப்பு விழாவில் வினியோகித்தல் ஆகியன தொடர்பான வேலைகள் அனைத்தும் பரீட்சைகள் பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட்டன.









## தங்கப் பதக்கங்கள்

தங்கப் பதக்கங்கள் மற்றும் புலமைப் பரிசில்களையும் அவற்றிற்குரிய சான்றிதழ்களையும் பட்டமளிப்பு விழாவில் வழங்குதல் தொடர்பான அனைத்து வேலைகளும் பரீட்சைப் பிரிவினாலேயே முழுமையாகக் கையாளப்பட்டன.

## சான்றிதழ்களின் வினியோகம் மற்றும் அவற்றை உறுதிப்படுத்துதல்

மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் என்ற பீடங்களின் பட்டதாரிகளுக்கும் வெளிநாட்டு, உள்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் அவர்களின் வேண்டுகோளின் பேரில் சான்றிதழ்களும் பெறுபேற்று விபரங்களும் (Transcript) களும் பரீட்சைகள் பிரிவினாலேயே விநியோகிக்கப்படுகின்றன. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களுக்காக சான்றிதழ்களையும் பெறுபேற்று விபரங்களையும் (Transcript) உறுதிப்படுத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகார நிறுவனங்களுக்கும் பட்டதாரிகளினதும் பரீட்சைப் புள்ளிவிபரத் தரவுகளினதும் தகவல்கள் தேவைப்படுமிடத்து அவற்றைச் சமர்ப்பித்தல் என்பனவும் பரீட்சைகள் பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட்டது.

**ஏனைய வேலைகள்**

பல்கலைக்கழக தர உறுதி பேணுகை அலகுக்காக நியமிக்கப்பட்ட குழு, பரீட்சைகள் பிரிவுக்கு விஜயம் செய்து அந்தப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களைப் பற்றி அந்தப் பிரிவோடு கலந்துரையாடியது.

## பல்கலைக்கழக மருத்துவ நிலையம்

பல்கலைக்கழக மருத்துவ நிலையம் மாணவர்களுக்கும் பணிக்குழாமினருக்கும் எண்ணிறைந்த வசதிகளை வழங்கி வருகிறது. அவற்றுள் மருத்துவ மற்றும் பல் மருத்துவ சிகிச்சைகள், பரிசோதனைகள், அமைப்பால் குத்துதல், அறிவுரை வழங்கல் கோன்றவை உள்ளடங்குகின்றன. மேலும் இந்த நிலையம் டெங்கு ஒழிப்புப் பிரச்சாரங்கள், பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பீடைக் கொல்லிகளைத் தெளித்தல், பல்கலைக்கழக விடுதிகளிலும் சிற்றுண்டிச் சாலைகளிலும் உணவுச் சோதனை செயற்திட்டங்கள், தண்ணீர் மாதிரிகளைப் பரிசோதனை செய்தல், மாணவர்களக்கு சுகநல மற்றும் சமூக விவகாரங்கள் பற்றிய விழிப்புணர்வுச் செயற்திட்டங்கள் போன்றவற்றை மேற்கொள்வதிலும் இந்த நிலையம் ஈடுபடுகிறது.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மருத்துவர். சான்த ஹெட்டி ஆராச்சி என்பவர் பிரதம மருத்துவ அதிகாரியாகவும், மருத்துவர். S. De. சில்வா, மருத்துவர். D. M. L. R. H. பெரேரா என்போர் மருத்துவ அதிகாரிகளாகவும் மற்றும் மருத்துவர். D. P. D. அசலகே பல் மருத்துவராகவும் பணியாற்றினர்.

| 2018 இல் மருத்துவ நிலையம் ஆற்றிய சேவைகள் பற்றிய புள்ளி விபரங்கள் | |
|---|---|
| உடல் சார்ந்த நோய்களுக்காக வருகை தந்தோரின் எண்ணிக்கை | 27, 533 |
| மருந்தகத்திலிருந்து மருந்துகளைப் பெற்றுக் கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 25, 007 |
| சிகிச்சை அலகிலிருந்து சிகிச்சை பெற்றுக்கொண்ட நோயாளர்களின் எண்ணிக்கை | 4, 832 |
| பல் மருத்துவ மனைக்கு வருகை தந்தோரின் எண்ணிக்கை | 1, 927 |

## உடலியற் கல்விப் பிரிவு

**அறிமுகம்**

பல்கலைக்கழக மாணவர்களுக்கான விளையாட்டுச் செயற்பாடுகளை முறைப்படுத்தி நடைமுறைப் படுத்தல், 38 விளையாட்டு நிகழ்ச்சிகளில் விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் பயிற்றுவித்தல், விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தல் என்பன உடலியற் கல்விப் பிரிவின் பிரதான பணிகளாகும். பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டிப் பந்தயங்கள் ( Tournaments ) தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் அல்லது சர்வதேச விளையாட்டுச் சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்படும் போட்டிப் பந்தயங்கள் ஆகிய போட்டிப் பந்தயங்களுக்கு முறையான பயிற்சியை வழங்குதல், பல்வேறு போட்டிகளுக்காக விளையாட்டு மைதானங்களை நிர்வகித்துப் பேணுதல் என்பனவும் உடலியற் கல்விப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் ஏனைய செயற்பாடுகளாகும்.

திருமதி. நிஷாந்தி வித்தானகே உடலியற் கல்விப் பிரிவின் தற்போதைய பணிப்பாளராவார். திருமதி தமரா குமாரி ஜயசேகர மற்றும் திருமதி. ரமணி குலதிலக ஆகிய இருவரும் நிரந்தர விளையாட்டு அறிவுறுனர்களாகவும் திரு. M. G. S. S. கீர்த்திரத்ன, திரு H. L லஹிரு திலன்கார, திரு. B. N. M. பெரேரா, திரு. L. A. D. பிரியதர்ஷன, திரு. B. N. C. N. நிரோஷன என்போர் தற்காலிக விளையாட்டு அறிவுறுத்துனர்களாகவும் பணியாற்றுகின்றனர்.

**உடலியற் கல்வித் துறையின் நோக்கங்கள்**

1. பல்கலைக்கழகத்தின் உள்வாரி மாணவர்களுக்கு உடலியற் கல்வியின் பெறுமதிகள் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவர்களுக்கு மானசீக அபிவிருத்தியினூடாக உடல்சார் அபிவிருத்தியைப் பெற்றுக் கொடுத்தல்.

2. விளையாட்டுச் செயற்பாடுகளினதும் தேர்ச்சிகளினதும் மேம்பாட்டுக்கான வாய்ப்புக்களை வழங்குதல்.

3. உள்வாரி மற்றும் வெளிவாரி விளையாட்டுக் குழுக்களுடன் போட்டிப் பந்தயங்களை விளையாடுவதன் மூலம் விளையாட்டுக்களில் பங்குபற்றுவதனை ஊக்குவித்தல்.

4. மாணவர்களுக்கு மத்தியில் விளையாட்டுச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலம் ஒழுக்கத்தை அபிவிருத்தி செய்தல்.

விளையாட்டு ஆலோசனை சபை கல்விசார் மற்றும் நிர்வாகப் பணிக்குழுழாம் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அவர்கள் கல்வி ஆண்டின் முதலாவது கூட்டத்தின் போது தெரிவு செய்யப்படுவர்.

விளையாட்டுக்கள் பேரவை சகல ஆட்டங்களின் தலைவர்களையும் துணைத் தலைவர்களையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் 02 இணைத் தலைவர்களும் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

விளையாட்டுச் செயற்பாடுகளும் போட்டிப் பந்தயங்களும்

பல்கலைக்கழகத்தின் உடலியற் கல்விப் பிரிவின் பின்வரும் உடலியற் கல்வி அறிவுறுத்துனர்கள் தமது மேற்பார்வையின் கீழ் தரப்பட்டுள்ள விளையாட்டுகளுக்கான வசதிகளையும் பயிற்சியையயும் வழங்கியுள்ளனர்.

## விளையாட்டு ஆலோசனை சபை

விளையாட்டு ஆலோசனை சபை பின்வரும் கல்விசார் மற்றும் நிர்வாகப் பணிக்குழாம் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அவர்கள் கல்வி ஆண்டின் முதலாவது கூட்டத்தின் போது தெரிவு செய்யப்படுவர்.

1. விளையாட்டுக்களில் ஆர்வம் மிக்க நிரந்தர கல்விசார் பணிக் குழாம் உறுப்பினர்களிலிருந்து இரண்டு உறுப்பினர்கள் வீதம் துணை வேந்தரினால் நியமிக்கப்படும் 12 உறுப்பினர்கள்.
2. உடலியற் கல்விப் பணிப்பாளர்
3. நிரந்தர உடலியற் கல்வி அறிவுறுதுனர்களிலிருந்து மூன்று உறுப்பினர்கள் (ஒருவர் பெண் அறிவுறுத்தினராக இருத்தல் வேண்டும்.)
4. விளையாட்டுக்கள் பேரவையின் இரண்டு இணைத் தலைவர்கள், செயலாளர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் ஏனைய ஓர் உறுப்பினர் (ஒருவர் விளையாட்டுப் பெண்மணியாக இருத்தல் வேண்டும்.)
5. பல்கலைக்கழக பிரதம மருத்துவ அதிகாரி அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் (பல்கலைக்கழகத்தின் மருத்துவ அதிகாரி ஒருவராக இருத்தல் வேண்டும்)
6. மாணவர் விவகாரப் பணிப்பாளர்
7. முதுநிலைத் துணைப் பதிவாளர் (மாணவர் நலன்புரிப் பிரிவு) அல்லது அவரது பிரதிநிதி ஒருவர்.
8. பொருளாளர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர்.
9. வேலைப் பொறியியலாளர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர்
10. துணைப் பதிவாளர் (மூலதன வேலைகள் பிரிவு)
11. நிகழ்ச்சித் திட்டப் பொறியியலாளர் (மூலதன வேலைகள் பிரிவு)

## விளையாட்டுக்கள் பேரவை

பல்கலைக்கழக விளையாட்டுக்கள் பேரவை பல்வேறு விளையாட்டுக் குழுக்களின் தலைவர்களையும், துணைத் தலைவர்களையும் கொண்டமைந்துள்ளது. அது இரண்டு இணைத் தலைவர்களையும் துணைத் தலைவர் ஒருவரையும், செயலாளர் ஒருவரையும், உதவிச் செயலாளர் ஒருவரையும், இளம் பொருளாளரையும் இரண்டு பத்திராதிபர்களையும் இரண்டு கமிட்டி உறுப்பினர்களையும் உத்தியோகத்தர்களாகக் கொண்டுள்ளது. அவர்கள் கல்வி ஆண்டின் முதலாவது கூட்டத்தின் போது தெரிவு செய்யப்படுவர்.

## விளையாட்டுச் செயற்பாடுகளும் போட்டிப் பந்தயங்களும்

பல்கலைக்கழக உடலியற் கல்விப் பிரிவின் பின்வரும் உடலியற் கல்வி அறிவுறுத்துனர்கள் தமது மேற்பார்வையின் கீழ் பின்வரும் விளையாட்டுக்கான வசதிகளையும் பயிற்சிகளையும் வழங்கி உள்ளனர்.

## விளையாட்டுச் செயற்பாடுகளும் போட்டிப் பந்தயங்களும்

| | | |
|---|---|---|
| திருமதி N. **நிஷாந்தி வித்தானகே**<br>(உடலியல் கல்விப் பணிப்பாளர்) | திருமதி J. M. **ரமணி குலதிலக**<br>(உடலியல் கல்வி அறிவுறுத்துனர்)<br><br>கரப்பந்தாட்டம் (ஆண் / பெண்)<br>செஸ் (ஆண் / பெண்)<br>வலைப்பந்தாட்டம் (பெண்)<br>யோகாசனம் | திரு. MGSS. **கீர்திசேன**<br>(உடலியல் கல்வி அறிவுறுத்துனர்)<br><br>கால்பந்தாட்டம் (ஆண்)<br>நீச்சல் (ஆண் / பெண்)<br>றக்பி (ஆண்) |
| திரு. H. L. **லஹிரு திலங்கார**<br>(உடலியல் கல்வி அறிவுறுத்துனர்)<br><br>உடற்பயிற்சி விளையாட்டுக்கள் (ஆண் / பெண்)<br>பாதை ஓட்டப் பந்தயம் (ஆண் / பெண்)<br>கரம் (பெண்)<br>கூடைப்பந்தாட்டம் (ஆண் / பெண்)<br>Aeorobics<br>Zumba | திரு. B. N. M. **பெரேரா**<br>(உடலியல் கல்வி அறிவுறுத்துனர்)<br><br>மாற்போர் ( Wrestling ) (ஆண்)<br>எல்லே (ஆண் / பெண்) | திரு. L. A. D. **பிரியதர்ஷன**<br>(உடலியற் கல்வி அறிவுறுத்துனர்)<br><br>பூப்பந்தாட்டம் ( Badminton )<br>(ஆண் / பெண்)<br>Table Tennis (ஆண் / பெண்)<br>Tennis (ஆண் / பெண்)<br>தளக்கட்டுப் பந்தாட்டம் (Baseball)<br>(ஆண்) |
| திரு. B. M. C. N. **நிரோஷா**<br>(உடலியல் கல்வி அறிவுறுத்துனர்)<br><br>Taekwondo (ஆண் / பெண்)<br>ஹொக்கி (ஆண் / பெண்)<br>கிரிக்கட் (ஆண்) | | |

**உடலியற் கல்வித் துறை பின்வரும் விளையாட்டுப் பந்தயங்களை (tournaments)ஒழுங்குபடுத்துகிறது**

1. பீடங்களுக்கு இடையிலான புதியவர்கள் / முதலாண்டு மாணவர்களுக்கான விளையாட்டுப் பந்தயங்கள்
2. பீடங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள்
3. அழைப்பு ரீதியான / நட்பு ரீதியான விளையாட்டுப் பந்தயங்கள்
4. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் பந்தயங்கள்

இவற்றை விட நாம் வெளி விளையாட்டுக் குழுக்களுடனான நட்பு ரீதியான விளையாட்டுப் போட்டிகளையும் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வீரமுதன்மைப் (Championships) போட்டிகளையும் இணைந்த பல்கலைக்கழகக் குழு விளையாட்டு போட்டிகளையும் ஒழுங்குபடுத்துகிறோம்.

மேலும் எமது மாணவர்கள் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் இணைந்த பல்கலைக்கழக விளையாட்டுக் குழுக்கள், தேசிய வீர முதன்மைப் போட்டிகள், உலக பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் மற்றும் வீர முதன்மைப் போட்டிகள் என்பவற்றிலும் பங்குபற்றுகின்றனர்.

சில பல்கலைக்கழகங்களினால் ஒழுங்கு செய்யப்படும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா ஒவ்வொரு வருடமும் நடைபெறுவதோடு ஒரு தனித்த பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்படும் சிறிய ( Mini ) ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன.

**2018 இல் நாம் நடத்திய விளையாட்டு நிகழ்ச்சிகள் கீழே தரப்பட்டுள்ளன.**

✶ "விதுதய கிரிஸ்பரி பாடசாலைகளுக்கிடையிலான நீச்சல் வீரமுதன்மைப் போட்டி – 2018"
இது 2018 ஆம் ஆண்டு பெப்ரவரியில் பல்கலைக்கழக வளவில் நடைபெற்றது. இது விளையாட்டுக்கள் பேரவை மற்றும் உடலியற் கல்வித் துறையினால் ஒழுங்கு செய்யப்பட்டதாகும்.

✶ பல்கலைக்கழகங்களுக்கிடையிலான அழைப்புச்சார் 3<3 கூடைப்பந்தாட்ட வீரமுதன்மைப் போட்டி – 2018

✶ இது 2018 பெப்ரவரியில் பல்கலைக்கழக வளவில் நடைபெற்றதோடு ஜயவர்தனபுர கூடைப்பந்தாட்ட குடும்பம் மற்றும் உடலியற் கல்வித் துறையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

✶ மோதல்கள் (Smashes) – 2018
இது பட்மின்டன் குழு மற்றும் உடலியற் கல்வித் துறையினால் ஒழுங்கு செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 முதல் 13 ஆம் திகதி வரை Merchantile பட்மிட்டன் சங்கத்தின் உள்ளக விளையாட்டரங்கில் நடத்தப்பட்டது.

✶ ஊவா – குடாஓயாவிலுள்ள கொமாண்டோ படையணி பயிற்சிப் பாடசாலையில் 2018 பெப்ரவரி 02 முதல் 05 ஆம் திகதி வரை நடைபெற்ற வெளி எல்லைப்புறப் பயிற்சி (Out boundary training)
இது விளையாட்டுக் குழுக்களின் தலைவர்களையும் துணைத் தலைவர்களையும் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான போட்டிகளுக்குத் தயார்படுத்துவதற்குத் தேவையான தலைமைத்துவத் தரங்களை ஊக்குவித்து அபிவிருத்தி செய்யும் நோக்கில் உடலியற் கல்வித் துறையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

✶ 2018 ஆம் ஆண்டு ஜுன் 30 முதல் ஜுலை 01 ஆம் திகதி வரை நடைபெற்ற பீடங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள்

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | – | பிரயோக விஞ்ஞான பீடம் |
| இரண்டாம் இடம் | – | முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் |
| மூன்றாம் இடம் | – | தொழில்நுட்பப் பீடம் |

✶ 2018 மே மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை நடைபெற்ற பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

**பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் பெறுபேறுகள் - 2018**

| தொடர் இலக்கம் | விளையாட்டு | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1 | பூப்பந்தாட்டம் (Badminton) | 2 ஆம் இடம் | வெற்றியாளர்கள்(Champion) |
| 2 | தளக்கட்டுப் பந்தாட்டம் (Base ball) | வெற்றியாளர்கள் | – |
| 3 | கூடைப் பந்தாட்டம் (Basket ball) | வெற்றியாளர்கள் | 2ஆம் இடம் |
| 4 | கரம் ஆட்டம் | பங்குபற்றுனர்கள் | 3rd runner up |
| 5 | சதுரங்க ஆட்டம் (Chess) | வெற்றியாளர்கள் | 2ஆம் இடம் |
| 6 | கிரிகட் ஆட்டம் | கால் இறுதியாளர்கள் | – |
| 7 | எல்லே விளையாட்டு | வெற்றியாளர்கள் | கால் இறுதியாளர்கள் |
| 8 | கால்பந்தாட்டம் | கால் இறுதியாளர்கள் | – |
| 9 | ஹொக்கி ஆட்டம் | 2 ஆம் இடம் | கால் இறுதியாளர்கள் |
| 10 | கராட்டி | கால் இறுதியாளர்கள் | 3rd runner up |
| 11 | வலைக் கூட்டுப் பந்தாட்டம் (Net ball) | – | வெற்றியாளர்கள் |
| 12 | பாதை ஓட்டம் | 2 ஆம் இடம் | – |
| 13 | ரக்பி காற்பந்தாட்டம் (Rugby) | கால் இறுதியாளர்கள் | – |
| 14 | நீச்சல் போட்டி | வெற்றியாளர்கள் | வெற்றியாளர்கள் |
| 15 | மேசை வரிப் பந்தாட்டம் (Table Tannis) | 2 ஆம் runner up | 2 ஆம் இடம் |
| 16 | Taekwondo | 2 ஆம் runner up | கால் இறுதியாளர்கள் |
| 17 | வரிப்பந்தாட்டம் (Tennis) | 3 ஆம் runner up | 2 ஆம் இடம் |
| 18 | கால்தட மற்றும் கள ஆட்டம் (Track & Field) | 2ஆம் இடம் | 2 ஆம் இடம் |
| 19 | கரப்பந்தாட்டம் (Volle ball) | பங்குபற்றுனர்கள் | கால் இறுதியாளர்கள் |
| 20 | பாரம் தூக்குதல் | கால் இறுதியாளர்கள் | – |
| 21 | மற்போர் (Wrestling) | 2 ஆம் இடம் | – |

- ஆண்கள் வீர முதன்மை (Men Championship) - 3 ஆம் இடம்
- பெண்கள் வீர முதன்மை (Women Championship) - 2 ஆம் இடம்
- அனைத்தும் உள்ளிட்ட வீர முதன்மை (Overall Championship) - 2 ஆம் இடம்

## வெற்றியாளர்களின் (Champions) நிழற்படங்கள்




தளக்கட்டுப் பந்தாட்டம் (Base ball)



பூப்பந்தாட்டக் குழு (Badminton)
(ஆண் / பெண்)




சதுரங்க ஆட்டக் குழு (Chese)
(ஆண் / பெண்)




வலைக்கூட்டுப் பந்தாட்டக் குழு
(Netball)




கூடைப் பந்தாட்டக் குழு (Basket ball)




கூடைப் பந்தாட்டக் குழு (Basket ball)




**நீச்சல் குழு** (Swimming) (**ஆண் / பெண்**)

- 2018 ஜுன் 30 முதல் ஜுலை 01 ஆம் திகதி வரை நடைபெற்ற பீடங்களுக்கிடையிலான விளையாட்டு வீர முதன்மை (Championship)
  - 1 ஆம் இடம் பிரயோக விஞ்ஞான பீடத்தினால் வெற்றி கொள்ளப்பட்டது.
  - 2 ஆம் இடம் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்தினால் வெற்றி கொள்ளப்பட்டது
  - 3 ஆம் இடம் தொழில்நுட்ப பீடத்தினால் வெற்றி கொள்ளப்பட்டது.

- ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகமும் பின்வரும் அழைப்புக்களின் பேரில் ஏனைய விளையாட்டுப் பந்தயங்களிலும் பங்குபபற்றியது.
  - 3 ஆவது SSC திறந்த சர்வதேச வகைப்படுத்தல் சதுரங்க ஆட்ட ( Ches) வீர முதன்மை – 2018
  - இலங்கை விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான சதுரங்க (Ches) ஆட்ட வீர முதன்மை – 2018
  - தேசிய அதிரடி (Blitz ) வீர முதன்மை –2018
  - ஈவா ( Eva) வலைப்பந்தாட்ட வீர முதன்மை –2018
  - மோரா அறுவர் அணி ஹொக்கி வீர முதன்மை – 2018, 2 ஆம் இடம் (மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது.)
  - பேரா ஹொக்கி அறுவர் அணி வீர முதன்மை – 2018 – 2nd runner up
  - களணி பல்கலைக்கழகங்களுகிடையிலான எல்லே வீர முதன்மை – 2018 – 2 ஆம் இடம்
  - FA கிண்ண வீர முதன்மை – 2018 வெற்றியாளர்கள்
  - அழைப்பு சார் பாரம் தூக்குதல் மகளிர் வீர முதன்மை –2018 வெற்றியாளர்கள்.
  - பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கூட்டினை வீர முதன்மை – 2018 – வெற்றியாளர்கள்
  - வெலிகந்த பாரம் தூக்குதல் வீர முதன்மை –2018
  - மோரா எழுவர் அணி ரக்பி வீர முதன்மை –2018
    (மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டது)
  - NSBM பயிற்சி சார் ரக்பி வீர முதன்மை –2018
  - மஹேஸ் பர்னாந்து ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் –2 ஆம் இடம்

- UMISF (பட்மிண்டன்) போட்டி – மகளிர் – வெற்றியாளர்கள்
- மோரா அதிரடிப் போட்டி –2018

✶ பொதுநலவாய அமைப்பு விளையாட்டுகள் –2018

இந்த நிகழ்ச்சியில் ஆறு உறுப்பினர்கள் பங்குபற்றினர்

✶ 18 ஆவது ஆசிய விளையாட்டுகள் – 2018

இந்தோனீசியா, ஜகார்த்தாவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இரண்டு உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

✶ உலகப் பல்கலைக்கழக வீர முதன்மை –2018

- 2018 உலகப் பல்கலைக்கழக பட்மிண்டன் வீர முதன்மையில் பங்கேற்றமை. மலேசியாவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஐந்து உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

- 2018 உலகப் பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட வீர முதன்மையில் பங்கேற்றமை – உகண்டாவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நான்கு உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

- 2018 உலகப் பல்கலைக்கழக சதுரங்க (Chess) ஆட்ட வீர முதன்மையில் பங்கேற்றமை. பிரேசிலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 03 உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

- 2018 உலகப் பல்கலைக்கழக ரக்பி வீர முதன்மையில் பங்கேற்றமை – நமீபியாவில் நடைபெற்ற இந் நிகழ்வில் 02 உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

- 2018 உலகப் பல்கலைக்கழக பாரம் தூக்குதல் வீர முதன்மையில் பங்கேற்றமை – போலாந்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 01 உறுப்பினர் பங்குபற்றினார்.

- 2018 உலகப் பல்கலைக்கழக பாத ஓட்ட வீர முதன்மையில் பங்கேற்றமை – சுவிஸ்சர்லாந்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 01 உறுப்பினர் பங்கு பற்றினார்.

- 2018 உலகப் பல்கலைக்கழக கராட்டி வீர முதன்மையில் பங்கேற்றமை – ஜப்பானில் நடைபெற்ற இந்நிகழ்வில் 01 உறுப்பினர் பங்குபற்றினார்.

- 2018 உலகப் பல்கலைக்கழக கடற்கரைக் கரப்பந்தாட்ட வீர முதன்மையில் பங்குபற்றியமை – ஜேர்மனியில் நடைபெற்ற இந்நிகழ்வில் 01 உறுப்பினர் பங்குபற்றினார்.

## விருது (Colours) வழங்கல்

ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் உடலியற் கல்வித்துறை மற்றும் விளையாட்டுப் பேரவை ஆகியன இரண்டும் இணைந்து Colours (சின்ன) விருது விழா ஒன்று ஒழுங்கு செய்யப்படும். அங்கீகரிக்கப்பட்ட தேர்வு முறைப் பிரமாணங்களின் கீழ் தேவையான தரத்தைப் பெற்றுக்கொண்ட விளையாட்டு வீரர்களும் வீராங்கனை–களும் ஆலோசனை சபையின் அங்கீகாரத்துடன் Colours (சின்ன) விருதுகள் அளிக்கப்படுவர். இந்த வீரர்களுக் கான தேர்வுமுறைப் பிரமாணங்களையும் மேலதிகத் தகவல்களையும் உடலியற் கல்வித் துறையிடமிருந்து பெற் றுக் கொள்ள முடியும். மேலும் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் விளையாட்டுச் சங்கத்தின் திறமை விருதுகளைப் பெற்றுக் கொள்வர்.

# விளையாட்டு வசதிகள்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கீர்த்தி மிக்க உடலியற் கல்வித்துறை மற்றும் விளையாட்டு ஆளுனர் சபை என்பன தனித்துவமான விளையாட்டு வசதிகளைக் கொண்டுள்ளன.

**வெளியக கரப்பந்தாட்ட ஆடுகளங்கள்**

பல்கலைக்கழக நீச்சல் தடாகத்துக்கு அண்மையில் அமைந்துள்ள பல்கலைக்கழக வெளியக கரப்பந்–தாட்ட ஆடுகளங்கள், இரண்டு களிமண் ஆடுகளங்களைக் கொண்டுள்ளன. இவை பல்கலைகழக மாணவர்களு–க்கும் பணிக்குழாமிணருக்கும் கிடைக்கப் பெறுகின்றன.

**கூடைப்பந்தாட்ட ஆடுகளம்**

வெளியாக கூடைப்பந்தாட்ட ஆடுகளம் கரப்பந்தாட்ட ஆடு களத்தை அடுத்து அமைந்திருப்பதோடு அது தாரினால் ஆக்கப்பட்ட கெட்டியான தளத்தைக் கொண்டதாகும். இவற்றைப் பல்கலைக்கழக மாணவர்களும் பணிக்குழாமினரும் பயன்படுத்த முடியும்.

**டெனிஸ் (வரிப்பந்தாட்டம்) ஆடுகளம்**

டெனிஸ் ஆடுகளங்கள் களிமண் மேற்தளத்தைக் கொண்டனவாக இருப்பதோடு நன்கு பராமரிக்கப் படுவனவாகவும் காணப்படுகின்றன. இவை பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பணிக் குழாமினருக்கும் அதே போன்று வெளியாட்களுக்கும் கிடைக்கப் பெறுகின்றன.

**நீச்சல் தடாகத் தொகுதி**

நீச்சல் தடாகம் 50 மீட்டர் பொதுத்திட்ட அளவினையும் 10 வரிசை நீச்சல் பாதைகளையும் கொண்டதாகும். அதன் ஆழமற்ற கோடி 1.5 மீட்டர் ஆழத்தையும் ஆழமமான கோடி 5.5 மீட்டர் ஆழத்தையும் கொண்டதாகும். நீச்சல் தடாகமானது நீச்சல் வீரர்களுக்கான ஆடை மாற்றும் அறைகளையும் கழுவல் அறைகளையும் கொண்ட இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்றை அருகே கொண்டமைந்துள்ளது. இந்த நீச்சல் தடாகம் பல்கலைக்கழக மாண–வர்களுக்கும், பணிக் குழாமினருக்கும் பாவனைக்காக வழங்கப்படுவதோடு வெளியாட்களுக்கும் அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க வழங்கப்படும்.

**கிரிகட் மைதானம்**

பல்கலைக்கழக கிரிகட் ஆடுகளம் பிரதானமாக 65 மீட்டர் நீளமான புல் மேற்பரப்பினைக் கொண்டதாகும். நன்கு பராமரிக்கப்பட்ட இந்த மைதானம் பாய் விரிக்கப்பட்ட ஆடுகளம் ஒன்றையும் களிமண் பரப்பப்பட்ட இரண்டு ஆடுகளங்களையும் கொண்டுள்ளது. இந்த மைதானம் ஒரு மாடி காட்சிக் கூடத்தையும் விளையாட்டு வீரர்களுக்கும் நடுவர்களுக்குமான கழுவல் அறைகளுடனான ஆடை மாற்று அறைகளையும் கொண்டுள்ளது. இந்த மைதா–னம் கண்கவரும் அழகான சூழலில் அமைந்துள்ளது. இந்த ஆடுகளத்தில் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டிகள். பல்கலைக்கழகத்துக்கு உள்ளேயான போட்டிகள் அதே போன்று ஏனைய பொதுமக்கள் குழுக்ககளின் கழக விளையாட்டுப் பந்தயங்கள் போன்றவை நடைபெறுகின்றன.

## தொழில் வழிகாட்டி அலகு

ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டி அலகு அனைத்து தொழில் வழிகாட்டித் திட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் தொழில் தேர்ச்சி அபிவிருத்திச் சங்கம் (CSDS) மற்றும் Gavel கழகம் என்பவற்றுடன் இணைந்து நிறைவேற்றி வருகிறது.

### தொழில் தேர்ச்சி அபிவிருத்திச் சங்கம் (CSDS)

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டி அலகின் கீழ் செயற்படும் தொழில் தேர்ச்சி அபிவிருத்திச் சங்கம் செயற்பாட்டுத் தன்மை பொருந்திய மாணவர்கள் சங்கமொன்றாகும். இந்தச் சங்கம் முழுமையான ஒழுங்கமைப்புக் கட்டமைவு ஒன்றின் அடிப்படையில் அமைந்திருப்பதோடு வருடம் பூராவும் பல கைத்தொழில் துறைகளிலும் சமூகம் சார்ந்த செயற்பாடுகளிலும் பங்குபற்றுகிறது. 2018 ஆம் ஆண்டில் தொழில் தேர்ச்சி அபிவிருத்திச் சங்கத்தினால் பின்வரும் செயற்பாடுகளும் நிகழ்ச்சிகளும் பூர்த்தி செய்யப்பட்டன.

**வருடாந்தப் பொதுக் கூட்டம் - 2018**

தொழில் தேர்ச்சி அபிவிருத்திச் சங்கத்தின் 2018 உத்தியோகபூர்வ ஆண்டுக்கான வருடாந்தப் பொது கூட்டம் 2018 ஜனவரி மாதம் 05 ஆம் திகதி பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடத்தில் நடைபெற்றது. 2018 ஆம் ஆண்டுக்கான புதிய நிறைவேற்றுச் சபை அக்கூட்டத்தின் போது உத்தியோக பூர்வமாகத் தெரிவுசெய்யப்பட்டது.

**தொழில் தேர்ச்சி அபிவிருத்திச் சங்கத்தின்** (CSDS) **மகிமை இரவு** (CSDS Glory Night)

தொழில் தேர்ச்சி அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் மற்றும் ஊக்குவிப்பு விழாவு-மான CSDS மகிமை இரவு மத்தேகொடவில் அமைந்துள்ள Star Palace Reception Hall இல் 2018 ஜனவரி 07 ஆம் திகதி நடைபெற்றது. ஷானிகா தத்சரா என்பவரே பிரதம ஏற்பட்டாளராகச் செயற்பட்டார். அந்த நிகழ்வின் போது புதிய உத்தியோகத்தச் சபையினர் உத்தியோகபூர்வமாக பல்கலைக்கழகத்தின் தொழில் ஆலோசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படனர். மேலும் வெளியேறும் உத்தியோகத்தர் சபை உறுப்பினர்கள் சங்கத்துக்காக ஆற்றிய முதன்மையான ஈடுபாட்டுக்கும் அர்ப்பணத்துக்குமாகப் பாராட்டப்பட்டனர்.

**வெற்றியின் நிழல்கள் - கட்டம்2 (திரு. லசித் மாலிங்க)** Shadows of Success - Phase 2 ( Mr. Lasith Malinga)

வெற்றியின் நிழல்கள் செயலமர்வுத் தொடரின் கட்டம் 2, 2018 ஜனவரி 09 ஆம் திகதி அன்று பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தின் கேட்போர் கூடத்தில் புகழ்வாய்ந்த கிரிகட் ஆட்டக் காரரான திரு . லசித் மாலிங்க வின் கௌரவப் பங்குபற்றுதலோடு ந டைபெற்றது. சந்திக்க ஜயபேம மற்றும் பத்தும் ஹெட்டிகே ஆகிய இருவரும் நிகழ்வின் பிரதம ஒழுங்கமைப்பாளர்களாகச் செயலாற்றினர். இந்தச் செயலமர்வானது பல்கலைக்கழத்தின் அனைத்து மாணவர்களுக்கும் திறந்துவிடப்பட்டதோடு சுமார் 800 மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றினர். செயலமர்வின் போது பட்டதாரி மாணவர்கள் திரு. லசித் மாலிங்கவுடன் நெருங்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டனர். திரு. லசித் மாலிங்க விளையாட்டு வீரருக்குரிய பார்வையில் பட்டதாரி மாணவர்களின் தொழில் பாதையைத் திட்ட மிடுதல் தொடர்பான சில பெறுமதி வாய்ந்த ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கினார்.

**நற்பேற்றினை தானமளித்தல்.** ( Donate Happiness)

தொழில் தேர்ச்சி அபிவிருத்திச் சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நற்பேற்றினை தானமளித்தல் ஒரு CSR திட்டமாகும். இந்தத் திட்டமானது பிரதானமாக மகரகம அபேக்ஷா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் சிறுவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதனை நோக்கமாகக் கொண்டதாகும். 2018 ஆம் ஆண்டுக்கான இந்தத் திட்டம் பிரதம ஒழுங்கமைப்பாளர்களான தினிந்து கத்திபேஆரச்சி மற்றும் எரங்க தம்பாகொல்ல ஆகிய இருவராலும் இணைத்து வைக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் CSDS தனது முயற்சிகளைப் பரவலாக்கி வைத்தியசாலையின் சிறுவர் வாட்டுக்குத் தேவையான மருந்துகளை தானம் செய்ய திட்டமிட்டது. மேலும் தூரப் பிரதேசங்களிலிருந்து சிகிச்சை பெறுவதற்காக வரும் புற்று நோயாளன்களுக்குத் துணை புரிகின்ற "சுவ மன்சல" நிலையத்துக்குக் கட்டில் விரிப்புக்கள், சவர்க்காரக் கட்டி போன்ற பொருட்கள் தானமாக வழங்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட திட்டத்துக்கான நிதி காலி, மாஹோ சந்தி , பொல்கஹவல போன்ற இடங்களுக்குப் புகையிரதப் பயணங்களை மேற்கொள்வதன் மூலமும் தானிய வகைகளின் விற்பனை மற்றும் பல்கலைக்கழக வளவினுள் நிதி சேகரிப்பினை நடத்துதல் போன்றவற்றின் மூலமும் சேகரிக்கப்பட்டது. சங்கத்தின் உறுப்பினர்கள் நற்பேற்று தானத்துக்காக கிட்டதட்ட ரூபா 300,000/= பணத்தைச் சேகரித்தனர்.

**வெற்றியின் நிழல்கள் - கட்டம் 3 (திரு டிலன்த மாலகமுவ - Mr. Dilantha Malagamuwa)**

CSDS வெற்றியின் நிழல்கள் செயலமர்வுத் தொடரின் 3 ஆவது நிகழ்ச்சியின் மூலம் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்களுக்கு பிறிதொரு அரிய சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இது 2018 ஜுன் மாதம் 18 ஆம் திகதி முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்தின் முனசிங்ஹ மண்டபத்தில் நடைபெற்றது. சமுதி அபேயசூரிய, பிரதீபிகா ஏகநாயக்க மற்றும் சந்தமினி கருனாநாயக்க ஆகியயோர் இந்த நிகழ்ச்சிக் கான பிரதம ஒழுங்கமைப்பாளர்களாகச் செயற்பட்டனர். இந்த நிகழ்ச்சி புகழ்பெற்ற விதிமுறை சார்ந்த தலைசிறந்த சாரதி (Formula Driver) திரு. டிலன்த மாலகமுவவினால் அதிதி உரையாற்றிச் சிறப்பித்து வைக்கப் பட்டது. இந்த நிகழ்ச்சியில் கிட்டத்தட்ட 400 மாணவர்கள் பங்குபற்றினர்.

**ஜயவர்தனபுர தொழில்திறன் தேர்ச்சி விருதுகள் - 2018** ( JESA 2018)
J'PURA EMPLOYABILITY SKILLS AWARDS - 2018

ஜபுர தொழிற்திறன் தேர்ச்சி விருதுகள் (JESA) 2018, பட்டதாரி மாணவர்களுக்கு தொழிற்திறன் தேர்ச்சிக்கு வாய்ப்பளிக்கக் கூடிய பல்கலைக்கழகத்தின் வருடாந்த விருது வழங்கும் விழாவாகும். இதற்கான மதிப்பீடுகள் பின்வரும் 10 வகைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

- சிறந்த தலைவர்
- சிறந்த குழு விளையாட்டாளர்
- சிறந்த ஆக்க வடிவமைப்பாளர்.
- சிறந்த அறிவிப்பாளர்.
- சிறந்த புத்தாக்குனர்.
- சிறந்த இளம் முயற்சியாளர்.
- சிறந்த தொழிற்திறன் தேர்ச்சிகளை அடைந்தவர் (பிரயோக விஞ்ஞான பீடம்)
- சிறந்த தொழிற்திறன் தேர்ச்சிகளை அடைந்தவர் (முகாமைத்துவக் கற்றைகள் மற்றும் வணிகவியல் பீடம்)
- சிறந்த தொழில்திறன் தேர்ச்சிகளை அடைந்தவர் (மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்)

சிறந்த இளம் முயற்சியாளர் விருது செயற்திட்டத்தின் புதியதொரு முன்னேற்றமாகும். 2018 ஆம் ஆண்டுக்கான இந்த நிகழ்ச்சி பிரதம ஒழுங்கமைப்பாளரான சந்திக்க ஜயபேமவினால் இணைத்து வைக்கப்பட்டது.

இந்தச் செயற்திட்டம் “தொழிற் திறன் மாதம்” எனக் குறிப்பிடப்பட்டு மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்டது. அந்த மாதத்தில் பிரதம ஒழுங்கமைப்பாளரான ஷன்கி இஷாராவினால் இணைத்து வைக்கப்பட்ட Curriculum Vitae - CV கண்காட்சி செயலமர்வுத் தொடர் மற்றும் நேர்முகப் பரீட்சைகள் என்பவை இடம்பெற்றன. 2018 ஜுலை 10, 11 மற்றும் 13 ஆம் திகதிகளில் செயலமர்வுத் தொடர் நடைபெற்றதோடு அவை முறையே பின்வருமாறு :

✶ “நேர்முகப் பரீட்சையை எதிர்கொள்ளுதல் மற்றும் தன்னைத் தானே அடையாளப்படுத்திக் கொள்ளுதல்’ – திரு. குமார கல்ஹேனகே, முதுநிலை முகாமையாளர் (குழுச் செயற்றிறன் அபிவிருத்தி) Brandix நிறுவனம்

✶ CV மற்றும் Potfolis எழுதுதல் – திரு. Bennett Patternott மனித வளப் பகுதித் தலைவர் ( Carsons Management Services (Pvt) Ltd.

✶ “இனம் காணக்கூடிய தொழில்துறைசார் புத்தாக்க ஆய்வொன்றைச் செய்வது எப்படி” (How to do industrial rescognized Innovative research) திரு. துஷாற பெரேரா பணிப்பாளர், Quality, Compliance & R&D- J.L Morison son & James ( Ceylon) PLC.

விருது வழங்கும் வைபவத்துக்கான முதல் சுற்று நேர்முகப் பரீட்சைகள் 2018 ஜுலை 18ஆம் ,19ஆம் ,20 ஆம் திகதிகளில் நடைபெற்றன. CV கண்காட்சி 2018 ஜுலை 26 ஆம் திகதி மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தின் சுமங்கல வாசிப்பு மண்டப வளவில் நடைபெற்றது.

விருது வழங்கும் வைபவத்துக்கான இரண்டாம் சுற்று நேர்முகப்பரீட்சைகள் 2018 ஆகஸ்ட் 2ஆம் 3ஆம் 4 ஆம் திகதிகளில் நடைபெற்றன. விருது வழங்கும் இறுதி வைபவம் 2018 ஆகஸ்ட் 10 ஆம் திகதி நடைபெற்றது.

**அதி சிறந்த தலைவர்.**

வெற்றியாளர் – மதுஷ டி சில்வா / நிதியியல் துறை (3 ஆம் ஆண்டு) – FMSC
2 ஆம் இடம்– சமுத்யா அமரசிங்ஹ / தகவல் தொழில்நுட்பத் துறை (3 ஆம் ஆண்டு)– FMSC
3 ஆம் இடம் – அதிஷா கம்மன்பில / கணினி விஞ்ஞானத் துறை (3 ஆம் ஆண்டு)–FAS

**அதி சிறந்த குழு ஆட்டக்காரர்** (Best Team player)

வெற்றியாளர் – அஷானி புலத்தகம / உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறை (4 ஆம் ஆண்டு) – FAS

2 ஆம் இடம் – அக்கீல் முஹம்மத் / கணக்கீட்டுத் துறை (2 ஆம் ஆண்டு) – FMSC

3 ஆம் இடம் – கெவின் ஜான்ஸ் / வியாபார பொருளியல் துறை (3 ஆம் ஆண்டு) – FMSC

**அதி சிறந்த ஆக்க வடிவமைப்பாளர்** (Best Creative Designer)

வெற்றியாளர் – இரங்க பரனகம / உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறை (2 ஆம் ஆண்டு)– FAS

2 ஆம் இடம் – பிரனீதா அன்பழகன் / (3 ஆம் ஆண்டு) – FAS

3 ஆம் இடம் – செனல் பெரேரா / (3 ஆம் ஆண்டு)– FAS

**அதி சிறந்த அறிவிப்பாளர்** (Best Communicator )

வெற்றியாளர் – யஷ்மி சாமிகா / கணக்கீட்டுத் துறை (2 ஆம் ஆண்டு) – FMSC

2 ஆம் இடம் – உதித கருணாரத்ன / 3 ஆம் ஆண்டு – FAS

3 ஆம் இடம்– நவோதா லியனபதிரன / உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறை – FAS

**அதி சிறந்த புத்தாக்குனர்** (Best Innovator )

வெற்றியாளர் – பிரபாத் செனவிரத்ன / இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் துறை (3 ஆம் ஆண்டு)– FMS

2 ஆம் இடம் –அஷானி புலத்தகம / உணவு விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்பத் துறை
(4 ஆம் ஆண்டு)– FAS

3 ஆம் இடம் – துலான் டயஸ் / கணினி விஞ்ஞானத் துறை (3 ஆம் ஆண்டு) FAS

**அதி சிறந்த இளம் முயற்சியாளர்** (Best Young Entrepreneur) **( புதிதாக அறிமுகம் செய்யப்பட்டது)**

வெற்றியாளர் – N. V. R. துலான்ஜன / சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை (2 ஆம் ஆண்டு)– FMSC

2 ஆம் இடம் –சசிந்து பெரேரா / சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை (4 ஆம் ஆண்டு)– FMSC

3 ஆம் இடம் – திவான் சம்பத், ஷான் குலரத்ன, சசினி நிமாஷா / முயற்சியாண்மைத் துறை (4 ஆம் ஆண்டு) FMSC

**அதி சிறந்த தொழிற் திறன் தேர்ச்சிகளை அடைந்தவர்** (BESA) **முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம்.**

வெற்றியாளர் – M.A.G.N ஜயசூரிய / கணக்கீட்டுத் துறை (3ஆம் ஆண்டு)

வெள்ளிப் பதக்கம் பெறுனர்கள்.

- நதீ மஹிமி காஞ்சனா / நிதியியல் துறை (3 ஆம் ஆண்டு)
- சக்குனி அதிகாரம் / நிதியியல் துறை (4ஆம் ஆண்டு)
- சமுத்யா அமரசிங்ஹ / தகவல் தொழில்நுட்பத் துறை (3 ஆம் ஆண்டு)

**அதி சிறந்த தொழிற் திறன் தேர்ச்சிகளை அடைந்தவர்** (BESA) **பிரயோக விஞ்ஞான பீடம்**

வெற்றியாளர் – சமீர லக்ருவன் பெரேரா / விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறை (4 ஆம் ஆண்டு)

வெள்ளிப் பதக்கம் பெறுனர்கள்

- துலான் டயஸ் / கணினி விஞ்ஞானத் துறை (3 ஆம் ஆண்டு)
- துசாரி ஏக்கநாயக்க / விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறை (2 ஆம் ஆண்டு)
- யானுக்க குருப்பு / உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறை (4 ஆம் ஆண்டு)

**அதி சிறந்த தொழிற் திறன் தேர்ச்சிகளை அடைந்தவர் (BESA) மருத்துவ பீடம்**

வெற்றியாளர் – சஹன் பெரேரா / மருத்துவத் துறை (5 ஆம் ஆண்டு)

வெள்ளிப் பதக்கம் பெறுனர்கள்

- தரிந்து விக்ரமசிங்ஹ / மருத்துவத் துறை (4 ஆம் ஆண்டு)
- திரன்யா பெரேரா / மருத்துவத் துறை (4 ஆம் ஆண்டு)
- இசுரு குணதிலக்க / மருத்துவத் துறை (2 ஆம் ஆண்டு)

**அதி சிறந்த தொழிற் திறன் தேர்ச்சிகளை அடைந்தவர் (BESA) மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**

வெற்றியாளர் – சமார பொல்வத்த / புவியியல் துறை (4 ஆம் ஆண்டு)

வெள்ளிப் பதக்கம் பெறுனர்கள்

- சாமிந்திரி விஷ்வாதரி / சமூகப் புள்ளிவிபரவியல் துறை (3 ஆம் ஆண்டு)
- புத்தி திஸாநாயக்க / பாளி மற்றும் பௌத்த கற்கைகள் துறை (4 ஆம் ஆண்டு)
- பியுமி டி சொய்சா / சமூகப் புள்ளிவிபரவியல் துறை (3 ஆம் ஆண்டு)

விருதுகளுக்கு அனுசரணை வழங்கியோர் பற்றிய விபரம் பின்வருமாறு

விழுப்பொன் அனுசரணையாளர்கள் (Platinum Sponsors)

- MAS Holding
- Fonterra Brands Lanka
- ஆள்சார் முகாமைத்துவ பட்டய நிறுவனம். ( Charted Institute of Personal Management.)
- glaxo smith Kline (Pvt) Ltd
- Morisons PLC
- CIMA
- Brandix
- Omega Line group.

**தங்கப் பதக்க அனுசரணையாளர்கள்** (Gold sponsors)

- AIA Sri Lanka
- Asiri Hospital
- Hemas Hospital
- Hemas Consumer Brands
- Jaykay Marketing Services
- Citizen Development Bank
- Dialog Axiata Plc
- Moodies Analytics
- Heyles
- Mobitel Sri Lanka
- CMA Sri lanka
- LOLC

**வெள்ளிப் பதக்க அனுசரணையாளர்கள்** (Silver sponsors)

- John Keels Strategic Partners
- Uniliver Sri Lanka

**உணவு மற்றும் பான வகைப் பங்காளிகள்**

- Nestle Lanka PLC

வரவு செலவுத்திட்டத்தின் 66 % ஆன பகுதி அனுசரணையாளர்களால் நிறைவு செய்யப்பட்டதோடு எஞ்சிய 34% ஆன பகுதியும் பல்கலைக்கழக உதவி நன்கொடையால் நிறைவு செய்யப்பட்டது. விருது வழங்கும் வைபவத்தோடு தொழில் தேர்ச்சி அபிவிருத்திச் சங்கமானது (CSDS) தொழிற் திறன் பற்றிய கட்டுரைகளையும் வாழ்த்துச் செய்தியையும் தாங்கிய சஞ்சிகை ஒன்றையும் வெளியிட்டது. தில்ருக்ஷி விக்ரமசிங்க, அமானி வீரரத்ன, செய்னப் ஜுனைத் ஆகியோர் அந்த சஞ்சிகையின் பதிப்பாசிரியர்களாகப் பணி புரிந்தனர்.

**அருனல்ல**

அருனல்ல என்பது அரச பல்கலைக்கழகங்களுக்கு நுழையும் மாணவர் தொகையை மேம்படுத்தும் நோக்கில் தொழில் வழிகாட்டி அபிவிருத்திச் சங்கத்தினால் நிறைவு செய்யப்பட்ட பிறிதொரு CSR திட்டமாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் தனது முயற்சிகளை விரிவுபடுத்தி CSDS அதனுடன் இணைந்து ஒரு செயற்றிட்டத்தை மீள் நிர்மாணம் செய்வதன் மூலம் ஓர் அடியை முன்னெடுத்து வைத்தது.

தினித் பவன் அனுராத மற்றும் சச்சிந்த ருக்மால் ஆகிய இருவரும் 2018 ஆம் ஆண்டுக்கான பிரதம ஒழுங்கமைப்பாளர்களாக நிறைவேற்றுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டதுடன் பெலிஅத்த அரன்வெல மஹா வித்தியாலயம் செயற் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தெரிவு செய்யப்பட்டது.

செயற்திட்டத்துக்கான நிதி காலி, மாஹோ சந்தி, பொல்கஹவல போன்ற இடங்களுக்கு புகையிரதப் பயணங்களை மேற்கொள்வதன் மூலமும் தானிய வகைகளை விற்பனை செய்வதன் மூலமும் பல்கலைக்கழக வளவிலும் காலி புகையிரத நிலையத்திலும் நிதி சேகரிப்பு கொட்டகைகளை நடத்துவதன் மூலமும் சேகரிக்கப்பட்டது. சுமார் ரூபா 150,000/= பணத்தை உறுப்பினர்களால் சேகரிக்க முடிந்தது.

சங்கத்தின் உறுப்பினர்களால் பாடசாலையின் பிரதான மண்டபம் உள்ளிட்ட இரண்டு கட்டிடங்களை முழுமையாகப் புனரமைக்க முடிந்தது. பிரதான செயற்திட்டம் 2018 செம்டெம்பர் 07 ஆம் திகதி நடைபெற்றதோடு அதில் மாணவர்களுக்கான விரிவுரைகள் மற்றும் களியாட்ட நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெற்றன.

## உச்சத்தை சென்றடைதல் - செயலமர்வுத் தொடர் ( FMSC நிகழ்ச்சி)
Toch the Peak - Workshop Service (FMSC Episode)

| செயலமர்வு | வளவாளர் | திகதி | இடம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| CV & Portfolio Writing | திரு. பெனட் பட்டனொட்<br>மனித வளத் துறைத் தலைவர்<br>Carsons Camburbatch Pvt Ltd | ஒக்டோபர் 30 | பேராசிரியர் K. A. முனசிங்ஹ மண்டபம் | 200 |
| நேர்முகப் பரீட்சையை எதிர் கொள்ளுதல். | திரு. குமார கல்ஹேனகே<br>முதுநிலை முகாமையாளர்<br>Group Talent Management Bradix | ஒக்டோபர் 30 | | 300 |
| துடிப்பு மிக்க முயற்சியாளராக இருத்தல் | திரு. ஷெஹான் அதிகாரி<br>Director of Achievers Lanka Business School, CEO in Fitzky.<br>திரு. அனுருத்த கருணாதிலக்க<br>பொது முகாமையாளர்<br>Interprid Group | ஒக்டோபர் 30 | | 200 |
| Personal Grooming<br>தனிப்பட்ட ஒழுங்குபாடு | திரு. லக்ஷித்த தர்மவன்ச<br>முதுநிலை முகாமையாளர்,<br>Avery Dennision Lanka (Pvt) Ltd.<br>செல்வி. இரூஷி அலுவிஹாரே<br>பணிப்பாளர்<br>Image Consultant | ஒக்டோபர் 31 | | 175 |
| மனித வள மன்றம் | கலாநிதி. பவித்ரா மதுவன்தி (நடுவர் Moderator)<br>தலைவர் / பொதுத்துறை நிர்வாகத் துறை<br>FMSC<br>செல்வி. ஹரினி இன்தி கெட்டிய<br>Learning & Organization Development Manager - Fonterra.<br>செல்வி. கிமாலி ஜயதிலக்க<br>முதுநிலை மனித வள முகாமையாளர்<br>Senior HR Management (Ledership Development) & HR Business Patner (Marketing) Univer Sri Lanka Ltd.<br>திரு. யசிரு பண்டாரநாயக்க<br>Senior Manager - HR, GSK Pharmaceuticals (Srilanka)<br>திருமதி. மாதவி சில்பாதிபத்தி<br>Deputy Generral Manager / Group HR<br>MAS Holdings (Pvt) Ltd. | ஒக்டோபர் 31 | | 200 |

“உச்சத்தை சென்றடைதல்” – ஜபுர வருடாந்த தொழில் சந்தை மற்றும் தொழில் முயற்சி ஈடுபாடு என்ற முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்தின் நிகழ்ச்சி பொருத்தமான தொழில் ஒன்றுக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கும் தொழில் மார்க்கத்தை கண்டு கொள்வதற்கும் திட்டமிடுவதற்கும் பல்கலைக்கழகத்தின் புதிய பட்டதாரி மாணவர்களுக்குக் கிடைக்கப் பெற்ற அரிய சந்தர்பமாக அமைந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டம் செயலமர்வு தொடர் ஒன்றையும் தொழில் சந்தை ஒன்றையும் கொண்டிருந்தது. பிரதம ஒழுங்கமைப்பாளர்களான சந்தருவன் விக்ரமசிங்ஹ மற்றும் தினிந்து தனஜய ஆகியோரால் இந்நிகழ்வு இணைத்து வைக்கப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்தின் 80% ஆன பகுதி பங்காளர்களால் பூர்த்தி செய்யப்பட்டதோடு எஞ்சிய 20% ஆன பகுதி பல்கலைக்கழக உதவி நன்கொடையினால் நிறைவு செய்யப்பட்டது. செயலமர்வுத் தொடர் பின்வருமாறு பரவலாக்கப்பட்டது.

**உச்சத்தைச் சென்றடைதல் - வருடாந்த தொழிற் சந்தையும் தொழில் முயற்சி ஈடுபாடும் (FMSC நிகழ்ச்சி)**

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்தின் உச்சத்தை சென்றடைதல் நிகழ்ச்சி – வருடாந்த சந்தை மற்றும் தொழில் முயற்சி ஈடுபாடு 800க்கும் மேற்பட்ட பட்டதாரி மாணவர்களினதும் பட்டதாரிகள் மற்றும் 25 இற்கு மேற்பட்ட கீர்த்திமிக்க கம்பனிகளின் பங்குபற்றுதலோடு வெற்றிகரமாக நடந்தேறியது.

நிகழ்வின் பிரதான அனுசரணையாளர்கள் பின்வருமாறு :

– Mas Capital ( PRIVATE ) LTD : விழுப்பொன் (Platinum) பதக்கப் பங்காளர்
– Brandix Apparels Ltd : பீடப் பங்காளர்
– Interpid Group Colombo : வெள்ளிப் பதக்கப் பங்காளர்
– Avery Dennison Lanka (Pvt) Ltd : வெள்ளிப் பதக்கப் பங்காளர்

அனுசரணையாளர்களுக்கு மேலதிகமாகப் பின்வரும் கம்பனிகள் தொழில் சந்தையில் ஆட்சேர்ப்புப் பங்காளர்களாகப் பங்கேற்றனர்.

- hSenid Business Soluation
- Hemas Manufacturing (Pvt) Ltd.
- Uniliver Srilanka Limited
- Diesel & Motor Engineering PLC
- Moody's Analytics Knowledge Services
- Mobitel (Pvt) Limited
- IFS R&D International (Pvt) Ltd.
- Union Assurance PLC
- Dialog Axiata PLC
- Jaykay Marketing Service (Pvt) Limited
- Glaxo Smith Kline Srilanka
- Cinnamon Hotels and Resorts
- OMEGA Line Group
- Piramal Glass Ceylon PLC
- HNB Assurance & HNB General Insurance
- CDB Bank
- HEINEKEN Lanka Limited
- NDB Bank
- Sampath Bank PLC

## பொது நிர்வாகம் மற்றும் சேவைகள் பிரிவு

பொது நிர்வாகம் மற்றும் சேவைகள் பிரிவு போக்குவரத்து, தொலைபேசித் தொடர்பு, தபால் சேவைகள், பணிக் குழாமினருக்கான வீட்டு வசதிகள், செய்திப் பத்திரிகைகளின் விநியோகம் மற்றும் தீ அணைப்புக் கருவிகள் போன்ற கீழ்க்கட்டமைப்பு வசதிகளை கல்விசார் மற்றும் கல்விசாரா நோக்கங்களுக்காக வழங்கி வருகிறது. பொது நிர்வாகம் மற்றும் சேவைகள் பிரிவு முதுநிலை உதவிப் பதிவாளர் (SAR) முகாமைத்துவ உதவியாளர்கள் 06 பேர், வரவேற்பாளர், தொலைபேசி இயக்குனர், சாரதிகள் 41 பேர், லொறி சுத்திகரிப்பாளர்கள் 02 பேர் வேலை உதவியாளர்கள் 08 பேர் உள்ளிட்ட 59 ஊழியர்களைக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வாகனத் தொகுதி 12 கார்கள், 04 ஜீப் வண்டிகள் 07 பேரூந்துகள், 11 வான்கள், 05 சிறு வாகனங்கள் (cars), 3 சிகிச்சை வாகனங்கள் (Ambulance) , டிரக்டர் வண்டி, ட்ரெய்ர் வண்டி, கை டிரக்டர் வண்டி, 02 மோட்டார் சைக்கில்கள், 01 முச்சக்கர வண்டி ஆகியன உள்ளிட்ட 48 வாகனங்களைக் கொண்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் நிதி செலுத்தும் குத்தகை முறையின் அடிப்படையில் 06 வாகனங்களும் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியின் மூலம் 09 வாகனங்களும் இந்த வாகனத் தொகுதியோடு சேர்க்கப்பட்டது. தொலைபேசி இடைத் தொடர்பு வசதிகள் (inter com), எண்முகப்பு (dialing) மற்றும் நேரடித் தொலைபேசி வசதிகள் போன்ற தொலைத் தொடர்பு வசதிகள் தகவல் தொழில்நுட்ப (IT) சேவைகள் நிலையத்தின் ஒத்துழைப்போடு வழங்கப்பட்டுள்ளன. ஒழுக்கக் கட்டுப்பாட்டாளர், விடுதி மேற்பார்வையாளர், வேலைகள் பொறியியலாளர், பிரதம பாதுகாப்பு அதிகாரி, மின்னியல் வல்லுனர், நீர்க்குழாய் பொருத்துனர் ஆகிய விசேடமாகத் தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகளுக்கு இலவச வீட்டு வசதிகள் வழங்கப்படுவதோடு அவர்களின் தெரிவு பல்கலைக்கழக வீட்டு வசதியளிக்கும் கமிட்டியால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் சில வீடுகள் பல்கலைக்கழக கல்விசார் பணிக்குழாமினருக்கு சேமநல வசதி முறையில் மாதாந்த வாடகைக்கு வழங்கப்படுகிறது. வருடாந்த மீள் நிரப்புதல், தீ அணைப்புக் கருவிகளைப் பேணுதல் ஆகியன தீயணைப்புத் துறையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன.

சாரதிகளுக்கும் வாகன சுத்திகரிப்பாளர்களுக்குமான வருடாந்த பயிற்சித் திட்டங்கள் அவர்களது பாதைப் போக்குவரத்து விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் பாதுகாப்பாக வாகனம் செலுத்துதலையும் பற்றிய அறிவினை மேம்படுத்தும் முகமாக நடாத்தப்படுகின்றன.

**விசேட செயற்பாடுகள்**

- 97 தீயணைப்புக் கருவிகள் 2018 ஒக்டோபரில் மீள் நிரப்புதல் செய்யப்பட்டன.
- 2018 இல் அம்புலன்ஸ் வாகனம் ஒன்று சபந்தி (Sabandi) அமைப்பினால் பல்கலைக்கழகத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.
- 2018 டிசம்பரில் சாரதிகளுக்கும், வாகன சுத்திகரிப்பாளர்களுக்குமான வருடாந்த பயிற்சித் திட்டமொன்று நடத்தப்பட்டது.

## பணிக்குழாம் அபிவிருத்தி நிலையம்

பணிக்குழாம் அபிவிருத்தி நிலையம் 2018 ஆண்டு காலப்பகுதியில் கல்விசார் மற்றும் கல்விசாரா பணிக்குழாமினருக்காக பின்வரும் திட்டங்களை நடத்தியுள்ளது. மருத்துவக் கல்வி மற்றும் சுகநல விஞ்ஞானங்கள் துறையின் தலைவரும் முதுநிலை விரிவுரையாளருமான Dr. R. B. முனசிங்ஹ பணிக்குழு அபிவிருத்தி நிலையத்தின் பகுதி நேரப் பணிப்பாளராகத் தொடர்ந்தும் கடமை புரிந்தார்.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பணிக்குழாம் அபிவிருத்தி நிலையம் பின்வரும் செயலமர்வுகளை நடத்தியது.

| தொடர் இலக்கம் | செயற்திட்டம் | திகதி | தலைப்பு | இலக்குக் குழு |
|---|---|---|---|---|
| 1 | செயலமர்வு | 08.01.2018 | ''Publishing Social Research in high Profile Journals: Insights in to developing a high profile publications'' பொரலஸ்கமுவையில் உள்ள Golden Rose Recreation Complex (PVT) Limited இல் நடைபெற்றது. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக கல்வி சார் பணிக்குழாம் |
| 2 | செயலமர்வு | 26.2.2018 | “தாக்கரமான கற்பித்தல் கணிப்பீடும் மதிப்பீடும்” பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடத்தின் கருத்தரங்கு அறை 1 இல் நடைபெற்றது. வளவாளர் பேராசிரியர் உதித் K. ஜயசிங்ஹ முதலிகே, மதிப்பீடும் கற்பித்தல் தொழில்நுட்பமும் என்ற தலைப்பில் காலை அமர்வை நடத்தினார். செல்வி. K. D. G. M. அபேகுணசேகர “நவீன மதிப்பீட்டுத் தொழில் நுட்பமும் செயல்முறையும்” என்ற தலைப்பில் மாலை அமர்வை நடத்தினார். | மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் கல்விசார் பணிக்குழாம். |
| 3 | பயிற்சி செயல் திட்டம் | 11.1.2018<br>18.1.2018<br>1.2.2018<br>8.2.2018<br>15.2.2018<br>22.2.2018 | ஆங்கில மொழி பயிற்சி செயற்றிட்டம் | எழுதுனர் மற்றும் இணைந்த தரங்கள் |
| 4 | செயலமர்வு | 11.5.2018 | “புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட வருமான வரிக் கட்டணங்கள் பற்றித் தெளிவுறுத்துதல்” இந்த அமர்வு வருமான வரி இலாகாவின் 05 பிரதி ஆணையாளர்களால் நடத்தப்பட்டது.<br>1. E - Filing and Registration - திரு. P. நந்தகுமார<br>2. தொழில் வருமானம் – செல்வி. P. P. கொட்ட ஹச்சி<br>3. முதலீட்டு வருமானம் – செல்வி. S. I. அசன்தி<br>4. VAT மற்றும் NBT வரிகள் – திரு கெலும் விஜேரத்ன<br>5. முத்திரை வரி – திரு. பண்டாரநாயக்க திசாநாயக்க | USTP நிதிப் பிரிவின் நிறைவேற்று கல்விசாரா பணிக் குழாமினர் மற்றும் ஏனைய பல்கலைக்கழக அதிகாரிகள் |
| 5 | செயலமர்வு | 15.5.2018 | நிறுவனம்சார் மீளாய்வு அறிக்கையை வரைவது பற்றி மீளாய்வுக் குழுவின் கருத்துரைகளுக்கான துலங்கல்கள் – பொரலஸ்கமுவ Goldern Rose Recreation Complex (PVT) Ltd இல் நடைபெற்றது. | USJP பீடாதிபதிகள் மற்றும் IQA குழு |
| 6 | செயலமர்வு | 22.5.2018 | ITRC ஆய்வுகூடம் A யில் நடைபெற்ற Short Training in Ternitin Software. என்ற தலைப்பில் பகல் போசன நேரப் பேச்சு | பீடாதிபதிகள் மற்றும் துறைத் தலைவர்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | வாண்மை அபிவிருத்தி பயிற்சி செயற் திட்டம் | 22.5.2018 | ''Procurement Procedure'' USJP at Citrus Hotel, Waskaduwa'' conducted by Mr. M. S. Suhaire, Consultant, Sri Lanka Foundation Instititе & Sri Lanka Institute of Development Administration | USJP யின் நிறைவேற்று அதிகாரிகள் |
| 8 | Toast masters community Club | 06.1.2018<br>10.1.2018<br>24.1.2018<br>03.2.2018<br>14.2.2018<br>4.04.2018<br>25.4.2018<br>05.5.2018<br>09.5.2018<br>19.5.2018<br>23.5.2018<br>02.6.2018<br>13.6.2018<br>26.6.2018<br>07.7.2018<br>11.7.2018<br>21.7.2018<br>25.7.2018<br>04.8.2018<br>08.8.2018<br>18.8.2018<br>29.8.2018<br>08.9.2018<br>12.9.2018<br>26.9.2018<br>10.10.2018<br>20.10.2018<br>31.10.2018<br>14.11.2018<br>17.11.2018<br>28.11.2018<br>01.12.2018<br>12.12.2018<br>15.12.2018<br>19.12.2018 | Toastmasters Community Club Meetings பணிக்குழாம் அபிவிருத்தி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. | USJP யின் கல்விசார் பணிக் குழாம், நிறைவேற்றுப் பணிக் குழாம் மற்றும் கல்விசாரா பணிக்குழாம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | தொடக்கி வைப்பு செயல் திட்டம் | 20.6.2018 | தொடக்கி வைப்பு செயற்திட்டம் USJP பதிவாளர் மற்றும் பொருளாளரால் நடத்தப்பட்டது.<br>1. அலுவலக செயற்படு முறை – USJP பதிவாளர் திரு. K. G. Britto ஆலும்<br>2. விடுமுறை ஒழுங்கு விதிகள் – பதிவாளர் திரு. K. G. Britto ஆலும்<br>3. நிதிசார் செயற்படு முறை – பொருளாளர் செல்வி K.T. C. பிரியங்கனி ஆலும்<br>பணிக்குழாம் அபிவிருத்தி நிலையத்தில் நடத்தப்பட்டன. | புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட முகாமைத்துவ உதவியாளர்கள் |
| 10 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சி செயற் திட்டம் | 08.6.2018<br>09.6.2018 | தொழில் வாண்மை அபிவிருத்திப் பயிற்சிச் செயற்திட்டம் – வஸ்கடுவ Citrus Hotel இல் நடைபெற்றது.<br>1. "அனர்த்த முகாமைத்துவம்" – திரு. ருவன், ரத்நாயக்க, உதவிப் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்தவ நிலையம்.<br>2. "செயல் நிறைவேற்றத்துக்கான சரியான மனப்பாங்குகள்" கலாநிதி. அருண சாந்த கமகே, முதுநிலை விரிவுரையாளர், மனித வள முகாமைத்துவத் துறை, USJP<br>3. "தமது வேலைத் தளங்களில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்வது எப்படி"? கலாநிதி R. B. மாரசிங்ஹ, பணிப்பாளர், பணிக்குழாம் அபிவிருத்தி நிலையம். | பராமரிப்புப் பிரிவின் கல்விசாரா பணிக்குழாம் |
| 11 | பயிற்சிச் செயற் திட்டம் | 08.1.2018<br>15.1.2018<br>05.2.2018<br>14.2.2018<br>19.2.2018<br>26.2.2018<br>14.5.2018<br>21.5.2018<br>28.5.2018<br>04.6.2018 | தமிழ்மொழி பயிற்சிச் செயற்திட்டம் (பேச்சு) பணிக்குழாம் அபிவிருத்தி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. | USJP யின் கல்விசாரா பணிக்குழாம் |
| 12 | பயிற்சிச் செயற் திட்டம் | 02.7.2018<br>09.7.2018<br>30.7.2018<br>06.8.2018<br>13.8.2018<br>20.8.2018<br>27.8.2018<br>03.9.2018<br>10.9.2018<br>17.9.2018<br>01.10.2018<br>08.10.2018<br>15.10.2018 | தமிழ் மொழிப் பயிற்சிச் செயற்திட்டம் (எழுதுதல்) பணிக்குழாம் அபிவிருத்தி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. | USJP யின் கல்விசாரா பணிக்குழாம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 22.10.2018<br>29.10.2018<br>05.11.2018<br>12.11.2018<br>03.12.2018<br>10.12.2018<br>17.12.2018 | | |
| 13 | பயிற்சி செயற் திட்டம் | 04.7.2018<br>25.7.2018<br>01.8.2018<br>08.8.2018<br>15.8.2018<br>29.8.2018<br>05.9.2018<br>12.9.2018<br>26.9.2018<br>3.10.2018<br>10.10.2018<br>17.10.2018<br>31.10.2018<br>14.11.2018<br>05.12.2018<br>12.12.2018<br>19.12.2018 | தமிழ்மொழி பயிற்சிச் செயற்திட்டம் ( பேச்சு ) பணிக்குழாம் அபிவிருத்தி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. | USJP யின் கல்விசார் பணிக்குழாம் மற்றும் நிர்வாகப் பணிக்குழாம். |
| 14 | 06 மாத கால கற்கை நெறி | 01.6.2018<br>08.6.2018<br>22.6.2018<br>06.7.2018<br>20.7.2018<br>10.8.2018<br>17.8.2018<br>18.8.2018<br>19.8.2018<br>14.9.2018<br>28.9.2018<br>19.10.2018<br>02.11.2018<br>09.11.2018<br>23.11.2018<br>30.11.2018<br>14.12.2018 | உயர் கல்வி கற்பித்தல் சான்றிதழ் கற்கை நெறி (CTHE) – 2018<br>– பணிக்குழாம் அபிவிருத்தி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. | தகுதிகாண் உதவி விரிவுரையாளர்கள் மற்றும் முதுநிலை விரிவுரையாளர்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சி செயற்திட்டம் | 06.7.2018 | தொழில் வாண்மை அபிவிருத்தி செயற்திட்டம், வஸ்கடுவ Citrus Hotel இல் நடைபெற்றது.<br>1. கலாநிதி. A. P. N. D. S. அபயசுந்தர, முதுநிலை விரிவுரையாளர், மனித இனவியல் மற்றும் சமூகவியல் துறை, FHSS, USJP<br>2. முதுநிலைப் பேராசிரியர் P.P.M. ஜயவீர, தலைவர் / மருத்துவக் கல்வித் துறை, FMS, USJP<br>3. கலாநிதி. R. B. மாரசிங்ஹ, தலைவர் / மருத்துவக் கல்வித் துறை, FMS, USJP | பிரயோக விஞ்ஞான பீடத்தின் கல்விசாரா பணிக்குழாம் |
| 16 | தொடர்க்கி வைப்புச் செயற் திட்டம் | 13.7.2018 | தொடக்கி வைப்புச் செயற்திட்டம் – USJP யின் பதிவாளரினாலும் பொருளாளரினாலும் நடத்தப்பட்டது.<br>1. அலுவலகச் செயற்படு முறை – திரு. K. G. பிரிட்டோ, பதிவாளர், USJP<br>2. விடுமுறை ஒழுங்குவிதிகள் – திரு. K. G. பிரிட்டோ, பதிவாளர், USJP<br>3. நிதிசார் செயற்படு முறை – செல்வி K.T. C. பிரியங்கனி, பொருளாளர், USJP | புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட தொழில் நுட்ப அதிகாரிகள் மற்றும் கணக்கர்கள் |
| 17 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சி செயற் திட்டம் | 22.7.2018 | தொழில் வாண்மை அபிவிருத்தி செயற்திட்டம் – வஸ்கடுவ Citrus Hotel இல் நடைபெற்றது.<br>நடத்தியவர் : கலாநிதி. அருண சாந்த கமகே, முதுநிலை விரிவுரையாளர், மனித வள முகாமைத்துவத் துறை, USJP | நூலகக் கல்விசாரா பணிக்குழாம் |
| 18 | செயல் அமர்வு | 26.7.2018 | "2030 நோக்கெல்லையை மீளாய்வு செய்தல் – தேசிய நீடித்து நிலைத்தல் பற்றிய கலந்துரையாடல்"<br>பொரலஸ்கமுவ Fingara Town & Country Club (Pvt) Ltd. இல் நடைபெற்றது. | USJP யின் கல்விசாரா பணிக்குழாம் |
| 19 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சி செயற் திட்டம் | 03.8.2018 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சிச் செயற்திட்டம் – வஸ்கடுவ Citrus Hotel இல் நடைபெற்றது.<br>– நடத்தியவர் :பேராசிரியர். சமன் சந்ரா ரணசிங்ஹ, முதுநிலைப் பேராசிரியர், மொழிகள் மற்றும் கலாசார கற்கைகள் துறை, FHSS, USJP | தொழில் நுட்பப் பீடத்தின் கல்விசாரா பணிக்குழாம் |
| 20 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சிச் செயற் திட்டம் | 22.8.2018 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சிச் செயற்திட்டம் – வஸ்கடுவ Citrus Hotel இல் நடைபெற்றது.<br>நடத்தியவர் : கலாநிதி. அருண சாந்த கமகே, முதுநிலை விரிவுரையாளர், மனித வள முகாமைத்துவத் துறை, FMSC, USJP | சுகநல நிலையத்தின் கல்வி சாரா பணிக்குழாம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | செயல் அமர்வு | 24.8.2018 | USJP க்கான கொள்கை அபிவிருத்தி ஆவணங்கள்" பொரலஸ்கமுவ Fingara Town & Country Club இல் நடைபெற்றது. | USJP யின் கல்விசார் பணிக்குழாம் |
| 22 | ஆளுமைத் தேர்ச்சி மற்றும் தலைமை த்துவ அபிவிருத்தி பயிற்சிச் செயற் திட்டம் | 24.8.2018 | ஆளுமைத் தேர்ச்சி மற்றும் தலைமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிச் செயற்திட்டம் – பெலிஹுல்ஓயாவில் உள்ள Academy of Adventure இல் நடைபெற்றது. | ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தி னதும் ஏனைய பல்கலைக் கழகங்களினதும் பங்கு பற்றுனர்கள் |
| 23 | செயல் அமர்வு | 16.8.2018<br>17.8.2018 | செயல் அமர்வு மற்றும் தொடக்கி வைப்பு செயற்திட்டம் – பணிக்குழாம் அபிவிருத்தி நிலையத்தின் கோட்போர் கூடத்தில் நடைபெற்றது. | புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் (கீழ் தரம்) |
| 24 | செயல் அமர்வு | 04.9.2018 | "காப்புரிமைப் பட்டயம் எழுதுதல் : பல்கலைக்கழக கண்டுபிடிப்பாளர் சமூகத்திற்கான விழிப்புணர்வுச் செயற்திட்டம்" – பொரலஸ்கமுவ Fingara Club (Pvt) Ltd. இல் நடைபெற்றது. | பல்கலைக்கழக கல்விசார் பணிக்குழாம் |
| 25 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சி செயற் திட்டம் | 04.10.2018<br>05.10.2018 | தொழில் வாண்மை அபிவிருத்திப் பயிற்சிச் செயற்திட்டம் – வஸ்கடுவ Citrus Hotel இல் நடைபெற்றது.<br>நடத்தியவர் : முதுநிலை பேராசிரியர். ஹேமந்த கொட்டவத்த, பணிப்பாளர், மாணவர் சேமநலப் பிரிவு, USJP | பல்கலைக்கழக கல்விசார் பணிக்குழாம் |
| 26 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சி செயற் திட்டம் | 26.10.2018 | தொழில் வாண்மை அபிவிருத்திப் பயிற்சி செயற் திட்டம் – வஸ்கடுவ Citrus Hotel இல் நடைபெற்றது.<br>நடத்தியவர் : பேராசிரியர் சமன் சந்ரா ரணசிங்ஹ, முதுநிலைப் பேராசிரியர், மொழிகள் மற்றும் கலாசாரக் கற்கைகள் துறை, FHSS, USJP | மருத்துவ விஞ்ஞான பீடத்தின் கல்விசாரா பணிக்குழாம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 27 | செயல் அமர்வு | 01.11.2018 | பிரயோக விஞ்ஞான பீடத்தினால் வழங்கப்பட்ட பட்டங்கள் பற்றிய மீளாய்வுச் செயற்திட்டம் – பிரயோக விஞ்ஞான பீடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.<br>நடத்தியோர் :<br>1. பேராசிரியர். உமா குமாரசுவாமி, தர உறுதி பேணுகை ஆலோசனை நிபுணர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.<br>2. பேராசிரியர். கல்யாணி பெரேரா, ஆலோசனை நிபுணர், உள்ளகத் தர உறுதி பேணுகை அலகு, USJP | பிரயோக விஞ்ஞான பீட கல்விசார் பணிக்குழாம் |
| 28 | செயல் அமர்வு | 07.11.2018 | பெறுகைச் செயற்படு முறை – பணிக்குழாம் அபிவிருத்தி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.<br>நடத்தியவர் : திரு. அனுர லொக்குகமகே, முதுநிலை ஆலோசகர், SLIDA | USJP யின் மூலதன வேலைகள் பணிக் குழாம் மற்றும் நிறைவேற்றுப் பணிக்குழாம் |
| 29 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சி செயல் திட்டம் | 19.11.2018<br>20.11.2018 | தொழில் வாண்மை அபிவிருத்திப் பயிற்சிச் செயற்திட்டம் – அனுராதபுரம் Heritage Hotel இல் நடைபெற்றது.<br>நடத்தியவர் : K. G. பிரிட்டோ, பதிவாளர், USJP | நிர்வாக, கட்டிட மற்றும் உடலியற் கல்விப் பிரிவு என்பவற்றின் கல்விசாரா பணிக்குழாம் |
| 30 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சி செயல் திட்டம் | 31.11.2018<br>01.12.2018 | தொழில் வாண்மை அபிவிருத்திப் பயிற்சி செயற் திட்டம் – வஸ்கடுவ Citrus Hotel இல் நடைபெற்றது. | பொது நிர்வாகப் பிரிவின் கல்விசாரா பணிக்குழாம் |
| 31 | செயல் அமர்வு | 20.12.2018 | பொருள் விவரப் பட்டியல் பேணுகை – 2018 USJP, FMSC முனசிங்ஹ மண்டபத்தில் நடைபெற்றது.<br><br>நடத்தியவர் : திரு. லசந்த கமகே, கணக்கியலாளர், பொலிஸ் விசேட அதிரடிப் படை | எழுதுனர்கள், CAA. முகாமைத்துவ உதவியாளர்கள், சகல துறைகளினதும் தலைவர்கள் மற்றும் நிறைவேற்றுப் பணிக்குழாம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 32 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சி செயல் திட்டம் | 21.12.2018 | தொழில் வாண்மை அபிவிருத்திப் பயிற்சி செயற் திட்டம் – கித்துல்கல Adventure Based Camp இல் நடைபெற்றது.<br>நடத்தியவர் : பேராசிரியர். சமன் சந்ரா ரணசிங்ஹ, முதுநிலைப் பேராசிரியர், மொழிகள் மற்றும் கலாசாரக் கற்கைகள் துறை FHSS, USJP | தொழில்நுட்பப் பீடத்தின் கல்விசார் பணிக்குழாம் |
| 33 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சி செயல் திட்டம் | 21.12.2018 | தொழில் வாண்மை அபிவிருத்திப் பயிற்சி செயற் திட்டம் – வஸ்கடுவ Citrus Hotel இல் நடைபெற்றது.<br>நடத்தியோர் :<br>1. திரு. K. G. Britto, பதிவாளர், USJP<br>2. கலாநிதி. R. B. மாரசிங்ஹ தலைவர் / மருத்துவக் கல்வித் துறை FMS, USJP | பொறியியல் பீட கல்விசார் மற்றும் கல்விசாரா பணிக்குழாம் |
| 34 | தொழில் வாண்மை அபிவிருத்தி பயிற்சி செயல் திட்டம் | 22.12.2018<br>23.12.2018 | தொழில் வாண்மை அபிவிருத்திப் பயிற்சி செயற் திட்டம் – வஸ்கடுவ Citrus Hotel இல் நடைபெற்றது.<br>நடத்தியோர் :<br>1. கலாநிதி. அருண சாந்த கமகே, முதுநிலை விரிவுரையாளர், மனித வள முகாமைத்துவத் துறை, FMSC, USJP<br>2. H. H. மாதுசிறி, தலைவர் / தீ மற்றும் மீட்புதவிப் பயிற்சிப் பாடசாலை | பாதுகாப்புப் பணிக்குழாம் மற்றும் USJP பீடங்களின் Marshal அதிகாரிகள் |

## தகவல் தொழில்நுட்பச் சேவைகள் நிலையம் (CITS)

தகவல் தொழில்நுட்பச் சேவைகள் நிலையம் (CITS) பல்கலைக்கழகத்தின் மையப் பகுதியாகும். அது பல்கலைக்கழகம் பூராவும் பரவியுள்ள தகவல் தொழில்நுட்பக் கீழ்க்கட்டமைவு, இணையம் மற்றும் மின் அஞ்சல் வசதிகள், சேவையக நிர்வாகம் மற்றும் e சேவைகள் மற்றும் பயன்பாடுகள் என்பவற்றை நடைமுறைப்படுத்தும் அதேவேளை பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பணிக்குழாமினருக்குமான தகவல் தொழில்நுட்ப (IT) உதவிகளையும் தீர்வுகளையும் வழங்கி வருகிறது. இவற்றுக்கு மேலதிகமாக பல்கலைக்கழக இணையத் தளங்களை அபிவிருத்தி செய்து பராமரிக்கும் அதேவேளை பூரண வாய்ப்புக்களைக் கொண்ட ஊடகக் குழுவொன்றினைப் பெற்று பலம் அடைந்துள்ளது.

திரு. ஹர்ஷ முனசிங்ஹ தகவல் அமைப்பு முகாமையாளராகப் பணியாற்றி தகவல் தொழில்நுட்ப சேவைகள் நிலையத்தை வழிநடத்திச் செல்வதோடு திரு. வஜிர பிரேமதாச மற்றும் திரு. மெத்சிரி ஜயவீர கணினி அறிவுறுத்துனர்களாகப் பணியாற்றினர். திரு. சுரேஷ் நானாயக்கார உதவி வலை அமைப்பு முகாமையாளராகச் செயலாற்றினார். செல்வி. அஷேலா நில்மினி மற்றும் ரனுக்க எதிரிசூரிய என்போர் கணினி பொறி நிரலர்களாகவும் ( Programmers) திரு. உப்புல் வீரதுங்க, செல்வி. தினித்தி மற்றும் S. K. குருகே என்போர் தொழில்நுட்ப அதிகாரிகளாகவும் பணியாற்றினார். செல்வி. நிசன்சலா முகாமைத்துவ உதவியாளராகவும் திரு. S. பிரேமரத்ன மற்றும் திரு. பண்டார யாப்பா என்போர் ஆய்வுகூட ஊழியர்களாகவும் பங்காற்றினர். உழைப்பாளி திரு. சாந்த குமார மற்றும் பல தற்காலிக ஊழியர்கள் CITS ஊடக நிலையம் மற்றும் இணையக் குழு என்பவற்றில் வருடம் பூராவும் பணிகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சேவையாற்றினார்கள்.

தகவல் தொழில்நுட்பச் சேவைகள் நிலையத்தினால் வழங்கப்பட்ட பிரதான சேவைகள் பின்வருமாறு :

- பல்கலைக்கழக மின் அஞ்சல் சேவையை நடைமுறைப்படுத்துதல்.
- இணைய வசதிகளை முகாமை செய்து வழங்குதல்.
- சேவையக நிர்வாகம் மற்றும் e சேவைகள் மற்றும் பயன்பாடுகளைப் பராமரித்தல்.
- முகாமைத்துவத் தகவல் அமைப்பினை வடிவமைத்து அபிவிருத்தி செய்தல்.
- மென்பொருள் அபிவிருத்தி மற்றும் தீர்வுகள்
- தனியார் மேகக் கணி அமைப்பினைப் பேணுதல்.
- ஃபைர் ஒப்டிக் முதுகெலும்பை அபிவிருத்தி செய்து பராமரித்தல்
- உள்ளகப் பகுதி வலை அமைப்புக்களை அபிவிருத்தி செய்து பராமரித்தல்
- Wi - Fi வலையமைப்புக்களை அபிவிருத்தி செய்து பராமரித்தல்
- பல்கலைக்கழக இணையத் தளங்களை அபிவிருத்தி செய்து பராமரித்தல்
- விரல் ஊடகச் செயலெல்லை மற்றும் ஊடக உற்பத்திகளை வழங்குதல்
- இன்டர்கொம் அமைப்பினை நிறுவுதல், செயற்பாடு மற்றும் பராமரிப்பு என்பவற்றை மேற்பார்வை செய்தல்.
- குரல் நெறி இணைய நெறிமுறை (வொய்ப் Volp ) அமைப்பினை நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றை நிர்வகித்தல்.
- தகவல் மற்றும் கனிணித் தொழில்நுட்ப (ICT) க் கருவிகளைப் பழுது நீக்கம் செய்தல் மற்றும் பராமரித்தல்
- மென்பொருளை நிறுவுதலும், பாதுகாப்பு மென்பொருளை வழங்குதலும்
- விபரக் குறிப்புக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- பல்கலைக்கழக பணிக்குழாம் உறுப்பினர்களுக்கான விசேட பயிற்சிச் செயற் திட்டங்களை நடத்துதல்.
- பல்கலைக்கழக பணிக் குழாம் உறுப்பினர்களின் தகவல் மற்றும் கணினிச் தொழில்நுட்ப (ICT) தேவைகளுக்கு உதவுதல்
- மாணவர்களுக்கு அலோசனைச் சேவைகள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவினை வழங்குதல்.

## வெளிவாரி பட்டங்கள் மற்றும் தொடர் கற்கை நெறிகள் அலகு (EDECU)

ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு வணிகவியல் மாணி வெளிவாரிப் பட்டப் படிப்புச் செயற்றிட்டத்தின் அறிமுகத்தோடு 1979 இல் ஆரம்பமானது. அதன் பின்னர், பொதுக் கலை மாணி வெளிவாரிப் பட்டப் படிப்புச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 1997 இல் வியாபார நிர்வாகம் மற்றும் பொதுத்துறை நிர்வாகத்தில் பொது விஞ்ஞான மாணி வெளிவாரிப் பட்டப் படிப்புச் செயற்திட்டமும் அறிமுகம் செய்யப்பட்டது. பொதுக் கலை மாணி வெளிவாரி பட்டப் படிப்பு, வியாபார நிர்வாகம் மற்றும் பொதுத்துறை நிர்வாகத்தில் பொது விஞ்ஞான மாணி வெளிவாரிப் பட்டப் படிப்பு ஆகிய செயற்திட்டங்கள் மாணவர்கள் மத்தியில் பிரபல்யம் வாய்ந்தனவாக மாறியுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவினால் வெளியிடப்பட்ட 2010 ஒக்டோபர் 15 ஆம் திகதியிடப்பட்ட 932 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் வெளிவாரிப் பரீட்சைகள் அலகு வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் தொடர் கற்கை நெறிகள் அலகு என கட்டமைப்பு ரீதியாக மாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டது.

வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் தொடர் கற்கை நெறிகள் அலகின் முகாமைத்துவக் கமிட்டியின் அமைவுச் சேர்கை பின்வருமாறு:

1. துணை வேந்தர்
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நியமத்தர்
3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து பல்கலைக்கழகப் பேரவையினால் நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள்
4. இரண்டு பீடங்களின் பீடாதிபதிகள் ( மனிதப் பண்பியல்கள், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் ஆகிய பீடங்களின் பீடாதிபதிகள்)

5. கற்கை சபைகளின் உறுப்பினர்கள்
6. பல்கலைக்கழகத்தின் பதிவாளர்
7. பலர்கலைக்கழகத்தின் பொருளாளர்
8. EDECU வின் பணிப்பாளர்
9. CDECU வின் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர்
10. EDECU வின் சிரேஷ்ட உதவிப் பொருளாளர்

வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் தொடர் கற்கை நெறிகள் அலகு 2014 ஆம் ஆண்டில் இருந்து புதிய பாடத்திட்டத்தின் கீழ் பின்வரும் பட்டப் படிப்புச் செயற்திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது.

**மனிதப் பண்பியல்கள் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**

- மனிதப் பண்பியல்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் இள மாணி (பொது) வெளிவாரிப் பட்டம்
- ஆங்கிலத்தில் இளம் கலை மாணி (பொது) வெளிவாரிப் பட்டம்
- சூழல் மற்றும் அபிவிருத்திக் கற்கைகளில் சமூக விஞ்ஞான மாணி (பொது) வெளிவாரிப் பட்டம்

**முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம்**

- வியாபார நிர்வாக விஞ்ஞான மாணி (பொது) (B.Sc) வெளிவாரிப் பட்டம்
- பொதுத்துறை முகாமைத்துவ விஞ்ஞான மாணி (பொது) (B.Sc) வெளிவாரிப் பட்டம்
- வணிகவியல் மாணி (பொது) (B.com) வெளிவாரிப் பட்டம்

**2018 ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட வெளிவாரி மாணவர்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு**

| | | |
|---|---|---|
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான மாணி வெளிவாரிப் பட்டம் | – | 1200 |
| ஆங்கிலத்தில் கலை மாணி (பொது) வெளிவாரிப் பட்டம் | – | 388 |
| சூழல் மற்றும் அபிவிருத்திக் கற்கைகளில் சமூக விஞ்ஞான மாணி (பொது) வெளிவாரிப் பட்டம் | – | 109 |
| வியாபார நிர்வாக விஞ்ஞான மாணி (B.Sc) (பொது) வெளிவாரிப் பட்டம் | – | 439 |
| பொதுத்துறை முகாமைத்துவ விஞ்ஞான மாணி (B.Sc) (பொது) வெளிவாரிப் பட்டம் | – | 450 |
| பொதுத்துறை முகாமைத்துவ விஞ்ஞான மாணி (B.Sc) (பொது) வெளிவாரிப் பட்டம் | – | 450 |

2018 ஆகஸ்ட் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் நடைபெற்ற 13 ஆவது வெளிவாரிப் பட்டமளிப்பு விழாவும் பட்டதாரிகளின் எண்ணிக்கையும் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| மனிதப் பண்பியல்கள் மற்றும் சமூக விஞ்ஞான மாணி (பொது) வெளிவாரிப் பட்டம் | – | 780 |
| சூழல் மற்றும் அபிவிருத்திக் கற்கைகளில் சமூக விஞ்ஞான மாணி (பொது) வெளிவாரிப் பட்டம் | – | 20 |
| வியாபார நிர்வாக விஞ்ஞான மாணி (B.Sc) பொது வெளிவாரிப் பட்டம் | – | 1320 |
| பொதுத்துறை முகாமைத்தவ விஞ்ஞான மாணி (B.Sc) (பொது)வெளிவாரிப் பட்டம் | – | 197 |
| பொதுத்துறை முகாமைத்துவ விஞ்ஞான மாணி (B.Sc) (பொது)வெளிவாரிப் பட்டம் | – | 88 |

# நூலகம்

நூலகர் கலாநிதி. ( திருமதி ) நயனா விஜயசுந்தரவின் வழிகாட்டலின் கீழ் 01 பிரதி நூலகரும், 04 முதுநிலை நூலகர்களும் 07 உதவி நூலகர்களும் 56 கல்விசாரா பணிக் குழுவினரும் நூலகத்தில் பணியாற்றுகின்றனர். வருடத்தின் பிந்திய பகுதியில் 05 கல்விசாரா ஊழியர்கள் புதிதாகச் சேர்ந்து கொண்டனர்.

2018 ஆம் அண்டு காலப்பகுதியில் வருடாந்த நிதி ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 20, 499,411.66 சதம் செலவு செய்து 1852 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. ரூபா 5,671,223.21 ஆம் செலவு செய்து நாற்பத்து ஐந்து (45) வெளிநாட்டு, உள்நாட்டு பருவகால ஆய்வு இதழ்கள் கொள்வனவு செய்யப்பட்டன. மூன்று (03) இலத்திரன் தரவுக் களங்கள் JSTOR ரகம் ரூபா 1,032, 650. 48 சதம் செலவிலும் Research4life ரூபா 235, 202.54 சதம் செலவிலும் மற்றும் Scopus ரகம் ரூபா 3, 134, 819.20 சதம் செலவிலும் கொள்வனவு செய்யபப்பட்டன. ரூபா 4,034 2220.90 சதம் பெறுமதியான 912 நூல்கள் மற்றும் ரூபா 51,474.22 சதம் பெறுமதியான 35 வெளிநாட்டு, உள்நாட்டு பருவகால ஆய்வு இதழ்கள் நன்கொடையாக கிடைக்கப் பெற்றதுடன் ரூபா 24,568.40 பெறுமதியான 23 பருவகால ஆய்வு இதழ்கள் பரிமாற்றல் முறையின் அடிப்படையில் கிடைக்கப் பெற்றன.

மேலும் மேற்கூறப்பட்ட இலத்திரன் தரவுக் களங்களுக்கு மேலதிகமாக இன்னும் Emarald, Tayler மற்றும் Francis ஆகிய ரக 03 இலத்திரன் தரவுக் களங்களும் Oxford பருவகால ஆய்வு இதழ்களும் மருத்துவ கைநூல்கள் சேகரிப்பும் பரல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நட்புறவினூடாக வழங்கப்பட்டன. மேலும், CONSAL மூலம் பிரித்தானிய நூலகத்தின் ஊடாக வாசகர்களுக்கலான ஆவண விநியோகச் செயன்முறையும் மேற்கொள்ளப்பட்டது.

2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைமுறையாக்கப் பிரிவு மற்றும் பீடங்களின் நூலகங்கள் ஆகியவற்றினூடாக 1592 நூல் தலைப்புகளும் 4198 பிரதிகளும் செயன்முறையாக்கத்துக்கு உட்படுத்தப்பட்டன. இந்தத் தொகையில் இலங்கை அறைக்கு (Celylon Room) 253, நிரந்தர உசாத்துணைப் பகுதிகளுக்கு (PR) 508, அட்டவணைப்படுத்தப்பட்ட உசாத்துணைப் பகுதிக்கு (SR) 754, இரவல் உதவிப் பகுதிக்கு (L) 2638 என்ற வகையில் நூல்கள் அடங்கியிருந்தன.

2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நூலகத்தில் 3174 வாசகர்கள் பதிவு செய்யப்பட்டனர். அவர்களுள் 67 கல்விசார் பணிக்குழாமினரும் 53 கல்விசாரா பணிக்குழாமினரும் 2328 இளம் பட்டதாரி மாணவர்களும் 226 டிப்ளோமா மற்றும் பட்டப்பின் படிப்பு மாணவர்களும் இடம்பெற்றனர். இந்த எண்ணிக்கைகளோடு நூலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த மொத்த பாவனையாளர்களின் எண்ணிக்கை 17796 ஆக அதிகரித்திருந்தது.

நூலகங்களுக்கு இடையிலான கடனுதவிக் கோரிக்கைகளில் 81.8% பூர்த்தி செய்யப்பட்டன. 2018 இல் கணினி இரவல் உதவிச் சேவை 760 பாவனையாளர்களால் பயன்படுத்தப்பட்டது. இந்தச் சேவைக்காக 30 மடிக் கணினிகள் எம்மால் பகிர்ந்தளிக்கப்பட்டன.

நூலகக் கல்விசார் பணியாளர்களால் பதினொரு ( 11 ) செயலமர்வுகள் நடத்தப்பட்டன. அவற்றுள் ஒன்று ( 01 ) கல்விசார் பணியாளர்களுக்கும் 10 இளம் பட்டதாரி மாணவர்களுக்கும் அவர்களின் தகவல் வளங்கள் மற்றும் தகவல் எழுத்தறிவுத் திறன் என்பவை தொடர்பான அறிவை மேம்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டன.

2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 02 PHD கள் 05 முது மாணிப் பட்டங்கள் 03 இளம் மாணிப் பட்டங்கள் மற்றும் 4 டிப்ளோமா கற்கைகள் ஆகிய கற்கைகள் நுலகப் பணிக் குழாமினரினால் முன்னெடுக்கப்பட்டன.

# உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கட்டமைப்பும் பணிகளும்

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு பிரதி உள்ளக கணக்காய்வாளரின் தலைமையின் கீழ் இயங்குகின்றது. குறிப்பிட்ட ஆண்டுக்கான கணக்காய்வுச் செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டியின் சிபாரிசுகளுடன் பல்கலைக்கழகப் பேரவையின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டிக் கூட்டங்கள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி, பேரவையினால் நியமிக்கப்பட்டு அதற்குப் பொறுப்புக் கூறுவதாக இருப்பதோடு பேரவையின் மூன்று நிறைவேற்றல்லாத சுதந்திரமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

அது நிறைவேற்று அல்லாத பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினராக பதவி வகித்த ஒருவரால் தலைமை தாங்கப்பட்டதோடு நிறைவேற்று அல்லாத முறையில் பேரவையில் பதவி வகித்த ஏனைய இருவரையும் உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் இக்கமிட்டி 03 (மூன்று) முறை கூடி பின்வரும் முக்கிய பரப்புகளைப் பற்றிக் கலந்துரையாடியது.

அ. நடைமுறையிலுள்ள அமைப்பு முறைகள், செயற்படு முறைகள் மற்றும் ஏதேனும் நெறி பிறழ்வுகள் என்பவற்றை மீளாய்வு செய்தல், நடைமுறையிலுள்ள அமைப்பு முறைகைளை விருத்தி செய்வதற்கான அதன் யோசனைகளை பேரவையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்.

ஆ. கணக்காய்வாளர் நாயகத்தால் எழுப்பப்பட்ட வினாக்களையும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவரால் வழங்கப்பட்ட பதில்களையும் மீளாய்வு செய்தல். சரியான நடைமுறைப்படுத்தலையும் பிழைகள் மீண்டும் ஏற்படாது தவிர்ப்பதனையும் உறுதிப்படுத்தும் நோக்கில் சம்பந்தப்பட்ட துறைத் தலைவருடன் அவ்விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இ. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டதோடு பல்கலைக்கழகத்தினுள் உள்ளகக் கட்டுப்பாட்டுச் சூழலை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கில் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடப்பட்டன.

## முன் கணக்காய்தல்

கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் பின்வரும் பரப்புக்களில் முன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

- ஊழியர் சேமலாப நிதியை விடுவித்தல்
- பணிக்கொடைக் கொடுப்பனவு
- ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான விண்ணப்பங்கள்
- நிர்மாணக் கொடுப்பனவுகள்
- பிணைப் பெறுமதிக் கணிப்பீட்டின் சரியான தன்மை
- ஒப்பந்தம் சார்ந்த உடன்படிக்கைகள் மீதான கொடுப்பனவு

## உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள்

பின்வரும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கான அவற்றின் பிரதிகளுடன் துணை வேந்தருக்கு வழங்கப்பட்டதோடு கணக்காய்வுக் கமிட்டிக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

- பொதுச் சேர்மத்தில் உள்ள வாகனங்கள் பற்றிய பரிசோதனை
- நானாவித முன் கொடுப்பனவுகளைச் சரி பார்த்தல்
- திண்மக் கழிவு அகற்றலைச் சரிபார்த்தல்
- தோட்டப் பராமரிப்புச் செலவுக்கான கொடுப்பனவைச் சரிபார்த்தல்
- 2017 இன் மீளாய்வுச் சபையின் வருடாந்த அறிக்கை
- டீசல் மற்றும் பூச்சி புழுக்களை அழிக்கும் நோக்கிலான பூச்சி கொல்லிகளைப் பரிசோதித்தல்.

## மூலதன வேலைகளும் திட்டமிடலும்

| | நிர்மாண வேலைத் திட்டங்களின் அட்டவணை - 2018 |
|---|---|
| 1. | இரசாயனவியல் ஆய்வு கூடத்தை புதுப்பித்தல் மற்றும் விரிவுபடுத்தல் – பிரயோக விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். |
| 2. | தொழில்நுட்ப பீடத்தின் தேவைகளுக்காக Sagra கட்டிடத்தைப் புதுப்பித்தல், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் – நீர்க்குழாய் வேலைகள் |
| 3. | முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடக் கட்டிடத்தின் படிநிலை 2 இன் கட்டம் 1 ii இன் கீழ் மாடிகள் மூன்றிலுமுள்ள குளியல் மற்றும் கழியல் அறைகளை புனருத்தாரணம் செய்து சுத்திகரித்தல், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் |
| 4. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் மீச்சேர்ம விஞ்ஞானத் (Polymer Science) துறைக்கான நடைமுறையிலுள்ள 5 ஆம் மாடி தொடர்பாக முன்மொழியப்பட்ட புனருத்தாரண வேலை. |
| 5. | ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் உயிரியல் அலகின் தாவரவியல் கட்டிடத்தை விரிவாக்கிப் புதுப்பித்தல். |
| 6. | ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடக் கட்டிடத்தின் படிநிலை 2 இன் கட்டம் 1 ii இல் நடைமுறையிலுள்ள தீ வெளியேறுகைப் படிக்கட்டு, காவலர்களின் மாற்று அறை, இடைமாடித் தரையை மூடிப் பிரித்தல் ஆகிய விரிவாக்கங்களும் வெளிச் சுவர்களின் பகுதிக்கு வர்ணம் தீட்டுதலும். |
| 7. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் சுமங்கள கட்டிடத்தில் அமைந்துள்ள கணினி ஆய்வுகூடத்தின் A பகுதியைப் பிரித்தல். |
| 8. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் குடும்ப மருத்துவத் துறைக்கான உட்புற, வெளிப்புற குறியீட்டு அடையாளங்களை இடுதல். |
| 9. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் சுமங்கல கட்டிடத்தில் உள்ள நிதியியல் மற்றும் குற்றவியல் நீதித் துறைக்கு சிறிய செப்பனிடுதல்களும் மாற்றியமைத்தலும். |
| 10. | பிரதான நூலகக் கட்டிடத்தின் உள்ளக வேலைகளை வடிவமைத்தல். |
| 11. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ள உற்பத்தி ஆய்வுகூடத்தையும் மற்றும் பிரதான இயந்திரப் பொறியியல் ஆய்வுகூடங்கள் கட்டிடத்தையும் மேலதிகமாகப் புதுப்பிக்கும் வேலை. |

| | |
|---|---|
| 12. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைள் மற்றும் வணிகவியல் பீடத்தின் படிநிலை 2 ஆம் கட்டிடத்தின் 1 ii இல் உள்ள மின் குதை குழிகளை (Sockets) இடம் மாற்றிப் பொருத்துதல். |
| 13. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடத்தின் சிற்றுண்டிச் சாலைக்குப் பாதுகாப்பு கம்பி வலைத் தட்டி மற்றும் நடைபாதைக் கதவுகளைப் பொருத்துதல். |
| 14. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்தின் படிநிலை 2 கட்டிடத்தின் கட்டம் 1 ii இல் காற்று விசையாழி உட்புகு சாதனங்களைப் (Wind Turbine Ventilators) பொருத்துதல். |
| 15. | பொறியியல் பீடத்தின் பீட அலுவலகம் மற்றும் துறைகளில் அத்தியாவசிய வசதிகளைத் திருத்தி மேம்படுத்தல் – நானாவித வேலைகள் |
| 16. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சோரத்த மாவத்தையில் அமைந்துள்ள ஆண்கள் விடுதித் தொகுதியில் உள்ள இரண்டு உதவி விடுதி மேற்பார்வையாளர்களின் வாசஸ்தலங்களை விரிவாக்கம் செய்தல். |
| 17. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ரத்மலானையில் அமைந்துள்ள பொறியியல் பீடத்தின் சிவில் பொறியியல் துறையில் உள்ள ஆய்வு கூடத்தின் சிறு நிர்மாண வேலைகளை மேற்கொள்ளுதல். |
| 18. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானங்கள் பீடத்தின் புதிய மருத்துவ நூலகத்துக்கு Vru வகை குளிரூட்டி முறைமையைப் பொருத்துதல். |
| 19. | ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானங்கள் பீடத்தின் 7 ஆவது மாடிக்கும் இரண்டு விரிவுரை மண்டபங்களுக்கும் நீர் வழியவிடும் வகையிலான குளிரூட்டிகளை விநியோகித்தலும் பொருத்துதலும். |
| 20 | குடும்ப மருத்துவக் கட்டிடத்துக்குக் குளிரூட்டிகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல். |
| 21. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ராஹுல விடுதியில் உள்ள உதவி விடுதி மேற்பார்வையாளர்களின் வாசஸ்தலங்களைப் புதுப்பித்தல். |
| 22 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்தைப் பிரித்து வகுத்தல். |
| 23 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் Sagra கட்டிடத்துக்கு குளிரூட்டிப் பொருத்துதல். |
| 24 | . ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் புதிய நூலகக் கட்டிடத்தைப் பிரித்து வகுக்கும் வேலை. |
| 25 | ஸ்ரீ ஜயவர்தனபுர வாகனத் தரிப்பிட வசதிகளைத் திருத்தி மேம்படுத்தல். |
| 26 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக நிர்வாகக் கட்டிட விரிவாக்கத்துக்கான உருக்குக் கட்டமைவு, மின்சார வேலை மற்றும் நிர்மாணிப்பவர்களின் வேலை உள்ளிட்ட பார்வையிடலுக்கு வாய்பான பாரந்தூக்கி என்பவற்றுக்கான விநியோகம், பொருத்துதல், பரீட்சித்துப் பார்தல் மற்றும் ஒப்படைத்தல். |
| 27 | ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டிடத்துக்கு மோட்டார் சைக்கிள் கொட்டில் ஒன்றை நிர்மாணித்தல். |

| | |
|---|---|
| 28 | ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானங்கள் பீட சமூக மருத்துவத் துறைக்குரிய ஆய்வு கூடம் மற்றும் அலுவலக அறை என்பவற்றை பிரித்து வகுத்தல். |
| 29 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கு இரும்பிலான கொட்டில்களை அமைத்தல். |
| 30 | ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் விஜேராம கட்டிடத்தில் நடைமுறையில் உள்ள விரிவுபடுத்தல் பகுதியைப் பலப்படுத்தல். |
| 31. | ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டிடத்தின் வெளிச் சுவர்களுக்கு வர்ணம் பூசுதல். |
| 32 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக உடலியல் கல்வித் துறையின் பாதுகாப்பு வேலியை விரிவுபடுத்தல் மற்றும் புதிய நீர்த் தாங்கிகளை நிர்மாணித்தல். |
| 33 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக சொத்து முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டுத் துறைக் கட்டிடத்துக்கு வர்ணம் பூசுதல் மற்றும் புதுப்பித்தல். |
| 34 | . பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடத்தின் வியாபாரக் கற்கைளுக்கான பட்டப்பின் படிப்பு நிலையத்தின் வசதிகளை மேம்படுத்தல். |
| 35 | ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்தின் விரிவாக்கல் பகுதிக்கான பிரதான நுழைவாயிலை மேம்படுத்தல். |
| 36 | . ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்துக்கு இரண்டு சாக்கடைத் தொகுதி மற்றும் கழிவு நீர் பதப்படுத்தல் அமைப்புக்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் பேணுதல். |
| 37 | பொறியியல் பீடத்தின் பீட அலுவலகம் மற்றும் துறைகளின் அத்தியாவசிய வசதிகளைத் திருத்தி மேம்மபடுத்துதல் மற்றும் குளிரூட்டல் வேலைகள் |
| 38 | ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிட விரிவாக்கத்தில் உள்ள மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவு மற்றும் தபால் பிரிவு ஆகிய இரண்டையும் குளிரூட்டல். |
| 39 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கலாநிதி. விமலா டி சில்வா விடுதிக்கான அவசர சிறு பழுது பார்த்தல்களைச் செய்தல். |
| 40 | . ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பசுமை வீட்டை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தல். |
| 41. | நிர்வாகக் கட்டிடத்தில் உள்ள உத்தேச பதிவாளர் அலுவலகத்தைப் புதுப்பித்தல். |

## 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்விசார், நிர்வாக, கல்விசார் துணை பணிக்குழாம் மற்றும் கல்விசாரா பணிக்குழாம் பற்றிய விபரங்கள்

### கல்விசார் நிர்வாக, ஏனைய நிறைவேற்று மற்றும் கல்விசார் துணைப் பணிக்குழாம்கள் பற்றிய விபரங்கள்

| பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலைப் பிரிவு (Approved Cadre) | 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் உண்மையாக இருந்த தொழில் நிலைப் பிரிவு | | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | ஒப்பந்தப்படி / தற்காலிகம் | |
| **கல்விசார் பணிக்குழாம்** | | | | |
| முதுநிலைப் பேராசிரியர் | 817 | 29 | | |
| பேராசிரியர் | | 71 | | |
| இணைப் பேராசிரியர் | | 08 | | |
| முதுநிலை விரிவுரையாளர் தரம் i | | 168 | | 157 |
| முதுநிலை விரிவுரையாளர் தரம் ii | | 197 | 09 | |
| விரிவுரையாளர் | | 29 | | |
| விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை) | | 118 | | |
| தற்காலிக விரிவுரையாளர் | | | 31 | |
| தற்காலிக உதவி விரிவுரையாளர்/பயிற்சிப் போதகர் /செயன்முறையாளர் / அறிவுறுத்துனர் | 348 | | 266 | 82 |
| நூலகர் | 01 | 01 | | |
| பிரதி நூலகர் | 01 | 01 | | |
| முதுநிலை உதவி நூலகர் தரம் i | 12 | 01 | | 01 |
| முதுநிலை உதவி நூலகர் தரம் ii | | 03 | | |
| உதவி நூலகர்கள் | | 07 | | |
| தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர் | 14 | | 05 | 09 |
| கல்விசார் பணிக்குழாம் பகுதிக் கூட்டுத்தொகை | 1193 | 633 | 311 | 249 |
| **நிர்வாக அதிகாரிகள்** | | | | |
| பதிவாளர் | 01 | 01 | | |
| பொருளாளர் | 01 | 01 | | |
| பிரதிப் பதிவாளர் | 19 | 06 | | |
| முதுநிலை உதவிப் பதிவாளர் | | 05 | | |
| உதவிப் பதிவாளர் | | 08 | | |
| பிரதிப் பொருளாளர் | 14 | 03 | | |
| முதுநிலை உதவிப் பொருளாளர் | | 06 | | |
| உதவிப் பொருளாளர் | | 05 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| பிரதி உள்ளக கணக்காய்வாளர் | 01 | 01 | - | - |
| முதுநிலை உதவிப் பதிவாளர் / சட்ட விவகாரம் | 01 | | 01 | |
| உதவிப் பதிவாளர் / நூலக சேவைகள் | 01 | | | 01 |
| நிர்வாகப் பணிக்குழாம் பகுதிக் கூட்டுத்தொகை | 38 | 36 | 01 | 01 |
| ஏனைய நிறைவேற்றுப் பணிக்குழாம் | | | | |
| IS முகாமையாளர் | 01 | 01 | | |
| பணிப்பாளர் / உடலியற் கல்வி | 01 | 01 | 01 | |
| திட்ட முகாமையாளர் | 01 | | | |
| பிரதம மார்ஷல் | 01 | | | |
| பிரதி பிரதம மார்ஷல் | 01 | | | 01 |
| பிரதம பாதுகாப்பு அதிகாரி | 01 | 01 | | 01 |
| வேலைகள் பொறியியலாளர் | 01 | 01 | | |
| தொழில் ஆலைப் பொறியியலாளர் | 02 | 01 | | 01 |
| பூங்கா பொறுப்பாளர் | 02 | 01 | | 01 |
| அரும்பொருட் காட்சிச்சாலை பொறுப்பாளர் | 02 | 02 | | |
| புள்ளி விபரவியல் அதிகாரி | 02 | | 01 | 02 |
| அந்தரங்கச் செயலாளர் | | | | |
| ஏனைய நிறைவேற்று பணிக்குழாம் பகுதியின் கூட்டுத் தொகை | 16 | 08 | 02 | 06 |
| மருத்துவ அதிகாரிகள் | | | | |
| முதுநிலை மருத்துவ அதிகாரி/மருத்துவ அதிகாரி | 06 | 02 | 01 | 03 |
| பல் மருத்துவர் | 01 | 01 | | |
| மருத்துவ அதிகாரிகள் பகுதியினரின் கூட்டுத்தொகை | 07 | 03 | 01 | 03 |
| கல்விசார் துணைப் பணிக்குழாம் | | | | |
| அறிவுறுத்துனர் (கணினி தொழில்நுட்பம் தரம் i) | 19 | 06 | | 04 |
| அறிவுறுத்துனர் (கணினி தொழில்நுட்பம் தரம் ii) | | 09 | | |
| உதவிப் புள்ளிவிபரவியலாளர் தரம் i | 01 | 01 | | |
| உதவி வலை அமைப்பு முகாமையாளர் | 06 | 01 | | 05 |
| சமூக வேலை அறிவுறுத்துனர் | 01 | 01 | | |
| தொழில் வழிகாட்டி ஆலோசகர்கள் | 04 | 02 | | 02 |
| நிரலர் சகிதம் அமைப்புப் பகுப்பாய்வாளர் தரம் ii | 03 | 02 | | 01 |
| முதுநிலை அறிவுறுத்துனர் – ஆங்கிலம் | 01 | 01 | | |
| அறிவுறுத்துனர் – ஆங்கிலம் | 21 | 03 | | 18 |
| அறிவுறுத்துனர் – உடலியற் கல்வி தரம் i | | 01 | | |
| அறிவுறுத்துனர் – உடலியல் கல்வி தரம் ii | 07 | 01 | 05 | |

| | | | | |
|---|---|---|---|---|
| அறிவுறுத்துனர் | 03 | 03 | | |
| உள்ளக விளையாட்டுக் கூட அறிவுறுத்துனர் | 02 | | | 02 |
| கணினி நிரலர் | 08 | 05 | 03 | |
| விஞ்ஞான உதவியாளர் – தரம் ii | 04 | 04 | | |
| கல்விசார் துணைப் பணிக்குழாம் பகுதிக் கூட்டுத் தொகை | 80 | 40 | 08 | 32 |
| **மொத்தம்** | **1334** | **720** | **323** | **291** |

## கல்விசாரா பணிக்குழாம் பற்றிய விபரங்கள் (எழுதுனர் / தொழில்நுட்ப /ஆரம்பத் தரங்கள்) - 2018

| தொடர் இலக்கம் | பதவி | அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலைப் பிரிவு Approved Cadre | 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் உண்மையாக இருந்த தொழில் நிலைப் பிரிவு | | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | ஒப்பந்தப்படி /ஒப்படைப்பு | |
| 1 | மாஷல் | 07 | 04 | | 03 |
| 2 | உதவி விடுதி மேற்பார்வையாளர் (முழு நேரம்) | 14 | 12 | 01 | 01 |
| 3 | பட்டதாரி மொழிபெயர்ப்பாளர் | 01 | 00 | | 01 |
| 4 | பிரதி பிரதம பாதுகாப்பு அதிகாரி | 01 | 00 | | 01 |
| 5 | விநியோக அதிகாரி | 01 | 01 | | 00 |
| 6 | வேலைகள் கண்காணிப்பாளர் | 03 | 00 | | 03 |
| 7 | வேலைகள் கண்காணிப்பாளர் (சிவில்) | 06 | 02 | | 04 |
| 8 | வேலைகள் கண்காணிப்பாளர் (மின்சாரம்) | 01 | 01 | | 00 |
| 9 | வேலைகள் கண்காணிப்பாளர் (நிலத்தோற்றம்) | 01 | 01 | | 00 |
| 10 | கணக்காய்வு உதவுனர் | 05 | 05 | | 00 |
| 11 | முகாமைத்துவ உதவுனர் | 299 | 298 | | 01 |
| 12 | முகாமைத்துவ உதவுனர் (கணக்கெழுத்து) | 08 | 08 | | 00 |
| 13 | முகாமைத்துவ உதவுனர் (சிராப்பர்) | 05 | 02 | | 03 |
| 14 | முகாமைத்துவ உதவுனர் (ஸ்டோர் கீப்பர்) | 08 | 05 | | 03 |
| 15 | தொலைபேசி இயக்குனர் மற்றும் வரவேற்பாளர் | 03 | 03 | | 00 |
| 16 | நூலகத் தகவல் உதவுனர் | 34 | 31 | | 03 |
| 17 | பாதுகாப்புப் பரிசோதகர் | 05 | 04 | | 01 |
| 18 | நீச்சல் தடாக மேற்பார்வையாளர் | 01 | 00 | | 01 |
| 19 | கைவினைச் செயன்முறையாளர் (இயந்திர) | 01 | 00 | | 01 |
| 20 | கைவினைச் செய்முறையாளர் (பொருத்துதல்) | 01 | 00 | | 01 |
| 21 | கைவினைச் செய்முறையாளர் (மின்சாரம்) | 01 | 00 | | 01 |
| 22 | வேலை மேற்பார்வையாளர் (சிவில்) | 05 | 03 | | 02 |
| 23 | வேலை மேற்பார்வையாளர் (மின்சாரம்) | 03 | 00 | | 03 |
| 24 | வேலை மேற்பார்வையாளர் (நிலத் தோற்றம்) | 01 | 01 | | 00 |
| 25 | கேட்டல் காணல் தொழில்நுட்ப அதிகாரி | 05 | 01 | | 04 |
| 26 | பல் மருத்துவ தாதி அதிகாரி | 01 | 01 | | 00 |
| 27 | உருவப்பட வரைஞர் | 04 | 01 | | 03 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 28 | தாதி அதிகாரி | 10 | 06 | 01 | 03 |
| 29 | மருந்தகக் கலைஞர் | 04 | 04 | | 00 |
| 30 | இயன் மருத்துவர் | 01 | 00 | | 01 |
| 31 | பொது சுகநலப் பரிசோதகர் | 02 | 02 | | 00 |
| 32 | தொழில்நுட்ப அதிகாரி | 121 | 107 | 06 | 08 |
| 33 | தொழில்நுட்ப அதிகாரி (ICT) | 21 | 00 | | 21 |
| 34 | தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) | 04 | 00 | | 04 |
| 35 | தொழில்நுட்ப அதிகாரி (மின்சாரம்) | 03 | 00 | | 03 |
| 36 | தொழில்நுட்ப அதிகாரி (இயந்திரம்) | 04 | 00 | | 04 |
| 37 | தொழில்நுட்ப அதிகாரி (X கதிர் / Dexa Scan) | 01 | 00 | | 01 |
| 38 | சாரதி | 41 | 41 | | 00 |
| 39 | நூல் கட்டுனர் | 02 | 02 | | 00 |
| 40 | மின் நிபுணர் | 09 | 09 | | 00 |
| 41 | தச்சர் / மர வேலை செய்பவர் | 08 | 06 | | 02 |
| 42 | பொருத்துனர் | 01 | 00 | | 01 |
| 43 | இயந்திர இயக்குநர் | 01 | 00 | | 01 |
| 44 | கொத்தன் | 08 | 07 | | 01 |
| 45 | இயந்திர வினைஞர் | 01 | 00 | 01 | 00 |
| 46 | நீர்க்குழாய் பொருத்துனர் | 08 | 06 | | 02 |
| 47 | அலுமினியம் நிர்மாணிப்பவர் | 01 | 00 | | 01 |
| 48 | ஒட்டு வேலையர் / பற்ற வைப்பார் | 01 | 00 | | 01 |
| 49 | பற்ற வைப்பவர் | 02 | 01 | | 01 |
| 50 | டிரக்டர் இயக்குனர் | 01 | 01 | | 00 |
| 51 | இரு சக்கர டிரக்டர் இயக்குனர் | 01 | 01 | | 00 |
| 52 | முச்சக்கர வண்டி ஓட்டுனர் | 01 | 01 | | 00 |
| 53 | ஆவி இயந்திர சாதன இயக்குனர் | 01 | 00 | | 01 |
| 54 | ஆய்வுகூட ஊழியர் | 102 | 97 | 00 | 05 |
| 55 | ஆய்வுகூட ஊழியர் (வரைதல்) | 01 | 00 | | 01 |
| 56 | ஊழியர் – சுகநல சேவை | 02 | 01 | | 01 |
| 57 | உள்ளக விளையாட்டுக்கூட ஊழியர் | 02 | 00 | | 02 |
| 58 | கடைசல் இயந்திர இயக்குனர் | 01 | 00 | | 01 |
| 59 | வர்ணம் பூசுபவர் (Painter) | 03 | 02 | | 01 |
| 60 | மெருகேற்றுனர் (Polisher) | 02 | 02 | | 00 |
| 61 | நீர்வாங்கு குழாய் இயக்குனர் (Pump Operater) | 01 | 01 | | 00 |
| 62 | இயந்திர நீர்வாங்கு குழாய் இயக்குனர் | 01 | 01 | | 00 |
| 63 | மாதிரி சேகரிப்பவர் | 02 | 00 | | 02 |
| 64 | பணி கவனிப்பாளர் | 02 | 01 | | 01 |
| 65 | துவிச்சக்கர வண்டிச் சேவகர் | 01 | 00 | | 01 |
| 66 | தோட்டப் பணியாள் | 02 | 02 | | 00 |
| 67 | விளையாட்டுத்திடல் பாதுகாவலர் | 01 | 01 | | 00 |
| 68 | சுகநல சேவைத் தொழிலாளி | 18 | 13 | | 05 |
| 69 | வேலை உதவுனர் | | 220 | | |
| 70 | மரணப் பின்னாய்வுத் தொழிலாளி) | 221 | 01 | | 00 |
| 71 | அலுவலக இயந்திர இயக்குனர் | 08 | 08 | | 00 |
| 72 | நூலக ஊழியர் | 24 | 13 | 05 | 06 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 73 | லொறி சுத்திகரிப்பாளர் | 02 | 02 | | 00 |
| 74 | Lowan Mower இயக்குனர் | 01 | 00 | | 01 |
| 75 | பாதுகாப்புக் காவலர் | 88 | 60 | | 28 |
| 76 | களஞ்சியசாலை ஊழியர் | 02 | 01 | | 01 |
| 77 | நீச்சல் தடாக ஊழியர் | 02 | 02 | | 00 |
| | **மொத்தம்** | **1172** | **1006** | **14** | **152** |

# ஆய்வுப் பேரவை (RC)

**அறிமுகம்**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வுப் பேரவை (RC - USJP) உயர் தர ஆய்வுகளை மேற்கொள்ளுதல், தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் தோற்றுவிக்கப்படும் அறிவைப் பரப்புவதனை ஊக்குவித்தல் மற்றும் தேசிய அபிவிருத்திக்கு குறிப்பிடதக்களவில் பங்காற்றுதல் போன்றவற்றுக்கு உதவும் பரந்த நோக்குடன் 2016 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இந்த ஆய்வுப் பேரவையின் (RC - USJP) செயற்பாடுகள் பல்கலைக்கழக கல்விமான்களையும் நிறைவேற்று அதிகாரிகளையும், மாணவர்களையும் உயர்தர ஆய்வுகளில் ஈடுபடத் தூண்டுவதனை இலக்காகக் கொண்டுள்ளது. ஆய்வுப் பேரவையானது தனது நோக்கங்களை கீழ்க் கட்டமைப்பு அபிவிருத்திக்கு உதவுதல், ஆய்வுகளுக்கான நிதியைக் கிடைக்கப் பெறச் செய்தல், அறிவைப் பரப்புவதற்கு உதவுதல் மற்றும் பல்கலைக்கழகத்தில் ஆய்வுக் கலாசாரம் ஒன்றை அபிவிருத்தி செய்வதனை ஊக்குவிக்கும் வகையில் தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவித்தல் என்பவற்றூடாக அடைவதனை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், இந்த ஆய்வுப் பேரவையானது ஆராய்ச்சி விருது வழங்கும் முறையின் மூலம் ஆய்வாளர்களின் செயற்பாடுகளை அங்கீகரித்து சன்மானங்களை வழங்குவதன் ஊடாக ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் நோக்கினைக் கொண்டுள்ளது.

**பணிக் குறிக்கோள்**

தற்கால மற்றும் எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வுக்காக ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிச் சமூகத்தின் மூலம் தேசிய மற்றும் சர்வதேச தரப்பினர்களுக்கு இடையில் நீடித்து நிலைக்கும் கூட்டுப்பங்காண்மையைத் தாபிக்கும் அதே வேளை சூழல், சமூக மற்றும் பொருளாதார மூல தளங்களில் பண்புத் தரங்களை மேம்படுத்துவதற்குத் தேசிய மற்றும் நீடித்து நிலைக்கும் கூட்டுப் பங்காண்மையை போஷித்து, மேன்மை பொருந்தியதும் வெற்றிகரமாக அமைந்ததுமான ஆராய்ச்சிகளையும் அபிவிருத்தியையும் அடிப்படையாகக் கொண்ட விருத்தியை அடையப் பெறக் கூடிய சுற்றுச் சூழலை நிர்மாணம் செய்வதற்கான வாய்ப்பு வசதிகளை வழங்குவதன் ஊடாக நிதி மற்றும் கீழ்க்கட்டமைப்பு வசதிகளுக்கான செல்வழியினைப் பரவலாக்கி ஆராய்ச்சிகளையும் அபிவிருத்தியையும் ஆதரித்துப் பேணுதல்.

**குறிக்கோள்கள்**

1. தேசிய மற்றும் பூகோளத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுகின்ற தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வுகளை மேம்படுத்தல்.

2. பல்கலைக்கழகத்தில் நடைமுறைப்படுத்தக் கூடிய ஓர் ஆய்வுக் கலாசாரத்தைப் பேணி வளர்த்தல்.

3. ஆய்வினில் சுயமாக நிலைத்திருக்கக் கூடிய முதன்மை நிலை மையத்தைத் தாபித்தல்.

4. தரமான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் கூட்டாக உழைத்துச் செயற்படுவதற்கும் ஆய்வாளர்களுக்கு உதவுதல்.

5. ஆய்வாளர்களின் தேர்ச்சிகளை மேம்படுத்தல்.

6. ஆய்வுச் செயன்முறையைச் சுலபமாக்குதல்.

7. தமது அறிவை தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகப் பரவலாக்குவதில் ஆய்வாளர்களுக்கு உதவுதல்.

8. கைத்தொழில் தொடர்புகளை மேம்படுத்துதல் மற்றும் ஆய்வு அறிவுரைகளை ஊக்குவித்தல்.

9. மாணவர்களின் உயர் தரமான ஆய்வுகளை ஊக்குவித்தல்.

10. ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக ஆய்வுப் பேரவையில் உறுப்புரிமை பெற்றுள்ள நிறுவனங்களின் தாக்க கரமான ஆய்வினை மேம்படுத்துதல்.

11. ஆய்வுப் பேரவையின் ஆய்வுகள் மற்றும் நிர்வாகம் என்பவற்றில் அக்கறை கொண்டுள்ள ஏனைய நிறுவனங்களுடன் இணைப்பினை ஏற்படுத்திப் பேணுதல்.

**ஆய்வுப் பேரவையின் உத்தியோகத்தர்கள்**

நிறைவேற்றுத் தலைவர் : துணை வேந்தர், முதுநிலைப் பேராசிரியர் சம்பத் அமரதுங்க

இணைத் தலைவர்கள் : முதுநிலைப் பேராசிரியர். பத்மலால் மானகே
பேராசிரியர். பிரதீபா ஜயவர்தன

பொதுச் செயலாளர் (ஆய்வு நிலையங்களின் முகாமைத்துவச் சபை) : கலாநிதி. A. R. அஜ்வாத்

ஆலோசகர் சபை (பீடங்களின் பீடாதிபதிகள்) :

கலாநிதி. D. P. S. சந்ரகுமார – பீடாதிபதி, மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
முதுநிலைப் பேராசிரியர் லலித் கருணாநாயக்க– பீடாதிபதி, பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்

கலாநிதி. U. அனுர குமார – பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம்

பேராசிரியர். சுரங்கி யசவர்தன – பீடாதிபதி, மருத்துவ விஞ்ஞான பீடம்

முதுநிலைப் பேராசிரியர். M. M. பத்மலால் – பீடாதிபதி, பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடம்

முதுநிலைப் பேராசிரியர். சுதந்த லியனகே – பீடாதிபதி, தொழில்நுட்ப பீடம்

கலாநிதி. S. A. A. M. சுபசிங்ஹ – பீடாதிபதி, பொறியியல் பீடம்

பேராசிரியர். D. M. S. பர்னாந்து – பீடாதிபதி, இணைந்த சுகநல விஞ்ஞான பீடம்

**பீடங்களின் பிரதிநிதிகள்**

முதுநிலைப் பேராசிரியர். S. S. N. பர்னாந்து – பிரதிநிதி, மருத்துவ விஞ்ஞான பீடம்

முதுநிலைப் பேராசிரியர். R. L. S. பர்னாந்து – பிரதிநிதி, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம்

பேராசிரியர். சாமலி நாஹல்லகே – பிரதிநிதி, மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

பேராசிரியர். D. S. R. சமரசிங்ஹ – பிரதிநிதி, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம்

கலாநிதி. M. G. C. பதுமதாச – பிரதிநிதி பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்

கலாநிதி. A. R. அஜ்வாத் – பிரதிநிதி, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம்

| | | |
|---|---|---|
| கலாநிதி. K. M. C. கொன்தசிங்ஹ | – | பிரதிநிதி, பொறியியல் பீடம் |
| கலாநிதி சுஜீவ ஹெட்டி ஆராச்சி | – | பிரதிநிதி, மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் |
| கலாநிதி. A. A. L. நில்மினி லியனகே | – | பிரதிநிதி, தொழில்நுட்பப் பீடம் |
| பேராசிரியர். K. R. D. de சில்வா | – | பணிப்பாளர், உலகப் படித்தரப் பல்கலைக்கழக திட்டம் |
| கலாநிதி. R. B. மாரசிங்ஹ | – | பணிப்பாளர், பணிக்குழாம் அபிவிருத்தி நிலையம் |
| முதுநிலைப் பேராசிரியர். P. P. M. ஜயவீர | – | அழைப்பின் பேரில் |
| பதிவாளர் | – | K. G. பிரிட்டோ |
| நூலகர் | – | கலாநிதி. W. A. N. D. விஜேசுந்தர |
| பொருளாளர் | – | திருமதி. K. T. C. பிரியங்கனி |

## வழங்கப்பட்ட பல்கலைக்கழக ஆய்வு நிதி உதவிகளின் எண்ணிக்கை (2015 - 2018)

| பீடம் | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 05 | 10 | 08 | 12 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 16 | 31 | 32 | 36 |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | 13 | 04 | 10 | 07 |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | 21 | 33 | 26 | 18 |
| தொழில்நுட்பப் பீடம் | | | 06 | 01 |
| பொறியியல் பீடம் | | | 01 | |
| **மொத்தம்** | **55** | **78** | **84** | **74** |

## பல்கலைக்கழக ஆய்வு நிதி உதவிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி (2015 - 2018 மில்லியன் ரூபாய்களில்)

| பீடம் | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 7.24 | 19.5 | 13.67 | 17.37 |
| பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் | 20.07 | 63.22 | 78.29 | 83.89 |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | 8.92 | 3.23 | 9.06 | 3.33 |
| மருத்துவ விஞ்ஞானங்கள் பீடம் | 24.95 | 45.53 | 40.63 | 47.03 |
| தொழில்நுட்பப் பீடம் | | | 19.21 | 1.49 |
| பொறியியல் பீடம் | | | 2.14 | |
| **மொத்தம்** | **69.18** | **131.49** | **163** | **153.11** |

## பல்கலைக்கழக ஆய்வு நிதி உதவிகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை வெளியீடுகள்

| பீடம் | 2015 நிதியுதவி | 2016 நிதியுதவி | 2017 நிதியுதவி | 2018 நிதியுதவி |
|---|---|---|---|---|
| குறைந்தது ஒரு Indexed பருவ ஆய்வு இதழ் வெளியீடாவது (முழுக் கட்டுரை) மற்றும் அல்லது ஆக்க உரிமை | 04 | 12 | 17 | 22 |
| குறைந்தது ஏதேனும் ஒரு Indexed பருவ ஆய்வு இதழ் வெளியீடாவது ( முழுக் கட்டுரை) அல்லது இரண்டு வெளியீடுகள் (முழு கட்டுரை) ஒத்ததான மீளாய்வு | 17 | 32 | 19 | 24 |
| குறைந்தது ஒத்ததான மீளாய்வு பருவ ஆய்வு இதழில் ஓர் வெளியீடாவது ( முழுக் கட்டுரை ) அல்லது இரண்டு ஆய்வுக் கலந்தாய்வு மாநாட்டு முன்னெடுப்புக்கள் | 34 | 34 | 48 | 28 |
| **மொத்தம்** | **55** | **78** | **84** | **74** |
| வெளியிடப்படும் ஆண்டு | 2018 | 2019 | 2020 | 2021 |

## வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயண நிதி உதவிகள் (OTG) - 2018

| பீடம் | நிதி உதவிகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை | தொடர்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 04 | 1,000,000.00 | 03 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 07 | 1,252,182.62 | 08 |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | 28 | 6,679,150.00 | 31 |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | 10 | 2,477,168.00 | 13 |
| தொழில்நுட்பப் பீடம் | 02 | 500,000.00 | 02 |
| நூலகம் | 01 | 250,000.00 | 01 |
| **மொத்தம்** | **52** | **12,158,500.00** | **58** |

## திறந்த நுழைவுக் கட்டணங்களுக்கான கொடுப்பனவுகள் 2016 - 2018

| பீடம் | 2016 | | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|
| | நிதி உதவிகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை $ | நிதி உதவிகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை $ | நிதி உதவிகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை $ |
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | - | - | - | - | 02 | 500.00 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 03 | 940.00 | 03 | 970.00 | 17 | 5274.00 |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | 03 | 850.00 | 01 | 300.00 | 04 | 927.70 |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | 03 | 1350.00 | 01 | 499.00 | 05 | 1862.99 |
| **மொத்தம்** | **09** | **3140.00** | **05** | **1769.00** | **28** | **8565.03** |

## மொழித் தொகுப்புக் (Editing) கட்டணங்கள் (2016 - 2018)

| பீடம் | 2016 | | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|
| | நிதி உதவிகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை $ | நிதி உதவிகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை $ | நிதி உதவிகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை $ |
| மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | - | - | - | - | - | - |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 02 | 500.00 | - | - | 01 | 285.00 |
| முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | - | - | - | - | 01 | 109.45 |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | - | - | - | - | - | - |
| **மொத்தம்** | **02** | **500.00** | **-** | **-** | **02** | **394.45** |

## ஆய்வு நிலையங்கள் (Research Centres)

தற்போது ஆய்வுப் பேரவையின் (RC) கீழ் இருபத்து ஒரு (21) ஆய்வு நிலையங்கள் செயற்படுகின்றன. இந்த ஆய்வு நிலையங்கள் பலமான ஆய்வுப் பின்னணிகளை உடைய ஈடுபாடும் ஆர்வமும் உள்ள கல்விமான்களால் அந்தந்த பீடங்களில் தாபிக்கப்பட்டிருப்பனவாகும். ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வுப் பேரவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் மேற்குறிப்பிட்ட அனைத்து ஆய்வு நிலையங்களும், ஒன்று கூடுவதற்கும் ஒத்துழைப்புக்குமான ஒரு பொதுவான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் புத்தாக்க மேடையை உருவாக்கும் நோக்கில், ஆய்வுப் பேரவையின் நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்பட்டனவாகும்.

**ஆய்வு நிலையங்களின் விபரம் பின்வருமாறு :**

| | ஆய்வு நிலையம் | பணிப்பாளர் |
|---|---|---|
| 1 | நீரின் தரம் மற்றும் பாசி வகை ஆய்வு நிலையம் | முதுநிலைப் பேராசிரியர். M. M. பத்மலால் |
| 2 | சிறுநீரக ஆய்வு நிலையம் (CKD – ஆய்வு) | பேராசிரியர். J. K. P. வனிக சூரிய |
| 3 | டெங்கி ஆய்வு நிலையம் (CDR) | பேராசிரியர். G. N. மாலவிகே |
| 4 | உயிர்தொழில்நுட்பம் மற்றும் நரம்பு விஞ்ஞானப் புத்தாக்கத்துக்கான துறையிடை நிலையம் | பேராசிரியர். ரனில் டி சில்வா |
| 5 | பல்துறையிடை ஆய்வு நிலையம் | பேராசிரியர். C. A. D. நாஹல்லகமே |
| 6 | முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல் ஆய்வு நிலையம் | பேராசிரியர். Y. K. வீரகோன் பண்டா |
| 7 | புற்றுநோய் ஆய்வு நிலையம் | கலாநிதி. M. B. S. செனவிரத்ன |
| 8 | உயர் மூலப்பொருள் கூறுகள் ஆராய்ச்சி நிலையம் | கலாநிதி.K. M. T. D. குணசேகர |
| 9 | உயிர்தொழில்நுட்ப ஆய்வு நிலையம் | பேராசிரியர். B. G. D. N. K. de சில்வா |
| 10 | வன மற்றும் சுற்றாடல் ஆய்வு நிலையம் | கலாநிதி. S. M. C. U. P. சுபசிங்ஹ |
| 11 | மனித உருப்பொறி மற்றும் கூர்மதி முறைமைக்கான புத்தாக்க ஆய்வு நிலையம் (EMVRPC) | கலாநிதி. P ரவீந்திர S. de. சில்வா |
| 12 | ஆப்பிள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி ஆய்வு நிலையம் | பேராசிரியர். R. G. N. மீகம |
| 13 | ஆரம்பக் காப்பு மற்றும் ஒவ்வாமை ஆய்வுக்கான தேசிய நியமனம் | கலாநிதி. J. M. K. C. ஜீவந்தர |
| 14 | சொத்து முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டு நிலையம், ஆய்வு மற்றும் தொழில் வாண்மை அபிவிருத்தி நிலையம் | கலாநிதி. N. C. விக்ரமாராச்சி |
| 15 | ஆட்சி மற்றும் பொதுக் கொள்கைக்கான நிலையம் | முதுநிலைப் பேராசிரியர் R. L. S. பர்னாந்து |
| 16 | தாவர மூலக்கூறுகள் மற்றும் பூண்டு உற்பத்திகள் ஆய்வு நிலையம் | கலாநிதி. M.G.C. பதுமதாச |
| 17 | Centre for Ecosphere Resileince Research | கலாநிதி M. S. விதானகே |
| 18 | பகிர்ந்து கொள்ளத் தகாத நோய்கள் ஆய்வு நிலையம் | பேராசிரியர் ஷாமினி பிரதாபன் |
| 19 | Centre for mindfulness - based Research and Practices | கலாநிதி சனத் மஹவிதானகே |
| 20 | உயர் சட்ட மருத்துவ ஆய்வு நிலையம் | பேராசிரியர் முதிதா விதானபத்திரன |
| 21 | கடல்சார் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய ஆய்வு நிலையம் (CMST) | கலாநிதி R. R. M. K. P ரனதுங்க |

# ஆய்வு விருதுகள் 2017

சன்மானங்களின் அட்டவணை – ஆய்வு விருதுகள் வழங்கும் வைபவம் 2017

| வகைகள் | பரிசில்கள் |
|---|---|
| 1 | உள்நாட்டு / வெளிநாட்டுக் கலந்துரையாடல் மாநாட்டு முன்னெடுப்புக்களில் அல்லது கருத்தரங்குகளில் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வுச் சுருக்கம் (abstract) |
| 2 | உள்நாட்டு / வெளிநாட்டு கலந்துரையாடல் மாநாட்டு முன்னெடுப்புக்களில் வெளியிடப்பட்ட ஒரு முழுமையான கட்டுரை |
| 3 | பல்கலைக்கழக ஒன்றில் வெளியிடப்பட்ட ஒரு முழுமையான கட்டுரை (புதியது) |
| 4 | மதிப்பீட்டுக்குட்பட்ட பருவ ஆய்வு இதழில் வெளியிடப்பட்ட ஒரு முழுமையான கட்டுரை |
| 5 | ஏதேனும் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒரு முழுமையான கட்டுரை ( கிழே 6 ஆம் வகையில் குறிப்பிடப்படாத ஏதேனும் சேவை) |
| 6 | SCII இல் Indexed பண்ணிப்பட்ட மதிப்பீட்டுக்குட்பட்ட பருவ ஆய்வு இதழில் வெளியிடப்பட்ட முழுமையான கட்டுரை. அங்கீகரிக்கப்பட்ட Indexed பருவ ஆய்வு இதழ்கள் http://www.isinet.com/journels என்பதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :<br>a. Science Citation Indexed Expanded (™) (Web of Science)<br>b. Social Sciences Citation Index Ⓡ (Web Of Science)<br>c. Arts and Humanities Citation Index (Web Of Science)<br>d. Scopus Journals<br>e. Cabell's International |
| 7 | 2017 ஆம் ஆண்டுக்கான உயர்ந்த Citation களைப் பெற்ற ஆய்வுகள்<br>– வகை 7க்குரிய பரிசில்களுக்காக கவனத்தில் எடுப்பதற்கு ஆய்வாளர் 5h index ஐ அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையைப் பெற்று இருத்தல் வேண்டும்.<br>– ஒவ்வொரு பீடத்துக்கும் மூன்று பரிசில்கள் வழங்கப்படும்.<br>– 1 ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்கள் 2016 ஆம் ஆண்டிலிருந்து மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மட்டுமே ஒரே விண்ணப்பதாரிக்க வழங்கப்படும். |
| 8 | 2017 ஆம் ஆண்டுக்கான உயர்ந்த h - index ஐப் பெற்ற ஆய்வுகள்<br>– வகை 8 க்குரிய பரிசில்களை வழங்குவதற்காக கவனத்தில் எடுக்கப்படுவதற்கு ஆய்வாளர் 5 அல்லது அதற்கு மேற்பட்ட h - index ஐப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>– ஒவ்வொரு பீடத்துக்கும் மூன்று பரிசில்கள். |

| | |
|---|---|
| | – 1 ஆம், 2 ஆம் 3 ஆம் இடங்கள் 2016 ஆம் ஆண்டிலிருந்து மூன்று வருடங்களக்கு ஒரு முறையே ஒரே விண்ணப்பதாரிக்கு வழங்கப்படும். |
| 9 | உயர்ந்த citation விளைவைப் பெற்ற ஆய்வாளர் ( 2017, 2016 மற்றும் 2015 ஆண்டுகளுக்கான Citations களின் அடிப்படையில்)<br>– ஒவ்வொரு பீடத்துக்கும் ஒரு பரிசில் |
| 10 | குறிப்பிட்ட ஆண்டுக்காக உயர்ந்த ஒன்றுதிரண்ட citation களைப் பெற்ற துறைகள்<br>– ஒவ்வொரு பீடத்துக்கும் மூன்று பரிசில்கள் |
| 11 | முன்னைய வாழ்க்கைப் பணி (Early Career) ஆய்வாளர் பரிசு<br>– 5 அல்லது 5 இற்கு மேற்பட்ட h - Index ஐப் பெற்றிருக்க வேண்டும்.<br>– முதுநிலை விரிவுரையாளர் தரம் iii<br>– ஆய்வுப் பரிசில் விண்ணப்பத்துக்கான இறுதி திகதியாகும் போது ஆய்வாளர் 40 வயதை விடக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.<br>– வெளியிடப்பட்ட கட்டுரையின் தனி ஒத்த ஆசிரியர்<br>– ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ஒத்த ஆசிரியர் இணைவை உடையதாக இருத்தல் வேண்டும்.<br>– Indexed பருவ ஆய்வு இதழ்களில் முழுமையான கட்டுரைகள் வெளியிட்டமைக்காக உயர்ந்த ஒன்று திரண்ட விளைவுக் காரணியைப் பெற்றுள்ள விண்ணப் பாதாரிகளுக்கு பரிசில் வழங்கப்படும். (SCI/ SSCI/ AHCI)<br>– ஆய்வுக் கட்டுரையில் பல்கலைக்கழக மின் அஞ்சல் முகவரி குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும். |
| 12 | துணை வேந்தரின் பரிசு (CVCD) வழிகாட்டல்களை பின்பற்றவும்.<br>– விண்ணப்பதாரி கடந்த ஐந்து வருடங்களாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நிரந்தர சேவையில் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>– பீட உறுப்பினர் ஒவ்வொரு ஐந்து வருடத்துக்கும் ஒரு முறையை விட பரிசிலை பெற முடியாது. |
| 13 | பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்ட பருவ ஆய்வு இதழ்கள் (புதியவை) |
| 14 | பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்ட மாநாட்டு கலந்துரையாடல் முன்னெடுப்புக்கள் (புதியவை) |
| 15 | வெளிவாரி ஆய்வு நிதி உதவிகளைப் பெற்றுக்கொண்ட ஆய்வாளர்கள் (பீட ரீதியாக) |
| 16 | தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர் (ஆய்வாளர் 10 அல்லது அதற்கு மேற்பட்ட h - index ஐப் பெற்றிருத்தல்.) |




## உள்ளக தர உறுதி பேணுகை அலகு(IQAU)

ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் பகிரங்க நிறுவனம் ஒன்று என்ற வகையில் தனது தரத்தையும் தர மதிப்பீட்டையும் பேணுவது அதன் பொறுப்பாகும். ஒரு பல்கலைக்கழகமானது தனது சன்மானங்களின் தர மதிப்பீடு, தனது கல்வி மற்றும் அறிவு உருவாக்கம் என்பவற்றின் தரம் ஆகியவற்றை நம்பகத் தன்மை பொருந்தியதாகவும், நிச்சயத்தன்மை வாய்ந்ததாகவும் பேண முடியுமாக இருத்தலே தர உறுதி பேணுகை என்பதன் பொருளாகும்.

பல்கலைக்கழகத்தின் உள்ளக தர உறுதி பேணுகை அலகின் (IQAU) பொறுப்பு என்னவெனில் தர உறுதி பேணுகை மற்றும் மதிப்பேற்றுப் பேரவையின் (QAAC) வழிகாட்டல்களுக்கு ஏற்ப தர உறுதி பேணுகைச் செயற்பாடுகளை மேற்கொள்வதும் அச்செயற்பாடுகளை இணைத்து வைப்பதுமாகும். பல்கலைக்கழகத்தில் எதிர்பார்க்கப்படும் தர உறுதி பேணுகையின் தர மதிப்பீட்டைப் பேணுதல் ஒரு பாரிய பணியாக இருப்பினும் பல்கலைக்கழகத்தின் உள்ளக தர உறுதி பேணுகை அலகின் பணிப்பாளரான பேராசிரியர். சமன்தி சேனாரத்ன உள்ளக தர உறுதி பேணுகை அலகோடு தொடர்பான கல்விசார் மற்றும் நிர்வாகப் பணிகளை நிறைவேற்றுவதற்காக பகுதி நேர அடிப்படையில் கருமம் ஆற்றிக் கொண்டிருக்கின்றார்.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்ளக தர உறுதி பேணுகை அலகு மேற்கொண்ட செயற்பாடுகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1. நிறுவனம் சார் மீளாய்வு (Institutional Review)

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிறுவனம் சார் மீளாய்வின் (IR) ஸ்தல பார்வையிடுதல் பணியானது ஓர் ஐவர் உறுப்பினர் குழுவினால், 2017 ஜுலை 13 ஆம் திகதியில் இருந்து 17 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. அந்தக் குழுவினர் 2018 ஜனவரி 13 ஆம் திகதி தமது முன் வரைபு மீளாய்வு அறிக்கையை, மொத்தப் புள்ளிகள் 73.2 மற்றும் B தரம் என்பவற்றுடன் அனுப்பி வைத்தனர். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் தரம் B யை விடக் கூடுதலான புள்ளியை பெற்றிருக்க முடியும் என்று பலமாக உணர்ந்தமையால் உள்ளக தர உறுதி பேணுகை அலகானது மீளாய்வாளர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துரைகளுக்கான தமது துலங்கல்களை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கையைத் தயாரித்து 2018 ஜனவரி 30 ஆம் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவின் தலைவருக்கு மின் அஞ்சல் ஒன்றின் மூலம் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையின் வன் (Hard Copy) பிரதி ஒன்றும் 2018 பெப்ரவரி 01 ஆம் திகதியன்று அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

#### i. தரமதிப்பீட்டு முறையிலான புள்ளிகள் வேண்டப்படுதல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும், மீளாய்வாளர்களுக்குமான துலங்கல்களுடன் 145 தரமதிப்பீட்டு முறையிலான சகல புள்ளிகளையும் உள்ளடக்கிய நிறுவனம் சார் மீளாய்வின் (IR) முன்வரைபு மீளாய்வு அறிக்கையைப் புள்ளியிடும் துளையிடப்பட்ட தாளைக் தருமாறு வேண்டி கடிதம் ஒன்று

சமர்ப்பிக்கப்பட்டது. 2018 பெப்ரவரி 20 ஆம் திகதி நடைபெற்ற தர உறுதி பேணுகை நிலையியற் குழுவின் (QASC) 87 ஆவது கூட்டத்தில் தர மதிப்பீடுகளுக்கான 145 புள்ளிகளை வழங்குவதற்கு உடன்பாடு மேற்கொள்ளப்பட்டது. மீண்டும் 2018 ஏப்ரல் 04 ஆம் திகதி நடைபெற்ற 8 ஆவது தர உறுதி பேணுகை நிலையியற் குழுக் கூட்டத்தில் தர மதிப்பீட்டு முறையிலான புள்ளிகள் மற்றும் மீளாய்வுக் குழுவுடனான ஒரு கலந்துரையாடலையும் வழங்குவதற்கு உடன்பாடு மேற்கொள்ளப்பட்டது.

2018 ஏப்ரல் 17 ஆம் திகதி தர உறுதி பேணுகை மற்றும் மதிபேற்றுப் பேரவையின் (QAAC) பணிப்பாளர், மீளாய்வுக் குழுவுடனான கலந்துரையாடல் ஒன்றை வேண்டி பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் ஒரு கோரிக்கையை முன்வைப்பது அவசியமாகும் என்று குறிப்பிட்டு ஒரு மின் அஞ்சலை உள்ளக தர உறுதி பேணுகை அலகின் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தார். இருப்பினும் மீளாய்வுக் குழுவுக்கும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உயர் அதிகாரிகளுக்குமிடையிலான ஒரு சந்திப்பினை வேண்டி, துணை வேந்தர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு ஒரு கடிதத்தை 2018 ஏப்ரல் 23 ஆம் திகதி அனுப்பி வைத்தார்.

2018 மே 08 ஆம் திகதி தர உறுதி பேணுகை மற்றும் மதிப்பேற்றுப் பேரவையின் (QAAC) பணிப்பாளர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் 2018 மே 18 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஒரு மின் அஞ்சலின் ஊடாக அறிவித்தார். துணை வேந்தர் அதே தினத்தத்தன்று இந்தக் சந்திப்பைப் பற்றி கலந்துரையாடுவதற்கு ஒரு கூட்டத்தை கூட்டினார். அங்கு 2018 மே 18 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட வேண்டிய விடயங்களைத் தொகுப்பதற்காக மீண்டும் 2018 மே 15 ஆம் திகதியன்று சந்திக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. தர உறுதி பேணுகை மற்றும் மதிப்பேற்றுப் பேரவையின் பணிப்பாளர் மீளாய்வுக் குழுவுடனான கூட்டத்தில் கலந்துரையாடப்பட வேண்டிய பரப்புகளைக் குறிப்பிட்டு 2018 மே 15 ஆம் திகதி பிற்பகல் 8.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் ஒரு கடிதத்தை அனுப்புமாறு வேண்டி 2018 மே 10 ஆம் திகதியன்று மீண்டும் ஒரு மின் அஞ்சலை அனுப்பினார்.

துணை வேந்தர் 2018 மே 15 ஆம் திகதி பிற்பகல் 6.30 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மீளாய்வுக் குழுவின் நிறுவனம் சார் மீளாய்வு அறிக்கை முன் வரைபில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துரைகளுக்கான துலங்கல்களில் மீளாய்வுக் குழு உடன்பட முடியாத அல்லது கரிசனை கொள்ளும் பகுதிகள் மற்றும் எந்தத் தர மதிப்பீடுகளுக்கு ஒன்று அல்லது இரண்டு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன என்ற விடயங்கள் மீது கவனம் செலுத்த விரும்புகிறது எனக் குறிப்பிட்டு, ஒரு கடிதத்தை அனுப்பி வைத்தார்.

ii. மீளாய்வுக் குழுவுடனான கலந்துரையாடல்

மீளாய்வு அறிக்கை தொடர்பாக மீளாய்வுக் குழுவுடன் கலந்துரையாட வேண்டும் என்ற கோரிக்கயை பல முறை மீண்டும் மீண்டும் முன்வைக்கப்பட்டதன் பின்னர், 2018 மே 18 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை மீளாய்வுக் குழுவுடன் கலந்துரையாடல் ஒன்றுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வருமாறு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக உயர் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்தது. அந்தக் கலந்துரையாடல் நிறுவனம் சார் மீளாய்வுக் கையேட்டினைத் தயாரித்தவர்களுள் ஒருவரான பேராசிரியர். USJP மற்றும் QAAC ஆகிய இரண்டு நிறுவனங்களினாலும் ஒப்பதிவு செய்யப்பட்ட உமா குமாரசுவாமியினால் தலைமை தாங்கப்பட்டது. கூட்டம் பூராவும் இடம்பெற்ற முன்னெடுப்புக்கள் அனைத்தும் USJP மற்றும் QAAC ஆகிய இரண்டு நிறுவனங்களினாலும் ஒலிப்பதிவு செய்யப்பட்டன. எவ்வாறாயினும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நலன்களின் பிரகாரம், பொருள் பொதிந்த கலந்துரையாடல் இடம்பெறாமையால் அந்தக் கூட்டம் வெற்றிகரமானதாக அமையவில்லை.

அந்தக் கலந்துரையாடல் நடந்து முடிந்ததன் பின்னர், மீளாய்வுக் குழவுடன் நடைபெற்ற கூட்டத்தின் விளைவுகள் மற்றும் நிறுவனம்சார் அறிக்கையின் விளைவுகள் தொடர்பாக தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆகிய விடயங்களைக் கலந்துரையாடுவதற்காக பல்கலைக்கழகத் துணை வேந்தர் விசேட கூட்டம் ஒன்றைக் கூட்டினார். அந்தக் கூட்டத்தில் பின்வரும் விடயங்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்

தலைவர் தமது கவனத்தைச் செலுத்துமாறு வேண்டி கடிதம் ஒன்றை வரைய வேண்டும் என்று தீர்மானிகப்கப்பட்டது.

1. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகமானது 2018 ஜனவரி 11 ஆம் திகதி கிடைக்கப் பெற்ற மீளாய்வுக் குழுவின் நிறுவனம் சார் முன் வரைபு அறிக்கையை ஏற்றுக் கொள்வது இல்லை.

2. 2018 ஜனவரி 30 ஆம் திகதி அனுப்பப்பட்ட "நிறுவனம் சார் மீளாய்வு முன்வரைபு அறிக்கையில் மீளாய்வு குழு முன்வைத்த கருத்துரைகளுக்கான துலங்கல்களில்" உடன்படாமைக்கான காரணங்கள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

3. தொடர்ச்சியான பல வேண்டுகோள்களை விடுத்ததன் பின்னர் மீளாய்வுக் குழுவுடனான சந்திப்புக்கான தினம் குறிக்கப்பட்டு சரியாக ஒரு வாரத்துக்கு முன்னரே 2018 மே 10 ஆம் திகதி அன்றே நிறுவனம்சார் அறிக்கையில் இடம்பெற்ற அனைத்துத் தர மதிப்பிடுகள் பற்றிய புள்ளி அட்டை கிடைக்கப் பெற்றது.

4. மீளாய்வுக் குழுவுடனான சந்திப்பு திருப்திகரமான முறையில் நடத்தப்படாததோடு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் அக்கறைகளை வெளிப்படுத்துவதற்கும் பூரணமாகப் போதுமானதாக இல்லாத நிறுவனம் சார் கையேட்டின் 106 ஆம் பக்கத்திலுள்ள 7.41 பகுதியின் கீழ் நிபந்தனையிடப்பட்டது போன்று நாளொன்றுக்குப் பதிலாக இரண்டு மணித்தியாலங்களுக்கே அந்தக் கூட்டம் வரையறுக்கப்பட்டதாக அமைந்தது.

5. 2018 மே 18 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் 2018 ஜனவரி 30 ஆம் திகதி சமர்ப்பித்த "நிறுவனம்சார் மீளாய்வு முன் வரைபு அறிக்கையில் மீளாய்வுக் குழு முன்வைத்த கருத்துரைகளுக்கான துலங்கல்கள்" மீது மீளாய்வுக் குழு தனது கருத்துக்களை முன்வைக்கும் என்று ஸ்ரீ ஸ்ரீயவர்தனபுரப் பல்கலைக்கழகம் எதிர்பார்த்தது.

6. நிறுவனம் சார் இறுதி மீளாய்வு அறிக்கையை ஏற்றக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா என்ற தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் நிறுவனம் சார் இறுதி மீளாய்வு அறிக்கையை நுணுக்கமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். நிறுவனம் சார் அறிக்கைக் கையேட்டின் பக்கம் 27 இன் 2.7 ஆம் பிரிவுக்கு ஏற்ப பல்கலைக்கழகம் அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டால் மட்டுமே இறுதி அறிக்கை பகிரங்கப் பரப்புக்கு செல்ல முடியும்.

iii. நிறுவனம்சார் மீளாய்வுக் குழுவின் இறுதி மீளாய்வு குழுவின் அறிக்கை

2018 ஒக்டோபர் 02 ஆம் திகதி அன்று நீண்ட நாட்களுக்குப் பின்னர் மீளாய்வுக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனம் சார் மீளாய்வின் இறுதி மீளாய்வு அறிக்கை பல்கலைக்கழகத்துக் கிடைக்கப் பெற்றது. அந்த அறிக்கை 2018 ஜுலை 25 ஆம் திகதியே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர உறுதி பேணுகை மற்றும் மதிப்பேற்றுப் பேரவையின் ( QAAC ) பணிப்பாளரால் ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்துக்கு அறிவிக்கப்பட்டது.

அறிக்கை கிடைத்ததன் பின்னர், அதனைக் கவனமாக நுணுகி ஆராய்ந்ததோடு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் முன்வரைபு மீளாய்வு அறிக்கை தொடர்பாக முன்வைத்த பெரும்பாலான துலங்கல்களுக்கு மீளாய்வுக் குழு சிறந்த முறையில் தனது கவனத்தைச் செலுத்தவில்லை என்பதும் தெரிய வந்தது. முன்வரைபு மீளாய்வு அறிக்கைக்கான துலங்கல்களில் மீளாய்வுக் குழு விதித்த 10 ஆவது மூலப்பிரமாணங்களின் கீழ் குறிப்பிட்ட ஒரு ( 01 ) புள்ளி மற்றும் ஏனைய கருத்துரைகள் என்பவற்றின் அடிப்படையில் நிறுவனம்சார் அறிக்கையில் இடம்பெற்ற தர விதிகளுக்கேற்ப ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் எவ்வாறு தொகுத்துக் கூறியுள்ளது என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது.

ஏனெனில் அந்த சந்தர்ப்பத்தில் ஏனைய தர விதிகள் தொடர்பான விரிவான புள்ளியிடும் துளைத் தாளை மீளாய்வுக் குழுவிடமிருந்து பல்கலைக்கழகம் பெற்று இருக்கவில்லை என்பதனால் ஆகும். பல்கலைக்கழகத்தின்

தர உறுதி பேணுகை (QA) செயன்முறைகள் மேலும் சீர்த்திருத்தப்பட்டு விருத்தி செய்யப்பட வேண்டும் என்ற மீளாய்வுக் குழுவின் பரிந்துரைகளுடன் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் உடன்பட்டது. எவ்வாறாயினும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழமானது மீளாய்வுக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றக்கொண்டுள்ளது என்ற வகையில் பல்கலைக்கழகத்தின் துலங்கல்களைப் பற்றி பொருள் கொண்டுள்ளனர். இவ்வாறான பின்புலத்தினில், அறிக்கையில் பல தவறான மதிப்பீடுகள் இடம்பெறுவதனாலும் பல்கலைக்கழகம் உடன்பட முடியாத எஞ்சிய தர விதிகளில் சிலவற்றுக்கு மீளாய்வுக் குழு முன்வைத்த கருத்துக்களுக்கு துலங்கல்களை வழங்குவதற்கு பல்கலைக்கழகத்துக்குப் போதிய சந்தர்ப்பத்தை வழங்காமையாலும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மீளாய்வுக் குழுவினால் அனுப்பப்பட்ட இறுதி அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிறுவனம்சார் அறிக்கைக் கையேட்டில் 27 ஆம் பக்கத்தில் இடம்பெறும். 2.7 ஆம் பிரிவின் பிரகாரம், பல்கலைக்கழகம் ஒன்று தொடர்பான நழிறுவனம் சார் மீளாய்வு அறிக்கையை சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் போதே அது பகிரங்கப் பரப்புக்கு உட்படும். ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் அந்த அறிக்கையின் சில உள்ளடக்கங்களோடு உடன்படாது இருப்பதன் காரணமாக உடன்பட முடியாத அந்த விவகாரங்கள் தீர்க்கப்படும் வரை அந்த அறிக்கை பொதுப் பரப்புக்கு உட்பட முடியாது. ஆகவே 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி அந்த ஆவணத்தை வெளியிடுவதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு கமிட்டிக்கு ஆலோசனை வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டு பல்கலைக்கழகத் துணை வேந்தர் பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

நிறுவனம்சார் மீளாய்வின் இறுதி மீளாய்வு அறிக்கைக்கான ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் விளக்கமான துலங்கல்களைக் கோரும் ஒரு கடிதம் ( 2018 டிசம்பர் 11 ஆம் திகதி எழுதப்பட்டது ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடமிருந்து 2018 டிசம்பர் 19 ஆம் திகதி அன்று கிடைக்கப் பெற்றது. உள்ளக தர உறுதி பேணுகை அலகு 2019 ஜனவரி ஆரம்பப் பகுதியில் இறுதி மீளாய்வு அறிக்கைக்கான விளக்கமான துலங்கல்களை அனுப்பி வைப்பதற்கு எதிர்பார்த்தது.

2. செயற்திட்ட மீளாய்வு

i. சுய – மதிப்பீட்டு அறிக்கை (SER) எழுதுதல்

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் தனது அனைத்து இள மாணிப் பட்டச் செயற் திட்டங்கள் தொடர்பான சுய மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்து உள்ளது. இதற்கு இயைபாக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்தினால் பன்னிரண்டு (12) சுய மதிப்பீட்டு அறிக்கைகள் எழுதப்பட்டிருந்தன. பீட மட்டத்திலும் துறைகள் மட்டத்திலும் சுய மதிப்பீட்டு அறிக்கைகள் எவ்வாறு தயாரிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக அவர்கள் 2018 பெப்ரவரியிலிருந்து மென்மேலும் பல கூட்டங்களை நடத்தி உள்ளனர்.

அறிக்கைகளை மிகப் பொருத்தமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏதுவான வகையில் 2018 மார்ச்சிலிருந்து தொடர்ந்து சுய மதிப்பீட்டு அறிக்கைகளை அவர்கள் வரைந்தார்கள். மீண்டும் வரைந்தார்கள் மற்றும் திருத்தி வடிவமைத்தார்கள். சுய மதிப்பீட்டு அறிக்கைகள் தொடர்பான மூலப் பிரமாணங்களை ஸ்ரீ ஜயவர்தனப்புரப் பல்கலைக்கழகத்தின் தர உறுதி பேணுகை ஆலோசனை நிபுணர் பேராசிரியர். கல்யாணி பெரேரா மற்றும் ஸ்ரீ– ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் உறுதி பேணுகை அலகின் (IQAU) பணிப்பாளர் பேராசிரியர் சமன்தி சேனாரத்ன ஆகியோரின் பங்குபற்றுதலுடன் கலந்துரையாடுவதற்காக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்தில் பின்வரும் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

| திகதி | மூலப்பிரமாணத்தின் இல. | மூலப்பிரமாணத்தை முன்வைத்தோர் |
|---|---|---|
| 21.02.2018 | 02 | கலாநிதி. U. பெரேரா, சொத்து முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டுத் துறை |
| 28.02.2018 | 03 | திரு. P. D. C. உதயசான்த, ACC துறை |
| 05.03.2018 | 04 | கலாநிதி. D. தயாரத்ன, மனித வள முகாமைத்துவத் துறை |
| 07.03.2018 | 05 | கலாநிதி. H, குணதிலக்க, BUS துறை |
| 08.03.2018 | 06 | திரு. D. புஞ்சி ஹேவா, தகவல் தொழில்நுட்பத் துறை |
| 16.03.2018 | 07 | கலாநிதி. D. குருப்பு ஆரச்சி, தீர்மான விஞ்ஞானங்கள் துறை |
| 19.03.2018 | 08 | Ms. S. சோமசிரி, MKT துறை |
| 23.03.2018 | 01 | பேராசிரியர். J. எதிரிசிங்ஹ, இணைப்பாளர், உள்ளக தர உறுதி பேணுகை அலகு |

### ii. சுய மதிப்பீட்டு அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு

பேராசிரியர். கல்யாணி பெரேரா கீழ் தரப்பட்டுள்ள திகதிகளில் ஒவ்வொரு துறைக்குமான சுய – மதிப்பீட்டு அறிக்கைகள் தொடர்பான முன் வரைபுகளை மீளாய்வு செய்தார்.

| திகதி | நேரம் | துறை |
|---|---|---|
| 03.05.2018 | மு.ப 9.00 – பி.ப 6.00 வரை | சொத்து முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டுத் துறை |
| 04.05.2018 | மு.ப 9.00 –பி.ப 6.00 வரை | கணக்கீட்டுத் துறை |
| 08.05.2018 | மு.ப 9.00 –பி.ப 6.00 வரை | மனிதவள முகாமைத்துவத் துறை |
| 09.05.2018 | மு.ப 9.00 –ந.ப 12.00 வரை | பொதுத்துறை நிர்வாகத் துறை |
| | பி.ப 1.00 –பி.ப 6.00 வரை | வியாபார நிர்வாகத் துறை |
| 10.05.2018 | மு.ப 9.00 –ந.ப 12.00 வரை | வணிகவியல் துறை |
| | பி.ப 1.00 –பி.ப 6.00 வரை | தகவல் தொழில்நுட்பத் துறை |
| 11.05.2018 | மு.ப 9.00 –ந.ப 12.00 வரை | தீர்மான விஞ்ஞானத் துறை |
| | பி.ப 1.00 –பி.ப 6.00 வரை | வியாபார பொருளியல் துறை |
| 14.05.2018 | மு.ப 9.00 –ந.ப 12.00 வரை | நிதியியல் துறை |
| | பி.ப 1.00 –பி.ப 6.00 வரை | சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை |
| 15.05.2018 | மு.ப 9.00 –ந.ப 12.00 வரை | முயற்சியாண்மைத் துறை |

### iii. முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்தினால் சுய மதிப்பீட்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

முகாமைத்துவக் கற்கைள் மற்றும் வணிகவியல் பீடம் தனது அனைத்து இள மாணிப் பட்டப் படிப்பு செயற்திட்டங்கள் தொடர்பாக பன்னிரண்டு (12) சுய மதிப்பீட்டு அறிக்கைகளைத் (SERs) தயாரித்து குறிக்கப்பட்ட தினமான 2018 மே 31 ஆம் திகதி QAAC க்குச் சமர்ப்பித்த இள மாணிப் பட்டப் படிப்பு செயற் திட்டங்களும் அவற்றுக்குப் பொறுப்பான கல்வித் துறைகளும் பின்வருமாறு :

| தொடர் இல | பட்டப் படிப்புக் கற்கைகள் செயற்றிட்டம் | துறை |
|---|---|---|
| 1 | B. Sc. கணக்கீடு (சிறப்புப்) பட்டம் | கணக்கீட்டுத் துறை |
| 2 | B. Sc. வியாபார நிர்வாகம் (சிறப்புப்) பட்டம் | வியாபார நிர்வாகத் துறை |
| 3 | B. Sc. வியாபார நிர்வாகம் (வியாபார பொருளியல்) சிறப்புப் பட்டம் | வியாபாரப் பொருளியல் துறை |
| 4 | B. Com. (சிறப்புப்) பட்டம் | வணிகவியல் துறை |
| 5 | B. Sc. நடவடிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவம் (சிறப்புப்) பட்டம் | தீர்மான விஞ்ஞான துறை |
| 6 | B. Sc. முயற்சியாண்மை (சிறப்புப்) பட்டம் | முயற்சியாண்மைத் துறை |
| 7 | B. Sc. சொத்து முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு (சிறப்புப்) பட்டம் | சொத்து முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டுத் துறை |
| 8 | B. Sc. நிதியியல் (சிறப்புப்) பட்டம் | நிதியியல் துறை |
| 9 | B. Sc. மனிதவள முகாமைத்துவ (சிறப்புப்) பட்டம் | மதிவள முகாமைத்துவத் துறை |
| 10 | B. Sc. வியாபார தகவல் முறைமை (சிறப்புப்) பட்டம் | தகவல் தொழினுட்பத் துறை |
| | B. Sc. சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை |
| 11 | B. Sc. முகாமைத்துவம் (பொதுத்துறை) (சிறப்புப்) பட்டம் | பொதுத்துறை நிர்வாகத் துறை |

### iv. செயற்றிட்ட மீளாய்வுக்கான ஸ்தல விஜயம் ஆரம்பமாகுதல்

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் செயற்றிட்ட மீளாய்வுகளுக்கான ஸ்தல விஜயம் 2018 நவம்பர் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்தின் செயற்திட்ட மீளாய்வுகளுக்கான ஸ்தல விஜயங்களின் விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

| தொடர் இல | பட்டப் படிப்புச் செயற்திட்டம் | கல்வித் துறைகள் | மீளாய்வுக் குழு | பார்வையிட்ட திகதி |
|---|---|---|---|---|
| 1 | B.Sc. வியாபார நிர்வாகம் (சிறப்புப்) பட்டம் | வியாபார நிர்வாகத் துறை | கலாநிதி. ரத்னம் விஜயகுமாரன்(தலைவர்)<br>கலாநிதி. அமிந்த மெத்சில பெரேரா<br>பேராசிரியர். ரஞ்சித் W. பல்லேகம | 12.11.2018 |
| 2 | B.Sc. வியாபார நிர்வாகம் (வியாபாரப் பொருளியல்) (சிறப்புப்) பட்டம் | வியாபாரப் பொருளியல் துறை | கலாநிதி. F. H. அப்துல் ரவுப் (தலைவர்)<br>கலாநிதி. S. D. K. விஜேசுந்தர<br>பேராசிரியர். விஜித S. ஜயமான்ன | 12.11.2018 |
| 3 | B.Sc. சொத்து முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு (சிறப்புப்) பட்டம் | சொத்து முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டுத் துறை | பேராசிரியர். பிரசாதினி கமகே (தலைவர்)<br>பேராசிரியர். J. M. P. K. ஜயசிங்ஹ<br>பொறி. (கலாநிதி) சுதிர டி சில்வா | 12.11.2018 |
| 4 | B.Sc. நிதியல்(சிறப்புப்) பட்டம் | நிதியியல் துறை | கலாநிதி. ஆனந்தினி நந்தகுமாரன் (தலைவர்)<br>பேராசிரியர். K. A. S. தம்மிக்க<br>கலாநிதி. P. A. P. சமன்த குமார | 25.11.2018 |
| 5 | B.Sc. முகாமைத்துவம் (பொதுத்துறை) (சிறப்புப்) பட்டம் | பொதுத்துறை நிர்வாகத் துறை | பேராசிரியர். P. M. A. S. கருணாரத்ன (தலைவர்)<br>கலாநிதி. ரதிராணி யோகேந்திர ராஜா<br>கலாநிதி. V. சிவலோகதாசன் | 25.11.2018 |
| 6 | B.Sc. சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் (சிறப்புப்) பட்டம் | சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | கலாநிதி. S. J. M. N. G. சமரகோன் (தலைவர்)<br>பேராசிரியர். K. A. S. தம்மிக்க<br>கலாநிதி. H. A. W. S. குணதிலக்க | 6.12.2018 |
| 7 | B.Sc. முயற்சியாண்மை (சிறப்புப்) பட்டம் | முயற்சியாண்மைத் துறை | கலாநிதி. ரதிராணி யோகேந்திரராஜா (தலைவர்)<br>பேராசிரியர். H. M. நவரத்ன பண்டா<br>கலாநிதி. P. L. S. பீட்டர் | 6.12.2018 |
| 8 | B.Sc. மனித வள முகாமைத்துவம் (சிறப்புப்) பட்டம் | மனித வள முகாமைத்துவத் துறை | பேராசிரியர். N. சண்முகலிங்கம் (தலைவர்)<br>கலாநிதி. F. H. அப்துல் ரவுப்<br>கலாநிதி. P. K. T. N. S. பல்லேவத்த | 6.12.2018 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | B.Sc. வியாபாரத் தகவல் முறைமை (சிறப்புப்) பட்டம் | தகவல் தொழில்நுட்பத் துறை | பேராசிரியர். S. C. ஜயமான்ன (தலைவர்)<br>கலாநிதி. அமிந்த மெத்சில பெரேரா<br>கலாநிதி. ஆதம்பாவா ஜஹ்பர் | 6.12.2018 |
| 10 | B.Com (சிறப்புப்) பட்டம் | வணிகவியல் துறை | கலாநிதி. H. S. R. ரொசாரியோ (தலைவர்)<br>கலாநிதி. அமிந்த மெத்சில பெரேரா<br>பேராசிரியர். B. நிமலதாசன் | 9.12.2018 |
| 11 | B.Sc. நடவடிக்கைகள் மற்றும் தகவல் முகாமைத்துவம் (சிறப்புப்) பட்டம் | தீர்மான விஞ்ஞானத் துறை | பேராசிரியர். K. A. S. தம்மிக்க (தலைவர்)<br>கலாநிதி. G. A. S. கினிகந்தர<br>பேராசிரியர். P. ஹேவகே | 9.12.2018 |
| 12 | B.Sc. கணக்கீடு (சிறப்புப்) பட்டம் | கணக்கீட்டுத் துறை | பேராசிரியர். W. A. லியனகே அமரகீர்த்தி (தலைவர்)<br>பேராசிரியர். பிரசாதினி கமகே<br>கலாநிதி. M. I. S. சபீனா | 2018 இல் மீளாய்வு செய்யப்பட வில்லை |

**3. தர உறுதி பேணுகை மற்றும் மதிப்பேற்றுப் பேரவை (QAAC) யினால் முன்னேற்ற அறிக்கை வேண்டப்படுதல்**

2017 ஆம் ஆண்டுக்குரிய உள்ளக தர உறுதி பேணுகை அலகின் (IQAU) வருடாந்த முன்னேற்ற அறிக்கை மற்றும் 2018 ஆம் ஆண்டுக்குரிய உள்ளக தர உறுதி பேணுகை அலகின் காலாண்டு முன்னேற்ற அறிக்கை என்பன தர உறுதி பேணுகை மற்றும் மதிப்பேற்றுப் பேரவை QAAC யினால் வேண்டப்பட்ட காலப்பகுதியில் அனுப்பி வைக்கப்பட்டது.

**4. கொள்கை ஆவணங்கள்**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கான பின்வரும் கொள்கை ஆவணங்களைப் பற்றி இறுதி முடிவெடுப்பதற்குரிய செயலமர்வு ஒன்று 2018.08.24 ஆம் திகதி பொரலஸ்கமுவையில் அமைந்துள்ள Town and Country Club (Pvt) Ltd இல் நடைபெற்றது. இறுதி முடிவெடுக்கப்பட்ட பதினெட்டு (18) கொள்கை ஆவணங்கள் 2018 செப்டெம்பர் 27 ஆம் திகதி நடைபெற்ற 364 ஆவது செனேற் கூட்டத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

1. கல்விசார் நேர்மை மற்றும் சீரிய நிலை பற்றிய கொள்கை
2. நிர்வாகம் தொடர்பான கொள்கை
3. ஜனசமூக சேவைகள் / எல்லை கடந்த மற்றும் கைத்தொழில் தொடர்பு / ஈடுபாடு தொடர்பான கொள்கை
4. ஆராய்ச்சிகளை நடத்துதல் மற்றும் ஆதரவு நல்குதல் தொடர்பான கொள்கை
5. மாணவர் புத்தாக்கங்களை ஊக்குவித்தல் மற்றும் பரிசளித்தல் தொடர்பான கொள்கை
6. பரீட்சை தொடர்பான கொள்கை
7. நிதி பற்றிய கொள்கை
8. பொது நிர்வாகம் பற்றிய கொள்கை
9. மனித வள அபிவிருத்தி தொடர்பான கொள்கை
10. தகவல் தொடர்பான கொள்கை
11. தகவல் மற்றும் தொடர்பாடல் பற்றிய கொள்கை

12. புத்தாக்கம், கண்டுபிடிப்பு மற்றும் துணிகர முயற்சி ஆக்கம் தொடர்பான கொள்கை
13. கல்விசார் செயற்திட்டங்களை சர்வதேச மயப்படுத்தல் மற்றும் கடல் கடந்ததாக்குதல் தொடர்பான கொள்கை
14. செயற்திட்டங்கள் / பாடவிதான அங்கீகாரம் / நடைமுறை, மேற்பார்வையிடல், மீளாய்தல் மற்றும் இடைநிறுத்தம் ஆகியன தொடர்பான கொள்கை
15. செயற்றிட்டம் / பாடவிதானம் வடிவமைத்தல் ஆகியன தொடர்பான கொள்கை
16. பிராந்திய மற்றும் தேசிய மட்டத்திலான போட்டிகளில் மாணவர் பங்குபற்றுதல் தொடர்பான கொள்கை
17. கற்றல் மற்றும் கற்பித்தல் தொடர்பான கொள்கை
18. இணைய உள்ளடக்க முகாமைத்துவம் தொடர்பான கொள்கை

**5. உள்ளக தர உறுதி பேணுகை அலகின் இணையப் பக்கம்** (Web Page of IQAU)

உள்ளக தர உறுதி பேணுகை அலகின் இணையப் பக்கம் 2018 நவம்பர் 08 ஆம் திகதி அன்று உள்ளக தர உறுதி பேணுகை அலகின் உறுப்பினர்களின் முன்னிலையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரினால் உத்தியோக பூர்வமாக தொடக்கி வைக்கப்பட்டது. அது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக இணையத்தளத்தில் “நிறுவனங்கள் மற்றும் நிலையங்கள்” என்ற தலைப்பின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டது. அது உள்ளக தர உறுதி பேணுகை அலகின் கொள்கைகக் கையேடு துணைத் நிலைச் சட்டங்கள், தர உறுதி பேணுகைக் கூறுகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டல் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் ஆகியன உள்ளிட்ட தர உறுதி பேணுகை அலகோடு தொடர்பான அனைத்து விபரங்களையும் உள்ளடக்குகின்றது.

## எதிர்கால திட்டம்

**நடவடிக்கை திட்டம்** (Action plan) (2017 - 2021)

- கற்றல் மற்றும் கல்வி
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
- ஆராய்ச்சி, ஆக்கத்திறன், புத்தாக்கம், வெளியீடு மற்றும் பகிரங்க ஈடுபாடு
- மக்கள் : பீடம் மற்றும் பணிக் குழுவினர்
- கீழ்க்கட்டமைப்பு : ஒழுங்கமைப்புக் கட்டமைப்புக்கள், மூலவள நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி
- நிதி
- முதன்மையான மாணவர் அனுபவங்கள்
- நீடித்து நிலைக்கும் ஜனசமூகம், சமூகப் பொறுப்பு மற்றும் தேசியப் பங்களிப்பு

# வருடாந்த நிதி அறிக்கை

# 2018

## மீண்டெழும் செலவு பற்றிய விபரங்கள் - 2018

| விடயம் | 2018 ஆம் ஆண்டு |
|---|---|
| ஆளணியிரின் சம்பளங்கள் | 2,989,044 |
| பயணச் செலவுகள் | 41,015 |
| வினியோகங்கள் | 126,643 |
| பராமரிப்புச் செலவுகள் | 74,378 |
| ஒப்பந்தம் சார்ந்த சேவைகளுக்கான செலவுகள் | 577,564 |
| ஏனைய செலவுகள் | 379,604 |
| மூலதன நன்கொடை – மீண்டெழும் தன்மையான செலவுகள் | 391,920 |
| **மொத்த மீண்டெழும் செலவுகள்** | **4,580,168** |



## நிதி வினையாற்றுகைப் பகுப்பாய்வு - பீட ரீதியாக தலா மாணவர் செலவு - 2018 உள்வாரி இள மாணிப் பட்டதாரி மாணவர்கள்

| பீடம் | மொத்தச் செலவு (ரூபாவில்) | மொத்த மாணவர் தொகை 2018 | தலா மாணவர் செலவு (ரூபாவில்) |
|---|---|---|---|
| a. பிரயோக விஞ்ஞான பீடம் | 896,084,576 | 2206 | 406,203.34 |
| d.மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 898,710,924 | 3575 | 251, 388 |
| c.மருத்துவ விஞ்ஞான பீடம் | 725,566,219 | 1225 | 592, 299 |
| b. முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் | 1,330,863,524 | 6045 | 220, 159 |
| e. பொறியியல் பீடம் | 172,749,349 | 363 | 475, 894 |
| f. தொழில்நுட்ப பீடம் | 220,986,406 | 642 | 344, 216 |

## மூலதனச் செலவுகள் பற்றிய விபரங்கள் 2015 - 2018 (ரூபா' 000)

| விடயம் | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| a. சொத்துக்களை கையகப்படுத்தல் | 126,744 | 239,151 | 542,137 | 724,950 |
| b. கட்டிடம் மற்றும் கட்டமைவாக்கம் கைப்பற்றல் | 520,910 | 658,309 | 269,169 | 1,395,075 |
| c. நூலகப் புத்தகங்கள் | 14,340 | 13,962 | 33, 337 | 30,914 |
| d. அறிவு மேம்பாட்டு நன்கொடை | 154,973 | - | - | - |
| e. மனித மூலதன அபிவிருத்தி திட்டம் | - | 121,084 | 1,650 | 9,253 |
| f. ஆராய்ச்சிப் பலப்படுத்தல் | - | 137,341 | 146,417 | 369,062 |
| g. ஏனைய (புனருத்தாரணம்) | 70,826 | 126,343 | 142,472 | 127,597 |
| **மொத்தம்** | **887,793** | **1,296,190** | **1, 135, 182** | **2,656,851** |

## நிதி வினையாற்றுகைப் பகுப்பாய்வு - 2018 (ரூபா'000)

| விடயம் | வாய்ப்பாடு (Formulla) | தலா மாணவர் செலவு |
|---|---|---|
| a. தலா மாணவர் மீண்டெழும் செலவு (RE) | RE / மாணவர் எண்ணிக்கை | 326 |
| b. தலா மாணவர் மூலதனச் செலவு (CE) | CE/ மாணவர் எண்ணிக்கை | 189 |

## முன்னைய ஐந்து (05) வருடங்களில் தொடர்பான முக்கிய பகுதிகள் (இலக்கங்கள் ரூபா'000 இல்)

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| 1. ஆளணி சம்பளங்கள் | 1,538,113 | 1,938,192 | 2,181,660 | 2,384,967 | 2,898,044 |
| 2. பயணச் செலவுகள் | 9,973 | 27,594 | 46,122 | 32,170 | 41,015 |
| 3. விநியோகங்களுக்கான செலவுகள் | 80,508 | 95,291 | 105,859 | 117,133 | 126,643 |
| 4. பராமரிப்புச் செலவுகள் | 73,135 | 96,239 | 129,262 | 35,884 | 74,338 |
| 5. ஒப்பந்த ரீதியான செலவுகள் | 253,417 | 280,647 | 350,182 | 496,041 | 577,564 |
| 6. ஏனைய செலவுகள் | 285,827 | 319,590 | 313,821 | 385,306 | 377,922 |
| 7. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான செலவுகள் | 31,060 | 44,341 | 945 | 293 | 1,682 |
| 8. பல்கலைக்கழகக் குடியிருப்புத் திட்டம் மற்றும் ஏனைய செலவுகள் | 6,758 | 62,115 | 114,359 | 259,834 | 391,920 |
| **மொத்தச் செலவுகள்** | **2,278,791** | **2,864,009** | **2,864,009** | **3,242,210** | **4,580,188** |

## முன்னைய ஐந்து (05) வருடங்களில் தொடர்பான முக்கிய பகுதிகள் (இலக்கங்கள் ரூபா'000 இல்)

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| மூலதன நன்கொடைகள் | 947,550 | 875,000 | 1,297,200 | 1,139,312 | 2,653,700 |
| மீண்டெழும் நன்கொடைகள் | 1,861,285 | 2,360,000 | 2,537,702 | 2,907,750 | 3,590,000 |



## முன்னைய ஐந்து (05) வருடங்களில் தொடர்பான முக்கிய பகுதிகள் (இலக்கங்கள் ரூபா'000 இல்)

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| மூலதன நன்கொடைகள் | 964,384 | 887,793 | 1,296,190 | 1,135,182 | 2,656,851 |
| மீண்டெழும் நன்கொடைகள் | 2,278,791 | 2,864,009 | 3,242,210 | 3,711,628 | 4,580,168 |



## 2018 டிசம்பர் 31 ஆகும் போது நிதி நிலைமை பற்றிய அறிக்கை

| | 2018 டிசம்பர் 31 ஆகும் போது நிதி நிலைமை | 2017 டிசம்பர் 31 ஆகும் போது நிதி நிலைமை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறைசாரா சொத்துக்கள்** | | |
| சொத்து, இயந்திர சாதனம் மற்றும் உபகரணங்கள் | 9,342,136,008 | 9,145,370,103 |
| நூலகப் புத்தகங்கள் மற்றும் மேலங்கிகள் | 51,025,615 | 51,649,602 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைகள் | 1,393,602,358 | 66,134,421 |
| உணரமுடியாத சொத்துக்கள் | 19,543,268 | 8,510,971 |
| நிதிசார் சொத்துக்கள் | 1,612,763,872 | 1,245,657,770 |
| | **12,419,071,121** | **10,517,322,865** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| பொருள் விவரப்பட்டியல்கள் | 40,058,196 | 40,870,906 |
| நானாவித கடனாளிகள் மற்றும் பெறக்கூடியவை | 138,010,552 | 98,840,010 |
| **நடைமுறை நிதிசார் சொத்து** | | |
| பணியாளர்களுக்கான முன் பணங்கள் | 970,758 | 541,408 |
| முன்பணங்களும் முன் கொடுப்பனவுகளும் | 490,537,100 | 324,387,374 |
| ரொக்கப் பணம் மற்றும் ரொக்கப் பண சம மதிப்புக்கள் | 70,432,850 | 48,439,662 |
| | **740,000,456** | **513,079,360** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **13,159,080,574** | **11,030,402,225** |

| | குறிப்பு | 2018 டிசம்பர் 31 ஆகும் போது | 2017 டிசம்பர் 31 ஆகும் போது |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **நிகர மதிப்பு மற்றும் கடன்பாடுகள் நிகரமதிப்பு** | | | |
| மூலதன நன்கொடைகள் | 16 | 5,804,452,314 | 4,009,121,724 |
| ஏனைய மூலதன நன்கொடைகள் | 17 | 430,580,383 | 491,159,322 |
| வெகுமதிகள் மற்றும் நன்கொடைகள் | 18 | 30,075,835 | 13,108,504 |
| மீள் மதிப்பீட்டு மிகை | | 5,123,774,169 | 5,123,774,169 |
| பத்திரப்படுத்தப்பட்ட ஊதியங்கள் | | (488, 764, 645) | (306,616,420) |
| | | **10,900,118,057** | **9,330,547,299** |
| **ஒதுக்குகள் மற்றும் வரையறுக்கப்பட்ட நிதி** | | | |
| உள்வாரியாக வரையறுக்கப்பட்ட நிதி | 19 | 583,279,328 | 396,758,843 |
| மூலதன ஒதுக்குகள் | 20 | 1,574,237 | 1,574,237 |
| மானிய நிதி | 21 | 29,932,386 | 28,559,542 |
| வெளிப்புற ஆராய்ச்சி நன்கொடைகள் | 22 | 110,712,440 | 94,793,969 |
| ஒத்திவைக்கப்பட்ட வருமானம் – விரிவாக்கல் | 23 | 445,860,667 | 265,989,158 |
| செயற்திட்டங்கள் | | **1,171,359,059** | **787,675,750** |
| **நடைமுறை சாரா கடன் பொறுப்புக்கள்** | | 506,796,798 | |
| விதிக்கப்பட்ட பயன் கடப்பாடுகள் ஏற்பாடு | 24 | | 498,851,043 |
| | | **506,796,798** | **498,851,043** |
| **நடைமுறை கடன் பொறுப்புக்கள்** | | 20,225,125 | |
| மீளப் பெறக்கூடிய வைப்புக்கள் | 25 | 560,581,535 | 13,310,835 |
| வளச்சியடைந்த செலவுகள் மற்றும் ஏனைய செலுத்த | 26 | | 400,017,298 |
| வேண்டியவை | | **580,806,660** | |
| | | | **413,328,133** |
| | | **13,159,080,574** | |
| **மொத்த நிகர மதிப்புக்களும் கடன்பாடுகளும்** | | | **11,030,402,225** |

இந்த நிதி அறிக்கையானது இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட பொதுத் துறை கணக்கீட்டு தரங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

K. T. C. பிரியங்கனி
பொருளாளர்

K. G. பிரிட்டோ
பதிவாளர்

அந்த நிதி அறிக்கைகளைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கான பொறுப்பு பேரவை உறுப்பினர்களையே சாரும்.
பேரவை சார்பாகக் கையொப்பம் இட்டவர்கள்

முதுநிலைப் பேராசிரியர். சம்பத் அமரதுங்க
துணை வேந்தர்

திரு. சமிந்திர டி சில்வா
பேரவை உறுப்பினர்

நிதி அறிக்கை 45 இன் 03 ஆம் பக்கம்

## 2018 டிசம்பர் 31 உடன் முடிவுறும் ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல்

| | 2018 டிசம்பர் 31 ஆகும் போது | 2018 டிசம்பர் 31 ஆகும் போது |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்த காசுப் பாய்ச்சல்கள்** | | |
| நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்தான மிகை / பற்றாக்குறை | (159, 969, 855) | (224, 091, 778) |
| **சீராக்கங்கல்** | | |
| மதிப்பிறக்கம் | 660,576,278 | 476,257,158 |
| கடன்கள் மீதான மோசமாகும் இழப்பு | 222,895 | - |
| நூலகப் புதம்தகங்களை தள்ளுபடி செய்தல் | - | 64,395 |
| முதலீடுகளில் இருந்ததான வட்டிகள் | (114, 879, 276) | (84, 399, 207) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 33,225,295 | 90,112,283 |
| விவரிக்கப்பட்ட பயன் கடப்பாடுகள் மீதான நிபுணர்சார் ஊதியம் / இழப்பு | 8,963,789 | - |
| அரசாங்க நன்கொடைகள் / வெகுமதிகளின் கடன் தீர்த்தல். | (545, 661, 575) | (392, 567, 004) |
| சொத்துக்களின் தள்ளிக் கழித்தல்கள் மீதான இலாபம் / இழப்பு | 540,359 | (3, 334, 094) |
| மறுசீரமைப்பு செலவுகளுக்கான மாற்றம் | 2,336,090 | - |
| உணரமுடியாத சொத்துக்களின் மீது கடன் தீர்த்தல். | 6,693,709 | 3,886,053 |
| அரசாங்க நன்கொடை / மறுசீரமைப்பு பராமரிப்பு மற்றும் அறிவும் மேம்பாட்டுச் செயற்பாடுகள் | (387, 926, 049) | (254,407,152) |
| **நடப்பு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நடைமுறைப் செயற்பாடுகளில் இருந்ததான தேறிய காசுப் பாய்ச்சல்.** | **(495, 878, 340)** | **(388, 479, 346)** |
| விவரப் பட்டியல்களில் அதிகரிப்பு / குறைவு | 812,710 | 812,710 |
| நானாவித கடனாளிகளின் மற்றும் பெறுவோரின் அதிகரிப்பு / குறைவு | (26,815,476) | 725,630 |
| பணியாளர்களுக்கான கடன்களிலும் முற்பணங்களிலும் அதிகரிப்பு / குறைவு | (429, 350) | 298,300 |
| முற்பணங்களிலும் முன் கொடுப்பனவுகளிலும் அதிகரிப்பு / குறைவு | (166, 149, 726) | (166,518,554) |
| சம்பவித்த மற்றும் கொடுக்க வேண்டிய செலவுகளில் அதிகரிப்பு / குறைவு | 160,564,237 | (40,113,963) |
| திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்களில் அதிகரிப்பு / குறைவு | 6,914,290 | (3,155,228) |
| தள்ளி வைக்கப்பட்ட வருமான விரிவாக்கல் செயற்திட்டங்களில் அதிகரிப்பு / குறைவு | 179,871,509 | 102,632,027 |
| **நடப்பு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நடைமுறை செயற்பாடுகளில் இருந்து ஏற்படும் தேறிய காசுப் பாய்ச்சல்** | **(341, 110, 145)** | **(492, 987, 121)** |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | (34,243,329) | (30,334,398) |
| **நடைமுறைச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்.** | **( 375, 353, 474)** | **(523, 321, 519)** |

**2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுறும் ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் பற்றிய அறிக்கை**

| | 2018<br>ரூபா | 2017<br>ரூபா |
|---|---|---|
| **வருமானம்** | | |
| அரசாங்க நன்கொடைகள் – மீண்டெழுபவை | 3,590,000,000 | 2,907,750,000 |
| அரசாங்க நன்கொடைகள் – மூலதனம் சார்ந்தவை மீண்டெழும் இயல்பினான செலவுகள் | 387,926,049 | 254,407,152 |
| உள்ளக வருமானம் | 606,609,357 | 499,734,029 |
| சொத்து, இயந்திர சாதனங்கள், உபகரணங்களின் விற்பனை மூலமான இலாபம் | - | 3,334,094 |
| அரசாங்க நன்கொடைகள் மற்றும் வெகுமதிகளைத் தீர்த்தல் | 545,661,575 | 392,567,004 |
| நன்கொடைகள் – மகாபொல | 453,492,500 | - |
| நன்கொடைகள் – உபகார நிதி (Bursary) | 65,561,600 | - |
| **மொத்த வருமானம்** | **5,649,251,082** | **4,057,792,280** |
| **செலவுகள்** | | |
| ஆளணியரின் சம்பளங்கள் | 2,989,043,825 | 2,384,967,083 |
| பிரயாண செலவுகள் | 41,014,803 | 32,170,123 |
| வினியோகங்கள் | 126,642,848 | 117,133,277 |
| பராமரிப்புச் செலவு | 74,378,113 | 35,883,799 |
| ஒப்பந்த ரீதியான சேவைகள் | 577,563,951 | 496,041,104 |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 379,604,040 | 385,599,206 |
| விவரிக்கப்பட்ட பயன் கடப்பாடுகள் | 33,225,295 | 90,112,283 |
| நிபுணர் சார் ஊதியம் / விவரிக்கப்பட்ட பயன் கடப்பாடுகள் மீதான இழப்புக்கள் | 8,963,789 | - |
| நிலையான சொத்துக்களின் இலாபத்தின் மீதான இழப்புக்கள் | 540,359 | - |
| மூலதன நன்கொடைகள்– மீண்டெழும் செலவு | 391,919,826 | 259,833,971 |
| மதிப்பிறக்கம் | 660,576,278 | 476,257,158 |
| உணர முடியாத சொத்துக்களின் மீதான கடன் தீர்த்தல் | 6,693,709 | 3,886,053 |
| செலவுகள் – உபகார நிதி (Bursary) | 65,561,600 | - |
| செலவுகள் – மகாபொல | 453,492,500 | - |
| **மொத்தச் செலவுகள்** | **5,809,220,936** | **4,281,884,058** |
| **ஆண்டுக்கான மிகை (பற்றாக்குறை)** | **(159,969,855)** | **(224,091,778)** |

## 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுறும் ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் பற்றிய அறிக்கை

| | 2018 டிசம்பர் 31 ஆகும் போது ரூபா | 2017 டிசம்பர் 31 ஆகும் போது ரூபா |
|---|---|---|
| **முதலீட்டுச் செயற்பாட்டிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| சொத்து, இயந்திர சாதனம், உபகரணங்களின் கொள்வனவு | (793,851,739) | (529, 966, 128) |
| சொத்து, இயந்திர சாதனம், உபகரணங்களின் மீதான விற்பனை விளை பயன்கள் | 1,723,097 | 4,919,500 |
| முதலீடுகளிலிருந்து வரும் வட்டி | 102,524,210 | 76,816,504 |
| நடைமுறையிலுள்ள மூலதன வேலைகள் | (1,381,053,340) | (132, 765, 928) |
| நிலையானவை எடுப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட நிதி | (459,222,948) | (319, 141, 229) |
| நிலையான வைப்புக்களின் மீள்பெறுகை | 89,614,478 | 179,009,120 |
| பணியாளர் கடன் கொடுப்பனவு | 2,279,476 | (14,029,781) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | **(2,437,986,766)** | **(735,157,942)** |
| **நிதியிடல் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| அரசாங்க நன்கொடைகள் – மூலதனம் | 2,653,700,000 | 1,139,312,280 |
| மானிய நிதியின் பயன்பாடு | 1,372,844 | 3,407,642 |
| வெளியக நிதிகளின் பயன்பாடு | (22,178,370) | (20,522,012) |
| குறிக்கப்பட்ட ஒதுக்கு | 186,520,485 | 104,530,835 |
| ஆராய்ச்சி நன்கொடைகள் | 15,918,471 | 14,816,028 |
| **நிதியிடல் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | **2,835,333,430** | **1,241,544,777** |
| காசு மற்றும் காசு சம மதிப்புக்களில் தேறிய அதிகரிப்பு / குறைவு | 21,993,190 | (16, 934, 683) |
| ஆண்டு ஆரம்பத்திலிருந்த பணம் மற்றும் சம மதிப்புக்கள் | 48,439,662 | 65,374,347 |
| **ஆண்டு இறுதியில் இருந்த காசு மற்றும் காசு சம மதிப்புக்கள்** | **70,432,850** | **48,439,662** |

## ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

## 2018 டிசம்பர் 31 உடன் முடிவுறும் ஆண்டுக்கான நிகர மதிப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய அறிக்கை

| வகை | தொடர்ந்து உள்ள வருவாய்கள் ரூபா | மீள் மதிப்பீட்டு மிகை ரூபா | செலவழித்த மூலதன நன்கொடைகள் ரூபா | செலவளிக்காத மூலதன நன்கொடைகள் ரூபா | வெகுமதிகளும் ஏனைய நன்கொடைகளும் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 2018 டிசம்பர் 31 ஆகும் போது கையிருப்பு | (306,616,420) | 5,123,774,1698 | 4,003,673,298 | 5,448,425 | 504,267,827 | 9,330,547,299 |
| ஆண்டினில் செலவளித்த மூலதன நன்கொடைகள் | - | - | 2,656,851,005 | (2,656,851,005) | - | - |
| ஆண்டினில் கிடைக்கப் பெற்ற நிதிகள் | - | - | - | 2,653,700,000 | - | 2,653,700,000 |
| உருவாக்கப்பட்ட நிதிகளிலிருந்து மூலதன நன் கொடைகளுக்கான பங்களிப்பு | - | - | - | - | -9,009,006 | 9,009,006 |
| மூலதன நன்கொடைகள் – மறுசீரமைப்புப் பராமரிப்பும் அறிவு மேம்பாட்டுச் செயற்பாடுகளும் | - | - | (387, 926, 049) | - | | (387, 926, 049) |
| வருடத்தில் பெறப்பட்ட வெகுமதிகள் | - | - | - | - | 22, 597,601 | 22, 597,601 |
| கடன் தீர்த்தல் – நன்கொடைகள் மற்றும் வெகுமதிகள் | - | - | (470, 443, 360) | - | (75, 218, 215) | (545,661,575) |
| மூல நிதி ஒப்பந்தங்களின் முறிவு | (22, 178, 370) | - | - | - | | (22, 178, 370) |
| காலப் பகுதிக்கான மிகைகள் (பற்றாக்குறை) | (159,969,855) | - | - | - | - | (159,969,855) |
| **2018 டிசம்பர் 31 ஆகும் போது கையிருப்பு** | **(488,764,645)** | **5,123,774,169** | **5,802,154,894** | **2,297,420** | **460,656,220** | **10,900,118,057** |

## நிதியியல் அறிக்கைக்கான முக்கிய கணக்கியல் கொள்கைகளின் சராம்சம்

### 1. உளதாந் தன்மையைத் தெரிவித்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதுடன் அது இலங்கை, நுகேகொட, கங்கொடவிலவில் அமைந்துள்ளது. இந்தப் பல்கலைக்கழமானது நகர திட்டமிடல், நீர் விநியொகம் மற்றும் உயர் கல்வி அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

### 1.1 வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையை வெளியிடுவதற்கு 2019 ஏப்ரல் 11 ஆம் திகதி அன்று பல்கலைகழகப் பேரவையினால் அதிகாரம் அளிக்கப்பட்டது.

### 1.2 காலப் பகுதியை அறிவித்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிதி ஆண்டின் காலப்பகுதி 2018 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் ஆகும்.

### 2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சராம்சம்

### 2.1 இணக்கத்தை அறிவித்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் நிதியியல் அறிக்கை இலங்கைப் பகிரங்கத் துறை கணக்கீட்டுத் தரவிதிகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கை கணக்கீட்டுத் தரவிதிகள் பகிரங்கத் துறை கணக்கீட்டுத் தர விதிகள் இல்லாத இடங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நிதி அறிக்கைகளில் நிதிசார் நிலைமை பற்றிய அறிக்கை. நிதியியல் வினையாற்றுகை பற்றிய அறிக்கை, பண ஒழுக்கு, ஒப்புரவில் மாற்றங்கள் மற்றும் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.2 அளவீட்டின் அடிப்படை

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிதியியல் அறிக்கை வரலாற்று ரீதியான செலவின் அடிப்படையில் தாயாரிக்கப்பட்டு அது மாறாத வகையில் பிரயோகிக்கப்படுகின்றது. சந்தைப் பெறுமதிக்கு ஏற்ப அளவீடு செய்யப்படும் சொத்து, இயந்திர சாதனம் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றைத் தவிர நிதியியல் அறிக்கைகளில் பாதிப்புச் செலுத்தும் பண வீக்கக் காரணிகளுக்காக சீர் செய்யப்பட மாட்டாது.

### 2.3 ஒப்பீட்டு ரீதியான தகவல்

பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டின் கொள்கைகளுடன் தொடர்ச்சியாகப் பின்பற்றப்படுகின்றன. எனினும் நடைமுறை கணக்கு இலக்கங்களை அறிமுகப்படுத்தும் போது இடம் பெறும் மாற்றங்களோடு ஒத்திருக்கச் செய்வதற்காக ஒப்பீட்டு ரீதியான கணக்கிலக்கங்கள் தேவைப்படும் போது பயன்படுத்தப்படுகின்றன.

### 2.4 உருவாக்கமும் ஒருங்கிணைத்தலும்

ஒத்தவையான ஒவ்வொரு மூலப்பொருள் வகுப்பும் நிதியியல் அறிக்கையில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒத்தவையல்லாத விடயங்கள் அல்லது செயற்பாடு அவை முக்கியமற்றவையாக இல்லாதிருப்பின் புறம்பானவையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.5 குறை நிரப்புதல்

சொத்துக்கள் மற்றும் கடன் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் இலங்கை பகிரங்கத் துறை கணக்கீட்டுத் தரவிதிகளின் (SLPSASs) மூலம் கோரப்படாத வரை அல்லது ஏற்றுக்கொள்ளப்படாத வரை குறை நிரப்புதல் செய்யப்பட மாட்டாது.

**2.6 இயங்கிக் கொண்டு இருக்கும் தாபனம்**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு தாபனம் என்ற வகையில் தொடர்ந்திருக்கும் திறனை மதிப்பீடு செய்கிறது. ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழமானது எதிர்பார்க்கக் கூடிய எதிர்காலத்துக்காக தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருப்பதற்குப் போதுமான மூலவளங்களைக் கொண்டுள்ளது. எதிர்காலம் தொடர்பாக கிடைக்கக் கூடிய சகல தகவல்களையும் கவனத்தில் கொள்ளும் போது பல்கலைக்கழமானது தனது நடவடிக்கைகளை நிறுத்தி விடுவதற்கோ அல்லது தவிர்த்து விடுவதற்கோ ஆன தேவை இருப்பதாக உணர்வதில்லை ஆதலால் பல்கழைக்கழகம் நிதியியல் அறிக்கையைத் தயாரிப்பதில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு தாபனம் என்ற தளத்தைப் தொடர்ந்தும் பின்பற்றி வருகிறது.

**2.7 காலத்தை அறிவித்ததன் பின்னரான நிகழ்வுகள்**

நிதியியல் அறிக்கை வெளியிடப்பட்ட திகதிக்குப் பின்னரான சகல முக்கிய நிகழ்வுகளும் கவனத்தில் கொள்ளப்படுவதோடு பொருத்தமான சீராக்கங்களை அல்லது கவனிப்புக்களை எவை அவசியமோ அவை நிதியியல் அறிக்கைகளில் மேற்கொள்ளப்பட்டன.

**2.8 நடைமுறை சார்ந்த மற்றும் முன்னிலைப்படுத்தும் நாணயம்**

பல்கலைக்கழகத்தின் நிதியியல் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பல்கலைக்கழகம் இயங்குகின்ற அடிப்படை பொருளாதார சுற்றுச் சூழலில் உள்ள நாணயத்தைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றன. (நடைமுறையில் இருக்கும் நாணயம்) இந்த நிதியியல் அறிக்கைகள் பல்கலைக்கழகத்தின் நடைமுறை சார்ந்தும் முன்னிலைப்படுத்துவதுமான நாணயமான இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றன.

**2.9 வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் நிலுவைகள் தொடர்பான தொழில் நடைமுறை**

வெளிநாட்டு நாணய நடைமுறைகள் செயற்பாட்டிலுள்ள நடைமுறை நாணய மாற்று வீதத்தை அல்லது அவை மறு அளவீடு செய்யப்படுகின்ற போது உள்ள பெறுமதியைப் பயன்படுத்தி நடைமுறை சார்ந்த நாணயமாக மாற்றப்படுகின்றன. அவ்வாறான நாணய நடைமுறை தொடர்பான உறுதிப்பாட்டின் விளைவாக மற்றும் வருட இறுதியில் பணச் சொத்துக்களின் நாணய மாற்று வீதத்தின் மாற்றீடுகளின் விளைவாக மற்றும் வருட இறுதியில் வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்படும் கடன் பொறுப்புக்களின் விளைவாக ஏற்படும் வெளிநாட்டு நாணய மாற்று ஈட்டங்கள் மற்றும் இழப்புக்கள் வருமான அறிக்கையில் அடையாளங் காணப்படுகின்றன.

**2.10 ஒருங்கு திரட்டுதல்**

நிதியியல் அறிக்கைகளில் இடம்பெறும் மொத்த நிதித் தொகை ஸ்ரீ லங்கா பகிரங்கத் துறை கணக்கீட்டுத் தர விதிகளினால் அங்கீகரிக்கப்பட்டது எனச் சுட்டிக் காட்டப்பட்டால் அன்றி கிட்டிய ரூபாவுக்கு ஒன்று திரட்டப்பட்டள்ளது.

**2.11 சொத்து, இயந்திர சாதனம் மற்றும் உபகரணங்கள்** (PPE)

பல்கலைக்கழகத்தின் சொத்து, இயந்திர சாதனம் மற்றும் உபகரணங்கள் (PPE) என்பவை நிலங்கள், கட்டிடங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் இணைப்புப் பொருட்களின் தொகுதி, நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள், மோட்டார் வாகனங்கள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் ஆகியவற்றைக் கொண்டவையாகும்.

a. **அங்கீகாரத்துக்கான அடிப்படை**

சொத்து இயந்திர சாதனம் மற்றும் உபகரணங்கள் (PPE) சம்பந்தப்பட்ட விடயத்துடன் இணைந்துள்ள எதிர்கால பொருளாதாரப் பயன்பாடுகள் உட்பொருளை நோக்கி ஒழுகுமாயின் மற்றும் விடயத்தின் செலவை நம்பகமாக அளவிட முடியுமாயின் அங்கீகரிக்கப்படுகின்றன.

i. **ஆரம்ப அங்கீகாரம்**

சொத்து, இயந்திர சாதனம் மற்றும் உபகரணங்கள் ஆகிய சொத்துக்களை அவற்றின் செயற்பாட்டு நிலைக்குக் கொண்டு வருதல், அவற்றின் உத்தேசப் பயன்பாடு மற்றும் ஆரம்ப நிலையைப் பின் தொடரும் நிலை ஆகியவற்றுக்காக ஏற்படும் தற்செயல் செலவுகளுடனான கொள்வனவுச் செலவு ஆகியன உள்ளிட்ட செலவுகளோடு உள்ள ஆரம்ப நிலையே அங்கிகரிக்கப்படுகின்றன.

அங்கீகாரம் மற்றும் சொத்து, இயந்திர சாதனம், உபகரணங்கள் என்பன குறைத் திரட்சி மதிப்பிறக்கம் மற்றும் திரட்சியாகச் சேதமடையும் இழப்புக்கள் ஆகிய செலவுகளோடு சேர்த்து அளவீடு செய்யப்படுகின்றன.

ii. **இருப்பில் உள்ள சொத்து இயந்திர சாதனம் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் மீது பின்தொடரும் செலவுகள்**

சம்பந்தப்பட்ட ஆயுட் காலத்துக்கு மேலாக அது சாதகமாகப் பயன்படுத்தப்பட்ட மற்றும் குறைவாகக் கணிப்பிடப்பட்டதுமான விடயத்தினில் அது பின்வரும் மூலப் பிரமாணங்களில் ஒன்றினைச் சந்தித்தாலன்றி அது உள்ளாகிய காலப்பகுதியில் இருந்த தெளிவானதும் நிலையானதுமான சொத்துக்களின் மீது ஏற்பட்ட செலவானது நிதி வினையாற்றுகை அறிக்கைக்கு உட்படுத்தப்பட்டது.

- சொத்தின் செயலாற்றலில் ஏற்பட்ட அதிகரிப்பு
- வெளியீட்டின் தரத்தினில் அல்லது நடைமுறைச் செலவினில் ஏற்படும் உறுதியான மேம்பாடு
- பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பினால் உறுதிப்படுத்துவனவற்றக்கு அப்பால் உள்ள சொத்தினது வாழ்நாளின் குறிப்பிடதக்க விரிவாக்கம்.
- சொத்து, இயந்திர சாதனம் மற்றும் உபகரணங்கள் (PPE) என்பவற்றின் மீதான சந்தைப் பெறுமதி தொடர்ச்சியாக அதிகரித்தல்.
- நிகழும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் ஒரு செலவு என்ற வகையில் அடையாளம் காணப்படுவதற்கு முன்னரே மதிப்பீடு செய்யப்பட்ட வினையாற்றுகைத் தர அளவையில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்காலப் பொருளாதாரப் பயன்களை மீளப் பெறுவதற்கதாக அல்லது பேணுவதற்காக சொத்து, இயந்திர சாதனம் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றினைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றின் மீது ஏற்படும் செலவு

iii. **அங்கிகாரத்தின் பின்னரான அளவீடு**

**செலவு உருமாதிரி** (Cost Model)

காணிகளின் வகைகள் கட்டிடங்கள், மோட்டார் வாகனங்கள், ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் விளையாட்டுப் பொருட்கள், ஏனைய உபகரணங்கள் மற்றும் தளபாடமும் துணைச் சாதனங்களும் ஆகியவற்றைத் தவிர்ந்த சொத்து, இயந்திர சாதனம் மற்றும் உபகரணங்கள் அனைத்தையும் அடையாளம் கண்டதன் பின்னர் அவற்றின் திரண்ட மதிப்பிறக்கம் கழிக்கப்படட்ட விலையில் பெற்றுக் கொள்ளப்பட்டன.

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிதியறிக்கைக்காக பின்பற்றப்பட்ட பெறுமதிமிக்க கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்பான சாராம்சம் - 2018

### 1. அறிக்கையிடும் நிறுவனம்

1987 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரதான நிர்வாகத் தொகுதியானது, கங்கொடவில, நுகேகொடையில் அமைந்துள்ளது. இப் பல்கலைக்கழகமானது நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் கீழ் செயற்படுகிறது.

#### 1.1 நிதியறிக்கையினை வெளியிடுவதற்கு அனுமதியளிக்கப்பட்ட தினம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிதியறிக்கையினை வெளியிடுவதற்கான பல்கலைக்கழக பேரவையின் அனுமதியானது 2019 ஏப்ரல் 4ந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

#### 1.2 அறிக்கையிடுவதற்கான காலப்பகுதி

பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடற் காலப்பகுதி 2018 ஜனவரி 01 முதல் 2018 டிசம்பர் 31 வரையானதாகும்.

### 2. ஏனைய பெறுமதிமிக்க நிதிக் கொள்கைகள் தொடர்பான சாராம்சம்

#### 2.1 இணக்கக் கூற்று

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிதியறிக்கை, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLPSAS) அமைவாக தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பயன்படுத்தாத சந்தர்ப்பங்களில் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLAS) பயன்படுத்தப்பட்டுள்ளன. இந் நிதி அறிக்கையில் நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சற் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் நிதியறிக்கை தொடர்பான குறிப்புகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

#### 2.2 அளவீட்டு அடிப்படை

பல்கலைக்கழகத்தின் நிதியறிக்கையானது வரலாற்றுக் கிரய அடிப்படையின் கீழ் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தொடர்ந்துசெல்லும் எண்ணக்கருவின்படி தயாரிக்கப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்களில் தாக்கம் செலுத்தக்கூடிய பணவீக்கக் காரணிகள் தொடர்பான எந்தவொரு செம்மையாக்கமும், சாதாரணப் பெறுமதியில் மதிப்பிடப்படும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தவிர்ந்த எந்தவொரு விடயத்திலும் மேற்கொள்ளப்படவில்லை.

#### 2.3 ஒப்பீட்டு ரீதியான தகவல்

பல்கலைக்கழகத்தினால் பின்பற்றப்படும் அனைத்துக் கணக்கீட்டுக் கொள்கைகளும் கடந்த வருடத்தில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாகவும், தற்போதைய வருடத்திற்கான தொகைகளை முன்வைக்கும் போது சீராக்கங்கள் மேற்கொள்ள வேண்டிய அவசியமிருப்பின் மாத்திரம் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

#### 2.4 பொருண்மைத் தன்மையும் திரட்டலும்

அனைத்து சமப் பெறுமதியினைக் கொண்ட உருப்படி வகைகளும் நிதிக் கூற்றில் வெவ்வேறாக முன்வகைக்கப்பட்டுள்ளன. வேறுபட்ட இயல்புடைய அல்லது மாறுபட்ட செயற்பாடுகளுடைய உருப்படிகள், பொருண்மைத் தன்மையற்றதல்லாதனவாய் அமையும் சந்தர்ப்பங்களைத் தவிர்ந்த சந்தர்ப்பங்களில் வேறாக முன்வைக்கப்பட்டுள்ளன.

**2.5 <u>சமப்படுத்துதல்</u>**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் கீழ் வலியுறுத்தப்பட்டு அல்லது அனுமதியளிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களை தவிர்ந்த எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவீனங்கள் என்பன சமப்படுத்தப்படவில்லை.

**2.6 <u>தொடர்ந்து செல்லல்</u>**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகமானது தொடர்ந்து செல்லல் எண்ணக்கருவினை பின்பற்றி இயங்கிவருகின்றது. நீண்டதொரு எதிர்காலத்தினை நோக்கி தமது செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்கு போதிய வளங்களைப் இப் பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளதெனும், நியாயமான எதிர்ப்பார்ப்பினை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேரவை கொண்டுள்ளது. மேலும் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருதல் அல்லது கலைத்தல் தொடர்பான எதுவித ஐயமும் பல்கலைக்கழகத்திற்கு இல்லை. மேலும் பல்கலைக்கழகத்தின் எதிர்காலம் தொடர்பான அனைத்து தகவல்களும் கணக்குகளுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக, பல்கலைக்கழகமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுகளைத் தயாரித்துள்ளது.

**2.7 <u>அறிக்கையிடும் காலப்பகுதிக்கு பின்னரான நிகழ்வுகள்</u>**

அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னரான பொருண்மைத் தன்மைமிகு அனைத்து நிகழ்வுகளும் கருத்திற்கொள்ளப்பட்டதுடன், தேவைக்கேற்ப சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2.8 <u>செயற்பாடுகள் மற்றும் முன்வைக்கும் பண அலகு</u>**

பல்கலைக்கழகம் தொழிற்படும் முதன்மைப் பொருளாதார சூழலில் புழக்கத்திலிருக்கும் பண அலகினை (தொழிற்பாட்டுப் பண அலகினை) பயன்படுத்தியே பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள் அனைத்தும் மதிப்பிடப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு மற்றும் முன்வைக்கும் பண அலகான “இலங்கை ரூபாய் (ரூ.)” இல் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்படுகின்றன.

**2.9 <u>வெளிநாட்டு பண அலகுகளினாலான கொடுக்கல் வாங்கல்கள்</u>**

அனைத்து வெளிநாட்டு நாணயப் பரிமாற்றங்களும், குறித்தக் கொடுக்கல் வாங்கல் இடம்பெறும்போது காணப்படும் நாணயமாற்று விகிதத்திற்கு அமைவாக, மதிப்பிடப்பட்டு குறித்தப் பண அலகு இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படும்.

**2.10 <u>மட்டந்தட்டல்</u>**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிராத அனைத்து சந்தர்ப்பங்களிலும் நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானங்கள் கிட்டிய ரூபாய்க்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

**2.11 <u>ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்</u>**

பல்கலைக்கழகத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுள் நிலம், கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், நூலக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள், மோட்டார் வாகனங்கள், பட்டமளிப்பு அங்கிகள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் என்பன உள்ளடங்குகின்றன.

அ. **ஏற்பிசைவிற்கான அடிப்படைகள்**

நிறுவனத்தின் எதிர்கால நலனுக்கு சாத்தியமான, பொருளாதார ரீதியான நன்மைகளை உட்பாய்ச்சக்கூடியதும், குறித்த உருப்படிக்கான கிரயத்தினை நம்பகமாக மதிப்பிடக்கூடியதுமான வளங்களே ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக இனங்காணப்படுகின்றன.

**(i) முதன்மை ஏற்பிசைவு**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் முதலியன அவற்றினை குறித்த சேவை நிபந்தனைக்கு கொண்டுவரும் வரையில் இடம்பெற்ற கொள்வனவுச் செலவுகள் உள்ளடங்கலான கிரயத்திலேயே முதலில் இனங்காணப்படுகின்றன. இவை திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட சேதமிழப்பு என்பன கழிக்கப்பட்ட கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன.

**(ii) தற்போதைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான மீண்டெழும் செலவுகள்**

பின்வரும் அடிப்படைகளில் ஒன்றினை பூர்த்தி செய்யுமிடத்து குறித்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற நிலையான சொத்துக்களின் மீதான செலவீனங்கள் மூலதனமாக்கப்படும். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் நிலையான சொத்துக்கள் மீதான செலவீனங்கள் நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் குறித்த செலவு ஏற்பட்ட காலப்பகுதியிலேயே பதிவிடப்படும்.

- நிலையான சொத்துக்களின் சந்தைப் பெறுமதி உயர்வடைதல்
- உற்பத்தித்திறன் உயர்வடைதல்
- உற்பத்தித் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அல்லது செயற்பாட்டுக் கிரயம் குறைவடைதல்
- பழுதுபார்த்தல் மற்றும் பேணுதற் செலவுகளினூடாக் சொத்தின் ஆயுட்காலம் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்வடைதல்
- முதலில் மதிப்பிடப்பட்ட உற்பத்தித்திறன் கொள்கைகளினூடாக எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதாரா இலாபங்களை மீட்டெடுக்க அல்லது பேணிக்கொள்வதற்காக இடம்பெறும் செலவுகள் அனைத்தும் செலவீனங்களாகக் கருதப்படும்.

**(iii) ஏற்பிசைவின் பின்னரான மதிப்பீடு**

**கிரய உருமாதிரி**

நிலம், கட்டடங்கள், மோட்டார் வாகனங்கள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், ஏனைய உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் என்பன தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அனைத்தும் திரண்ட தேய்மானம் நீக்கிய அவற்றின் கிரயத்தில் முன்கொண்டு செல்லப்பட்டுள்ளன.

**மீள்மதிப்பீட்டு மாதிரி**

முதன்மையாக இனங்கண்டதன் பின்னர் பின்வரும் ஆதனம், பொறி மற்றும் உபகரண வகைகளின் சாதாரணப் பெறுமதி மதிப்பிடப்பட்டு மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படும். மீள்மதிப்பீட்டுத் திகதியன்று உள்ளவாறான சாதாரணப் பெறுமதியிலிருந்து தொடர்ந்து வரும் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் தொடர்ந்து வரும் திரண்ட சேதமிழப்புப் பெறுமதிகள் நீக்கப்பட்ட பெறுமதியே மீள்மதிப்பீட்டுப் பெறுமதியாக முன்கொண்டு செல்லப்படும்.

காணியும் கட்டடங்களும்
மோட்டார் வாகனங்கள்
அலுவலக உபகரணங்கள்
ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்
தளபாடங்களும் பொருத்துக்களும்
கணனியும் பாகங்களும்
விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முன்னெடுத்துச் செல்லும் பெறுமதி மற்றும் அருவச் சொத்துக்கள் என்பன ஒவ்வொரு அறிக்கையிடும் தினத்திலும் மீள்மதிப்பிடு செய்யப்படுகின்றன. சேதத்திற்கான அறிகுறிகள் எவையேனும் இருப்பின் அவற்றின் மீட்கக்கூடிய தொகை மதிப்பிடப்படும். சொத்தொன்றின் தற்போதைய பெறுமதி அதன் மீட்கத்தகு பெறுமதியைக் காட்டிலும் அதிகமாயிருப்பின் சேதமிழப்பானது ஏற்பிசைவு செய்யப்படுகிறது. சேதமிழப்பானது நிதி நிலைமைக்கூற்றில் இனங்காணப்படுகிறது.

**(iv)** **<u>நூலக புத்தகங்களும் பட்டமளிப்பு அங்கிகளும்</u>**

நூலக புத்தகங்கள் மற்றும் பட்டமளிப்பு அங்கிகளது கிரயம் 5 வருடத்திற்கு நேர்க்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படும்.

**(v)** **<u>அருவச் சொத்துக்கள்</u>**

கணனி மென்பொருள் மற்றும் இணையவழியான சஞ்சிகைகள் முதலிய சொத்துக்கள் நிறுவனத்திற்கு எதிர்கால நலன்களை உட்பாய்ச்சப்படக்கூடியனவாக இருக்குமிடத்து அவை அருவச் சொத்துக்களாக இனங்காணப்படுகின்றன. கையகப்படுத்திக்கொண்ட அருவச் சொத்துக்கள் கிரயத்தில் திரண்ட கடன்தொகுப்பு மற்றும் திரண்ட சேதமிழப்புக்கள் கழித்த தொகையாக பதிவிடப்படும். இக் கிரயமானது அதன் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்கும் பெறுமானம் தேய்விடப்பட்டு பதிவழிக்கப்படும்.

(ஆ) **<u>பெறுமானத்தேய்வு</u>**

நிதிக்கூற்றுக்களுக்குள் கட்டற்ற நிலங்களை தவிர, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முதலிய அனைத்து உருப்படிகளும் நேர்க்கோட்டு முறையில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளன. சொத்தொன்று பாவனைக்கு உட்படுத்தப்படும் போதே தேய்வுக்கு உட்படுத்தப்படும் அதேவேளை அவை விற்பனைக்காக வகைக்குறிக்கப்பட்ட தினத்தில் மற்றும் சொத்தாக இனங்காணப்படும் இறுதித்தினத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படும்.

மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயட்காலம் பின்வருமாறு;

| சொத்துக்கள் | மதிப்பிடத்தகு பயன்தரு ஆயுட்காலம் |
|---|---|
| கட்டடங்கள் | 20 வருடங்கள் |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 10 வருடங்கள் |
| ஆய்வுக்கூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| அலுவலக உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 2-5 வரையான வருடங்கள் |
| கணனியும் பாகங்களும் | 05 வருடங்கள் |
| விளையாட்டு உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| ஏனைய சொத்துக்கள் (நீர், தொலைபேசி மற்றும் மின்சார முறைமையுள்ளிட்டவை) | 10 வருடங்கள் |
| பகுதியாக்கல் மற்றும் உள்ளக பகுதிகள் தொடர்பான வேலைகள் | 05 வருடங்கள் |
| நிலஅளவை | 05 வருடங்கள் |

சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி அதன் மதிப்பிடத்தகு பெறுமதியினை காட்டிலும் அதிகமாயிருப்பின் ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் சொத்தின் எஞ்சும் பெறுமதியில் பணமாக்கக்கூடிய பெறுமதியில் பதிவிடப்படும். அகற்றலின் போதான இலாபம் மற்றும் நட்டமானது குறித்த சொத்தின் முன்கொண்டு செல்லும் பெறுமதி மற்றும் இலாபம்/ (நட்டம்) ஒப்பிடப்பட்டு தீர்மானிக்கப்படுவதோடு வருமானக்கூற்றில் இனங்காணப்படும்.

**(இ) <u>ஏற்பிசைவினை முடிவுக்குக் கொண்டுவருதல்</u>**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் எஞ்சிய பெறுமதி அவற்றை அகற்றும்போது அல்லது அவற்றில் எதிர்கால நலன் உட்பாய்ச்சப்படாதென எண்ணி அவற்றை பயன்பாட்டிலிருந்து முடிவுக்குக் கொண்டுவரும் வேளையில் ஏற்விசைவு முடிவுக்கு கொண்டுவரப்படும். பொருட்களை இனங்காணும் போது அவற்றை

இனங்காணுவதற்காக இடம்பெறும் இலாபம் அல்லது நட்டம், மிகை அல்லது குறையில் சேர்க்கப்படும்.

## 2.12 நிதிச்சொத்துக்கள்

**முதலீடுகள்**

நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்படும். இம் முதலீடுகள் இலங்கை நிதியறிக்கையிடல் நியமம் 09 (SLFRS 09) இன் படி பதிவிடப்படுகின்றன. மேலும் நிலையான வைப்புகள், மற்றும் சேமிப்புக் கணக்குகள் மீதான முதலீடுகள் இலங்கை நிதியறிக்கையிடல் நியமம் 09 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தப்பட்டு பதிவழிக்கப்படும். அவை அவற்றின் சாதாரணப் பெறுமதி குறைத்த கிரயப்பெறுமதியில் கணக்கிடப்படும அதேவேளை இலங்கை நிதியறிக்கையிடல் நியமம் 09 (SLFRS 09) இன் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன்மிகு வட்டி வீதத்தைப் பயன்படுத்தி கிரயப்படுத்தப்படும்.

**ஆளணியினருக்கான கடன்கள்**

ஆளணியினருக்கான கடன்களில் அனர்த்தக் கடன், கணனிக் கடன், வெளியீடுகளுக்கான கடன்கள், வாகனக் கடன் மற்றும் ஏனைய ஊழியர் கடன்கள் உள்ளடங்குகின்றன. இலங்கை நிதியறிக்கையிடல் நியமம் 09 இன் படி ஆளணியினருக்கான கடன்கள் பகிரப்பட்ட கிரயத்தில் நிதிச் சொத்தாக வகைப்படுத்தப்படுகின்றன. எந்தவொரு ஆளணியினருக்கான கடனினதும் பெறுமதியிழப்பானது இலங்கை நிதியறிக்கையிடல் நியமம் 09 இல் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்பார்த்த இழப்பு முறையில் இனங்காணப்படுகிறது.

## 2.13 நடைமுறையிலுள்ள மூலதனம்

அறிக்கையிடும் தினத்தின் போது பூரணப்படுத்தப்படாத ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான மூலதன செலவுகள், நடைமுறையிலுள்ள தொழிற்படு மூலதனமாக காட்டப்பட்டுள்ளன. இத் தொழிற்படு மூலதனம் பயன்பாட்டுக்கு தயாராக இருக்கும் வேளையில் ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு மாற்றப்படும்.

## 2.14 <u>நடைமுறை சொத்துக்கள்</u>

எதிர்பார்த்த அல்லது விற்பனையால் அல்லது பல்கலைக்கழகத்தின் வழமையான செயற்பாடுகளினால் அறிக்கையிடும் தினத்தின் பின்னரான 12 மாதங்களுக்குள் பயன்களை உட்பாய்ச்சுமென எதிர்பார்த்த சொத்துக்கள் அல்லது நிதி அல்லது நிதிக்கு சமனானவை, நிதி நிலைமைக்கூற்றிலே நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.15 <u>இருப்புக்கள்</u>

இருப்புகள் அனைத்தும் கிரயத்தில் பதிவுசெய்யப்பட்டிருப்பதோடு முதல் வந்தது முதல் சென்றது (FIFO) அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்புகளுள் பிரதானமாக காகிதாதிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் என்பன அடங்குகின்றன. இருப்புக்கள் நுகர்வுக்காக மட்டுமே, மீள்விற்பனைக்காக அல்ல.

## 2.16 ஆளணியினருக்கான முற்கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகள்

பல்கலைக்கழகத்தின் ஆளணியினருக்கான முற்கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகளுள் பண்டிகைக்கான முற்கொடுப்பனவுகள் மற்றும் புத்தகக் கொடுப்பனவுகள் உள்ளடங்குகின்றன.

## 2.17 காசு மற்றும் காசுக்கு சமனானவை

கையிலுள்ள காசு, கேள்வி வைப்புக்கள் மற்றும் விரைவாக காசாக மாற்றிக்கொள்ளக்கூடியதும் பெறுமதி மாற்றத்தின் போது சிறியளவினான இடரினை மாத்திரம் ஏற்படுத்தக்கூடியதுமான குறுங்கால உயர் திரவத்தன்மைக் கொண்ட முதலீடுகள் என்பன காசு மற்றும் காசுக்கு சமனானவையாக கருதப்படுகின்றன. காசுப்பாய்ச்சற் கூற்றின் நோக்கத்திற்காக, காசு மற்றும் காசுக்கு சமனானவை, கையிலுள்ள காசு மற்றும் வங்கி வைப்புகள் என்பன உள்ளடங்குகின்றன. ஆறுமாதம் அல்லது கொள்முதல் தினத்திலிருந்து குறைந்த முதிர்வுகாலத்தைக் கொண்ட குறுங்கால முதலீடுகளும் காசுக்கு சமனானவையாக கருதப்படுகின்றன.

## 2.18 மூலதனச் செலவுகளுக்கான அரச மானியங்கள் தொடர்பான கணக்கிடல்

### 2.18.1 மீண்டெழும் மானியங்கள்

மீண்டெழும் மானியங்கள் காசு அடிப்படையில் நிதிநிலைமைக்கூற்றில் இனங்காணப்படுகின்றன. ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் புனருத்தாபன கிரயமும் கட்டுமானத்திற்கான மூலதன மானியங்கள் மற்றும் புதிய வேலைகள் என்பன தேவைக்கேற்ப குறைவேலை அல்லது மூலதன சொத்துக்களாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 2.18.2 வெளிரீதியான மானியங்களினால் தொழிற்படு மூலதனத்திற்கான பங்களிப்பு

உருவாகிய நிதி மற்றும் வேறுபட்ட திட்டங்களினூடாக திரட்டப்படும் நிதியினூடாக கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி "வெளியக மானியங்களினால் தொழிற்படு மூலதனத்திற்கான பங்களிப்பு" என காட்டப்படுகின்றன.

### 2.18.3 மூலதன மானியங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களில் குறிப்பிடப்படாத காரணங்களுக்காக நிதிக் கூற்றுக்களில் மூலதனச் செலவுகளுக்கான மூலதனக் கொடுப்பனவுகள் இலங்கை கணக்கீட்டு நியமம் 20 (LKAS 20) இன் படி முன்வைக்கப்பட்டுள்ளன. கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக மூலதனக் கொடுப்பனவுகள் நிதி நிலைமைக் கூற்றுகளில் ஒத்திவைக்கப்பட்ட வருமானமாக இனங்காணப்படுவதோடு சொத்தின் பயனுள்ள ஆயுட்காலத்திற்கு பதிவழிக்கப்படுகின்றன.

### 2.18.4 உள்ளக ரீதியாக வரையறுக்கப்பட்ட நிதிகள்

நிச்சயமான செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியானது உள்ளக ரீதியில் வரையறுக்கப்பட்டுள்ள தேறிய சொத்துக்களுக்குள் உள்ளடங்குகின்றது. வருடத்தின் இறுதியில் செலவழிக்கப்படாத தேறிய மீதிகள் பீடங்களின்/ அபிவிருத்தி நிதி பீட அபிவிருத்தி நிதியாக குறிப்பிடப்படும்.

### 2.4.5 நன்கொடை நிதி

பல்கலைக்கழகத்திற்குக் கிடைக்கப்பெறும் வரையறுக்கப்பட்ட நன்கொடைகள் மற்றும் அவற்றினால் கிடைக்கும் முதலீட்டு இலாபங்கள் என்பன நன்கொடை நிதியில் உள்ளடங்குவதோடு அவை நன்கொடையாளியினால் முன்னிறுத்தப்படும் வெவ்வேறு நோக்கங்களின் அடிப்படையில் பயன்படுத்தப்படும்.

## 2.19 <u>ஊழியர் நலன்கள்</u>

**வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்**

பல்கலைக்கழக சேமலாப நிதிய (UPF) பங்களிப்புத் தொகை, ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF), பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் என்பன குறித்த நிலைமைகள் மற்றும் விதிமுறைகளுக்குட்பட்டவை. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதியம் என்பவற்றுக்காக ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுக்கான கொடுப்பனவிற்காக மேலதிக பங்களிப்புத் தொகை செலுத்தப்படுவதோடு மேலும் பணக் கொடுப்பனவு செய்வதற்கு சட்டபூர்வமான அல்லது எதுவித பொறுப்பும் காணப்படவில்லை.

**வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள்**

நிச்சய நலன் திட்டமென்பது வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கு மேலதிகமாக சேவைக்கு பிற்பட்ட திட்டமிடலாகும். 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுகளுக்கு அமைவாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் பணிக்கொடையை செலுத்த வேண்டும்.

## 2.20 <u>பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்</u>

**நடைமுறைப் பொறுப்புக்கள்**

நடைமுறைப் பொறுப்புக்கள் அவற்றின் புத்தகப் பெறுமதியில் பதிவிடப்பட்டுள்ளன.

**ஏற்பாடுகள்**

கடந்தகால நிகழ்வுகளின் பெறுபேறாக பல்கலைக்கழகத்தின் தற்போதைய பொறுப்புக்கள் (சட்டம் மற்றும் கட்டமைப்பு) ஏற்பாடுகளாக இனங்காணப்படுவதோடு அவை தீர்க்கப்படுவதற்காக பொருளாதார நலன்களை தொடர்புபடுத்தும் வளங்கள் அவசியப்படுவதோடு குறித்த பொறுப்பின் அளவு தொடர்பில் நம்பத்தகு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.20.1 வரையறுக்கப்பட்ட நன்மைப் பொறுப்புகள்

1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கமைவாக, சேவகர்களுக்கு குறிப்பிடத்தகு நன்மை பொறுப்பு இலங்கை

பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் சிறப்புப் பதத்திற்கு தொழிலுக்கு பின்னரான நலன்கள் ஊழியர் நலன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு 19 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. திட்டமிட்ட அலகுக்கடன் முறைமையினை (PUC) பயன்படுத்தி பொருத்தமான சட்டத்தினூடாக கடன் மதிப்பீடானது வருடாந்தம் இடம்பெறும். நிதிசார் சாதனங்களை அறிக்கையிடும்போது செயற்பாட்டு இலாபம் மற்றும் நட்டத்தினால் வரையறுக்கப்பட்ட நன்மைப் பொறுப்புக்கள் மீண்டும் கணக்குகளில் இனங்காணப்படும். வருடத்தினுள் ஊழியர்களால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக (தற்போதைய சேவைக் கிரயம்) இலபம் அல்லது நட்டம் மற்றும் வட்டிச் செலவீனங்களுடன் வரையறுக்கப்பட்ட நன்மைப் பொறுப்புக்களில் அதிகரிப்பினை பல்கலைக்கழகம் இனங்கண்டுள்ளது.

**கணக்கீட்டு மதிப்பீடு**

செயற்பாட்டு மதிப்பிடலுக்குள் வட்டி வீதம், சொத்துக்கள் மீதான எதிர்பார்த்த இலாப வீதம், எதிர்கால சம்பள உயர்வு மற்றும் மரண வீதம் தொடர்பான அனுமானங்கள் என்பன உட்படுத்தப்படும்

### 2.20.2. நிச்சயமற்ற பொறுப்புக்களும் நிச்சயமற்ற சொத்துக்களும்

நிச்சயமற்ற பொறுப்பு என்பது நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிச்சியமற்ற எதிர்கால நிகழ்வொன்று அல்லது நிகழ்வுகள் அல்லது தொடர்ச்சியாக நிகழ்தல் அல்லது நிகழமுடியாமை போன்ற காரணங்களால் இனங்காண முடியாத தற்போதைய பொறுப்பாக அறியப்படும் கடந்த நிகழ்வுகளால் உருவாகிய பொறுப்புகளாகும். இப் பொறுப்பினை அடைப்பதற்கு நிறுவன வளங்களில் வெளிப்பாய்ச்சல் அவசியமாகும்.

நிச்சயமற்ற சொத்து என்பது பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வொன்று அல்லது நிகழ்வுகளினூடாக உறுதிபடுத்தப்படும் கடந்தகால நிகழ்வுகளினால் உருவாகும் சொத்தாகும். இவை பல்கலைக்கழகத்தின் நிச்சயமற்ற சொத்தாக இனங்காண முடியாததும் பொருளாதார நலனை உட்பாய்ச்சக்கூடியனவுமாகும்.

## 2.21 வருமானத்தை இனங்காணல்

### 2.21.1 <u>கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகளினாலான வருமானம்</u>

பாடநெறிகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளினால் ஈட்டப்படும் வருமானமானது அட்டுறு அடிப்படையில் குறித்த பாடநெறி அல்லது பட்டக்கல்விக்ான காலத்தினுள் இனங்காணப்படுகிறது.

### 2.21.2 <u>நிதிசார் வருமானம்</u>

வட்டி வருமானம் குறித்து இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களில் குறிப்பிடப்படவில்லையென்பதால், இது இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இற்கமைவாக வினைத்திறன்மிகு வட்டி விகித முறையினை பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படுகிறது.

### 2.21.3 <u>செலவீன ஏற்பிசைவு</u>

பல்கலைக்கழகத்தின் அனைத்து நடவடிக்கைகளின் போதும் ஏற்படுகின்ற செலவீனங்கள், அட்டுறு அடிப்படையில் இனங்காணப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் பதிவிடப்படும்.

## 2.22 <u>காசுப் பாய்ச்சற் கூற்று</u>

காசுப் பாய்ச்சற் கூற்றானது இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 (SLPSAS 2) இற்கு அமைவாக நேரில் முறையை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருக்கும் அதேவேளை செயற்பாட்டு நடவடிக்கைகள், நிதிசார் நடவடிக்கைகள் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் இனங்காணப்படுகின்றன. குறிப்பிடத்தக்க விதத்தில் பெறும் மாற்றத்தினை ஏற்படுத்தாத முதலீடுகள், விரைவாக காசாக மாற்றக்கூடிய உயர் திரவத்தன்மைமிகு குறுங்கால முதலீடுகள் என்பன காசு மற்றும் காசுக்கு சமனானவைகளுக்குள் அடங்கும்.

**ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக் கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக் கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக் கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான நிதி மற்றும் முகாமைத்துவ பீடத்தின் வரவு, செலவுகள் சமமானதாக இருக்க வேண்டுமாயினும் கல்வி பீடங்கள் மூன்றின் மொத்த வரவு ரூபா 1,801,162 எனினும், வரவை விட செலவு கூடுதலாக காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டின் செலவு கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. | இந்த செலவுகள் பாட நெறிகள் ஆரம்பிக்கப்பட நடைபெற்றுள்ளதால், அந்த கணக்குகளின் செலவில் காட்டுவதற்கு காரணமாயிற்று. நிரந்தர அபிவிருத்தி கணக்குகள் எல்லா கல்விசார் பிரிவுகளுக்கும் உரித்தாதனால் 2013 ஆம் ஆண்டின் ஜேனல் குறிப்பு ஒன்றின் மூலம் அந்த கணக்கின் வரவுகள் இருப்பு பொது கணக்குக் மாற்றப்பட்டுள்ளது. அதன் மூலம் அந்த கணக்குகளின் செலவுகள் காட்டப்பட்டுள்ளது. | தமது சொந்த பாடநெறி வரவுக் கேற்ப செலவுகள் செய்யப்பட வேண்டுமே தவிர, வரவை விட அதிகமான செலவு கணக்காய்வான அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள படி மேற்கொள்ளப்பட வேண்டுமே தவிர, அரசாங்க கொடுப்பனவுகள், ஏனைய வரவுகள் மூலம் செய்யப்படக் கூடாது. |
| (ஆ) | சென்ற ஆண்டில் பரிசுகளுக்கான ஒதுக்கீடுகள் 8 க்கு கிடைத்த வட்டி வருமானம் ரூபா 216,821 சென்ற ஆண்டின் கணக்கோடு சேர்க்கப்படுவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் ஆதாயமாக காட்டப்பட்டுள்ளது. | 2017 ஆம் ஆண்டின் சேமிப்புக்கேற்ப ரூபா 216,821 ஆன வட்டிப்பணம் 2017 ஆம் ஆண்டின் கணக்குக் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருப்பதோடு அது 2018 ஆம் ஆண்டு கணக்குக்கு உள்வாங்கப்பட்டுள்ளது. | வருடத்தின் ஆதாயம் உண்மைதரவுகளை மட்டுமே கொண்டு காட்டப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் கூற்றுக்கள்

| இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் பற்றிய விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக தாபன கோவை 45.2 (XV) மூலம் பல்கலைக்கழக மானியக் குழுவின் அனுமதியை பெறாமல் பல்கலைக்கழகம் மீளாய்வாண்டில் ரூபா 290,214,000 மில்லியனை நிரந்தர இருப்புக்களில் முதலீடு செய்துள்ளன. | கூடுதலான பணம் இருப்பதாக அறிந்து கொண்டதும் அதனை கூடுதல் வட்டி தரக் கூடிய அரச வங்கி ஒன்றில் முதலீடு செய்ய வேண்டும். அனுமதியை பெற்றுக் கொள்ள அதிக நாட்கள் ஆகும். ஆகையால் 290,214,000 மில்லியன் ரூபாவுக்கு தேவையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழக சட்ட திட்டங்களுக்கமைய செயல்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணைமுறிகளை அறவிடும் போது, சரியான முறையில் கணக்கிடப்படாமையால் 7 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 400,737 மேலதிகமாக அறவிடப்பட்டுள்ளதால் அவ்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி பிணைமுறி இருப்பு அந்த தொகையை விட குறைவாக காட்டப்பட்டுள்ளது. | மேலதிகமாக கிடைத்த பிணைமுறி, பெறுமதியால் இரண்டு உத்தியோகத்தர்களது விடயங்கள் 2019 ஆம் ஆண்டு சரியாக்கப்பட்டுள்ளது. மீதி ஐந்து உத்தியோகத்தர்களது விடயமும் 2019 ஆம் ஆண்டு நிவர்த்தி செய்யப்படும். | எல்லா பிணைமுறிகளினதும் இருப்பு பரீசீலனை செய்யப்பட்டு அவற்றை திரும்பப் பெறுவதற்கான வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு முறைப்படி பதிவுகள் வைப்பதற்கான வழி வகைகள் வகுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஓராண்டிற்கு மேற்பட்ட பழமையான ரூபா 1,109,500 ஆன கேள்வி வைப்பு தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2014,2015, மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான மீளப் பெறப்படாத டென்டர் முதலீடுகள் 2018 ஆம் ஆண்டின் வரவோடு சேர்க்கப்பட்டுள்ளதுடன் ஒரு வருடத்துக்கு மேல் பழைமையான டென்டர் முதலீடுகள் இவ்வருடத்தில் நிவர்த்தி செய்யப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 519,200 நூலக இருப்பு பல்கலைக்கழக வருமானமாக காட்டப்பட்டுள்ளது. | மேற்படி நூலக முதலீடுகள், மறுபடியும் திருப்பிக் கொடுக்க வேண்டிய முதலீடுகள் ஆகையால் இவை பெரும்பாலும் பாடநெறியை நிறைவு செய்யாத மாணவர்களால் கிடைத்துள்ளது. பாட நெறி முடிவடைந்த பின் மேற்படி முதலீடுகள் திருப்பிக் கொடுக்கப்படும். | நிதிக் கட்டளைகள் படி செயல்பட வேண்டும். பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களது முதலீடுகள் ஆதாயத்தில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், திட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ விதிகளுக்கு கட்டுப்படாமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1985 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க பிரமாணத்தின் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக தாபனக் கோவை 44 (i)(v) பிரிவு | பல்கலைக்கழக முகாமைத்துவக் சபைக்கு 21 பேரை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நியமித்திருந்தது. அப்படியாயினும், அந்த பணிந்துரைக் கேற்ப பரிபாலன சேவையை பிரதிநிதித்துவப்படுத்தி அரச நிர்வாக அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு பரிபாலன சேவை | 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்துக்கமைய வெளிவாரி உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது பல்கலைக்கழக ஆணைக்குழு மூலம் நியமிக்க வேண்டும். | பல்கலைக்கழகத்துக்கு திறைசேரி உறுப்பினர் ஒருவரை பங்கு பெறச் செய்வதற்கான ஒழுங்குகளை முகாமைத்துவ சபை ஒழுங்கு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தரும் திறை சேரியின் ஒரு உத்தியோகத்தரையும் நியமிக்கக் கூடிய வாய்ப்பு இருந்தாலும் அது பற்றி கவனம் செலுத்தப்படவில்லை. | | |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் கோவையின் XXIV பிரிவு<br>------------------------------------------ | | | |
| (i) 3.7 மற்றும் 3.8 வசனங்கள் | பணிபுரிபவர்களிடமிருந்து கடனின் மாதாந்த கொடுப்பனவுகளை மாதாந்தோறும் பெற்றுக்கொள்ள வேண்டுமாயினும் 2017 ஆம் ஆண்டு டிசம்பரில் மொத்தம் 2,431,720 ரூபா கடன் இருப்பு 22 பேரிடம் இருந்து முறையாகவும் மாதந் தோறும் அறவிடப்படவில்லை. | உத்தியோகத்தர்கள் 8 பேர் பல்கலைக்கழகங்களுக்கு மாற்றம் பெற்று சென்றதால் 2 பேரின் ஊழியர் சேமநல நிதி செலுத்தப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட விடயத்தினால் மாதாந்த கொடுப்பனவாக அன்றி முழுத் தொகையும் செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய உத்தியோகத்தர்கள் இருவரில் ஒருவர் வேலையில் இருந்து விலகிக் கொண்டதால் அப்பணம் ஊழியர் சேமநல நிதியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க மாதாந்த மற்றும் கிரமமான கடன் தொகைகளை அறவிடும் பணி வகுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 3.18 வசனம் | பணிப்பாளர் 4 பேரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 384,870 இடர் கடன் மாதாந்த தொகையை முறைப்படி அறவிடாததுடன் அதற்கான வழிவகைகளும் வகுக்கப்படவில்லை. அது மட்டுமன்றி அவர்களுக்கு சம்பளமற்ற லீவுகள் வழங்கப்பட்டுள்ளன. | தற்போது சம்பளமற்ற லீவு பெற்றுக் கொடுப்பதற்கு முன் குறிப்பிட்ட கடன்களை அறவிட வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் சம்பள இல 3805 க்குரிய உத்தியோகத்தரின் கடன் தொகை 2019.05.29 ஆந் திகதி பல்கலைக்கழகத்துக்கு கிடைத்துள்ளது.<br><br>சம்பள இல. 8061, 7729, 6682 உரி விரிவுரையாளர்களின் சேமலாப நிதியைப் பெற்றுக்கொடுப்பதற்காக மூன்று மாத சம்பளத்தை பெற்றுக்கொள்ள விருப்பை தெரிவிக்காத காரணத்தால் காலதாமதமாகி உள்ளது. | சம்பளமற்ற லீவு வழங்கப்படும் போது செலுத்தப்பட வேண்டிய கடன்களை முறையாக பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் | | | |
| | நிதிப்பிரமாணம் 757/(2)(அ) | குறிப்பிட்ட ஆண்டின் டிசம்பர் 31 ம் திகதிக்கு பல்கலைக்கழகத்தின் மொத்த பெறுமதி சம்பந்தமான சொத்துக்கள் பற்றிய கணக்கெடுப்பு ஒன்றை நடாத்தி அந்த அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் நாயத்துக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | மேற்படி அறிக்கை தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது. | நிதிச்சட்டங்களுக்கமைய உரிய காலத்தில் பொருட்கள் பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | பல்கலைக்கழக தாபக்கோவை மற்றும் உயர்கல்வி நிறுவன தாபக்கோவை | | | நிதிச்சட்டங்களுக்கமைய உரிய காலத்தில் பொருட்கள் பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (i) | 20 ம் இலக்க சட்டத்தின் 3.1 பிரிவு மற்றும் 10 ம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவிபணியாளர்களின் வரவு திரும்பிச்செல்லல் லீவுகள் பற்றிய தகவல்களை உறுதி செய்யக்கூடிய வேலைத்திட்டமொன்றை தயாரிக்க வேண்டுமென்று குழுவின் போது கருத்து தெரிவிக்கப்பட்டாலும் அதன்படி செயல்பட்டிருக்கவில்லை. | இது பல்கழைக்கழக அமைப்பிற்கே ஏற்படும் காரணம் என்பதால் இது பற்றிய ஒரு முடிவு எடுக்கப்பட்டு இது விடயத்தில் செயல்பட வேண்டிய முறை பற்றி பல்கலைக்கழக மானியங்கள் குழு மூலம் சகலருக்கும் அறிவுரை வழங்க வேண்டும். | பல்கலைக்கழக சட்டங்களுக்கமையவும் பொது நிர்வாக செயற்குழு பரிந்துரைகளுக்கு ஏற்பவும் செயல்பட வேண்டும். |
| (ii) | XXVI இலக்கச் சட்டத்தின் 2.1 ஆம் பிரிவு | நிதி ஆண்டின் இறுதி தினத்திற்கு நிறுவனத்தின் சகல பொருட் நிரந்தர ஆதாயங்கள் என்பன அதற்காக நியமதிக்கப்படும் பரிசோதனைக்குழு மூலம் சரி, பிழை பார்க்கப்பட வேண்டுமாயினும் 2015 ஆண்டின் பிறகு பல்கலைக்கழக நூல்நிலைய புத்தகங்கள் பற்றிய பரிசோதனை ஒன்று நடாத்தப்படவில்லை. | பல்கலைக்கழக நூல்நிலைய புத்தகங்கள் பெருந்தொகையில் இருப்பதால் வருடாவருடம் கணக்கிடுதல் சிரமம் என்பதால் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை பரிசோதிப்பதற்காக பரிந்துறை வழங்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழக சட்டங்களுக்கமையவும் பொது நிர்வாக செயற்குழு பரிந்துரைகளுக்கு ஏற்பவும் செயல்பட வேண்டும். |
| (உ) | 2002 ம் ஆண்டின் நவம்பர் மாத 28 ஆம் திகதியிடப்பட்ட திறைசேரியின் HAI(எச்.ஏ.அய)/2002/2 இலக்க சுற்றறிக்கை | கணனிகள், கணனிகளின் தொகுதிகள் சம்பந்தமாக சுற்றறிக்கைபடி நிரந்தர இருப்புக்கள் பற்றிய அட்டவனை ஒன்று கொண்டு நடாத்தப்படவில்லை. | தற்போதைய நிரந்தர உடமைகள் பற்றிய விபரம் அட்டவணைக்கு உள்வாங்கப்பட்டுள்ளது. | சுற்றுநிருபங்களுக்கேற்ப செயல்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) 2003 ம் ஆண்டு ஜுன் மாத 2 ம் திகதி PED(பிஈடி)/12ம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 06.05.01 வசனம் | வருடாந்த நிதி அறிக்கையோடு திட்டமிடப்பட்ட வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கப்படவில்லை. அத்தோடு 2016 ம் 2017 ம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழ சட்டதிட்டங்களுக்கு அமைய செயல்பட வேண்டும். |
| (எ) 2015 ம் ஆண்டு செம்தெம்பர் 18 ம் திகதியிடப்பட்ட 13/2015 ம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் குழுவின் சுற்றறிக்கை | பல்கலைக்கழக பீடாதிபதிகள் 7 பேருக்கும் ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்களில் குறிப்பிட்ட ஆண்டின் எரிபொருள் 140 லீட்டர்களை விட மேலதிகமாக ரூபா 757,719 பெறுமதியான 6,272 லீட்டர் எரிபொருள் பாவிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ பீட்டத்தினதும் பொறியியல் பீடத்தினதும் எரிபொருள் அளவை விட கூடுதலாக ரூபா 344,598 பெறுமதியாக 2,624 லீட்டரும் ரூபா 173,556 பெறுமதியான மேலதிக 1,282 லீட்டரும் பாவித்துள்ளார்கள். | தேவைக்கேற்ப முகாமைத்துவ சபை மூலம் மேலதிக எரிபொருள் சுற்றிக்கை படி அனுமதிக்கப்பட்டுள்ளது. | சுற்றுநிருபங்களுக்கேற்ப செயல்பட வேண்டும். |

## 1.8 தகவல் தொழில்நுட்ப (IT) பொது பரிபாலன முறை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழக சம்பள அறிக்கையை தயாரிக்கும் கணனித் தொகுதியில் ஏற்பட்ட குறையின் காரணமாக | தனியார் கணக்காய்வு நிறுவனத்தால் பல்கலைக்கழக முகாமைத்துவ, கணக்காய்வு | ஏற்பட்டுள்ள தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டு அந்த தவறுகள் நிவர்த்தி செய்யப்படவோ அல்லது புது கணனி |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதத்தில் அந்த கணனிகளின் செயல்பாடு பற்றி, தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றின் மூலம் பரிசோதித்த போது ஒப்புவிப்பு தவறுகள் 26 உம் தகல் தொழில் நுட்ப ஒப்புவிப்பு தவறுகள் 25 உம் கண்டுபிடிக்கப்பட்டன. அதனால் மீளாய்வாண்டின் செலுத்தப்பட்ட மொத்த தொகை ரூபா 2,989,043,825 ஆன பணிப்பாளர் உழைப்புத் திறனின் பெறுமதி பற்றி கணக்காய்வில் குறைவற்ற நிலை பற்றி திருப்தி கொள்ள முடியவில்லை. | கமிட்டியின் சிபார்சுக்கேற்ப இந்த கணக்காய்வு நடாத்தப்பட்டதுடன் கண்டு கொள்ளப்பட்ட தவறுகள் மறுபடியும் பல்கலைக்கழக முகாமைத்துவத்துடன் ஆலோசனை செய்து, தவறுகளை திருத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதன்படி சம்பள கொடுப்பனவுகள் சரியாக செய்யப்பட்டுள்ளன. என்பதை உறுதி செய்கிறேன் சம்பளத்தை கணனி மயப்படுத்தல், பரிசோதித்தல் என்பன கொடுப்பனவுகள் செய்யப்பட மன் அனுமதி பெறப்பட்டு சம்பளங்கள் வழங்கப்பட்டுள்ளன. | தொகுதி ஒன்றை அறிமுகப்படுத்தவோ வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டு செயற்பாட்டு விளைவுகள் படி ரூபா 159,969,855 குறைபாடு ஏற்பட்டுள்ளதோடு, அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் குறைபாடு ரூபா 224,091,778 ஆகும். அதற்கேற்ப நிதி விளைவு ரூபா 64,121,923 ஆக உயர்ந்துள்ளது. இந்த வளர்ச்சி செலவு ரூபா 1,008,282,778 ஆல் கூடியிருந்தாலும், அதற்கேற்ப கூடியிருந்தாலும் அரசாங்க மானியம் ரூபா 815,768,897 ஆகவும் உள்ளக வருமானம் ரூபா 106,875,328 ஆகவும் முறைப்படுத்தல் ரூபா 153,094,571 ஆகவும் கூடியுள்ளமைஇந்த வளர்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு சம்பந்தப்பட்ட முன்னேற்றம் சம்பந்தமான ஆய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படும்.

- பல்கலைக்கழக மொத்த வருமானத்தில் 77% மேற்பட்ட தொகை அரச மானியங்களாக உள்ளதுடன் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது அரச மானியம் 25 % சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.
- மீளாய்வாண்டின் தினசரி செலவுகளோடு ஊழியர்களது கொடுப்பனவுகள் ரூபா மில்லியன் 3,031.23 ஆக உள்ளதுடன் சென்ற ஆண்டோடு ஒப்பிடும் போது 22.47 % சதவீத அதிகரிப்பாகும். ரூபா மில்லியன் 3,977.93 ஆன தொடர்ச்சியான மானியங்களில் ரூபா மில்லியன் 3.031.23 அதாவது 76.2% சதவீதம் ஊழியர் கொடுப்பனவுகளுக்கு செலவிடப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழக ஏனைய செலவுகளுக்காக ரூபா மில்லியன் 946.7 அதாவது

மொத்த அரச தொடர்ச்சியான மானியத்தில் 23.8% வீதம் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.

- சென்ற ஆண்டில் ரூபா. மில்லியன் 35.9 ஆக விருந்த பல்கலைக்கழக அன்றாட செலவுகள் மீளாய்வாண்டில் ரூபா மில்லியன் 74.4 வரை கூடியுள்ளது. 107% சதவீத அதிகரிப்பாகும்.

## 2.3 விகித ஆய்வு

### இலாபகரமான ஆய்வு

மீளாய்வாண்டின் குறைபாடு ரூபா மில்லியன் 159,969,855 உம் முழு வருமானம் 5,649,251,082 உம் இருந்ததால் இலாபகரமான விகிதம் நூற்றுக்கு (2.83) ஆனதுடன் சென்ற வருடத்தில் அந்த விகிதம் நூற்றுக்கு 5.23 வீதமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017/2018 ஆண்டு கற்கை ஆண்டுக்கான பல்கலைக்கழக 5 பீடங்களுக்கான மாணவர்கள் 54 பேர் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட அட்டவணைபடி மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள். | வராத மாணவர்களுக்கு பதில் அதற்கு கீழ்உள்ள மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் பிணை முறி செயல்படாமை காரணமாக விரிவுரையாளர்கள் 42 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 119,464,310 நிலுவையில் உள்ளது. அந்த அறவிடப்பட வேண்டிய பிணை முறி நிலுவையில் ரூபா 52,706,308 தொகை பத்து வருடங்களுக்கு குறைவானதாகவும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை 6,785,622 ஆகும். பிணை முறி செயல்படாத | 2018.12.31 ம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய பிணைமுறி பெறுமதியான ரூபா 119,063,568 ஆன நிலுவையின் 2019.05.31 ம் திகதிக்கு ரூபா 4,825,279.52 அறவிட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பிணைமுறி அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் இந்த அறவீட்டு முறையை மிகவும் வினைத்திறனுடன் செயல்படுத்துவதற்கான தேவையான யோசனைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | சகல பிணைமுறை நிலுவைகளையும் அறவிட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதேபோல இது போன்ற பிணைமுறை முறுகல்கள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க ஒப்பந்தங்களில் கடினத்தன்மையை எற்படுத்த முகாமைத்துவம் தக்க நடவடிக்கைகள் எடுக்க கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடத்தை கூட அறிய முடியாத தொகை ரூபா 4,972,380 ஆகும். | | |
| (இ) | வேறு பல்கலைக்கழகத்தில் இருந்து ஒரு வருட மாற்று வருடாந்த லீவு பெற்று வரும் உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தும் பொது அவர்களது கொடுப்பனவுகளில் இருந்து உழைக்கும் போது செலுத்தும் வரி குறைக்கும் போது குறிப்பிட்ட வரி அறவீட்டு முறைமை கையாளப்படாததால் 3 பேரிடமிரந்து கொடுப்பனவுகளில் இருந்து ரூபா 318,850 குறைவாக வரி அறவிடப்பட்டுள்ளது. | குறைத்து அறவிடப்பட்ட உழைக்கும் போது செலுத்தும் வரியை குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு திருப்பி ஒப்படைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த லீவுகள் முடிவடைய முன் தற்போது சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து குறிப்பிட்ட வரியை அறவிட வேண்டும் அத்தோடு ஏனைய பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்களை அவ்வப் பல்கலைக்கழகங்களுக்கு அறிவிக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கொள்கைகளுக்கேற்ப மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு பல்கலைக்கழக நிரந்தர இருப்புக்களின் மொத்தம் ரூபா 11,170,465,273 வெனினும் அதை உறுதிப்படுத்திக் கொள்ள நிரந்தர இருப்பு கணனிமயப்படுத்தல் மூலம் அன்றைய இருப்பை பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகள் இருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் நிதிக் கொள்கையை தயாரித்த பிறகு கூட கணனி மயப்படுத்தலில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய வசதிகள் இருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் நிதிக் கொள்கையை தயாரித்த பிறகு கூட கணனிமயப்படுத்தலில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய வசதிகள் இருப்பதை கண்கானிக்க முடிந்தது. | 2018 ஆம் ஆண்டில் பௌதீக பரிசோதனைகள் செய்யப்பட்டு நிரந்தர இருப்புக்கள், சீர் செய்யப்பட்டு வருகின்றன. | நிரந்தர உடமைகள் அட்டவணை பௌதீக செயற்பாடுகளுடன் ஒப்பிடக்கூடிய விதத்தில் கணனி மயப்படுத்தலை மேம்படுத்த ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்ப முதல் 6 வருடங்களுக்குள் திட்டமிடப்பட்ட செலவு ரூபா 420,458,710 பலவிதமான பரிசோதனைகள் 317 க்கு பரிசோதனை மற்றும் வெளியீட்டுகமிட்டியின் அனுமதி விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் 27 பரிசோதனை ஆலோசனைகள் கைவிடப்பட்டிருந்த தோடு மீளாய்வாண்டின் இறுதியில் கூட மேற்குறிப்பிட்ட பரிசோதனைகளில் 59 சதவீதமானவை அதாவது 187 பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனை அறிக்கைகள் சமாப்பிக்காது பரிசோதனை கைவிடப்பட்டுள்ள விரிவுரையாளர்களிடமிருந்து அப்பணத்தை திரும்ப பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பரிசோதனை கமிட்டி மூலம் இதனை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | பரிசோதனை நடவடிக்கைகள் முறையாகவும் பயனுடையதாகவும் அமைவதற்கான கூடுதல் கவனம் செலுத்தி புது பரீசீலனை முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | வைத்திய பீடத்தின் கலாநிதி ஒருவருக்கு முறையே 2012,2013, 2014 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் மொத்தம் ரூபா 4,313,800 பரிசோதனை 4 க்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலும் ஒரு பரிசோதனை நிறைவு பெற முன் மற்றுமொரு பரிசோதனை அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>மீளாய்வாண்டு நிறைவு பெறும் போது அதில் ஒரு பரிசோதனை கூட நிறைவு பெற்றிருக்காத நிலையில் கலாநிதி அவர்கள் 2012 ஆம் ஆண்டின் அனுமதித் தொகையில் ரூபா 800,850 உம் 2013 ஆம் ஆண்டில் 7பா 1,575,000 உம் முற்பணமாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதில் பொய்யான தகவல்களும் பொய்யான பற்றுச் சீட்டுக்களும் கொடுக்கப்பட்டிருந்தமை காணப்பட்டது. | இறுதி அறிக்கையை கூடிய சீக்கிரம் பரிசோதனை கமிட்டியிடம் ஒப்படைக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிதிக் கட்டளைகள், சுற்றறிக்கைகள் என்பனவற்றுக்கு ஏற்ப பரிசோதனைகளுக்கு பணம் செவு செய்யப்பட வேண்டியதுடன் பரிசோதனைகள் பற்றிய மீளாய்வு விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பண வருகைக்கு மேலதிகமாக காசோலைகள் கொடுக்கப்பட்டுள்ளதால் மீளாய்வாண்டின் ஜனவரி முதல் டிசெம்பர் வரை தினமும் ரூபா 15,706,750 முதல் ரூபா 163,374,592 வரை கணக்ககேடுகளில் கடன் மீதி தன்மை ஏற்பட்டுள்ளது. | மீளாய்வாண்டுக்குள் ஜனவரி முதல் டிசெம்பர் வரை தினமும் ரூபா 15,706,750 முதல் 163,374,592 வரை கணக்கேடுகள் கடன் மீதி காட்டப்பட்டாலும் காசோலைகள் வழங்கப்படும் போது வங்கி இருப்பில் குறை இருப்பு நிலை ஏற்படாத முறையில் காசோலைகள் வழங்கப்படுகின்றன. அதே போல் திறைசேரியால் பணம் கிடைக்கும் வரை காசோலைகள் தயாரித்து வைக்கப்படும். | கணக்கேடுகளில் குறை நிலை ஏற்படாத விதத்தில் வரவுக்கேற்ப கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும். |

## 3.3 நிதியங்களின் குறை பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மருத்துவ பீடத்திற்காக மெத்செவன காணியில் 5 ஏக்கரை சுவீகரிப்பதற்கான 1994 ஜுன் 29 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கேற்ப 1998 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை மூன்று தடவைகளில் ரூபா மில்லியன் 24 ம் மீளாய்வாண்டில் ரூபா மில்லியன் 50 ம் ஆக ரூபா மில்லியன் 74 மேல் மாகாண சபைக்கு கொடுக்கப்பட்டிருந்தாலும் மேற்படி காணியை பெற்றுக் கொள்வதற்கான வேலைகள் 2019 செப்டம்பர் 30 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படவில்லை. | கூடிய கெதியில் பெற்றுக்கொள்வதற்கான அமைச்சுடன் பேசி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | உறுதியை பெற்றுக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் துரிதப்படுத்த வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவ குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரசாயன விஞ்ஞான கூட கட்டத்திலும் புது கலா நிலைய புனர் நிர்மான வேலைகளதும் ஒப்பந்தக்காரர்களால் கைவிடப்பட்டிருந்தால் 2012 ஏப்ரல் 25 ஆந் திகதி ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டிருந்த அப்படியானாலும் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த ரூபா 2,268,483 முற்பணத்தில் பூர்த்தி செய்யப்படாத வேலைகளுக்காக திரும்ப பெற வேண்டிய ரூபா 1,764,013 செயற்திட்ட பிணைமுறியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படாததோடு அப் பணத்தை ஒப்பந்தகாரரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்படவில்லை. | இந்த பணத்தை பெற்றுக்கொள்ள சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை முகாமைத்துவ காலம் நிறைவு பெற முன் பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், இப்பணத்தை உடனடியாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.5 ஏனைய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டு ரூபா மில்லியன் 61.5 செலவில் விலை கொடுத்து வாங்கப்பட்ட கொஹுவெல காணியும், கட்டமும் பல்கலைக்கழக தேவைகளுக்கு பொருந்ததால் களனி பல்கலைக்கழக அழகியல் கல்வி நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் இந்த ஒப்படைப்பு, கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பல்கலைக்கழகம் பாவிக்க உடமை ஒன்று | 2017.03.07 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொது வர்த்தக செயற்குழு கூட்டத்தின் முடிவின் படி உயர் கல்வி அமைச்சின் செயலாளரிடம் இந்த காணியையும் கட்டத்தையும் மீண்டும் திருப்பி ஒப்படைக்க வேண்டும். என்று கேட்டுக்கொள்ளப்பட்டாலும் அழகியற் பல்கலைக்கழகம் அதனை எமது பல்கலைக்கழகத்து திருப்பி ஒப்படைக்க எவ்வித | முறைப்படி பெற்றுக்கொள்ளல் அல்லது பெற்றுக்கொடுத்தல் மடிவடைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் நிதி வெளியீடுகளில் உள்வாங்கப்பட்டிருந்தது. | நடவடிக்கையும் எடுக்கவில்லை. | |
| (ஆ) | அரசாங்க அல்லது அரச சார்பு நிறுவனங்களின் சேவைகளுக்காக சம்பள நிறைவேற்றல் திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட விரிவுரையாளர் ஒருவருக்கு செருத்தப்பட்ட சம்பளத்தில் உள்வாங்கப்பட்டிருந்த 7பா மில்லியன் 1,437,882 வை கல்வி கொடுப்பனவாக குறிப்பிட்ட நிறுவனத்தால் நிவர்த்தி செய்ய முடியாதென தெரிவிக்கபட்டுள்ளது. அதனால் அப்பணம் குறிப்பிட்ட விரிவுரையாளர்களிடமிருந்து மீளப் பெற வேண்டுமாயினும், அதற்கான சட்ட நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் எடுக்கப்படவில்லை. | பாதுகாப்பு செயலாளருக்கு 2019.04.26 ஆந் திகதி இந்த கொடுப்பனவுகள் சம்பந்தமாக கேட்கப்பட்ட தற்கேற்ப 2019.06.21 ஆந் திகதி பதில் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது அதற்கேற்ப அப்பணத்தை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீளப் பெறல் உடனடியாக நடைபெறல் வேண்டும். |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் தொகை 2,506 ஆக இருந்தது. அதிக கல்விசார் ஊழியர் பதவிகள் 249 ம் பரிபாலன பதவி ஒன்றும் ஏனைய கட்டளை நிலை உத்தியோகத்தர் பதவி (ஆறும்) 6 ம் மருத்துவர் பதவி (மூன்றும்) 3 ம் ஆம் | பொறியியல், தொழில்நுட்ப பீடங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பீடங்களாதலால் அதற்கான பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வெற்றிடங்களும் இதில் அடங்கும் புது பீடங்களுக்கான பதவிகள் அறிவிக்கப்பட்டாலும் அதற்கான சேர்த்துக்கொள்வதற்கான | வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கல்விசார் ஊழியர் பதவிகள் 32 ம் வெற்றிடமாக இருந்தன. மேலும் கல்விசாரா பதவி வெற்றிடங்கள் 152 ம் இருந்தன. | அறிவுறுத்தல்கள் 2018 ஆம் ஆண்டுக்குள் கிடைக்கவில்லை சில விஷேட பாடநெறிகள் சம்பந்தமாக தகுதியுடைய விரிவுரையாளர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காததால் சேர்த்தக் கொள்ளல் தாமதமாகி உள்ளது. பரிபாலன உத்தியோகத்தர்கள் பல்கலைக்கழக மானியங்கள் சபையால் நியமிக்கப்படுவார்கள்.<br><br>876 சுற்றறிக்கை படி குறிப்பிட்ட அமைச்சின் மூலம் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர் பதவிகள் (தொழில் நுட்ப ஊழியர் போன்ற) சம்பந்தமான பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை. | |

## 4. கணக்கீட்டு சுபாவமும், நல்லாட்சியும்

### வரவு, செலவு கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்ட 102 பிரிவுக்கு முரணாக நிதி பொறுப்பு கிடைத்ததன் பின் அந்த பெறுமதிகளுக்குகேற்ப வரவு செலவு கணக்கிடப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டில் 10 சந்தர்ப்பங்களில் வரவு செலவு அறிக்கை திருத்தப்பட்டுள்ளது. | பல்கலைக்கழக மானியங்கள் குழுவால் வெளியிடப்படும் சுற்று நிருபங்களுக்கேற்ப அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை செலுத்தவும் பல்கலைக்கழகத்தால் பின்பு காணப்பட்ட பரஸ்பர கருத்து பரிமாறல் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் குழுவால் தேவையான மூலதனம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப முதல் வரவு – செலவு அட்டவணை அடிக்கடி மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது. | பல்கலைக்கழக மானியங்கள் குழு, திறைசேரி, பல்கலைக்கழக முகாமைத்துவம் என்பன சேர்த்து ஆலோசித்து எடுக்கும் முடிவின் படி ஆண்டின் ஆரம்பத்துக்கு முன்பே வரவு – செலவு கணக்குகளை முறையாக தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பல்கலைக்கழக 2017 ஆம் ஆண்டின் நிலுவை பில் களை செலுத்துவதற்கு தேவையான ரூபா 730,000,000 பணம் மீளாய்வாண்டின் வரவு – செலவு அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டின் நிதித்திட்டங்களை தயாரிக்கும் போது 2018 ஆம் ஆண்டின் செலவுகளை மட்டும் உள்வாங்கியதுடன் ரூபா 730,000,000 வான 2017 ஆம் ஆண்டின் செலுத்தப்பட வேண்டிய பில்களை செலுத்துவதற்கான பணமாகினும் இங்கு உள்வாங்கப்பட்டிருந்தது. பொறியியல் பீடத்தின் கட்டங்களுக்கு செலுத்த வேண்டிய முற்பணமாகும். இதற்கான பணம் வழங்கப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் குழுவால் எனினும், குறிப்பிட்ட ஆண்டில் திறைசேரியால் பணம் கிடைக்காததால் 2018 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. | பல்கலைக்கழக மானியங்கள் குழு, திறைசேரி, பல்கலைக்கழக முகாமைத்துவம் என்பன சேர்த்து ஆலோசித்து எடுக்கும் முடிவின் படி ஆண்டின் ஆரம்பத்துக்கு முன்பே வரவு – செலவு கணக்குகளை முறையாக தயாரித்தல் வேண்டும். |

## 4.2 முறைமைசார் அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறைமைசார் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் படி எல்லா அரச நிறுவனங்களும் செயல்பட வேண்டியுள்ளதால் மீளாய்வாண்டிற்கு ஏற்ப ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் பாட நெறிக்களுக்கேற்ப எவ்வாறு செயல்பட வேண்டுமென்பது பற்றி போதுமான நோக்குடன் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>அதற்கேற்க ஐக்கிய நாடுகள் சபையின் 2030 நிகழச்சி நிரலுக்கு கேற்ப நிறுவனத்தின் செயல்கள் சம்பந்தமான முறைசார் அபிவிருத்தி நோக்கங்கள், நோக்கு மற்றும் அந்த நோக்குகைள சென்றடைய உள்ள தடைகள் இலக்குகளை அளவிடுதல் சம்பந்தமாகவும் நிறுவனத்தால் புரிந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | மேற்படி நோக்குகள் உணர்த்துவதற்கான தேவையான நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும். | மேற்படி நோக்குகளை இனங்காணுதல் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

**1.2 அபிப்ராயம் தொடர்பான மூலத்தளம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| (அ) பல்கலைக்கழகத்தின் சம்பளங்களை அறிக்கைப் படுத்தும் கணினி மென்பொருள் அமைப்பினில் நிலவிய குறைபாடுகள் காரணமாக மீளாய்வு ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் அந்த கணினி அமைப்பின் சரி நிலையினை தனியார் கணக்காய்வு நிறுவனம் ஒன்றின் மூலம் பரீட்சித்துப் பார்த்த போது 26 உள்ளீட்டுக் கட்டுப்பாட்டு அபாயங்கள் மற்றும் 25 தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டு அவதானங்கள் கண்டறியப்பட்டன. அதனால் மீளாய்வு ஆண்டுக்காகச் செலுத்தப்பட்ட மொத்த ரூபா 2,989,043,825/= பெறுமதியான ஊழியர் ஊதியத்தின் சரி நிலை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தி அடைய முடியவில்லை. | பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் கமிட்டியின் விதப்புரையின் பேரில் வெளிவாரியான கணக்காய்வு நிறுவனம் ஒன்றின் மூலம் இந்த கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் கண்டறியப்பட்ட அந்தக் குறைபாடுகளை மீண்டும் ஒருமுறை பல்கலைக்கழக முகாமைத்துவத்துடன் கலந்துரையாடி சரி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பிரதானமாக அந்த விதப்புரைகள் கணினி மென்பொருள்களின் உள்ளகக் கட்டுப்பாடுகளை முறைப்படுத்தல் மற்றும் பணிகளைப் பகிர்தல் என்பன தொடர்பானவையாக இருந்த அதே வேளை அங்கு சம்பள அளவுகள் அடையாளம் காணப்படவோ, அது தொடர்பான கணக்காய்வோ இடம்பெறாததுடன் பெறுமதியினில் பிழை இருப்பதாக அறிவிக்கப்படவில்லை. அந்த விதப்புரைகளின் பிரகாரம் உள்கக் கட்டுப்பாட்டு முறைமை சரி செய்யப்பட்டதுடன் வழங்கப்பட்ட சம்பளங்களின் கணிப்பீடு சரியானதென உறுதிப்படுத்துகின்றேன்.<br>சம்பளங்களை கணினி முறைமைக்கு உட்படுத்தலைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கும், அவற்றை வழங்குவதற்கும் முன்னர் அங்கீகாரம் வழங்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. |

(ஆ)பரிசில்கள் நிதியங்கள் தொடர்பான ஏழு சேமிப்புக் கணக்குகளின் மொத்தம் ரூபா 3,635,784/= மீதிக் கையிருப்பானது நிதி நிலைமை அறிக்கையில் பணம் மற்றும் பணத்துக்கு ஒத்தனவாக விடயங்கசளின் கீழ் அடையாளம் காணப்படாது முதலீடுகளின் கீழ் அடையாளம் காணப்பட்டிருந்தது.

எல்லா மாதங்களிலும் கணினி அமைப்புக்குள் சேர்க்கும் புதிய உள்ளீடுகள் முழுமையாகப் பரீட்சித்துப் பார்க்கப்படுவதோடு சகல பகுதிகளும் பிரதிநிதித்துவமாகும் வகையில் மாதிரிக் கூறுகள் பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றன. எவ்வாறாயினும் கணக்கு முறைமை சம்பளங்களைத் தயாரித்தல், சொத்து ஆவணங்கள் என்பவற்றுக்காக கணினி முறைமையைக் கொள்வனவு செய்வதற்கு ஆளுகைச் சபையின் அனுமதி மற்றும் பெறுகைக் கமிட்டியின் அனுமதி என்பன பெறப்பட்டுள்ளதோடு அந்த கொள்வனவானது தற்போதும் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது.

பரிசில் நிதியங்களின் கணக்குகளிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டி வருமானமானது சம்பந்தப்பட்ட நிதியத்துக்கு வழங்கப்படும் அதேவேளை அந்த நியத்திலுள்ள மூலதனப் பணத்தை பெற்றுக் கொள்ள முடியாது. ஆகவே அங்குள்ள வைப்புப் பணம் ஒரு முதலீடாக இருப்பதுடன் அது திரவத் தன்மை குறைந்த ஒரு சொத்தாக இருப்பதனால் பணம் மற்றும் பணத்துக்கு ஒப்பானது ஒன்றின் கீழ் கணக்கு வைக்க முடியாது.

**சட்ட திட்டங்கள் / கட்டளைகள் மீது கவனம் செலுத்துதல்**

**சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகள்**

| | | |
|---|---|---|
| அ. 1985 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 44 (i) (v) ஆம் உறுப்புரை | விளக்கம்<br>பல்கலைக்கழக ஆளுகைப் பேரவைக்கான 21 உறுப்பினர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டனர். அவ்வாறாயினும் இந்த உறுப்புரையின் பிரகாரம் நிர்வாக பகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் பொதுத்துறை நிர்வாக அமைச்சில் இருந்து பிரதிநிதி ஒருவரும் திறைசேரியிலிருந்து பிரதிநிதி ஒருவரும் நியமிக்கப்பட்ட முடியுமாக இருந்தாலும் அது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை. | 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் வெளியக உறுப்பினர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | | |
| (1) 3.7 மற்றும் 3.8 ஆம் பந்திகள் | ஊழியர்களின் கடன் தவணைகளை தொடர்ச்சியாகவும் மாதாந்த ரீதியாகவும் அறவிடப்பட வேண்டுமாயினும் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது நிலவிய மொத்தம் ரூபா 2,431,720 கடன் நிலுவை அதிகாரிகள் 22 பேரிடமிருந்து அவ்வாறு மாதாந்த ரீதியாகவும் தொடர்ச்சியாகவும் அந்த கடன் தவணைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2017 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது நிலவிய நிலுவையில் கடன் 20 பேரின் கடன் நிலுவையானது 2018 ஆம் ஆண்டினில் அறவிடப்பட்டு உள்ளது. ஊழியர் கடனைப் பெற்றுக்கொண்ட அதிகாரிகள் 8 பேர் வேறும் பல்கலைக்கழகங்களுக்கு மாற்றம் பெற்று சென்றுள்ளமையால் கடன்களைக் கையேற்றதன் |

மூலமும் சேவையிலிருந்து நீக்கியதன் மேல் அவர்களின் ஊழியர் சேம இலாப நிதியை விடுவிக்கும் போது ஊழியர்கள் 5 பேரிடமிருந்தும், ஊழியர் சேம இலாபக் கடன் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் போது ஊழியர்கள் 7 பேரிடமிருந்தும் இடர் கடன் பணத்தை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட காரணங்களின் படி கடன் பணத்தைத் தவணை முறையிலன்றி மொத்தக் கடன் பணமும் அறவிடப்பட்டது. எஞ்சிய ஊழியர் இருவருள் ஒருவர் சேவையிலிருந்து நீங்கிச் சென்றதன் பேரில் அவரிடமிருந்து மீளப் பெற வேண்டிய கடன் பணத்தை அவரது ஊழியர் சேம இலாப நிதியிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய ஊழியர்களிடமிருந்து கடன் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டு உள்ளது.

| | | |
|---|---|---|
| (ii) 3.18 ஆம் பந்தி | கடன் பணத்தை அறவிடுவதற்கு அல்லது அறவிடுவதில் திருப்திகரமான வேலைத்திட்டம் ஒன்றைப் பிரயோகிக்காது இடர் கடன் பெற்றிருந்த அதிகாரிகள் 04 பேருக்கு சம்பளம் அற்ற விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. | தற்போது சம்பளம் அற்ற விடுமுறையைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னர் கடன் பணங்களை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ள கடன் பணத்திலிருந்து ஒரு நபரின் கடன் பணம் தற்போது கிடைக்கப் பெற்று உள்ள அதே வேளை ஏனைய ஊழியர்களின் கடன் பணங்களை அவர்களது ஊழியர் சேம இலாப நிதியை விடுவிக்கும் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. |
| (இ) **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வித் தாபனங்கள் கோவை** | | |
| 20 ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி மற்றும் 10 ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பந்தி | கல்விசார் பணிக்குழாமினரின் வருகை, வெளியேறுகை மற்றும் விடுமுறைகள் என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான செயல்முறை ஒன்றினை வகுத்துக் கொள்ள வேண்டும் என்று பொது தொழில்கள் குழு ஆலோசனை வழங்கி இருந்தாலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்க இல்லை. | இது முழு பல்கலைக்கழக முறைமையின் மீதும் பாதிப்புச் செலுத்தும் ஒரு விடயமாகையால் இது தொடர்பாகத் தீர்மானம் ஒன்றை எடுத்துச் செயற்பட வேண்டிய விதம் பற்றி பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆலோசனை வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ஈ. | 2002 நவம்பர் 22 ஆம் திகதி இடப்பட்ட HAI/2002/02 ஆம் இலக்க திறைசேரியின் நுற்று நிருபம் | கணினிகள் மற்றும் கணினித் துணைக் கருவிகள் தொடர்பான சுற்று நிருபத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் ஆவணம் ஒன்று பேணப்பட்டு இருக்க இல்லை. | நடைமுறையிலுள்ள நிலையான சொத்துக்கள் தொடர்பான ஆவணத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. |
| உ. | 2003 ஜுன் 02 ஆம் திகதி இடப் பட்ட PED / 12 ஆம் இலக்க அரசத் தொழில்கள் சுற்று நிருபத்தின் 06.05.01 ஆம் பந்தி | வருடாந்த நிதி அறிக்கையுடன் வருடாந்த வரைபு அறிக்கையின் பிரதி ஒன்று கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக் கப்பட்டு இருக்கவில்லை. மேலும் 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளன. |

ஊ. 2008 ஜுன் 26 ஆம் திகதி இடப்பட்ட 13/2008 ஆம் இலக்க மற்றும் 2001 பெப்ரவரி 09 ஆம் திகதி இடப்பட்ட 13/2008 (iv) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக அமைச்சின் சுற்று நிருபங்கள்

1/2015 அரச தொழில்கள் சுற்று நிருபம், 2015 செப்டெம்பர் 18 ஆம் திகதி இடப்பட்ட 13/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபம் மற்றும் 2017 ஒக்டோபர் 10 ஆம் திகதி இடப்பட்ட சா.பா/01/2017 ஆம் இலக்க உள்ளகச் சுற்று நிருபம்.

பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள் 07 பேருக்காக ஒதுக்கப்பட்டிருந்த வாகனங் களுக்கு மீளாய்வு ஆண்டினில் ரூபா 2,512 528/= பெறுமதியான 18,032 லீட்டர் எரிபொருள் விநியோகிக்கப்பட்டு இருந்த அதே வேளை மாதம் ஒன்றுக்கு 140 லீட்டர் எரிபொருள் என்ற அடிப்படையில் 11,760 லீட்டர் எரிபொருள் உரித்தாகக் கிடைக்கப் பெற்ற அவர்கள் அந்த அளவு எல்லையைத் தாண்டிச் சென்று ரூபா 757,719/= பெறுமதியான 6,276 லீட்டர் எரிபொருளை மேலதிகமாகப் பயன்படுத்தி உள்ளனர்.

தமக்கு அனுமதிக்கப்பட்ட எரிபொருள் அளவின் எல்லையைத் தாண்டி.ச் சென்று முகாமைத்துவப் பீடத்தின் பீடாதிபதி ரூபா 344,598/= பெறுமதியான எரிபொருளை மேலதிகமாகப் பயன்படுத்தியமையாலும் ரூபா 173,556/= பெறுமதியான 1,282 லீட்டர் எரிபொருளை பொறியியல் பீடத்தின் பீடாதிபதி மேலதிகமாகப் பயன்படுத்தியமையாலுமே இந்த எரிபொருள் செலவு அதிகரித்ததைப் பிரதானமாக பாதித்த அதேவேளை சார்பு ரீதியாக கூடுதலான தூரத்தைப் பயணம்

தேவைப்பாட்டின் பிரகாரம் ஆளுகைச் சபையினால் சுற்று நிருபத்துக்கு மேலதிக எரிபொருள் அனுமதிக்கப்பட்டு உள்ளது.

செய்கின்றவர்களுக்கு குறைந்த அளவு எரிபொருள் செலவாகும் வாகனங்கள் ஒதுக்கப்படாமையும் முறையான கட்டுப்பாடு இன்றி மேலதிக எரிபொருள் செலவை ஈடு செய்தமையும் இவ்வாறு மேலதிக எரிபொருள் செலவு அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தது என்று அவதானிக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் கூறப்படும் தேவைப்பாட்டின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த நிறுவனத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு ஒவ்வாத முறையில் செயற்படவுள்ளமை அவதானிக்கபட்டது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ( ஏ ) ஆம் உறுப்புரையில் கூறப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் நிறுவனத்தின் வளங்கள் வீண் விரயமின்றியும் செயற்றிறன் மிக்க வகையிலும் விளைதிறன் பொருந்திய வகையிலும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் சட்ட திட்டங்களின் பிரகாரம் பெறுகை இன்றி பயன்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 3. **ஏனைய அவதானிப்புக்கள்** | |
| அ. 2017/2018 கல்வி ஆண்டுக்காகப் பல்கலைக்கழகத்தின் 06 பீடங்களுக்கு 3528 உள்வாரி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்ட அதே வேளை பிரயோக விஞ்ஞான பீடத்துக்கு சேர்த்து.க் கொள்வதற்கு முன் மொழியப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 744 ஆக இருந்தமையால் 41 வெற்றிடங்கள் நிலவியதுடன் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்துக்கு 07 மாணவர்களும் தொழில்நுட்பப் பீடத்துக்கு 04 மாணவர்களும் தாதிச் சேவைக் கற்கை நெறிக்கு 01 மாணவரும் மருத்துவப் பொருளியல் கற்கை நெறிக்கு 01 மாணவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுப்பி இருந்த ஆவணத்தின் பிரகாரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. |
| ஆ. 2017 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்பட்டு இருந்து பணியாளர் குழாத்தினரின் எண்ணிக்கை 2,506 ஆக இருந்த அதே வேளை அவற்றுள் 249 கல்விசார் பணிக்குழாம் பதவிகளும் 01 நிர்வாகப் பணிக்குழாம் பதவியும் ஏனைய நிறைவேற்றுப் பணிக்குழாமில் 06 பதவிகளும் 03 மருத்துவர் பதவிகளும் 32 கல்விசார் துணைப் பதவிகளும் வெற்றிடமாக நிலவி இருந்தது. | பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்பப் பீடம் ஆகிய இரண்டு பீடங்களும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பீடங்களாகையால் அவற்றுக்குரிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. அந்த வெற்றிடங்களும் இதில் இடம்பெற்றுள்ளன. புதிய பீடங்களுக்கான பதவிகள் உள்ளடக்கப்பட்டாலும் ஆட்சேர்ப்பு ஏற்பாட்டுத் திட்டம் 2018 ஆம் ஆண்டினில் கிடைக்கப் பெற இல்லை. சில விசேட பாடங்களுக்குத் தகுதி வாய்ந்த விரிவுரையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாமை காரணமாக ஆட்சேர்ப்பு தாமதமடைந்துள்ளது.<br><br>நிர்வாக அதிகாரிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலேயே நியமிக்கப்படுகின்றனர். |

| | |
|---|---|
| (இ) அனுமதிக்கப்பட்ட கல்விசாரா பணிக்குழாமினரின் எண்ணிக்கை 1,172ஆகும். அவற்றுள் 1,006 பதவிகள் நிரந்தர அடிப்படையிலும் 14 பேர் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள அதே வேளை 152 பதவிகள் வெற்றிடங்களாக நிலவியுள்ளன. | 876 சுற்று நிருபத்தின் பிரகாரம் சம்பந்தப்பட்ட அமைச்சினால் பயிற்றப்பட்ட அதிகாரிகள் (தொழில்நுட்ப அதிகாரிகள் போன்ற) பதவிகள் தொடர்பான ஆவணங்கள் முன்வைக்கப்பட்டு இருக்க வில்லை. |
| ஈ. மெத் செவன காணியிலிருந்து மருத்துவ பீடத்துக்கு 05 ஏக்கர் நிலத்தைக் கைப்பற்றுவது தொடர்பாக 1994 ஜுன் 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சர் அவையின் தீர்மானத்தின் படி 1998 ஆம் ஆண்டில் இருந்து 2010 ஆம் ஆண்டு வரை 03 சந்தர்ப்பங்களில் ரூபா 24 மில்லியன் பணமும் மீளாய்வு ஆண்டினில் ரூபா 50 மில்லியன் பணமும் ( மொத்தம் 74 மில்லியன் பணம்) மேல் மாகாண சபைக்கு செலுத்தப்பட்டு இருந்தாலும், சம்பந்தப்பட்ட நிலத்தைக் கைப்பற்றும் நடவடிக்கை 2019 ஜுன் 30 ஆம் திகதி வரை எடுக்கப்படவில்லை. | அவசரமாகக் கைப்பற்றுவதற்கு அமைச்சுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) 2014 ஆம் ஆண்டி.ல் ரூபா 61.5 மில்லியன் பணத்தைச் செலவு செய்து கொள்வனவு செய்த கொஹுவலையில் அமைந்திருந்த நிலமும் கட்டடமும் பல்கலைக்கழகத் தேவைக்குப் பொருத்தமற்றதாகக் காணப்பட்டமையால் களனிப் பல்கலைக்கழகத்தின் அழகியல் கலை கற்கை நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்பட்டு இருந்தாலும் அந்த ஒப்படைப்பானது கணக்கீட்டுக்கு உட்படுத்தப்படாதிருந்த அதே வேளை பல்கலைக்கழத்தினால் பயன்படுத்தப்படாத ஒரு சொத்து என்ற வகையில் மீளாய்வு ஆண்டுக்கு உரிய நிதி அறிக்கையில் சேர்க்கப்பட்டிருந்தது. | 2017 மார்ச் 07 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தொழில்கள் பற்றிய நிறைவேற்றுக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் உயர் கல்வி அமைச்சுச் செயலாளரிடம் இந்த நிலத்தையும் கட்டடத்தையும் மீண்டும் ஒப்படைப்பதற்குத் தேவையான நடவடிக்கையை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டு இருந்தாலும் அழகியற் கலைப் பல்கலைக்கழகமானது எமது பல்கலைக்கழகத்துக்குப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கையை எடுக்க இல்லை.<br><br>2017.03.07 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தொழில்கள் பற்றிய நிறைவேற்றுச் சபையின் |

| | |
|---|---|
| ஊ. அரசாங்கத்தில் அல்லது அரசாங்கத்தோடு இணைந்த நிறுவனங்களில் சேவை புரிவதற்காக சம்பளம் ஈடு செய்யப்படுவதன் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டு இருந்த விரிவுரையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட சம்பளத்தில் அடங்கி இருந்த ரூபா 1,437,882/= கல்விசார் கொடுப்பனவு சம்பந்தப்பட்ட நிறுவனத்திலிருந்து ஈடு செய்ய முடியாது என்று அறிவிக்கப்பட்டு இருந்தமையால் அப்பணத்தைச் சம்பந்தப்பட்ட விரிவுரையாளரிடமிருந்து அறவிட்டுக் கொள்ள வேண்டுமாயினும் அது தொடர்பான சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கான செயற்பாடு எதுவும் மீளாய்வு ஆண்டினில் கூட மேற்கொள்ளப்படவில்லை. | விதப்புரையின் பிரகாரம் இந்தக் கொடுப்பனவை ஈடு செய்வதற்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு உள்ள அதே வேளை நினைவு ஊட்டலும் அனுப்பப்பட்டிருந்தாலும் அதற்கான துலங்கல் எதுவும் கிடைக்கவில்லை. மீண்டும் எழுத்து மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| எ. இரசாயனவியல் ஆய்வுகூட கட்டடம் மற்றும் புதிய கலைக்கூடம் ஆகிய இரண்டையும் பழுது பார்க்கும் பணியினைச் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் கைவிட்டுச் சென்றிருந்தமை காரணமாக 2012 ஏப்ரல் 25 ஆம் திகதி அந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு இருந்தது. அவ்வாறாயினும், ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டு இருந்த ரூபா 2,268,483/= முன் பணத்திலிருந்து முடிக்கப்படாத வேலைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,764,013/= வினையாற்றுகை பிணை முறியில் இருந்து அறவிடப்படாது இருந்ததோடு அப்பணத்தைச் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து மீளாய்வு ஆண்டிலாவது அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | இந்தப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. |
| ஏ. நிதி அறிக்கையின் பிரகாரம் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக்களின் மொத்த கூட்டுத்தொகை ரூபா 11,170,465,273/= ஆயினும் அதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நிலையான சொத்துக்கள் பற்றிய மென்பொருளின் மூலம் அன்றைய தினத்தன்று நிலவும் மீதியின் கூட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கான வசதி காணப்படவில்லை. மேலும் நிதி அறிக்கை தயாரிக்கப்பட்டு முடிந்ததன் பின்னர் கூட மென்பொருளின் நிலையான சொத்துக்களின் உருப்படிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அவதானிக்கப்பட்டது. | 2018 ஆம் ஆண்டில் பௌதீகப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தொகைகள் இற்றைப்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. |

| | |
|---|---|
| ஒ. மீளாய்வு ஆண்டின் இறுதி ஆகும் போது பிணை முறியை மீறிய விரிவுரையாளர்களிடம் இருந்து கிடைக்கப் பெற வேண்டிய ரூபா 119,464,310/= அறவிடப்பட்ட வேண்டிய பிணை முறி மீதி தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. | |
| (i) பிணை முறி ஆண்டுகளின் பிரகாரம் கவனத்தில் எடுக்கும் போது மீளாய்வு ஆண்டு முடிவுறும் சந்தர்ப்பத்தில் விரிவுரையாளர்கள் 42 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 119,464,310/= மீதியில் இருந்து ரூபா 52,706,308/= பணம் அதாவது 44 வீதம் 5 வருடங்களுக்குக் குறைந்த பிணை முறி மீதி ஆக இருக்கும் அதே வேளை ரூபா 55,516,711/= அதாவது 47 வீதம் வருடங்களை விடப் பழமையானவை என்றும் அவதானிக்கப்பட்டது. மொத்தம் ரூபா 6.268 911 /= அல்லது மொத்த மீதியின் 5 வீதம் 20 வருடங்கள் பழமையான மீதிகளாகும் என்றும் ரூபா 5,073,694 /= அதாவது 4 வீதம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிணை முறி மீறப்பட்ட வருடத்தைக் கூட அடையாளம் காண முடியாதிருந்தது என்று மேலும் அவதானிக்கப்பட்டது. | கணக்கின் பிரகாரம் மீதியானது பிழையற்றதாக இருக்கும் அதே வேளை கல்விப் பிரிவின் அட்டவணையைத் திருத்துவதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு உள்ளது. |
| 2. கடந்த வருடத்தின் இறுதியில் நிலவிய அறவிடப்பட வேண்டிய பிணை முறி ரூபா 132, 974, 791 மீதியில் இருந்து 5 வருடங்களுக்கு குறைவான பிணை முறிகளின் 80.52 வீதம் அல்லது ரூபா 52,706,308 உம், 5 வருடங்களுக்குக் கூடுதலானதும் 10 வருடங்களுக்குக் குறைவானதுமான கிடைக்கப் பெற வேண்டிய பிணை முறிகளின் 98.55 வீதம் அல்லது ரூபா 32, 036, 025/= உம் 20 வருடங்களுக்குக் கூடுதலான பிணை முறிகளில் 95.44 வீதம் அல்லது 6, 268, 911 /= உம் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது அறவிடப்பட்டு இருக்கவில்லை. அதே போன்று 20 வருடங்களுக்குக் குறைந்த கூட்டுத் தொகையான ரூபா 23, 379, 372 /= பெறுமதியான பிணை முறிகளில் இருந்து ஆண்டினை கண்டறிய முடியாத கூட்டுத் தொகையான ரூபா 5, 073, 694 ஆன மற்றும் பிணை முறிகளிலிருந்த எவ்விதப் பணமும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய பிணை முறிகளின் பெறுமதியான ரூபா 119,063,568 ஆன மீதியில் இருந்து 2019.05.31 ஆம் திகதி ஆகும் போது ரூபா 4, 825, 279.52 சதத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிணை முறியை இடைவிடாது தொடர்ந்தும் அறவிடப்படும் அதே வேளை இந்த அறவீட்டு வழிமுறையை அதிகம் செயற்றிறன் மிக்க வகையில் அறவிட்டுக் கொள்ளும் அவசியம் தொடர்பான மு.ன்மொழிவுத் திட்டம் ஒன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. |

| | |
|---|---|
| ஓ. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 (ஆ) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பல்கலைக்கழகங்களில் பணத்தை முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் உடன்பாட்டுடனான அனுமதியில் உயர் கல்வி அமைச்சரிடம் இருந்து பெற்றுக் கொள்ளுதல் மற்றும் 1978 ஆ.ம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 45.2 (XV) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாது பல்கலைக்கழகத்தின் மூலம் மீளாய்வு ஆண்டினில் ரூபா 290,214,000 மில்லியன் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு இருந்தது. | பண மிகை இருப்பதாக இனம் காணப்படும் சந்தர்ப்பத்தில் அந்தப் பணத்தை உயர்ந்த வட்டி வீதத்தைத் தரும் அரச வங்கி ஒன்றில் முதலீடு செய்யப்படும். முதலீடு செய்யப்பட்ட ரூபா 290, 214, 00 மில்லியன் பணத்து.க்கான பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டது. முதலீட்டுக்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டு முதலீடு செய்யும் போது கூடுதலான காலம் எடுப்பதனால் இந்த வழிமுறை பின்பற்றப்பட்டது. |
| ஔ. பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் ஒருவர் தம்மை அந்தப் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்தமை தொடர்பாக பல்கலைக்கழகத்துக்கு எதிராக மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து இருந்தாலும் அது தொடர்பான வெளிப்படுத்தல் எதுவும் நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. | இந்த வழக்கில் வாதித்தரப்பின் சாட்சியங்கள் முடிவுற்று உள்ளன. பிரதி வாதித் தரப்பினரின் சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இந்த வழக்கின் அடுத்த தவணை 2019 ஜூலை 30 ஆம் திகதியாகும். |
| ஃ. முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு கற்கை நிறுவனத்தில் சேவை புரிந்த பிரதிப் பொருளாளர் ஒருவரின் இரண்டாம் வருடச் சேவை நீடிப்பினை பல்கலைக்கழகமானது வழங்காமை தொடர்பாக அவர் பல்கலைக்கழகத்துக்கு எதிராக மேல் நீதி மன்றில் வழக்கு ஒன்றைத் தொடுத்து இருந்தார். | இந்த வழக்கில் தொழில் பிணக்குச் சபை வழங்கி இருந்த தீர்ப்பினை மேல் நீதிமன்றம் உறுதிப்படுத்தி இருந்தது. |
| க. முறையான ஒழுக்காற்றுப் பரிசீலனை ஒன்றின் மூலச் சேவை முடிக்கப்பட்ட எழுது வினைஞர் 111 ஆம் வகுப்பு அதிகாரி ஒருவரை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு தொழில் பிணக்குச் சபையினால் வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்புக்கு எதிராகப் பல்கலைக்கழகத்தினால் மேல் நீதிமன்றினில் மேன்முறையீடு ஒன்று செய்யப்பட்டு இருந்தது. | வழக்கின் கட்டளை 2019 ஆகஸ்ட் 09 ஆம் திகதியாகும். |

| | |
|---|---|
| (ச) பிணைமுறியைமீறியதன்காரணமாக அறவிடவேண்டிய ரூபா5,103,826/=பணத்தைஅறவிட்டுக் கொள்வதற்காக முன்னாள் விரிவுரையாளர் ஒருவருக்கு எதிராகப் பல்கலைக்கழகத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு இருந்தது. | பிணை முறியை மீறியமை காரணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 5,103,826 /= பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காகப் பல்கலைக்கழகமானது முன்னாள் விரிவுரையாளருக்கு எதிராக மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்றை தொடுத்து உள்ளது. அந்த வழக்கின் பிணையாளர்கள் கல்கிசை சிவில் மேல் நீதி மன்றில் வழக்கினைத் தொடுத்துள்ளனர். அடுத்த வழக்குத் தவணை 2019 செம்டெம்பர் 10 ஆம் திகதியாகும். |
| ட. பிணை முறியை மீறியதன் காரணமாக அறவிட வேண்டிய ரூபா 10,762,632 பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக பயிலுனர் விரிவுரையாளர் ஒருவருக்கு எதிராகப் பல்கலைக்கழகத்தினால் மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. | வழக்கு விசாரணை 2019 செம்டெம்பர் 23 ஆம் திகதி ஆரம்பமாகி உள்ளது. |
| த. பல்கலைக்கழகத்தின் கட்டிடங்கள் இரண்டை பழுது பார்க்கும் பணியைக் கைவிட்டுச் சென்ற ஒப்பந்தக்காரரிடமிருந்து ரூபா 1,785,240/= பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காகப் பல்கலைக்கழகமானது மாவட்ட நீதிமன்றில் இரண்டு வழக்குகளைத் தொடுத்துள்ளது. | 2019 செம்டெம்பர் 20 ஆம் திகதி வழக்கு மீண்டும் அழைக்கப்படவுள்ளது. |
| ப. மீளாய்வு ஆண்டின் ஆரம்பம் வரை உள்ள 6 வருட காலத்துக்குள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா 420,458,710 /= பணம் பல்வேறு 317 ஆராய்ச்சிகளுக்காக ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் கமிட்டியின் அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. அவற்றுள் 27 ஆராய்ச்சி முன்மொழிதல்கள் கைவிடப்பட்டு உள்ள அதேவேளை மீளாய்வு ஆண்டு முடிவுறும் போது கூட மேற்குறிப்பிட்ட ஆராய்ச்சிகளில் 32.5 வீதமானவை அதாவது 103 ஆராய்ச்சிகள் முடிக்கப்பட்டு இருந்தன. | ஆராய்ச்சி அறிக்கைகளைச் சமர்ப்பிக்காது ஆராய்ச்சிகளைக் கைவிட்டு உள்ள விரிவுரையாளர் களிடமிருந்து அதற்கான பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. ஆராய்ச்சிக் கமிட்டியின் மூலம் அதனை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. |

| | |
|---|---|
| ற. மருத்துவ பீடத்தின் மனநல விஞ்ஞானப் பேராசிரியர் ஒருவருக்கு முறையே 2012, 2013, 2014 மற்றும் 2016 ஆகிய வருடங்களில் ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள் 04 அங்கீகரிக்கப்பட்டு இருந்த அதேவேளை ஓர் ஆராய்ச்சி முடிவுறுவதற்கு முன்னர் பிறிதொரு ஆராய்ச்சிக் கொடுப்பனவினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தது. 2012 ஆம் ஆண்டில் இருந்து மொத்தமாக ரூபா 4,313,800/= பணம் மேற்குறிப்பிட்ட ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு இருந்தாலும் மீளாய்வு ஆண்டு முடிவுற்ற போது கூட அவற்றுள் ஓர் ஆராய்ச்சியாவது முடிக்கப்பட இல்லை. மேலும் சம்பந்தப்பட்ட பேராசிரியர் 2012 ஆம் ஆண்டுக்குரிய ஆராய்ச்சிக் கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 800, 850 வும் 2013 ஆம் ஆண்டுக்குரிய கொடுப்பனவுகளில் இருந்து ரூபா 1,575,000 /= வும் முன் பணமாக பெற்றுக்கொண்ட அதே வேளை பிழையான முன்னேற்ற அறிக்கைகளும் பிழையான இரசீதுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இறுதி அறிக்கையை மிக அவசரமாக ஆராய்ச்சிக் கமிட்டியிடம் முன்வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| ய. நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி பற்றி ஐக்கிய நாடுகள் தாபனத்தின் "ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரலின்" பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் செயற்பட வேண்டியவனாகத் இருப்பினும் மீளாய்வு ஆண்டு தொடர்பாக ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகமானது தனது விடயப் பரப்புக்கு உட்படும் பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றிப் போதிய புரிதலோடு செயற்பட்டு இருக்கவில்லை. அதன்படி ஐக்கிய நாடுகள் தாபனத்தின் " ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரலின்" பிரகாரம் தாபனத்தின் பணிகள் தொடர்பான நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய மைல்கல்கள், இலக்குகளின் அடிப்படையில் அடைவதை அளவிட்டு அறிவதற்கான குறியீடுகளையும் அடையாளம் காண்பதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட குறியீடுகளை அடையாளம் காண்பதற்குத் தேவையான செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேற் கொள்ளப்படும். |

# வளம்பேணும் அபிவிருத்திக் கண்ணோட்ட அறிக்கை

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

# 2018

# வளம்பேணும் அபிவிருத்திக் கண்ணோட்ட அறிக்கை 2018

## ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

### எமது தூரநோக்கு

**கல்வியினூடாக விருத்தி இருக்கின்றது.**

### எமது பணி

**வளம்பேணும் எதிர்காலத்துக்காக எமது கலாச்சார பாரம்பரியம் மற்றும் ஞானத்திலிருந்து உத்வேகங்களை பெற்றுக்கொண்டு எமது கல்வியினுடாக உலகளாவிய ரீதியில் தேர்ச்சிமிக்க குடிமக்களை விருத்தி செய்தல்.**

வளம்பேணும் அபிவிருத்திக்காக வரும் தசாப்தத்தில் எமது மூலோபாய கல்வி அனுகுமுறை எமது தனித்துவமான 4H மாதிரியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவையாவன - ● விமர்சன ரீதியாக சிந்தித்தல். ●நீதியாக உணருதல் ●திறமையாக செயலாற்றல் ●நன்றாக இருத்தல் மற்றும் 3P மாதிரியை ஆழமாக சிந்தித்தல்●மக்கள் ●புவி ●வளமை




**வளம்பேணும் அபிவிருத்திக்கான கல்வி**

**3-P மாதிரி - ●மக்கள் ●புவி ●வளமை :**

**வளம்பேணும் அபிவிருத்திக்காக வரும் தசாப்தத்தில் எமது கல்வி அனுகுமுறை**

வளம்பேணுதல் என்றால் என்ன என்பது பற்றி உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. அவ்வாறு என்றால் என்ன மற்றும் அதனை எவ்வாறு அடையலாம் என்பது பற்றி பல்வேறுப்பட்ட பார்வைக்கோணங்கள் காணப்படுகின்றன. வளம்பேணுதல் கருத்து வளம்பேணும்

அபிவிருத்தியின் கருத்திலிருந்தே உருவாவதோடு இது 1992ல் ரியோவில் நடைப்பெற்ற உலகின் முதலாவது சுற்றுச்சூழல் மற்றும் அபிவிருத்தியின் உலக ஆணையத்திற்கான (1992) ப்ருட்லேண்ட் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளதுபடி, ‘‘எதிர்கால தலைமுறையினரின் சுய தேவைகளை பூர்த்தி செய்யும் திறனை விட்டுக்கொடுக்காமல் தற்போதைய தேவைகளை பூர்த்தி செய்யும் அபிவிருத்தி ” என்பது வளம்பேணும் அபிவிருத்தி ஆகும்.

2015ஆம் ஆண்டில் “எங்கள் உலகத்தை மாற்றியமைத்தல்: வளம்பேணுதலுக்கான 2030 ஐ.நா. நிகழ்ச்சி நிரல்” அறிமுகப்படுத்திய 17 வளம்பேணும் அபிவிருத்தி இலக்குகளை நாம் ஏற்றுக்கொள்வதோடு அதனை மதிக்கின்றோம். இந்நிகழ்ச்சி நிரலானது மக்கள், புவி மற்றும் வளமைக்கான செயல்திட்டமாகும் (படம் 6)

1) **மக்கள்-** சமூக பிரச்சினைகள் (அனைத்து மக்களதும் நலனை மேம்படுத்தல்)
2) **புவி-** சூழல் பிரச்சினைகள் (சுற்றுச்சூழல்களை பாதுகாத்தல் மற்றும் மீட்டமைத்தல்.)
3) **வளமை** – பொருளாதார பிரச்சினைகள் (பொருளாதார வினைதிறனை அதிகரித்தல்)




**3-Ps – மக்கள், புவி மற்றும் வளமை**

**வளம்பேணும் பல்கலைக்கழகத்திற்கான மாற்றம்**

வளம்பேணும் அல்லது பசுமையான பல்கலைக்கழகத்திற்கு பயனுள்ள மாற்றத்திற்காக யு.எஸ்.ஜே.பி. கீழ்வரும் ஐந்து முக்கிய விடயங்களை முக்கியமாக கருதுகின்றது; சிறந்த முகாமைத்துவ பொறுப்பு, கல்வி உள்ளீடு, பல்கலைக்கழக ஆராய்ச்சி முயற்சிகள், உள்ளூர் சமூக உதவி மற்றும் மத்திய ஒருங்கினைப்பு மையம்.




### யு.எஸ்.ஜே.பி. லிருந்து வளம்பேணும் பல்கலைக்கழகமாகுதல்

## 1. சிறந்த முகாமைத்துவ ஒத்துழைப்பு – நிர்வாக செல்வாக்கு

வளம்பேணுதலுக்கான பல்கலைக்கழகத்தின் சிறந்த முகாமைத்துவ ஒத்துழைப்பானது ஆரம்பத்திலேயே மற்றும் அமுல்படுத்தும் செயற்பாட்டிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. புதிய கட்டிட வடிவமைப்பு, பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் திட்டங்கள், கட்டிட செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு எரிசக்தி மேலாண்மை கொள்முதல் நடைமுறைகள், நிலத்தோற்றம், பல்வேறு மட்டங்களில் மறுசுழற்சி செய்தல், கழிவு முகாமைத்துவம், போக்குவரத்து, உணவு சேவை மற்றும் உணவு நடவடிக்கைகள் மற்றும் விடுதி நடவடிக்கைகள் ஆகியவற்றை அவர்கள் எடுக்கும் முக்கிய முடிவுகள் உள்ளடக்குகின்றது.

## 2. கல்வி உள்ளீடு – பிரிவு மற்றும் மாணவர்களின் (கல்வி துறைகள்) வகிபாகம்

கல்வி அம்சமும் குறிப்பிடத்தக்கது மற்றும் அது வேறுப்பட்ட வழிகளில் இருக்கலாம். இது தான் எதிர்கால வளம்பேணுதலுக்கான முதலீடு. கல்விசார் மற்றும் கல்விசாராத நடவடிக்கைகளில் ஈடுபடுதலூடான வளம்பேணும் கல்வியினால் மாணவர்கள் பாடங்களில் நீண்டகால மற்றும் குறுங்கால நன்மைகளை அடைகின்றனர். அவர்கள் முடிவில் தங்கள் சமுகத்தில் தலைவர்களாகி அவர்களுடன் வளம்பேணுதலின் முக்கிய பிரயோகங்களை கொண்டுவருகின்றனர். பல்வேறுப்பட்ட கற்பித்தல் முறைகளானது உலகிலுள்ள பிரச்சினைகளை முகங்கொடுக்க அவர்கள் என்ன கற்கிரார்களோ அதனை பிரயோகித்துக்கொண்டவாறு தேவைப்படும் கல்வியை கற்பதற்கு மாணவர்களை அனுமதிக்கின்றது. இந்த கல்வி மாதிரியானது பல்கலைக்கழக சூழலுக்கு மிகவும் பொருத்தமானதோடு உள்நாட்டு தேவைகள் மற்றும் பயன்பாடுகளுடன் அறிவுத்தளத்தை ஒருங்கிணைப்பதற்கான ஒரு வழிமுறையாகும். இது இயற்கையைப் பொறுத்து உடனடி பலனைப் பெறலாம். பட்டறைகள் மற்றும் பயிற்சி அது போல தொலைதூர அல்லது இணையவழி கற்றல்கள் போன்ற வளம்பேணும் அபிவிருத்தியை மேம்படுத்துகின்ற கற்கைநெறிகளுக்கான மேலும் கல்விசார் வாய்ப்புக்கள் இருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபை (http://www.un.org/sustainabledevelopment/takeaction/) ஒரு தாக்கதினை ஏற்படுத்த பல விடயங்களில் சிலவற்றை நாம் செய்வதற்கு எங்களுக்காக தொகுத்துள்ளதால் நம்முடைய நடைமுறைகளிற்குள் சில இலகுவான விடயங்களை எடுத்துக்கொள்ளலாம். அவ்வாறு நாம் அனைவரும்

செய்தால் ஒரு பாரிய வித்தியாசத்தை ஏற்படுத்தலாம். எமது முயற்சிகளில் கீழ்வரும் விடயங்களை நாம் முக்கியமாக கருதுவோம்:

- **எமது பயிற்சியாளரிடமிருந்து நாம் செய்யக்கூடிய விடயங்கள்**
- **நாம் வீட்டில் செய்யக்கூடிய விடயங்கள்**
- **நாம் வீட்டிற்கு வெளியில் செய்யக்கூடிய விடயங்கள்**

### 3. ஆய்வு முயற்சிகள்

பல்கலைக்கழகத்தின் ஆய்வு சபை அதன் அருகிலுள்ள மற்றும் நீண்டகால தாக்கங்களின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க பங்கை கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் வாழ்விடங்கள் மற்றும் பிற சுற்றுச்சூழல் பிரச்சினைகள், சமூக பிரச்சினைகள் மற்றும் பொருளாதார பிரச்சினைகள் பற்றி ஏற்கனவே நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆய்வு செயற்திட்டங்கள் உள்ளன. ஆராய்ச்சிக்கான விடயங்கள் பெரிய அளவில் உரம் தயாரிக்கும் முறைகள், மாற்று சக்திவளங்கள் மற்றும் கட்டிட வடிவமைப்பு, கட்டுமானம், செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு நடைமுறைகள் போன்றவற்றையும் உள்ளடக்குகின்றன.

### 4. உள்நாட்டு சமூகத்தின் உதவி

பல்கலைக்கழகத்தின் உள்நாட்டு சமூகம் வளம்பேணும் முயற்சிகளுக்கு உதவ பல்வேறு நிலைகளில் வளங்கள் மற்றும் ஈடுபாட்டையும் வழங்க முடிவதோடு இது பழைய மாணவர்கள், வணிக சமூகம், பயன்பாட்டு வழங்குநர்கள், விற்பனையாளர்கள், பிற சேவை வழங்குநர்கள், சமூக அமைப்புக்கள் மற்றும் தொழில்முறை சங்கங்கள் ஆகியவை உள்ளடக்குகின்றது.

### 5. மத்திய ஒருங்கிணைப்பு

வளம்பேணுதலுக்கான மையத்தினுடாக முழு வளம்பேணுதல் முயற்சிகள் ஒண்றிணைக்கப்பட்டுள்ளது. இந்த அர்ப்பணிப்பு மையம் அதன் குறிக்கோள்களை அடைவதற்கு திட்டமிடல் முயற்சிகள், செயற்திட்டங்கள், வலையமைப்பாக்கம், மற்றும் நிகழ்ச்சியின் முன்னேற்றத்தை கண்காணித்தல் போன்ற அனைத்தையும் ஒருங்கிணைக்கின்றது. இது தகவல்களை பகிர்வதற்கும், சிக்கல்கள் மற்றும் கருத்துக்களை புரிந்துகொள்வதற்கும் மற்றும் எதிர்கால முயற்சிகளுக்காக திட்டங்களை உருவாக்குவதற்கும் ஆரம்பத்தில் அவசியமாகின்றது. கிட்டத்தட்ட, ஒவ்வொரு பிரிவு, துறை, மையம் மற்றும் அலகுக்கு சில முக்கிய பங்குண்டு.

## 4-H வாக்குறுதி :

4-H அளிக்கும் வாக்குறுதியை பின்பற்றி அனைவரது ஒத்துழைப்பையும் பல்கலைக்கழகம் வேண்டுகிறது.

"USJP ல் நான் தங்கியிருக்கும் காலத்திலும் அதன் பிறகும் பின்வருவனவற்றில் கவனம் செலுத்துவதாக உறுதியளிக்கின்றேன் ;

**எனது தலை (HEAD) விமர்சனமான சிந்தனைக்கு,**

**எனது இதயம் (HEART) நீதியாக உணர்வதற்கு,**

**எனது கைகள் (HANDS) திறமையாக செயலாற்றுவதற்கு,**

**எனது ஆரோக்கியம் (HEALTH) நலமாக இருப்பதற்கு** (சிறந்த வாழ்விற்கு),

இவை எனக்காக, எனது பல்கலைக்கழகத்திற்காக, எனது சமூகத்திற்காக, எனது நாட்டுக்காக மற்றும் எனது உலகத்திற்காக ஆகும்."

## முக்கிய மதிப்பீடுகள்

பகிரப்பட்ட மதிப்பீடுகள் யு.எஸ்.ஜே.பி. சமூகத்தினால் எவ்வாறு பணிகள் நடத்தப்படும் என்பது குறித்த உறுதிப்பாடாகும். யு.எஸ்.ஜே.பி. யில் எமது மதிப்பீடுகளாவன :

- **கல்விசார் சிறப்பும் செயல்திறனும்**
- **உலகலாவிய அன்பும் பரிவும்**
- **பணிவு மற்றும் நேர்மை**
- **சமூக கலாச்சாரம் மற்றும் இயற்கை பாரம்பரியத்தை பாதுகாத்தல்**
- **அறிவுசார் சிந்தனை மற்றும் படைப்பாற்றல் சுதந்திரம**
- **பொறுப்புக்கூறல் மற்றும் சமூக பொறுப்பு**

யு.எஸ்.ஜே. யின் தூரநோக்கு, பணி மற்றும் முக்கிய மதிப்பீடுகள் மனித மூலதனத்தின் வளர்ச்சியின் மூலம் வளம்பேணுதலின் பரந்த நோக்கத்துடன் தெளிவாக இணைக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக கார்ப்பரேட் திட்டத்தில் 2017-20121 விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

## இலக்குகள்

வளம்பேணுதலுக்கான பங்களிப்புக்காக யு.எஸ்.ஜே. யின் பரந்த அனுகுமுறையுடன் குறிக்கோள்கள் மற்றும் மூலோபாயங்கள் ஏழு பரந்த இலக்குகளின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. கற்றல் மற்றும் கல்வி: வளம்பேணுதலினூடாக விமர்சன ரீதியாக சிந்தித்தல், ஒழுக்கமாக நடந்துக்கொள்ளல், திறமையாக செயலாற்றல், நலமாக இருத்தலினை கவனித்தல்.
2. ஆய்வு மற்றும் மேம்பாடு: ஆய்வு, வெளியீடு, பொதுமக்கள் ஈடுபாடு, படைப்பாற்றல் மற்றும் கண்டுபிடிப்பு
3. மக்கள்:கல்விசார் பிரிவு மற்றும் ஊழியர்கள்

4. உள்கட்டமைப்பு: நிறுவன கட்டமைப்புகள், வள நிர்வாகம் மற்றும் மேம்பாடு (மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தை உருவாக்கல் மற்றும் முன்னேற்றத்திற்கான முயற்சியும் உள்ளடங்கும்)
5. நிதி
6. சிறந்த மாணவர் அனுபவம்: நலமாக இருத்தல்
7. வாழ்நாள் சமூகம், சமூக பொறுப்பு, உள்நாட்டு அபிவிருத்தி மற்றும் உலகளாவிய/பிராந்திய தாக்கம்

## மூலோபாய இலக்குகளின் பரப்பு

| பரப்பு | பரந்த இலக்குகளின் தலைப்புக்கள் |
|---|---|
| **1. பிரதானமாக கருத்தற் கொள்ள வேண்டியவை** | **1. கற்றல் மற்றும் கல்வி:** வளம்பேணுதலினூடாக விமர்சன ரீதியாக சிந்தித்தல், ஒழுக்கமாக நடந்துக்கொள்ளல், திறமையாக செயலாற்றல், நலமாக இருத்தலினை கவனித்தல். |
| | **2. ஆய்வு மற்றும் மேம்பாடு:** ஆய்வு, வெளியீடு, பொதுமக்கள் ஈடுபாடு, படைப்பாற்றல் மற்றும் கண்டுபிடிப்பு |
| **2. வசதிவழங்குநர்** | **3.மக்கள்:** கல்விசார் பிரிவு மற்றும் ஊழியர்கள் |
| | **4. உள்கட்டமைப்பு:** நிறுவன கட்டமைப்புகள், வள நிர்வாகம் மற்றும் மேம்பாடு (மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தை உருவாக்கல் மற்றும் முன்னேற்றத்திற்கான முயற்சியும் உள்ளடங்கும்) |
| | **5.** நிதி |
| **3. கவனிக்க வேண்டிய மூலோபாயங்கள்** | **6.** சிறந்த மாணவர் அனுபவம்**:** நலமாக இருத்தல் |
| | **7.** வாழ்நாள் சமூகம், சமூக பொறுப்பு, உள்நாட்டு அபிவிருவிருத்தி மற்றும் உலகளாவிய/பிராந்திய தாக்கம்(முடிவுகள்) |

நிலையான அபிவிருத்தி இலக்குகள்

2017 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் வெளியிடப்பட்ட ருளுது நிறுவன திட்டத்தில் உரையாற்றிய ஏழு நிலையான அபிவிருத்தி இலக்குகளை கீழுள்ள அட்டவணை முன்வைக்கிறது.

| SDG | ருளுது இன் பெருநிறுவன திட்டங்களின் 2017-2021 | | | |
|---|---|---|---|---|
| | சுநஅயசமள | புழயட(ள) | ழுடிதநஉவளைந (ள) | ளுவசயவநபநைள |
| 1. வறுமை இன்மை | இவை பணி நோக்கம் குறிக்கோள் என்பவற்றால் தெளிவாக குறிப்பிடப்பட்டுள் ளது | இலக்கு1 | 1.3<br>2.1 | 1.2.4<br>1.3.2<br>2.1.3<br>2.4.1 |
| 2. பசியாளர்க ள் இன்மை | | இலக்கு 1 | 1.3<br>2.1 | 1.2.4<br>1.3.2<br>2.1.3<br>2.4.1 |
| 3. ஆரோக்கிய ம் மற்றும் நல்வாழ்வு | குறிக்கோள்கள் மூலம் பிரதிபலிக்கிறது | இலக்கு 1 | 1.1<br>2.1<br>2.4<br>6.5 | 1.1.4<br>2.1.3<br>2.4.1<br>6.5.1<br>6.5.2 |
| 4. தரமான கல்வி | பணி மதிப்பு குறிக்கோள் என்பவற்றால் பிரதிபலிக்கப்பட்டு ள்ளது | இலக்குகள் 1,2 | இலக்கு 01 இன் சகல நோக்கங்கள்<br>2.2 | இலக்கு 01 இன் சகல மூலோபாய உத்திகள்<br>2.2.1 |
| 5. ஆண் பெண் சமத்துவம் | மதிப்புடன் சீரமைக்கப்பட்டுள் ளது | இலக்குகள் 2, 3 | 2.1<br>2.4<br>3.1 | 2.1.1<br>2.1.3<br>2.4.1<br>3.1.4 |
| 6. துாய நீர் மற்றும் சுகாதாரம் | பணி மற்றும் மதிப்புகள் | இலக்குகள் 2, 7 | 2.1<br>2.4<br>7.3 | 2.1.1<br>2.1.3<br>2.4.1<br>7.3.3<br>7.3.5 |
| 7. மலிவான தரமான சக்தி | பணி மற்றும் மதிப்புகள் | இலக்குகள் 2, 7 | 2.1<br>2.4<br>7.3 | 2.1.1<br>2.1.3<br>2.4.1<br>7.3.3 |
| 8. ஒழுங்கான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி | பணி மதிப்புக்கள் | இலக்குகள 1, 2, 7 | 1.3<br>2.1<br>2.4<br>7.4 | 13. 2<br>2.1.1<br>2.1.3<br>2.4.1<br>3.1.1<br>7.4.1 |
| 9. கைத்தொழி ல் கண்டுபிடிப்பு க்களும் உள் கட்டமைப்பு களும் | | இலக்கு 1,2 மற்றும் 7 | 2.3<br>2.4<br>2.6 | 2.3.3<br>2.3.4<br>2.4.1<br>2.4.2<br>2.4.3<br>2.6.1<br>2.6.2<br>2.6.3<br>2.6.5 |
| 10. சமத்துவமின் மையை குறைத்தல் | மதிப்புக்கள் | இலக்கு 1 2, 7 | 1.2<br>2.1<br>2.4<br>3.1 | 12. 2<br>2.1.3<br>2.4.3<br>3.1.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 3.2<br>3.3<br>இலக்கு 7ன் எல்லா நோக்கங்கள் | 3.1.4<br>3.2.1<br>இலக்கு 7 ன் எல்லா மூலோபாயங்களும் |
| 11. நிலையான நகரங்களும் சமூகங்களு ம் | பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி | இலக்கு 1,2,6, 7 | 2.1<br>2.4<br>6.3<br>7.3<br>7.5 | 2.1.3<br>2.4.1<br>6.3.1<br>7.3.1<br>7.3.2<br>7.3.3<br>7.5.2 |
| 12. பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி | | இலக்கு 1, 2, 7 | 1.8<br>2.1<br>2.2<br>2.4<br>3.2<br>3.3<br>4.1<br>4.2<br>5.1<br>5.2<br>5.4<br>7.3 | 1.8.1<br>1.8.2<br>2.1.3<br>2.2.1<br>2.2.2<br>2.2.3<br>3.2.1<br>3.3.1<br>இலக்கு 4 ன் சகல மூலோபாயங்கள்<br>5.1.1<br>5.1.2<br>5.1.3<br>5.2.1<br>5.4.1<br>7.3.3 |
| 13. காலநிலை நடவடிக்கை கள் | மதிப்புக்கள் | இலக்கு 1 2, 7 | 1.1<br>2.1<br>2.4<br>7.3 | 1.1. 4<br>2.1.3<br>7.3.1<br>7.3.3 |
| 14. நீர் கீழ வாழ்க்கை | குறிக்கோள்கள் | இலக்கு 1, 2 | 1.1<br><br>2.1<br>2.4 | 1.1. 4<br>2.1.3 |
| 15. தரைமேல் வாழ்வு | புணி மற்றும் குறிக்கோள் | இலக்கு 1 2 | 1.1<br>2.1<br>2.4 | 1.1.1<br>2.1.3 |
| 16. அமைதி நீதி மற்றும் வலுவான நிறுவனம் | புணி குறிக்கோள் மற்றுமே மதிப்புக்கள் | இலக்கு 1 2 | 1.1<br>1.2<br>1.3<br>1.8<br>2.1<br>2.2<br>3.1<br>3.2<br>3.3<br>5.3<br>5.5 | 1.1.1<br>1.2.2<br>1.3.1<br>1.3.2<br>1.8.1<br>1.6.1<br>1.6.2<br>1.8.1<br>1.8.2<br>2.1.1<br>2.1.3<br>3.1.1<br>3.1.2<br>3.1.4<br>3.2.1<br>3.3.2<br>3.3.3<br>5.3.2<br>5.5.1<br>5.5.2 |
| 17. இலக்குகளு க்கான கூட்டான்மை | நோக்கங்களும் மதிப்புகளும் | இலக்கு | 1.3<br>2.3<br>2.4<br>6.2 | 1.2.5<br>1.3.1<br>2.1.3<br>2.3.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 6.6 | 2.3.4<br>2.4.1<br>2.4.2<br>2.4.3<br>2.6.1<br>2.6.2<br>2.6.3<br>2.6.4<br>2.6.5<br>6.2.1<br>6.6.1 |

மூலோபாய இலக்கு #1:கற்றல் மற்றும் கல்வி

ஒரு முன்னோடியான புதுமையான மற்றும் ஆளுமைகளைக் கொண்ட திறமையான உலகளாவிய குடிமக்களாக வளர மாணவர்களை ஊக்குவித்தல்.

இந்த இலக்கு அனைத்து மட்டங்களிலும் நமது மாணவர்களின் விரிவாக்கம், காலமற்ற தரம் மற்றும் கல்வியின் பொருத்தப்பாடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

இந்த இலக்கு தொடர்புபடுவது,

- சிறந்த மாணவர்களின் அனுபவம்.
- சமுதாய பொறுப்பு.
- தேசிய வளர்ச்சி.
- உலகாளாவிய தாக்கம்.

முக்கிய குறிக்கோள்கள்
இலக்கு #1 ஐ அடைவதற்கு நாம்

| | |
|---|---|
| 1.1 | எமது தனித்துவ இளங்கலை, முதுகலை பட்டப்படிப்புத் திட்டங்கள் மூலம் எமது மாணவர்களுக்கு உதவுதல், வழிகாட்டுதல் மற்றும் ஆதரவளித்தல். இதனால் அவர்கள் தேவையான அறிவை பெறுவதோடு அவர்களின் நிஜவாழ்க்கையிலும் அதனை பயன்படுத்துவார்கள். |
| 1.2 | ஒவ்வொரு மாணவர்களின் திறமைகளையும் கற்றல் விசாரணைகள் மற்றும் செயல்முறைக் கற்றல் அணுகுமுறைகளுக்கூடாக வளர்த்துக் கொள்ளல். |
| 1.3 | உலகளாவிய போட்டி மூலோபாயமாக இருப்பதற்கு எமது மாணவர்களை வலுப்படுத்த பட்டதாரிப் பண்புக்கூறுகள் மற்றும் வேலைவாய்ப்புத்திறன் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு வழமையான அடிப்படையில் எங்கள் பாடத்திட்டத்தை புதுப்பித்தல். |
| 1.4 | நீடிக்கப்பட்ட மற்றும் கூடுதல் பாடத்திட்ட நடவடிக்கைகளை எளிதாக்குதல், ஊக்குவித்தல் மற்றும் ஒரு உகந்த கல்லூா கற்றர் சூழலை உருவாக்குதல். |
| 1.5 | மாணவர்களின் ஆளுமை மற்றும் மென்மையான திறன்களை, அதாவது தகவல் தொடர்பு திறன் தொழில் முனைவோர், மற்றும் தொழிநுட்ப திறன் ஆகியவற்றை வளர்த்துக்கெள்ளல். |
| 1.6 | சரியான நேரத்தில் மற்றும் விரிவான மதிப்பீட்டு பின்னூட்டல்களுடன் கற்றல் முறையின் பயனுள்ள உத்தரவாதத்தை பேணுதல். |
| 1.7 | கல்வியின் அனைத்து அம்சங்களிலும் தரத்தை உறுதி செய்து உலகத்தரம் வாய்ந்த அங்கீகாரத்தை பெறுதல். |
| 1.8 | நெறிமுறை நடத்தையை உறுதி செய்து உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகளை பயன்படுத்தல். |

மூலோபாயம்:

இவற்றின் மூலம் எமது நோக்கத்தை அடைய,

| | |
|---|---|
| 1.1.1 | வெவ்வேறு நுழைவு மற்றும் வெளியேறும் புள்ளியை அறிமுகப்படுத்துவதன் மூலம் எமது பாடத்திட்டத்தை நெகிழ வைத்தல். |
| 1.1.2 | களப்பணிகள், தன்னார்வத் தொண்டு,தொழில் மற்றும் தேசிய அல்லது சர்வதேச பயிற்சி கற்றல் மூலம், பட்டப்படிப்புத் திட்டங்களின் ஒரு பகுதியாக வெளிநாட்டு வெளிப்பாட்டைப் பெற எமது மாணவர்களை ஊக்குவித்தல். |

| | |
|---|---|
| 1.1.3 | எமது ஆராய்ச்சித் திறன்கள் மற்றும் கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் ஆராய்ச்சியை முன்னிலைப்படுத்தி கற்பித்தல் மற்றும் கற்றலை ஊக்குவித்தல் |

| | |
|---|---|
| 1.1.4 | பல்துறை, இடைத்துறைசார் கற்கை நெறிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தல் |
| 1.2.2 | எமது திறந்த, தொலைதூர ஆற்றல் வரம்பு, வசதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல். |
| 1.2.4 | ஓவ்வொரு மாணவரின் கல்வித்திட்டத்தையும் கல்வி முன்னேற்றத்தையும் வழிநடத்துவதற்கு ‘ஆலோசக ஆசிரியர்’ (concelting tutor) முறையை அறிமுகப்படுத்துதல், அவர்களின் கற்றல் மற்றும் வளர்ச்சியின் உரிமையை எடுத்துக்கொள்வதற்கும் அவர்களின் எதிர்கால வாழ்க்கைத் திட்டங்களை திட்டமிடுவதற்கும் அவர்களுக்கு உதவுதல். |
| 1.2.5 | ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் அறிவைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் எமது மாணவர்களைக் கற்றுக் கொள்ள உதவுதல். |
| 1.3.1 | தொழில் முறைத்தேவைகள், தொழிற்துறை பழைய மாணவர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் நெருக்கமாக பணியாற்றுவது போனற தற்போதைய தேவைகளுக்கு எமது பட்டப்படிப்புக்கள் பதிலளிக்கக்கூடியவை என்பதை உறுதிப்படுத்தல். |
| 1.3.2 | பொருளாதார மற்றும் சமூக மதிப்புமிக்க பண்புக்கூறுகள் நிபுணத்துவம் மற்றும் நடைமுறைகளுடன் பட்டதாரிகளை உருவாக்க பாடத்திட்டத்திற்கு இடமளித்தல். |
| 1.6.1 | வெளியேறும் மதிப்பீட்டு முறையை மேம்படுத்தல் மற்றும் மாற்றியமைத்தல். |
| 1.6.2 | பயனுள்ள மற்றும் வெளிப்படையான மதிப்பீட்டு முறைகபை உறுதி செய்தல். |
| 1.8.1 | இணங்கத்தக்க நெகிழ்வான நபர்களை அபிவிருத்தி செய்வதற்கான சரியான அணுகுமுறைகள், மதிப்புக்கள், தொழில்முறை மற்றும் வாழ்க்கைக்கான குறிக்கோள்களை எங்கள் திட்டங்களில் இணைத்தல். |
| 1.8.2 | நடத்தை நெறிமுறைகள் மற்றும் கற்றல் கற்பித்தலுக்கான சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்தல். |

மூலோபாய இலக்கு: #2 :ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு:

ஆராய்ச்சி, வெளியீடுகள், பொது ஈடுபாடு, படைப்பாற்றல் மற்றும் கண்டுபிடிப்பு

இலங்கை, ஆசியா மற்றும் அதன் மூலம் உலகளாவிய சமூகங்களின் நிலையான வளர்ச்சிக்காக பல்வேறு துறைகளில் புதிய அறிவு மற்றும் கலைப்பொருட்களை உருவாக்கி, கண்டுபிடித்து பரப்புகின்ற ஒரு துடிப்பான, வெற்றிகரமான ஆராய்ச்சிக்கான கலாசாரத்தை வளர்த்தல்.

இதே இலக்கு எங்கள் ஆய்வின் தரத்தை உள்ளடக்கியது மேலும் இது இளமானி மற்றும் முதுமான் ஆராய்ச்சி இரண்டையும் உள்ளடக்கியது. ஆய்விலிருந்தான ஆழமான வேரூன்றிய அறிவு மற்றும் வேலையில் சிறந்து விளங்க உதவும் திறன்கள்.

இவ் இலக்கானது

- கற்றல் மற்றும் கல்வி
- உலகளாவிய தாக்கம்
- ஆயுட்கால சமூக தொடர்பு

ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும்

முக்கிய குறிக்கோள்கள்

இலக்கு #2 இனை அடைய நாம்,

| | |
|---|---|
| 2.1 | பாரம்பரிய எல்லைகளுக்கு அப்பால் புதிய மற்றும் வளர்ச்சி பெறும் ஆய்வுகளுக்கூடாக ஒலி ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரலை உருவாக்குதல் |
| 2.2 | ஓர் தரமான ஆய்வுக்குரிய கலாசாரத்தை நிறுவ ஆய்வாளர்களின் ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்தல். |
| 2.3 | ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்பினூடாக பெறப்பட்ட அறிவை வெளியிடுதலும், பிரபல்யமாக்கல் மற்றும் வணிகமயமாக்கல். |
| 2.4 | ஆராய்ச்சி சிறப்பை அவற்றின் தாற்பரியத்துடன் வெளியிட்டு வழங்குதல் |
| 2.6 | ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் மானியங்களை கண்டறிவதற்கு தொழில், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் பயனுள்ள ஒத்துழைப்புக்களை நிறுவுதல். |

மூலோபாயங்கள்

நாம் எமது குறிக்கோள்களை அடைந்து கொள்ள

| | |
|---|---|
| 2.1.1 | USJP இற்கான ஆய்வு நிரலை தயாரித்தல் மற்றும் முக்கியமான ஆய்வுப்பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்தல் |
| 2.1.3 | தலை தூக்கியுள்ள உள்ளூர், பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தத்துவத்தை வழங்குதல். |
| 2.2.1 | ஆராய்ச்சி பலங்களின் தரம் மற்றும் அளவின் முழுதிறனை உணர்ந்து கொள்ளல். |

| | |
|---|---|
| 2.2.2 | தேசிய, சரவதேச பயிற்சி வாய்ப்புகளினூடாக எமது ஆய்வு திறனை மேம்படுத்தல். |
| 2.2.3 | கருவிகள் மற்றும் மென்பொருட்களின் நிலையான மற்றும் திறமையான பயன்பாட்டிற்கு மக்களை உற்சாகப்படுத்துதல். |
| 2.3.3 | ஊழியர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து யோசனைகளை நடைமுறை யதார்த்தங்களாக மாற்றுவதற்கான சிறந்த வழிமுறையை கண்டறிதல். |
| 2.3.4 | அறிவை உட்செலுத்துதல் மற்றும் கல்வித்துறைகளில் பரிமாறிக்கொள்வதன் மூலம், அறிவியல் பூங்கா வசதிகளின் சமூக தாக்கத்தை விரிவாக்குவதன் மூலமும் அறிவுசார் சொத்துக்களை அடையாளம் கண்டு மூலதனமாக்கல். |
| 2.4.1 | இணங்காணத்தக்க பொருளாதளர, சுற்றுச்சூழல், சுகாதாரம், வசதி மற்றும் ஒட்டுமொத்த சமூகத்துடன் எங்கள் ஆராய்ச்சி இணைத்தலும் இடம்மாற்றலும். |
| 2.4.2 | அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் அறிவுப் பகிர்வு, பொது ஈடுபாடு மற்றும் ஆலோசனையை மேம்படுத்த ஊக்கப்படுத்தல். |
| 2.4.3 | கவனம் மற்றும் செயல்படுத்துவதன் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுடன் (SMEகள்) நீண்டகால மற்றும் நிலையான உறவுகளை வளர்த்துக் கொள்ளல். |
| 2.6.1 | ஆய்வுநிதி வழங்குனர்களுடன் மூலோபாய கூட்டாண்மைகளை உருவாக்குதல் மற்றும் பாதுகாத்தல். |
| 2.6.2 | நிலுவையிலுள்ள பிராந்திய மற்றும் உலகளாவிய ஆராய்ச்சி ஒத்துழைப்புக்களை ஊக்குவிப்பது உட்பட பல ஒழுங்கு ஆராய்ச்சிக்கான புதிய அனுகுமுறைகளை வளர்த்தல். |
| 2.6.3 | புத்தாக்கங்களை ஆதரிக்க வணிக மற்றும் நிதியுடனான சமூக இணைப்புக்களை வளர்த்தல். |
| 2.6.4 | வெளிநாட்டு நிதியுதவியை பெறுவதற்கான எமது அணுகுமுறையை நிபுணத்துவப்படுத்தி நிதியளிப்பிற்காக வெற்றிகரமாக போட்டியிட எம்மை நிலைநிறுத்தல். |
| 2.6.5 | கூட்டாண்மைக்கான தேர்வின் கூட்டாளராகவும், புதிய நிறுவனம், திட்டம், தயாரிப்பு, மேம்பாடு மற்றும் உருவாக்கம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க ஆதரவாளராகவும் நற்பெயரை பயன்படுத்துதல். |

செயலாக்குனர்:

மூலோபாய இலக்கு #3: மக்கள்

பணியாளர்களின் முழுத்திறனையும் மதிப்பிடுவதற்கும், அதிகரிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும், பயன்படுத்துவதற்கும், பல்கலைக்கழகத்தை வசதியாகவும் வேலை செய்யக்கூடிய இடமாக மாற்றுதல்.

மூலோபாய இலக்குகள் வெற்றிகரமாக அமைவதானது எங்கள் ஆசிரியர் மற்றும் அனைவரினதும் சிறந்த செயல்திறனையும் பங்களிப்பையும் பொறுத்தது.

செயலாக்குனர்

- சமத்துவம்
- நீண்ட சமூக தொடர்பு
- சமூக பொறுப்புணர்ச்சி
- தேசிய அபிவிருத்தி

என்பவற்றுடன் தொடர்புடையவராக இருத்தல் வேண்டும்.

முக்கிய குறிக்கோள்கள்

இலக்கு #3 இனை அடைய நாம்

| | |
|---|---|
| 3.1 | வெகுமதியை ஈர்ப்பது மற்றும் உலகெங்கிலும் உள்ள திறமைகளை அணுகும் சிறந்த நபர்களை தக்க வைத்துக் கொள்ளல் |
| 3.2 | நிறுவுதல் மற்றும் ஆராய்ச்சியின் புதிய தரத்தை மேம்படுத்த எமது முழு ஊழியர்களின் அறிவு திறன்கள் மற்றும் நுட்பம் என்பவற்றை மேம்படுத்தல் |
| 3.3 | கௌரவம் மற்றும் மரியாதை பன்முகத்தன்மை சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றுறால் ஆதரிக்கப்படும் ஒரு ஆதரவான கூட்டு சூழலை உருவாக்குதல் |

உத்திகள்

எமது நோக்கங்களின் மூலம் நாம்

| | |
|---|---|
| 3.1.1 | USJP இன் கவர்ச்சியை ஒரு பிராந்திய மற்றும் உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக ஊக்குவித்தல் மற்றும் புதிய ஊழியர்களை மிகவும் பயனுள்ளவர்களாக மாற்ற உதவுதல். |
| 3.1.2 | பல வழிகளில் விஷேட திறமை மற்றும் வெற்றியை வெகுமானமாக கொடுத்தல். |
| 3.1.4 | எமது வளர்ந்து வரும் சவாலான தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரு நிலையான பணியாளர் சுய விபரத்தை பராமரித்தல். |
| 3.2.1 | எமது ஊழியர்களிடம் மூலோபாய ரீதியாக முதலீடு செய்வது செல்வாக்கை வடிவமைப்பதற்கும் ஜீவனோபாய, முரண்பாடன தொழில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை ஆதரிப்பதன் மூலம் வழிநடத்துவதற்கும் பலவிதமான திறன்களை பயன்படுத்தவும் அவர்களை ஊக்குவித்து வழிப்படுத்தல். |
| 3.3.1 | நெகிழ்வான இடை ஒழுங்கு குழு வேலை மற்றும் இணக்கமான அணுகு முறைகள் மூலம் சமநிலை வேலை வாழ்க்கையை மேம்படுத்துதல். |
| 3.3.2 | பாதுகாப்பான மற்றும் அணுகக்கூடிய மற்றும் இனிமையான பணிச்சூழலை வழங்குதல். |
| 3.3.3 | பயனுள்ள பணியாளர் ஈடுபாடு மற்றும் அதிகாரமளித்தல்இ வெளிப்படைத்தன்மை மற்றும் பயனுள்ள தகவல் தொடர்பு ஆகியவற்றின் மூலம் கூட்டு சகிப்புத்தன்மை இரக்கம் மற்றும் வலுவான நெறிமுறைகள் ஆகியவற்றின் ஊடாக கலாசாரத்தை வளர்த்தல். |

**மூலோபாய இலக்கு சூ4:** உள்கட்டமைப்பு

**நிலைபேண்தகு உலகத்தரம் வாய்ந்த கல்வி மற்றும் சார்பு நடவடிக்கைகளை தக்கவைக்க நவீன, அதிநவீன, வினைத்திறனான தூண்டுதல் கற்றல் மற்றும் பணிச்சூழலை வழங்குதல்**

உயர்தர உள்கட்டமைப்பு என்பது எமது மூலோபாய இலக்குகளை அடைய எங்களுக்கு உதவுகின்றது.

**இதில் தங்கியுள்ள விடயங்கள்:**

- கல்வி மற்றும் கற்றல்
- மக்கள்
- சமூக பொருப்புக்கள்

**பிரதான நோக்கங்கள்:**

அந்த இலக்கை அடைய **சூ**4, நாம் செய்ய வேண்டியவை :

4.1 தரத்தையும் அனுபவத்தையும் கூறுகளாக கொண்ட எமது பௌதீக, நூலக, தகவல் தொழிநுட்ப மற்றும் ஏனைய உள்கட்டமைப்புகளின் வசதிகளை சூழலியல் அடிப்படையில் அதிகரித்தலும் நிலைப்படுத்தலும்.

4.2 ஏற்கனவே கையிருப்பில் உள்ள இடத்தை முகாமை செய்வதோடு எமது இடத்தின் அளவு மற்றும் நிலைத்தன்மையை கணிப்பீடு செய்தல் மற்றும் புதிய பாரம்பரிய வசதிகளை ஏற்படுத்தல் என்பன எமது பாரம்பரியத்தின் முக்கிய அம்சமாகும்.

**தந்திரோபாயங்கள்**

எமது நோக்கங்களை அடைவதற்காக:

4.1.1 எமது ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய அங்கத்தவர்களின் மாறுபட்ட தேவைகளைக்கருத்திற் கொண்டு அவற்றை ஈடு செய்வதற்கான உட்கட்டமைப்பு வசதிளை அபிவிருத்தி செய்தல்.

4.1.2 வளங்களின் உச்ச பயன்பாட்டை பெற்றுக்கொள்வதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்கத்தை பொருத்தமான விதத்தில் பயன்படுத்தல்.

4.1.3 பல்கலைக்கழகத்தில் காணப்படும் பல்வேறுபட்ட வளங்களை அபிவிருத்தி செய்தலும் கண்காணித்ததலும்.

4.1.4 தகவல் தொழிநுட்பம் சார் உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் போன்ற ஒருங்கிணைந்த உட்கட்டமைப்புக்களை அதிகப்படுத்துவதற்கான திட்டமிடல் செயன்முறை (எதிர்கால தொழிநுட்ப அபிவிருத்திகளை இணங்காணலும், அவற்றுக்காக எம்மை இசைவாக்கலும்).

4.1.5 கற்றல், கற்பித்தல், ஆய்வு மற்றும் வினைத்திறன் மிக்க தீர்மானம் எடுத்தல் செயன்முறைகளுக்காக நிகழ்நிலை தகவல் முறைமைகளை உறுதிப்படுத்தல் (எமது வளங்களை

பெறுதல், உருவாக்குதல், கைப்பற்றுதல், சேமித்தல், வழங்குதல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றில் முறையான அனுகுமுறையினை எடுத்துக்கொள்வது).

4.2.1 திட்டங்களை திட்டமிடுவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் எமது சிறந்த அனுகுமுறையை பயன்படுத்தல்.

4.2.2 தேவைப்படும் இடங்களில் ஒருங்கிணைப்பினையும் வாய்ப்புக்களையும் மறுசீரமைத்தல்.

4.2.3 எதிர்கால கேள்விகளுக்காக புதிய இடத்தை பெற்று, இருக்கும் இடத்தின் பயன்பாட்டை மேம்படுத்தல்.

4.2.4 எமது இட பயன்பாட்டையும் பண பெறுமதியை கூட்டுவதற்குமான முன்னேற்றங்களை உருவாக்கள் (இது நீண்டகால இலக்குகளை அடைய கால அட்டவணையை உருவாக்கல், சிறிய கட்டிடங்களை பெரிதாக விஸ்தரிப்பதினை குறைத்தல் மற்றும் இட முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை திறமையான தொடர்பாடல் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்).

**மூலோபாய இலக்கு சூ5: நிதி**

**ஒரு நிலையான போட்டி நிலையை உருவாக்க ஒட்டுமொத்த நிதி வலிமையை பராமரித்தலும், பாதுகாத்தலும்.**

பல்கலைக்கழகத்தின் அனைத்து மூலோபாய குறிக்கோள்களையும் நோக்கங்களையும் வழங்குவது ஒட்டுமொத்த நிதித் திறனைப்பொறுத்தது.

**பிரதான நோக்கங்கள்:**

அந்த இலக்கை அடைய சூ6இ நாம் செய்ய வேண்டியவை :

5.1 நீண்டகால நிதி நம்பகத்தன்மையைப் பாதுகாத்தல்

5.3 பொருப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் நிதி கட்டுப்பாடு ஆகியவற்றின் உயர்தரங்களை உறுதிசெய்தல்.

5.4 சரியான நேரத்தில் எமது அனைத்து செயல்பாடுகளிலும் சிறந்த செயல்திறனை வழங்குதல் மற்றும் செயல்ப்படுத்துதல்.

5.5 நல்ல பல்கலைக்கழக நிர்வாகத்தை உறுதி செய்தல்.

**உத்திகள்**

எங்கள் நோக்கங்களை பின்வரும் வழிகளில் அடையாளப்படுத்தலாம்:

5.1.1 பொருளாதார மற்றும் நிதி சூழல்களை தீவிரமாக கண் காணிப்பதனாலும் நீண்ட கால பொருளாதார உட்கட்டமைப்புகளை பாரபட்சம் இல்லாமல் மதிப்பிடுவதாலும் தமது சொத்துக்களை முன்னுரிமைப்படுத்துவத்தி ஒழுங்குபடுத்துதலாம்.

5.1.2 வழக்கமாக நீண்டகால பொருளாதார எதிர்வுகூறல்களை தரமுயர்த்துவதோடு அவற்றின் முடிவுகள் எடுப்பதற்கான வழிக்காட்டியாக பயன்படுத்தல்.

5.1.3 முதலீட்டு உதவியை வழங்குவதற்காக தமது நிதியை பாதுகாத்து, முகாமை செய்வதோடு நீடித்து நிலைபெரும் செயற்பாடுகளை வளர்த்துக்கொள்ளல்.

5.2.1 பொருளாதார முறைமையை காலத்துக்குக் காலம் மீள் பரிசோதனை செய்தல், தரமுயர்த்துதல் மற்றும் பொருளாதார நிலைத்தன்மையின் வருடாந்த மதிப்பீட்டை மேற்கொள்ளல்.

5.4.1 பறந்த வீச்சுடைய நிலையான கல்வியாலும், மீள் முத்தலீட்டுக்கு தேவையான மேலதிக வருமானம் தாரக்கூடிய வரத்தக நடவடிக்கைகளும் தமது வருமானத்தை வளர்த்தல் மற்றும் பல்வகைமை ஆக்கல்.

5.5.1 தமது முதலீடுகளும் நிதி ஓத்துகீடு முறைமைகளின் மேம்படுத்தலும் பல்கலைக்கழகத்தின் பொருளாதார உள்ளேடுகளை உருதிப்படுத்தல் மற்றும் உணர்ச்சி உள்ள செயற்பாடுகளுக்கு உயர் பொருளாதார உதவியை வழங்கல்.

5.5.2 கணக்கீடு மற்றும் தீர்மானம் மேற்கொள்ளலையும் மேம்படுத்த பல்கலைக்கழக நிர்வாக கட்டமைப்புகளை மேம்படுத்தல்.

மூலோபாய தொடர்புகள்:

**மூலோபாய இலக்கு சூ6:** சிறந்த மாணவர்களின் அனுபவங்கள்.

மாணவர்களுக்கு கல்விற்கு பின்னரான வாழ்க்கைக்கு தேவையான வேறுப்பட்ட தரமாண அனுபவங்களை பெற வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு

இதில் தங்கியுள்ள விடயங்கள்:

- கல்வி மற்றும் கற்றல்
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுத்தல்
- வாழ்நாள் சமூகம்
- சமூக பொருப்புக்கள்

**பிரதான நோக்கங்கள்:**

அந்த இலக்கை அடைய சூ6இ நாம் செய்ய வேண்டியவை :

6.2 தமது கல்வியையும் கிராமிய வாழ்க்கை முறைமையையும் உணர்ந்து கொள்ளல்.

6.3 கற்ற சமூகத்தில் இருக்க வேண்டிய பண்புகளை மாணவர்களிடமும் பழைய மாணவர்களிடமும் வளர்த்தல்.

6.5 மாணவர்களிடத்தில் உடல் உள சுகாதாரம், நல்வால்வு மற்றும் பாதுகாப்பை ஊக்குவித்தல்.

6.6 பிராந்தி மற்றும் உலகளாவிய வெளிப்பாடுகளில் ஊக்குவித்தல்.

**முறைகள்**

எங்கள் நோக்கங்களை பின்வரும் வழிகளில் அடையாளப்படுத்தலாம்:

6.2.1 கூட்டாக சேர்ந்து வேலை செய்வதால் மாணவர்களின் அனுபவங்களை பெறலாம்.

6.3.1 எமது மாணவர் அனுபவங்களை மேம்படுத்தவும் பரஸ்பர நன்மைகளை பெற பழைய மாணவர்களின் தொடர்புகளை வாழ்நாள் முழுவதும் பெருதல்.

6.5.1 உடல் உள சுகாதாரம், நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தப் பல்கலைக்கழக சுகாதார நிலையத்தை வலுவாக்கள்.

6.5.2 மாணவர் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை உருதிப்படுத்த மாணவர் நலன்புரி சேவைகளை மேம்படுத்தல்.

6.6.1 எமது பட்ட படிப்புடன் அனுபவங்களும் பிராந்திய மற்றும் உலகளாவிய சமூகத்திற்கு தேவையான திறன்களை அடைய தேவையான பண்புகளை பெற வழிவகுக்குத்தல்.

**இலக்கு சூ 7:** ஆயுல் கால சமூகம், சமூக பொருப்புகள், தேசிய அபிவிருத்தி மற்றும் தாக்கம்

வாழ்நாள் சமூகங்களை தரமுயர்த்துவதினூடாகவும் பரஸ்பர நன்மைகளை அடையக்கூடிய வகையில் பங்குதாரர்களுடன் தொடர்புகளை பேணுவதனூடாகவும் தேசிய, பிரந்தியா மற்றும் உலகளாவிய அபிவிருத்தியில் பங்களிப்பு செய்வதற்க்கு:

இந்த முறைமையுடன் தொடர்புடைய விடயங்கள்:

- கல்வியும் கற்றலும்
- ஆராச்சியும் மற்றும் அபிவிருத்தி கட்டமைப்பும்

**பிரதான நோக்கங்கள்:**

இலக்குகளை அடையசூ7இ நாங்கள் செய்ய வேண்டியது:

7.1 எங்களுடைய வளங்களை உருவாக்குவதுடன் பரந்த வீச்சுடைய அனுபவம் பெருவதும் பொறுப்புள்ள செல்வாக்கான ஆலொசகராகவும், அயலவராகவும் மற்றும் தொழிலாளியாகவும் இருத்தல்.

7.2 வாழ்நாள் முழுவதும் தொடர்புடைய ஈடுபாடுடைய அருவிக்கப்பட்ட சர்வதேச மற்றும் தேசிய ஆதர்வுகளை வழங்க கூடிய பழைய மாணவர் வளையமைப்புக்களை உருவாக்கள்.

7.3 தரத்தை பேணுதல் மற்றும் வித்திகளை உருவாக்குதல் சமூகத்திற்கு வழிவகுப்பதோடு பல்கலைக்கழகத்திலும் அதற்க்கு பின்னரும் சமூக பொறுப்புக்களுக்கு பங்களிப்பு செய்தல்.

7.4 தேசிய அபிவிருத்திற்கு பங்களிப்பு செய்வதோடு தேசிய கொள்கை உருவாக்குவதில் பங்களிப்பு செய்து மாற்றங்களை உருவாக்குதல்.

7.5 எமது அபிலாசைகளால் பல்கலைக்கழக மற்றும் சமூகத்திற்கான தாக்கங்களை உலகளாவிய அளவில் நகர்த்துதல்.

**முறைகள்**

எமது நோக்கங்களை அடைய செய்ய வேண்டிய விடயங்கள்:

7.3.3 எமது சமூக சுற்றாடல் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கங்களை விளக்குதல்.

7.3.5 கழிவுப்பொருட்களை மறுபயன்படுத்துவதற்கான பசுமைக் கருத்துக்களை ஊக்குவித்தல், மறுசுழற்ச்சிக்குட்படுத்தல், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை (உயிர், எரிவாயு.ஃ. சூரிய) காடுகளிலும் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு வெளியேயும் பயன்படுத்துதல்.

7.4.1 பொது ஈடுபாடு என்பது எங்கள் நோக்கத்தின் ஒரு முக்கிய அங்கமாகும், ஆராய்ச்சி தாக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள இந்த பகுதியில் வெற்றியை ஊக்குவித்தல், அங்கீகரித்தல் மற்றும் கொண்டாடுதல் ஆகியவற்றின் மூலம், எங்கள் கருத்தை இவை நிரூபிக்கிறது.